# உதயன்

www.onlineuthayan.com

52பக்கங்கள் சுடர் 28 கதிர் 048 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 29 ஞாயிற்றுக்கிழமை (13/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 30.00




# பொங்கலுக்கு முன்னர் மாணவர்கள் விடுவிக்கப்படும் சாத்தியம் இல்லை

## சிறைச்சாலைகள் அமைச்சுக்கு இதுகுறித்து அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஜனவரி13

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளயாழ். பல்கலைக்கழக மாணவர்கள்நால்வரும்தைப் பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. பொங்கலுக்கு முன்னர் இவர்கள் விடுவிக்கப்படுவர் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்திருந்தபோதும், அவர்கள் அவ்வாறு விடுதலை செய்யப்படும்சாத்தியம்இல்லை என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ் குமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.பல் கலைக்கழக வளாகத் துக்குள் சுடர் ஏற்றப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங் களை அடுத்து நவம் பர் மாதம் 30 ஆம் திகதி

பார்க்க பக்கம் 04



“ கடந்த 6ஆம் திகதி பி.பி.சி. செய்திச் சேவைக்கு நேர்காணல் வழங்கிய உயர் கல்வி அமைச்சர், கைது செய்யப்பட்ட 4 யாழ்.பல் கலைக்கழக மாணவர்களும் தைப்பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படும் சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

## சிறீதரன் எம்.பியின் ஆதரவாளர்கள் ரி.ஐ.டியினரால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம்,ஜன.13

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் கிளிநொச்சி அலுவகத்தில் வெடி மருந்துகள் இருந்தாகத் தெரிவிக்கப் பட்டு, கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் (ரி.ஐ.டி.) அவரது அலுவகத்தில் பணியாற்றும் இருவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அம்

பார்க்க பக்கம் 04

## முன்னாள் போராளிகள் 315 பேர் பெற்றோரிடம்

கொழும்பு, ஜன. 13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் 315 பேர் இன்று அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 04

## கீரிமலைக் கடலில் குளித்த மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.13

கீரிமலை சேந்தாங்குளப் பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற மாணவர் ஒருவர் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

மாகியப்பிட்டியைச் சேர்ந்த சி. உமாசங்கர் (வயது-16) என்ற மாணவனே காணாமல் போயுள்ளான். அவருடன் குளிக்கச் சென்ற மற்றொரு மாணவன் அந்தப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களால் மீட்கப்பட்டுள்ளான்.

நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச்

பார்க்க பக்கம் 04

## படம் பார்த்துத் திரும்பிய பட்டதாரிப் பயிலுநர்கள்!

யாழ்ப்பாணம்,ஜன்.13

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டு கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப் பட்ட மாநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பட்டதாரிகள் இறுதியில் ஏமாற்றத்துடனும் வெறும்கையுடனும் திரும்பி வந்தனர்.

இலங்கையை ஜனநாயக நாடு ஆக்கியமை தொடர்பான விவரணப் படம் ஒன்று சுகததாஸ அரங்கில் பட்டதாரிகளுக்குக் காண்பிக்கப்பட்டது.

அவர்களது நிரந்தர நியமனம் தொடர்பில் அங்கு எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் குறித்த நிகழ்வில் 15 ஆயிரம் தமிழ்ப் பட்டதாரிகள் கலந்து கொண்டிருந்தபோதும் அங்கு அனைத்து நிகழ்வுகளும் சிங்கள மொழியிலேயே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பட்டதாரி பயிலுநர்களாக கடந்த ஜூன் மாதம் நாடளாவிய ரீதியில் 50 ஆயிரம் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆறு மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டுப் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆறு மாத காலங்கள் கடந்த நிலையிலும் அவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் சுதந்திரப் பட்டதாரிகள் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாடு கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் வைத்துப்

பார்க்க பக்கம் 04

## ரிஸானாவுக்கு மரணதண்டனை; ஐ.நா. கண்டனம்



நியூயோர்க், ஜன. 13

ரிஸானாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் கலக்கமுற்றிருப்பதாகத் தெரிவித்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன், அது குறித்துத் தமது ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையைச் சேர்ந்த ரிஸானா நபீக்கிற்கு மரணத்தண்டனை விதித்திருக்க கூடாது. இவ்வாறு மரண தண்டனை விதிக்

பார்க்க பக்கம் 04

## சவாலில் வென்றுவிட்டோம்

### ஜனாதிபதி நேற்றுப் பெருமிதம்

கொழும்பு, ஜன. 13

எமது அரசு பல்வேறுபட்ட சவால்களுக்கு தினம் தினம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதில் ஒரு சவாலில் நேற்று (நேற்று முன்தினம்) வெற்றியைப் பெற்று விட்டோம். ஏனைய சவாலிலும் வெற்றியைப் பெற்றுக் கொள்ளுவோம். இவ்வாறு பெருமிதத்துடன் தெரிவித்தார் ஜனாதிபதி

பார்க்க பக்கம் 04

## வெடிமருந்துடன் குருநகரில் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.குருநகரில் சீ-4 வகை வெடி மருந்தை பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 04


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்னும் 5 நாட்களில்

Gold Sponsor dino TECHNOLOGY

தமிழர்கள் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு
சிங்கர் வழங்கும் அதிரடி விலைக்கழிவுகள்
தையல் இயந்திரங்கள் , தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒடியோக்கள், (Audios)
சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், ஆகியவற்றுக்கு விஷேட விலைக்கழிவுகள்
தை 5ஆம்திகதி முதல் தை 20 ஆம்திகதி வரை மட்டுமே !
சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
சங்கானை 077 1297622
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197
கிளிநொச்சி 021 567 5677
பருத்தித்துறை 021 226 3411
கொடிகாமம் 077 6433888



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் ஷிராணி விவகாரம் இலங்கைக்குச் சர்வதேசம் கண்டனம்

கொழும்பு, ஜன. 13

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் சர்வதேச சமூகம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஒட்டுமொத்த நீதித்துறையின் சுயாதீனத்துக்கும் இலங்கை அரசு களங்கம் ஏற்படுத்திவிட்டது. அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனம் செய்தமை தொடர்பிலும் இலங்கை அரசை அது கண்டித்துள்ளது.

சர்வதேச நீதி ஆணைக்குழு, பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம், கனேடிய லிபரல் கட்சி, அமெரிக்க தூதரகம் என்பனவும் இலங்கை அரசின் செயற்பாட்டைக் கண்டித்துள்ளன.

**பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா**

இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை நிறைவேற்றப்பட்டமை கவலையளிக்கின்றது. இந்த விவகாரம் தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு அதிகளவு கரிசனையை எடுத்துக் கொண்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பிலான நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு இலங்கை அரசை நாம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அதை அரசு செவிமடுக்கவில்லை. அது மட்டுமன்றி குற்றப் பிரேரணை விவகாரம் அரசியலமைப்பையே கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்னர் நீதித்துறை மற்றும் சட்டவாக்கம் ஆகியவற்றுக்கு இடையிலான பிரதிபலிப்புக்களை பரிசீலிக்க வேண்டும் என்று இலங்கை அரசை இறுதியாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை அரசுக்கும் பொதுநலவாய அமைப்புக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஆகையினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு வழியை கண்டுபிடிப்பதற்கு பொதுநலவாய அமைப்பினால் உதவமுடியும் - என்றார்.

**அமெரிக்க தூதரகம்**

உயர்நீதிமன்ற உத்தரவிற்கு முரணாக நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குற்றப்பிரேரணை நடைமுறைகள் தொடர்பாக அமெரிக்க தூதரகம் தொடர்ந்தும் ஆழ்ந்த கரிசனையை கொண்டுள்ளது.

இந்தக் குற்றப் பிரேரணையானது இலங்கையிலுள்ள ஜனநாயக நிறுவனங்களுக்கு ஏற்படும் தாக்கத்தையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதேவேளை, பல்வேறு ஆர்ப்பாட்டங்களின் போதும் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாகவும் தூதரகம் கரிசனைகொண்டுள்ளது. அமைதியான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குள்ள உரிமையை மதித்து நடக்குமாறு அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

வன்முறையற்ற ரீதியில் செயற்படும் எதிர்ப்பாளர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு நாம் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சர்வதேச சமூகத்திலுள்ள எமது பங்காளர்களுடன் இணைந்து இலங்கை அரசானது சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்து ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படைகளை மதித்துச் செயற்படவேண்டும் என்று கோருகின்றோம்.

**சர்வதேச நீதி ஆணைக்குழு**

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை சர்வதேச நீதி ஆணைக்குழு கண்டிக்கின்றது.

குற்றவியல் பிரேரணை தீர்மானம் நாட்டின் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்களை உதாசீனம் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

குறுகிய கால அரசியல் நலன்களுக்காக ஒட்டுமொத்த நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கும் களங்கம் ஏற்படும் வகையில் இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது.

குற்றப்பிரேரணை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து சட்ட மற்றும் அரசியல் சாசன குழப்பங்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ளன.

மேலும் குறித்த பிரேரணை விவகாரம் சர்வதேசதர நிர்ணயங்களுக்கு புறம்பான வகையில் அமையப் பெற்றுள்ளதாக சர்வதேச நீதி ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

**கனேடிய லிபரல் கட்சி**

இலங்கையில் அரசியல் யாப்பை மீறி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள குற்றப்பிரேரணை குறித்து பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் மற்றும் பொதுநலவாய அமைச்சர் குழுவிடம் உடனடியாக பிரச்சினை எழுப்புமாறு கனேடிய அரசுக்கு வலியுறுத்துகின்றோம்.

கனடாவின் லிபரல் கட்சித் தலைவர் பாப் ரே கனேடிய வெளிவிவகார அமைச்சரிடம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் வலியுறுத்த வேண்டும். மிகவும் சர்ச்சைக்குரிய மற்றும் சட்ட விரோதமான குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிய இலங்கை அரசுக்கு எமது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை அரசின் நடவடிக்கை பொதுநலவாய நாட்டு சட்டத்திட்டங்களை நேரடியாக மீறுவதாக அமைந்துள்ளது.

2013 இல் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை தலைமையேற்று நடாத்தும் இலங்கைக்கு ஜனநாயகத்தை நிலைநிறுத்தி சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது.

இலங்கை அரசு அவ்வாறு செய்யத்தவறினால் இலங்கையின் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாட்டுக்கு உயர் மட்டத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டிய கடமை கனேடிய அரசுக்கு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு**

ஜனநாயக கோட்பாடுகளை மதித்து தற்போதைய பிரதம நீதியரசர் மற்றும் அவரது சட்டத் தொழில் என்பவற்றை பாதுகாக்க முன்வருமாறு இலங்கைக்கு பிரித்தானியா அழைப்பு விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக இலங்கை அரசு கொண்டு வந்து செயற்படுத்திய குற்றப்பிரேரணை தொடர்பில் பிரித்தானியாவின் வெளிவிவகார அலுவலகப் பேச்சாளர் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள பலர் வெளியிட்டது போலவே தாங்களும் முன்னதாகவே குற்றப்பிரேரணை நடவடிக்கை குறித்தும் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் குறித்தும் கவலை வெளியிட்டதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை மீறி குற்றப்பிரேரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரித்தானியா சுட்டிக் காட்டியுள்ளது.

நீதிமன்றத்தின் சுதந்திரத்தையும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கோட்பாடுகளையும் இலங்கை மதித்து நடக்க வேண்டும் என்று பிரித்தானியா விலயுறுத்தியுள்ளது.

ஜனநாயகக் கோட்பாடுகள் அமைதி ஆர்ப்பாட்டங்கள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாக்கவின் பாதுகாப்பு என்பவற்றில் ஜனநாயகத்தை பேணுமாறு தங்களது சர்வதேச நட்புறவு நாடுகளோடு இணைந்து இலங்கையிடம் கோரிக்கை முன்வைப்பதாக பிரித்தானியா வெளிவிவகார அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த குற்றப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டமைக்கும் பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது. ( -5)

## கார் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்தவரின் கால் முறிந்தது

வலி.வடக்கு, ஜன.13

மோட்டார் சைக்கிளும் காரும் மோதுண்டதில் மோட்டார் சைக்களில் வந்த கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள சோடாக் கம்பனி ஒழுங்கைக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் பின்னால் வந்த சாரதிப் பயிற்சி நிறுவனமொன்றின் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சையிக்கிளில் வந்தவர் வாகனத்தின் கீழ் இருந்து பொது மக்களால் மீட்கப்பட்டுத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (த-86)

## ஜீப் தடம் புரண்டதில் பொலிஸார் இருவர் காயம்

வலி.வடக்கு, ஜன.13

வவுனியா பொலிஸ் நிலையத்துக்குச் சொந்தமான பொலிஸ் ஜீப் தெல்லிப்பழையில் கவிழ்ந்ததில் பொலிஸார் இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகிய சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் இருந்து பொலிஸாருடன் வந்த ஜீப் தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வளைவில் திரும்பும் போது வீதியை விட்டு விலகி தடம் புரண்டது.

தெய்வாதினமாக ஜீப்பில் வந்த இருவர்சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். (த-86)

## கறுப்பு நிறத்தில் மழை

இலங்கையின் பல பாகங்களிலும் வண்ண மழை பெய்து வருகின்ற நிலையில் நேற்று கறுப்பு மழை பெய்துள்ளது.

கண்டி, உடதும்பர மஹியங்கனை ஆகிய இடங்களில் இந்த மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் முதல் நேற்று அதிகாலைவரை கறுப்பு நிற மழைபெய்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை மழை தொடர்பில் ஆய்வு செய்ய நாசா விண்வெளி நிலையத்தின் அதிகாரி இலங்கைக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசமைப்பில் உடனடியாக திருத்தங்கள் அவசியம்

### சபாநாயகர் அறிவிப்பு

காலி, ஜன. 13

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அரசியலமைப்பில் உடனடியாக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலியில் நீதிமன்றக்கட்டடத்தொகுதிக்கான அடிக்கல்லை நேற்று சனிக்கிழமை நட்டு வைத்ததன் பின்னர் நடைபெற்ற வைபவத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இது இலங்கை அரசியல் அமைப்புக்கு முரணானது என்று எதிர் கட்சிகள் மற்றும் சட்டவல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, இலங்கை அரசியலமைப்பை மாற்ற வேண்டும். இதுவே நாட்டிலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும். இதனை உடனடியாகவே மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த-5)

## மாலுமி விடுவிக்கப்பட்டார்

கொழும்பு, ஜன. 13

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட சிங்கள மாலுமி விடுவிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரேபிய நாடான டுபாய்க்கு விடுத்த அழுத்தத்தின் காரணமாகவே மேற்படி மாலுமி விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த சூரசேன என்ற மாலுமி உட்பட 20 பேர் எம்.வி ஒரன என்ற டுபாய் நிறுவனத்தின் தலைமையில் இயங்கும் கப்பலில் வைத்து சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில், குறித்த மாலுமி விடுதலை செய்யப்பட்டு டுபாய், நைரோபியில் உள்ள இலங்கை தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இதற்கான செயன்முறைப்படுத்தலுக்கான கோரிக்கை ஒன்றையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு விடுத்திருந்தார். இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாக சூரசேன விடுவிக்கப்பட்டுள்ளார். (த-5)

## கைவிடப்பட்ட கிணற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

### குருநகரில் நேற்றுப் பரபரப்பு



யாழ்ப்பாணம், ஜன. 13

கைவிடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து சுமார் 45 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதியில் தண்ணீர்தாங்கியை அண்மித்து மத்தியூஸ் வீதியிலுள்ள கைவிடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தவீதி வழியே சென்றவர்கள் துர்நாற்றம் வீசியதையடுத்து கிணற்றை எட்டிப் பார்த்தபோதே அதற்குள் சடலம் இருந்தமை தெரிய வந்தது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (த-4-ரி)

# மலக்குழியில் சிறுவனின் சடலம்

முல்லைத்தீவு, மாங்குளத்தில் மலக்குழியிலிருந்து ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

பெரிய புளியங்குளம் மாங்குளத்தைச் சேர்ந்த மோகனராஜ் லோனுஜன் (வயது-5) என்ற சிறுவனின் சடலமே மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் வெள்ளிக்கிழமை காலை தனது தந்தை தொழிலுக்குச் செல்லும்போது அவரின் பின்னால் சென்றதாகவும், தனது மகன் வருவதை அறியாத தந்தையார் வேலை முடித்து மாலை வீடுதிரும்பியபோது பிள்ளை எங்கே? என மனைவியிடம் கேட்டபோதே சிறுவன் காணாமல் போனது தெரியவந்தது. இதன்பின்னர் பெற்றோர் அவனைத் தேடியுள்ளனர்.

எனினும் சிறுவன் கிடைக்கவில்லை. பின்னர் மறுநாளான நேற்றுக்காலை தகப்பன் தொழில் புரியும் பொது நோக்கு மண்டபத்துக்கு அருகில் உள்ள மலக்குழியில் சிறுவனின் சடலம் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவுப் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

தந்தையாரைத் தேடிச் சென்ற சிறுவன் தவறுதலாகப் பாதுகாப்பற்றுக் கிடந்த மலக்குழிக்குள் விழுந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-16-6-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி முதியோர் இல்லத்தில் இறந்தவரின்
# கிரியைகளை பொறுப்பேற்றது தியாகி அறக்கொடை நிலையம்

கைதடி, ஜன.13

கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த 10 வருடங்களாகத் தங்கியிருந்த முதியவர் நேற்று முன்தினம் சாவடைந்ததால் அவருடைய இறுதிக் கிரியைகளை நல்லூர் தியாகி அறக்கொடை நிலையம் பொறுப்பேற்க முன்வந்துள்ளது என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த 10 வருடகால மாக தங்கியிருந்ததுடன் இல்லத்தில் அதி கூடிய வயதுடைய முதியவராகவும் இவர் உள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த இராமலிங்கம் கந்தையா (வயது-92) என்பவரே வியாழக்கிழமை இல்லத்தில் காலமானார்.

இவர் தனது வாழ்நாளில் பொலிஸ் உத்தியோகத்தராகவும், தியாகி அறக்கொடை நிலையத்தின் பணியாளராகவும் கடமையாற்றியுள்ளார். தனது வயது முதிர்வை கருத்தில் கொண்டு பராமரிப்புக்கு யாரும் இல்லாத நிலையில் கைதடி முதியோர் இல்லத்தில் தஞ்சமடைந்திருந்தார்.

இந்த முதியவர் வியாழக்கிழமை காலமானதை அடுத்து தியாகி அறக்கொடை நிலையம் அவரது பணிகளை மதித்து இறுதிக் கிரியைகளைச் செய்ய முன்வந்துள்ளதாக கிருபாகரன் கூறினார். (ம-17-14)

# சுன்னாகம் சங்கப் பணியாளருக்கு கிடைத்தது ஆளணி அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,ஜன.13

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆளணி அங்கீகாரம் இல்லாமல் கடந்த சில வருடங்களாகப் பணியாற்றிய பணியாளர்களுக்கு ஆளணி அங்கீகாரத்துக்கான கடிதம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதில் 27 பணியாளர்களுக்கு இந்த ஆளணி அங்கீகாரம் விரைவில் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் சங்கப் பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பணியாளர்களுக்கான ஆளணி அங்கீகாரம், பணியாளர்களுக்கான மாதாந்தச் சம்பளத்தை விரைவில் வழங்குவது, கிளை விற்பனை நிலையங்களில் பொருள்களை விற்பனைக்கு விநியோகிப்பது போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனின் தலையீட்டினால் பணியாளர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

ஆளணி அங்கீகாரம் தொடர்பான பட்டியல் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நவம்பர் மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவும் நேற்றுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் கிளை நிலையங்களுக்கு பொருள் விநியோகத்தைச் சீராக்குவதற்கும் ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருப்பதாக சங்கத்தின் ஊழியர் தொழிற் சங்கம் தெரிவித்தது. (த-17)

## செஞ்சிலுவை சங்க தலைவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜன.13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபயசிங்க இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். நகருக்கு வருகை தரவுள்ளார்.

காலையில் யாழ்.செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பான உத்தியோகத்தர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

நாளை பொங்கல் தினத்தன்று வேலணை, தெல்லிப்பழை பகுதிகளுக்குச் சென்று அந்தப் பகுதிச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார். யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் தைப்பொங்கல் பரிசுப் பொருள்களை மாணவர்களுக்கு வழங்குவார் எனவும் யாழ்.செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (ம-7)

## மின்சாரம் தாக்கி இளைஞர் காயம்

தென்மராட்சி, ஜன.13

மின்சாரம் தாக்கி இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஞானசேந்தன் (வயது - 21) என்பவரே மின்சாரம் தாக்கிய நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## தூக்கி வீசப்பட்டவர் ஆஸ்பத்திரியில் சாவு

தென்மராட்சி, ஜன.13

உறவினரின் மரணத்தின் இறுதிக் கிரியைக்காக மயானம் சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய வேளையில் தூக்கி வீசப்பட்டதாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

மீசாலை கேணியடி ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலகுமார் (வயது-52) என்பவரே சாவடைந்தவராவார். (ம-9)

# 902 தனியார் நிறுவனங்கள் சேமலாப நிதித் திட்டத்தில்

*யாழ்ப்பாணம்,ஜன.13*

***வடமாகாணத்தில் கடந்த வருடம் 902 தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்று வடமாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.***

இத தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் 481 தனியார் நிறுவனங்களும், யாழ்ப்பாணத்தில் 264 நிறுவனங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 81 நிறுவனங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 63 நிறுவனங்களும், மன்னார் மாவட்டத்தில் 13 நிறுவனங்களும் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதேவேளை 2011 ஆம் ஆண்டு, 586 தனியார் நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 355 நிறுவனங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 139 நிறுவனங்களும் , வவுனியா மாவட்டத்தில் 85 நிறுவனங்களும், மன்னார் மாவட்டத்தில் 07 நிறுவனங்களும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்று கனகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-4)



*கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் வில்வம் தெருப் பகுதியில் உள்ள பழைமை வாய்ந்த மதகு இடிந்து விழுந்துள்ளது. இதனால் இந்த வீதியூடான போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (ம-135)*

# துண்டி மயான மடத்தை திருத்துமாறு கோரிக்கை



கொழும்புத்துறை, ஜன.13

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தின் மடம் கடந்த கால போர் நடவடிக்கைகளால் முற்றாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

தற்போது இந்த மயானத்துக்குச் சடலங்களை எரியூட்ட வருவோர் மழை, வெயில் வேளைகளில் தங்க இடமின்றி பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை இந்த மயான மடத்தை புதிதாக அமைக்க யாழ். மாநகர சபை உதவிகளை வழங்க முயற்சி எடுக்கும் என்று முதல்வர் தெரிவித்ததாக மயான பரிபாலன சபையினர் தெரிவித்தனர். தற்போது மயானத்தைச் சுற்றிவர அழிவுற்றிருந்த மதிற்சுவரை புதிதாக அமைக்கும் பணிகள் மயான அபிவிருத்திச் சபையின் முயற்சியில் துரிதமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

# வலி.வடக்கு வீதிகளுக்கு 400 வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.13

வலி.வடக்குப் பிரதேச சபையால் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரையில் 400 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் நிதியிலேயே இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

கடந்த வாரமளவில் வசந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வசந்தபுரம் கிராமத்துக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.

வயாவிளான் குட்டியப்புலம் பகுதிக்கும் பிரதேச சபையால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அதேபோன்று அளவெட்டி டச்சுறோட்டுக்கும் வீதி விளக்குகள் பிரதேச சபையால் பொருத்தப்பட்டுள்ளன.

பிரதேச சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப் பெடுத்ததில் இருந்து இதுவரை 400 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளுக்கும் வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## நிகழ்வுகள் இன்று

### அரங்கேற்றம்

யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும் நுண்கலைமாணி நாட்டிய கலா வித்தகர் ஸ்ரீமதி சுதர்சனி கரன்சனின் மாணவியுமான செல்வி எறின் பிறின்சி பீற்றர் தாஸின் பரத நாட்டிய அரங்கேற்றம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் அழகியற் கல்வி ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலைஞர் வேல் ஆனந்தன் கலந்து கொள்வார். (ம-23)

### நிர்வாக சபை தெரிவு

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நூல் நிலையத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் பொதுக் கூட்டமும் மாலை 5 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

### பொதுக்கூட்டம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் [illegible] தலைவர் [illegible] திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-8)

# நுளம்பு ஒழிப்பு வாரம் நாளை தென்மராட்சியில் ஆரம்பமாகிறது

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான நுளம்பு ஒழிப்பு வாரம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

"வேல்ட் விஷன்" நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அமைந்த பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. டெங்கு நுளம்பு ஒழிப்பு செயற்பாடுகளில் அந்தந்த பிரிவு கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், [illegible]ள், உள்ளூராட்சி சபையினர், பொலிஸார், தாய்மார், கழகத்தினர், சுகாதாரத் தொண்டர்கள், பொது அமைப்பினர் போன்றவர்களை ஈடுபடுத்துவதென கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விசேட டெங்கு ஒழிப்புக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்பு வார செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ள பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளின் விவரம் வருமாறு:-

15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மட்டுவில், சரசாலை ,மந்துவில், 16ஆம் திகதி புதன் கிழமை கொடிகாம் பிரதேசம், 17 ஆம் திகதி வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் பிரதேசம், 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபை இல. I, 21 ஆம் திகதி திங்கட் கிழமை சாவகச்சேரி நகரசபை இல. II, 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரணிப் பிரதேசம், 23 ஆம் திகதி புதன்கிழமை கைதடிப் பிரதேசம், 24 ஆம் திகதி வியாழக்கிழமை நாவற்குழிப் பிரதேசம். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு இனிமேல் ஆலோசனை தேவையில்லை

## சொல்கிறார் மொஹான் சமரநாயக்க

கொழும்பு, ஜன. 13

நாடாளுமன்றத் தெரிவிக்குழு அறிக்கையை ஆராய்ந்து ஆலோசனை வழங்க சுயாதீனக் குழு அமைக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லை. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்குவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசரை பதவியில் இருந்து அகற்றுமாறு கோரி நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட குற்றப்பிரேரணை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்குவதில் சட்டச் சிக்கல் காணப்படுகிறதா என்று ஜனாதிபதி மஹிந்த, சட்டத்தரணிகள் உள்ளிட்ட பல துறைசார் நிபுணர்களிடம் ஆலோசனை பெற்றார்.

ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கிய அனைவரும் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஷிராணியை நீக்குவதில் எந்தவித சிக்கலும் இல்லை. புதிய பிரதம நீதியரசர் ஒருவரை விரைவில் நியமிக்குமாறு கோரியதாகவும் சுட்டிக்காட்டிய மொஹான், எனவே தெரிவுக்குழு அறிக்கையை ஆராய்ந்து ஆலோசனை வழங்க ஜனாதிபதிக்கு சுயாதீன குழுவொன்றை அமைக்க வேண்டிய தேவை இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்றிரவு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது ஜனாதிபதி, தனது மனச்சாட்சிக்கு அமைவாக புதிய பிரதம நீதியரசரை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நியமிப்பேன் என்று தெரிவித்தார். இவ்வாறு அரச அமைச்சர்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஐ-5)

## வெடிமருந்து..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநகர் இறங்குதுறையை அண்மித்து ஓட்டோ ஒன்றில் வெடிமருந்தை இவர்கள் கொண்டுசென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது மீனவர்களுக்குக் கொடுப்பதற்காகக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

(த-4)

## படம் பார்த்து..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு மாநாட்டுக்குக் கட்டாயம் வரவேண்டும் என்று அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் தமது சொந்தச் செலவிலேயே இந்த மாநாட்டுக்கு வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவரும் நேற்று குறித்த நிகழ்வுக்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் சென்றிருந்தனர்.

நிகழ்வில் 15 ஆயிரம் தமிழ்ப் பட்டதாரிப் பயிலுநர்களும் கலந்துகொண்டிருந்தனர். இருப்பினும் நிகழ்வு முழுவதும் சிங்களமயப் படுத்தப்பட்டதாகவே நடைபெற்றுள்ளது. நிகழ்வில் வழங்கப்பட்ட அறிவிப்பு முதல் அனைவரது உரைகளும் சிங்கள மொழியில் மாத்திரமே இடம்பெற்றன.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன உரையாற்றுவதற்கு முன்பாக மாத்திரம், அறிவிப்பாளரினால் நிகழ்வில் 15 ஆயிரம் தமிழ்ப் பட்டதாரிகள் கலந்துகொண்டுள்ளீர்கள் கைதட்டி கரகோஷம் செய்யுங்கள் என்று தமிழ் மொழியில் கூறப்பட்டது.

ஜனாதிபதியின் உரைமுதல் அனைத்து அமைச்சர்களினது உரைகளும் தனிச்சிங் கள மொழியிலேயே இடம்பெற்றன. ஆங்கிலமொழிப் பெயர்ப்புக்கூட செய்யப்படவில்லை.

மேலும் நிகழ்வில் வைத்து சம்பிரதாய பூர்வமாக 3 பேருக்குப் பாராட்டுப் பத்திரம் மட்டும் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு அது எப்போது வழங்கப்படும் என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அரச ஊடகங்களில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனை நம்பி தங்களது சொந்தப் பணத்தைச் செலவழித்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கொழும்புக்குச் சென்ற பட்டதாரிப் பயிலுநர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். ஒருநாள் நிகழ்வுக்காக தமது ஒருமாத சம்பளத்தைச் செலவிட வேண்டி ஏற்பட்டதாக நிகழ்வுக்குச் சென்று வந்த பட்டதாரிகள் பலர் கவலையுடன் 'உதயனுக்'குத் தெரிவித்தனர்.

(த-5)

## பொங்கலுக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த் கைது செய்யப்பட்டார். இதன்பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தொடர்ச்சியாகப் பல பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் நான்கு மாணவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயன், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகியோரே வெலிகந்தை முகாமில் புனர்வாழ்வு என்ற பெயரில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையில் கடந்த 3ஆம் திகதி பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும், யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினருக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக்கழகத்தை உடனடியாக ஆரம்பிக்காவிட்டால் ஒரு வருடத்துக்கு யாழ்.பல்கலைக்கழகம் மூடப்படும் என்று தெரிவித்திருந்தார் உயர்கல்வி அமைச்சர்.

இதன்பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றதை அடுத்துக் கடந்த வாரம் பல்கலைக்கழகம் மீள ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி பி.பி.சி. செய்திச் சேவைக்கு நேர்காணல் வழங்கிய உயர் கல்வி அமைச்சர், கைது செய்யப்பட்ட 4 யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் தைப்பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படும் சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் கடந்த 8 ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் மீள இயங்க ஆரம்பித்திருந்தது.

இந்தநிலையில் பொங்கலுக்கு முன்னர் மாணவர்கள் விடுவிக்கப்படும் சாத்தியம் உள்ளதா என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமாரிடம் கேட்டபோது-

இதுவரை எமக்கு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை. நாம் நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே புனர்வாழ்வு பெற்றவர்களை விடுவிக்கின்றோம். பல்கலைக்கழக மாணவர்கள் விடுவிப்பு தொடர்பாக இதுவரை எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை - என்றார். (த-5)

## ரிஸானாவுக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்பட்டமையானது அதைரியப்படுத்தும் செயலாகும். ரிஸானாவை தடுப்பு காவலில் வைத் தமை மற்றும் அவருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளை துரிதப் படுத்தியமை உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ரிசானாவுக்கு மரணத்தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் கலக்கமுற்றிருக்கின்றேன். மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கு ஆழ்ந்த கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரிஸானாவுக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் இலங்கை மற்றும் சர்வதேச சமூகம் பல முறைப்பாடுகளை செய்திருந்தன. அவருக்கு உரிய வகையில் மொழிப்பெயர்ப்பு வழங்கப்படவில்லை என்றும் பொலிஸார் பலவந்தமாகவே அவரிடம் வாக்கு மூலத்தை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, சவூதி அரேபியாவில் 2011 ஆம் ஆண்டு மரண தண்டனைகள் வழங்கப்பட்டமை அதிகரித்திருந்ததாகவும் ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

## சவாலில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மஹிந்த ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுதந்திர பட்டதாரிகள் மாநாடு, சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்த மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விடயத்தில் அரசியல் யாப்பிற்கு உட்பட்டே எமது அரசு செயற்பட்டது. நீதிமன்றத்தின், சுயாதீனத்தையும், கௌரவத்தையும் பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இதனால் நீதிமன்றம் என்ற புனித பூமியை பாதுகாக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும். நீதிமன்றுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் எவரும் செயற்படக் கூடாது.

நீதிமன்ற வளாகத்தை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்ற போதும் இன்று நீதிமன்ற வளாகம் ஆர்ப்பாட்ட சுற்றுவட்டமாக மாறிவிட்டது.

எமது அரசு பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அதில் ஒரு சவால் நேற்றைய தினம் (வெள்ளிக்கிழமை) நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் இலங்கைக்கு எதிராக தற்போதும் பல சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அவற்றையும் வெற்றி கொள்வோம்- என்றார். (த-5)

## கீரிமலை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரம் பயிலும் அளவெட்டியைச் சேர்ந்த பகீரதன் (வயது-16) மாகியப்பிட்டியைச் சேர்ந்த சி. உமாசங்கர் (வயது-16) என்ற இரு மாணவர்களும் கடலுக்கு குளிக்கச் சென்றுள்ளனர்.

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் கடலில் குளிப்பதற்காக இவர்கள் இறங்கியுள்ளனர்., கடந்த சில நாள்களாக பெய்த தொடர் மழை காரணமாக, ஐந்துகண் மதகு ஊடாக குறித்த கடற் பகுதிக்கு அதிகளவான நீர்வரத்து காணப்பட்டது. குளிக்கச் சென்ற அரைமணி நேரத்திலேயே மாணவர்கள் இருவரும் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இதன்போது மாணவர்கள் எழுப்பிய அவலக் குரல் கேட்டு, அந்தப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அந்த இடத்துக்கு விரைந்தனர். இதன் போது மாணவனான பகீரதன் மாத்திரம் பத்திரமாக மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டார். அதன் பின்னர் அவர் உடனடியாகச் சிகிச்சைக்காக தெல்லிப்பழை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மற்ற மாணவனான உமாசங்கர் நேற்று மாலை வரை மீட்கப்படவில்லை. மீனவர்கள், கடற்படையினர் இணைந்து அவரைத் தேடியபோதும் பயன் கிடைக்கவில்லை நேற்று இரவு 7 மணியுடன் தேடுதல் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. (த-5-86)

## முன்னாள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இறுதிக் கட்டப் போரில் படையினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் இன்று 315 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். இன்னும் 425 பேர் புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளனர். அவர்களும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலைகளிலுள்ள புலிச்சந்தேக நபர்கள் அவர்களின் வழக்குகள் அடிப்படையில் வெவ்வேறு கட்டங்களின் கீழ் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வழக்குகள் துரிதப் படுத்தப்பட்டதன் பின்னர் சுமார் 1400 புலிச்சந்தேக நபர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் தற்போது சுமார் 800 பேர் வரையிலானோரே புனர்வாழ்வு பெற்று வருவதாகவும் ஏனையோர் குடும்பத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த வகையில் எஞ்சியிருப்போரும் விரைவில் புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுதலை செய்யப்படுவர் என்றார். (த-5)

## சிறீதரன்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பலவாணர் வேழமாலிகிதன் (வயது -38) தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளரான வசந்தன் (வயது-29) என்ற இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று வெடிபொருட்களுடன் வசந்தன் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாராலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வழங்கிய தகவல்களின் பிரகாரம், கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு அருகிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகமான அறிவகத்துக்குச் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் போது யாழ்ப்பாணத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட வசந்தனையும் கை விலங்குடன் அவர்கள் அங்கு அழைத்துச் சென்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவகத்தைத் தீவிரமாக சோதனை நடத் திய பயங்கரவாதப் பொலிஸார் அவரது வீட் டில் இருந்து '' சொப்பிங் பாக்'' ஒன்றை மீட்டுள்ளனர். அதில் 500 கிராம் சி-4 ரக வெடிமருந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதும், ரி.ஐ.டியினர் குறித்த பையை அங்கிருந்தோருக்குத் திறந்து காண்பிக்கவில்லை.

அத்துடன் அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் மற்றும் கணினிகள் என்பனவும் துருவித்துருவிச் சோதனை செய்யப்பட்டன. சிறீதரனின் செயலாளர் பொன். காந்தனிடம் மணிக்கணக்கில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

இறுதியில் நேற்று இரவு 8 மணியளவில் தமது சோதனைகளை முடித்த பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸார், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதனையும் ஆதரவாளரான வசந்தனையும் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பாதுகாப்புப் பொலிஸார் வழமையாகத் தங்கும் அறையில் இருந்தே மேற்படி பை மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம் கேட்டபோது, இது திட்டமிடப்பட்டு சோடிக்கப்பட்ட சம்பவம். எனக்கு பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸார் கடந்த மாதம் 4 ஆம் திகதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் கேட்டபோது மேலிட உத்தரவுகள் காரணமாகவே நீக்கப்பட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு சபாநாயகர் , வடமாகாண பொலிஸ்மா அதிபர் எனப் பலதரப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை .

இந்த நிலையில் எனது அலுவகத்தில் இருந்து வெடிபொருள் மீட்கப்பட்டதாகச் சொல்லுகின்றனர். இது தொடர்ச்சியான திட்டமிட்டு சோடிக்கப்பட்ட சம்பவம் தான்- என்றார். (த-5-6-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாய்
## வேலை வாய்ப்பு
**Dulsco நிறுவனத்திற்கு**

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| பொது உதவியாளர் (General Helper) | 100 | 650+150 (Food) |
| பண்டகசாலை காப்பாளர் (Store Keeper) | 30 | 1200 + 150 (உணவு) + 250 (ஏனையகொடுப்பனவு) |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்

AED = SL Rs 35.00
CV Collections only
வயது 22-35 வரை

* ஒப்பந்த காலம் : 2 வருடங்கள்
* பயிற்சி காலம் : 6 மாதங்கள்
* வேலை நேரம் : நாளொன்றுக்கு 8 மணி
* தங்குமிடம்/போக்குவரத்து : நிறுவனத்தால் வழங்கப்படும்.
* உணவு : 150dhs வழங்கப்படும்
* மருத்துவம் * தங்குமிட பாதுகாப்பு
* அடிப்படை ஆங்கில அறிவு அவசியம்

**இலவசம்!**

* Experience in Freight Station & Containter depot

இந்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழற்கப்படும்

AL/1980/ADVT/ 02/13 AL/1980/ADVT/ 01/13

**நேர்முகப் பரீட்சை ஜனவரி 18 -25 வரை**

18-புத்தளம் , 19 - யாழ்ப்பாணம் (ஹோட்டல் சுபாஷ் 8.00am - 12.00pm)
20- கிளிநொச்சி, 21-திருகோணமலை (நகர சபை மண்டபம் 9.00am - 2.00pm)
22-மட்டக்களப்பு (காத்தகன்குடி ஹிரா பவுன்டேஷன் 8.00am - 11.00am)
23- குருநாகல் (கென்டியன் ரீச் ஹோட்டல் 9.00am - 2.00pm
24/25 - கொழும்பு (பான் குளோபல்)

பான் குளோபல் PAN GLOBAL வெளிநாட்டு வேலை வாய்ப்பு L/L 1980

**பான் குளோபல்**
351/1, ஆர் ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 3.
(மஹனாம கல்லூரிக்கு அருகில்)
தொலைபேசி : 011 5300100, 0773 502201 / 0773 140788

FLEX Graphic


# சரீ ஆ சட்டப்படி எனது மகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஏற்கின்றேன்

## ரிஸானாவின் தாயார் ஆதங்கம்

மூதூர், ஜன. 13

சரீ ஆ சட்டப்படி எனது மகளுக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை தீர்ப்பை நான் முழுமையாக மதிக்கின்றேன். எனது மகள் ரிஸானாவை அல்லாஹ் தான் தந்தான். இப்போது அவன் தான் எடுத்துள்ளான். இது தான் என் உறுதியான நம்பிக்கை, என்று சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கின் தயார் ரஸீனா நபீக் தெரிவித்தார்.

ரிஸானா நபீக் மரண தண்டனைக்கு வழங்கப்பட்ட பின்னர் கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

சரீ ஆ சட்டப்படி எனது மகளுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நான் முழுயாக மதிக்கின்றேன். அதனை ஏற்றுக் கொள்ளுகின்றேன். சரீ ஆ சட்டப்படி வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் மூலம் அது எத்தகையதாகத இருந்த போதும் நிரந்தரமான மறுமையில் ரிஸானாவிற்கு உயர்ந்த பேறு கிடைக்கும். அவர் இப்போது சுவனத்திற்குச் சென்றுள்ளதாகவே உணர்கின்றேன்.

உலகெங்கும் உள்ள முஸ்லிம் சகோதரர்கள் எனது மகளை அவர்களது சொந்த சகோதரியாகக் கருதி 'து ஆ' பிரார்த்தனையில் ஈடுபட்டதானது இதனையே மேலும் உறுதிப்படுத்துகின்றது. இதனால் ரிஸானாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு பற்றி வேறு எதுவும் என்னால் கூறமுடியாது. எல்லாவற்றுக்கும் அல்லாஹ்வே போதுமானவன்.

இதேவேளை ரிஸானாவுக்கு மன்னிப்பை பெற்றுக்கொடுப்பதற்கு பல்வேறு வழிகளிலும் இறுதிவரை முயற்சித்து வந்த அனைத்து உள்ளங்களுக்கும், ஊடகங்களுக்கும், மனித உரிமைகளோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கும், சமூக செயற்பாட்டாளர்களுக்கும் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு அல்லாஹுதஆலா அனைவருக்கும் பேரருள் புரியவேண்டுமென பிரார்த்திக் கின்றேன் - என்றார். (5)


## கணினி விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள Suzuki T1428 கணினி (Processor: Pentium Dual Core 2.3 Ghz, RAM: 2Gb, Hard Disk: 320 Gb) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0774488983


## பெண் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை

கொழும்பு, ஜன. 13

39 வயதான மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் கூரான ஆயுதத்தினால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்துருவ - மஹவத்த பகுதியில் நேற்று அதிகாலை 1.10 அளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்த ஒருவரே கூரான ஆயுதத்தால் குத்தியுள்ளார். பெண்ணின் உடம்பில் பல தடவைகள் குத்திய பின்னர் அவர் தப்பி யோடியுள்ளார். கடுமையான காயங்களுக்குள் ளான பெண் அயலவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

காணித் தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிப்பதுடன் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கல்கமுவ - காடுவெவ பகுதியிலும் பெண்ணொருவர் கூரான ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப் பட்டுள்ளார். கணவரால் குறித்த பெண் கொலைசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ( -5)

## அரசு புதிய நீதியரசரை நியமிக்க 500 பேரைப் பலியிட வேண்டும்

### சவால் விடுகிறார் ஆஷாத் சாலி

கொழும்பு, ஜன. 13

அரசு புதிய பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்க முற்பட்டால் 500 பேரின் உயி ரிழப்புக்கு மத்தியிலேயே நியமிக்க முடியும். முடிந்தால் புதிய பிரதம நீதியரசரை நியமியுங்கள். இவ்வாறு அரசுக்கு சவால் விடுத்துள்ளார் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க இதுவரை பதவி விலகாமல் இருக்கின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மேலும் குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்ட அனைத்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நீதிமன்றத்துக்கு அழைப்போம்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக் கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையில் அரசு வெற்றிபெறலாம். ஆனால் முடிந்தால் புதிய பிரதம நீதியரசரை நியமியுங்கள்.

அரசு புதிய நீதியரசர் ஒருவரை நியமிக்க முற் பட்டால் 500 பேரின் மரணத்துக்கு மத்தியி லேயே புதிய பிரதம நீதியரசரை நியமிக்க வேண்டியேற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ( -5)


## மணமகள் தேவை

[illegible] நட்சத்திரம் M.BA படித்து, அரச பணிபுரியும் மணமகன் A/[illegible] படித்த மணமகளை எதிர்பார்க்கிறார்.

லண்டன்: 00447833819736

(28275)(6.14)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுவக்கீன் மகேஸ்வரி (மகேஸ்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சுவக்கீன் மகேஸ்வரி 12.01.2013 சனிக்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி அன்னம்மா தம்பதினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சீமோன் - வரோனிக்கா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுவக்கீனின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், லோரன்ஸ் ஜெனிவ ராஜ் (கனடா), யஸ் அனி ஏஞ்சல் (ஓய்வு பெற்ற ஆசிரியை), கனிபவுளின் (கனடா), வில்சன் பொனிராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா ஜோர்ச், எட்வேட் மற்றும் ஆனந்தராஜா, மேரிராணி, வரவணிக்கா, யோசேப், மேரிமெற்றலின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், நோயல், கந்தையா, வேல்முருகு மற்றும் இராஜேஸ்வரி, மேரிராணி, புவனேஸ்வரி, செபமாலைமுத்து (தங்கராசா) ஆகியோரின் மைத்துனியும், மொறின், லின்டா (கனடா), குலதாஸ் (ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்), பசில் லொயிட் (கனடா), சுதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிர்மல் (கனடா), டில்ஷான் (பொறியியலாளர்), செல்டா (கனடா), சப்திகா, நிம்ரோத், சேற்றன் (கனடா), எரிக் (கனடா), கிளாற்றிக் (கனடா) ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை மறுதினம் (15.01.2013) செவ்வாய்க்கிழமை கனடா ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொணிராஜ் - 0016472921869 (கனடா - மகன்)
குல்தாஸ் (மருமகன்) - 0776202007, 0212250780 (ஆசிரியர்)

பிரதான வீதி,
சங்கானை.

## சபாரத்தினம் தெய்வேந்திரம்



கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும், குளப்பிட்டி கொக்குவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட சபாரத்தினம் தெய்வேந்திரம் நேற்று (10.01. 2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், சிவநாதபிள்ளை, அருளானந்தபிள்ளை, யோகமலர், திருலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிவப்பிரகாசம், அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன், தற்சொரூபன் (லண்டன்), காயத்திரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதன மோகனின் (லண்டன்) அன்பு மாமனும், வருணிகா, வாகிணியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி, கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## வில்பிறேட் மேரிபுஸ்பம்



இல 40, ஈச்சமோட்டை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வில்பிறேட் மேரி புஸ்பம் நேற்று(12.01.2013)சனிக்கிழமை அகாலமரணமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்-திரேசம்மா தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் மருமகளும் தவமேரி ஜெயமேரி, காலஞ்சென்ற சோதிமலர் ஆகியோரின் சகோதரியும், ஜொய்சி,யசிந்தா, கிள்பேட், காலஞ்சென்ற கலிஸ்ரா மற்றும் றொபேட் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தம்பிராசா, றெஜினோல்ட், கிறேசியன், யமினா, லுமினா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.01.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

(28277)(14.6)

## அந்தோனிப்பிள்ளை ஜான்சன்(நிக்சன்)



திருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜான்சன் கடந்த (10.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று(13.01.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொலமன் லேன்,
திருநகர்.

தகவல்: பப்பாச்சி(அண்ணா)
(பப்பாச்சி பான்ட் வாத்தியக் குழு)

## அப்புத்துரை சரவணமுத்து



சாவகச்சேரி, தனங்கிளப்பு, அறுகு வெளியைப் பிறப்பிடமாகவும் பழைய பாடசாலை வீதி, கல்வயல்,சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சரவணமுத்து நேற்று (12.01.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை -சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், செல்லம்மா (கிளி.கெற்பேலி), காலஞ்சென்ற முனீஸ்வரநாதன் (நாதன்) மற்றும் கோணேஸ்வரநாதன் (தவம்- தனங்கிளப்பு), மலர்விழி (தேவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பென்னுத்துரை (உடுவில்), பராசக்தி (பூநகரி) ஆகியோரின் சகோதரரும், கந்தர், சுகிர்தா, காலஞ்சென்ற பிரகாஸ், ஆகியோரின் மாமனும், அருந்தவமலர், தர்மபாலன், அருந்தவராசா, செங்கதிர்செல்வி அருந்தவராணி, கோவிந்தராசா, மோகனதாஸ் (யா/டிறிபேக் கல்லூரி, தரம்-10 மாணவன்), கஸ்தூரி, லக்சிகா, இந்துஷா, டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், சஜித், தனுஷன், பத்மவேணி, ஜனோஜன், நிருஷன், கிருஷன், டிலக்சன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வசிப்பிடத்தில் இன்று (13.01.2103) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(18012)(9.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

தொல்புரத்தில் விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு முன்னால் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு- 011 2502505

---

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜெர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

Saving Book - FD- Statement

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.

077 4789289
077 9122334

No. 52 Davidson Road, Colombo 04.

நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

FLEX Graphic

---

உங்கள் வீடு மற்றும் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு கமராக்கள்



நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் தொலைபேசி மற்றும் கணனி ஊடாக கண் காணிக்க கூடிய வசதி

Fingerprint Access Control
Lens 3.6mm
1 year Limited Warranty

இன்றே அழையுங்கள் 0771 098 332
E-mail info@cloudlanka.net Cloud Lanka

---

## பௌதிகவியல்/இணைந்த கணிதம் தமிழ்/ ஆங்கிலம் A/L 2014, 2015

மேற்படி பாடங்களை பிரபல கல்லூரிகளில் சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகிறது.

தனிப்பட்டமுறையிலும், முழுப்பாடத்திட்டமும் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட A/L வினாத்தாள் உட்பட கற்பிக்கப்படுகின்றது.

தொடர்பு:
R.பாலசுப்பிரமணியம் (B.Sc(Cey) Dip.in Ed
42/1 இந்துக்கல்லூரி ஒழுங்கை
திராவியடி, யாழ்ப்பாணம்
T.P: 0775178727

---

## மரண அறிவித்தல்

### சிவகுரு இராஜநாயகம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு இராஜநாயகம் கடந்த 09.01.2013 இறைபதம் எய்தினார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸையில் உள்ள மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்கிஸை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0112712934. குடும்பத்தினர்.

---

## தபால் மூல கல்வி

O/L இன் பின்னர் வீட்டிலிருந்து கற்க 03 மாத கால விஷேட

சகல பாட நெறிகளும் தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழி மூலம்

DIPLOMA IN ENGLISH (SPOKEN ENGLISH)
CERTIFICATE IN ENGLISH / DIPLOMA IN BUSINESS ENGLISH



- DIPLOMA IN BUSINESS MANAGEMENT
  வியாபார முகாமைத்துவம்
- DIPLOMA IN MONTESSORI TEACHING METHOD & CHILD PSYCHOLOGY
  மழலையர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி

ஏனைய முகாமைத்துவ பாடநெறிகள்

- Diploma in Management
- Office Administrative
- Human Resources
- Production & Process
- Financial
- Marketing
- Customer Care
- Advertising

• வீட்டிலிருந்து கல்வி கற்க
• வயதெல்லை இல்லை • சர்வதேச தகைமை

- IVSC Certificate
- Job placement in Sri Lanka (Conditions Apply)
- ICCP Membership Certificate
- (Gold & Platinum) Exclusive Discount Card

நேரடி வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்

விஷேட கழிவு & 100பாடதொகுப்பு Spoken English DVD Free Jan 23 வரை மட்டுமே

MSC College
MSC INTERNATIONAL EDUCATION GROUP (PVT) LTD

JEBZ

Contact us:
203, Layards Broadway, Grandpass, Colombo 14.
Hotline : 0777 766 514 / 0777 766 546 Tel : 011-2433386

---

## தை பிறந்தால் வழி பிறக்கும்



சட்டப்படி கனடா செல்லுங்கள்

தவணை முறையிலான அனைத்துக் கட்டணங்களும் கனடாவில்

LMO+WP, AE+PR, PNP+PR

Canada வீசாக்கள்

மேலும் பல வீசா சேவைகள்

அழையுங்கள் 021 2219686, 077 7708280

ரெட்டிணா இடப்பெயர்வு சேவை
685, வைத்தியசாலை வீதி
யாழ்ப்பாணம்
(பழைய புகையிரத நிலையம் அருகில்)

---

## மலேசியாவிற்கு 50 பணிப்பெண்கள்

பாதுகாப்பான தமிழ் வீடுகளிற்கு தமிழ்ப் பணிப்பெண்கள் உடன் தேவைப்படுகின்றனர்

கடவுச்சீட்டு வீசா அனைத்தும் இலவசம் சிறந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

உடன் பயணம்

மாத ஊதியம்

RM: 850/- ரூபா: 36,000/-

நிபந்தனைகள்

- தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இலவசம்.
- இலவச விமானப் பயணச்சீட்டு
- 12 மணி நேர வேலை

தொடர்புகொள்க: 021-2219686, 0777708280

ரெட்டிணா ரெக்ரூட்டிங்
294 காலிவீதி பம்பலப்பிட்டி கொழும்பு 4.

உரிம இல: 1709 அனுமதி இல: Advt/1709/02/13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் மேற்கு தவில் வித்துவான் இ.முருகானந்தம் (நடுவிலான்) அவர்களின் தந்தையார் நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம்



எஸ்.கே.இராமமூர்த்தி அவர்கள் 09.01.2013 அன்று இறைபதம் அடைந்தமை குறித்து அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(28311)(5-6-7)

சி.புவனேந்திரனும் (சின்னராசா),கோண்டாவில் மேற்கு மக்களும்.

---

## யாழ் துரையப்பா விளையாட்டரங்கில்

வரும் 18, 19, 20 திகதிகளில் நடைபெறும் மாபெரும் கண்காட்சியில் விஷேட விலைக் கழிவுடன் விற்பனைக்குண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

குறைந்த முதலீட்டில் கூடிய இலாபம் பெற...




தமிழில் தொடர்புகொள்ள

0773918870 , 0771066902

WINRICH INTERNATINAL (PVT) LTD
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு
## துபாய் - கட்டார்

உடன் பயணம்

### துபாய்

| | | |
|---|---|---|
| ஸ்டீல் பப்ரிகேட்டர் | 10 | 1200- 1400 |
| MIG/ Arc வெல்டர் | 15 | 1200- 1400 |
| சுத்திகரிப்பாளர் (க்ளீனர்) | 10 | 900 |
| உதவியாளர் (ஹெல்பர்) | 10 | 900 |
| கார்ப்பென்டர் (தச்சர்) | 10 | 1200 |
| A/C டெக்னீசியன் | 10 | 1200- 1400 |
| வாகன எலக்ரீசியன் | 10 | 1400 |
| மேசன் | 10 | 1200 |

### கட்டார்

| | | |
|---|---|---|
| மேசன் | 10 | 1200 |
| கார்ப்பென்டர் (தச்சர்) | 10 | 1200 |
| ப்ளம்பர் | 10 | 1200 |
| எலக்ரீசியன் | 10 | 1200 |
| A/C டெக்னீசியன் | 10 | 1500 |
| பைப் பிட்டர் | 10 | 1400 |
| வெல்டர் | 10 | 1400 |
| உதவியாளர் (ஹெல்பர்) | 15 | 800 |

நிபந்தனைகள்

தங்குமிடம், மற்றும் மருத்துவ வசதிகள் இலவசம். 2 வருட ஒப்பந்தம் ஒரு வழி விமான பயணச் சீட்டு. 8 மணி நேர வேலை

தொடர்புகொள்க 021-2219686, 0777708280

ரெட்டிணா ரெக்ரூட்டிங்;
294 காலிவீதி பம்பலப்பிட்டி கொழும்பு 4.

உரிம இல: 1709 அனுமதி இல: Advt/1709/01,03/13

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்கள் நலத் திட்டம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டா?

குடாநாட்டின் பொருளாதார விருத்தியில் பிரதான பங்காற்றும் மூன்று வளங்களில் கடல்சார் துறையும் ஒன்று. விவசாயம் மற்றும் பனை வளங்கள் ஏனைய இரண்டுமாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போர்ச் சூழலில் இவை மூன்றினதும் விருத்தியும் வளர்ச்சியும் அடிமட்டத்துக்குச் சென்றமை எமது மக்களின் பேரிழப்புகளில் சேர்க்கப்படக் கூடியவை. அவற்றை முந்திய நிலைக்கு வளர்த்தெடுப்பதற்கு திட்டமிட்ட முறையிலான, செயல்முறைகளும் நிறுவனங்களும் தேவை.

தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் அற்ப சொற்ப திட்டங்கள், செயற்பாடுகள் தலைகாட்டினாலும் அவை கொடும் பசிக்கு ஒருவாய் சோறு இட்டது போலாகும். இத்தகைய ஒரு கையறுநிலை, பெருமனது கொண்ட மனித நேயம் மிக்க வெளிநாடுகளின் உதவிகளையே நாடவேண்டிய தேவை உருவாகி உள்ளது.

அந்த வகையில் பிரான்ஸ், அந்த நாட்டு 'அரசு, மீன்பிடித்துறைக்கு உதவும் தனது திட்டத்தில், வடக்கின் கடல்வளம் நிறைந்த மன்னாரிலும் யாழ். குடாநாட்டிலும் மீன்பிடித்துறைமுகங்களை அமைப்பதற்கு உதவ முன்வந்துள்ளது.

இந்தத் தகவலை கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரீன் றொபின் வெளியிட்டிருந்தார். மன்னாரில் ஆழ்கடல் மீன்பிடிக்குப் பிரசித்தமான சிலாபத்துறையிலும், யாழ்ப்பாணத்தில் குருநகர் கடற்பகுதியிலும் மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதே பிரான்ஸ் நாட்டின் உத்தேசம் என்பதனையும் அவர் விவரித்திருந்தார்.

'வடக்கின் கடற்றொழில் விருத்திக்கு உதவும் தமது நாட்டின் உத்தேச இரண்டு திட்டங்கள் குறித்தும் இரண்டு மாவட்டங்களிலும் உள்ள கடற்றொழிலாளரின் கருத்துக்களையும் அறிந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அந்த வகையில், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவ்வேளை, யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படும் மீன்பிடித் துறைமுகத்தை மயிலிட்டியில் கட்டுவதே சிறந்ததும் பயனுள்ளதாகவும் அமையும் என்று தூதுவரிடம் விஸ்தாரமாக விளக்கப்பட்டது, எடுத்துரைக்கப்பட்டது.

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவும், படகுகளை நங்கூரமிடவும் மயிலிட்டித் துறைமுகமே நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததையும் எடுத்துக் கூறினர்.

குருநகர் கடற்பகுதி ஆழம் குறைந்தது; அது நீரேரியே. அந்த வகையில் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்ததல்ல என்ற விவரம் தூதுவரிடம் விலாவாரியாக விளக்கப்பட்டது.

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளவும், கடற்றொழில் படகுகளை நங்கூரமிடவும், கடற்றொழிலில் அதிக பயனீட்டவும் மயிலிட்டித் துறைமுகமே மீனவர்களினதும், குடாநாட்டினதும் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ உகந்தது என்பதும் மற்றும் பூகோள அமைவு, களநிலைமைகள் குறித்துத் தூதுவரிடம் எடுத்துரைக்கப்பட்டன.

இதற்கிடையில், 1983ஆம் ஆண்டில், இலங்கையின் மொத்தக் கடல் உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பகுதியை மயிலிட்டிப் பகுதி கடற்றொழிலாளரே பூர்த்தி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. போர்ச்சூழல் ஆரம்பமான பின்னர் அங்கு வாழ்ந்த அனைத்துக் கடற்றொழிலாளரும் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களை நாடிச்செல்ல நேர்ந்தது.

ஆனால், போர்முடிவுற்று மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் கரையோரப் பிரதேசங்கள் இன்னமும் உயர் பாதுகாப்பு வலயமாகவே தொடர்ந்தும் மக்கள் மீளக்குடியமர முடியாத இடங்களாகத் தடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நிலையில், பிரெஞ்சு அரசு தனது உத்தேச திட்டத்தை மாற்றினாலும் கூட, மயிலிட்டியில் மீன்பிடித் துறைமுகத்தை அமைக்க அரசின் செயற்பாடுகளில் மாற்றம் தேவை. அதாவது, மயிலிட்டிப் பகுதியின் ஆறு கிராமசேவகர் பிரிவுகளில் வாழ்ந்த மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

வடக்கின் வசந்தம் என்ற செழுமையான சொற்றொடரின் பின்னால், தனக்குப் பிடித்தமான மக்கள் நலத் திட்டங்களை மட்டும் முன்னெடுத்து புணுகு பூசிக்கொண்டு அனைத்துலகத்துக்கு பிரமாதப்படுத்தும் இந்நாட்டு அரசு -

வடக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கு மட்டுமன்றி, முழு நாட்டினதும் வளர்ச்சிக்குப் பங்களிக்கவல்ல இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த வாய்ப்பு அளிக்குமா?

அன்றேல் வழமையான தனது பிரதேச வாதத்தை முன்னெடுக்கும் போக்கைக் கையில் ஏந்திப் பிடிக்குமா? குடாநாட்டு மக்களுடன் பிரெஞ்சு அரசுக்கும் பொறுத்திருந்து பார்க்கும் நிலையே மிஞ்சுமா?

## இடமாற்றம் பெறும் ஆசிரியரின் மேன்முறையீடு செய்வதற்கு இந்த வருடத்தில் புதிய நிபந்தனைகள் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.13

இந்த வருடம் இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்வதில் புதிய நிபந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்விச் செயலாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுக்கு இடையே இடம்பெற்றன. அதன்போது இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மருத்துவ காரணங்களையுடைய, அங்கவீனமான ஆசிரியர்கள் நேரடியாக மேன்முறையீடு செய்ய முடியும். இடமாற்றம் பெறும் ஆசிரியர் தனது கணவன் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் சுகவீனம் அடைந்திருந்தால் மேன்முறையீடு செய்ய முடியும். அதற்கு மருத்துவ சான்றிதழ், சுகவீனமடைந்துள்ளவரைப் பராமரிக்க, குறித்த ஆசிரியரைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கடிதம், அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் வழங்கப்பட வேண்டும்.

கடந்த வருட நேர அட்டவணையில் ஆசிரியர் ஒருவர் முழுமையாக ஆங்கிலமொழி மூலப் பாடங்களை கற்பித்திருப்பின் அந்த ஆசிரியர் ஆங்கில மொழி மூல ஆசிரியராகக் கருதப்படுவார்.

அவர்கள் ஆங்கில மொழிமூல கற்கைநெறி இல்லாத பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். விசேட கல்வி ஆசிரியர்கள் குறித்த அலகு இல்லாத பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

கடந்த காலங்களில் இடமாற்றம் மேற்கொள்ளப்படும் போது ஆளுநரால் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அந்தக் கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் மூலமாக இடமாற்றத்தில் இருந்து விடுவிப்புப் பெறலாம். ஆளுநரால் இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டவர்களது தகுதி மீள் பரிசீலிக்கப்படும்.

மீள்குடியமர்ந்து கொண்டிருக்கும் ஆசிரியர்கள் உரிய காரணங்களை முன்வைத்து மேன்முறையீடு செய்து இடமாற்றத்தை ஒத்திவைக்கலாம்.

குறித்த ஒரு பாடத்துக்கு தேவையைவிட, இடமாற்றத்துக்குத் தகுதியான ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாயின் வயது மூப்பின் இறங்குவரிசைப்படி ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு முன்னிலைப்படுத்தப்படுவர்.

குறித்த படிவத்தில் மாத்திரம் மேன்முறையீடு செய்ய முடியும். படிவம் இலவசமாக வழங்கப்படும். ஏற்கனவே மேன்முறையீட்டுக்கான ஆவணங்கள் சமர்ப்பித்திருப்பின் மீளவும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. சுட்டிக்காட்டினால் போதுமானது. ஆசிரிய ஆளணி ஒதுக்கீட்டுக்கு அமைவாகவே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

### வன்னி வலயப் பாடசாலை ஆசிரியர்கள்

## சேவைக் காலத்தை முடித்திருப்பின் இடமாற்றத்தைப் பெற முடியும்

யாழ்ப்பாணம்,ஜன.13

வன்னி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், தமது நியமனக் கடிதத்தில் உள்ளவாறு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் தாம் விரும்பும் வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற முடியும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வருடாந்த இடமாற்ற முறையின் மூலமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்கு பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், தமது நியமனக் கடிதத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் இடமாற்றம் பெறத் தகுதியுடையவராவர்.

எனினும், இதற்கு மேலதிகமாக தொண்டராசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் குறித்த பிரதேசத்தில் 10 வருடங்கள் பணியாற்றியிருந்தால் மட்டுமே இடமாற்றம் பெறுவர்.

குறித்த வலயத்தில் விரும்பப்படும் பாடசாலைகளில் மாத்திரம் பணியாற்றியிருப்பின் 6 வருட பணியைப் பூரணமாக நிறைவு செய்திருப்பின் இடமாற்றம் பெற முடியும்.

போக்குவரத்து வசதி குறைந்த பாடசாலையில் 4 வருடங்கள் பணிபுரிந்தும், விரும்பப்படும் பாடசாலையில் ஒரு வருட சேவையுமாக 5 வருடங்கள் பணியாற்றியிருப்பின் இடமாற்றம் பெறுவர்.

போர் காரணமாக வெளிப்படையாகத் தெரியும் வகையில் ஊனமுற்றவர்கள், உயிரிழப்புகள் தொடர்பில் மேன்முறையீடு செய்தால் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

துணைவர் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதை ஒப்புக்கொண்டால் அவர் அது தொடர்பான ஒப்பந்தத்தை வலயக் கல்விப் பணிப்பாளருடன் மேற்கொண்டு சேவைக் காலத்துக்கு மேலதிகமாக அதே வலயத்தில் பணியாற்ற வேண்டும்.-என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

### வர்ண மழைகள் பற்றி ஆய்வு செய்யும் நாஸா விஞ்ஞானி

இலங்கையில் பெய்து வரும் சிவப்பு, மஞ்சள், பச்சை நிற மழைகள் மற்றும் விண்கற்களின் துண்டங்கள் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நாஸா நிறுவனத்தின் கோள்கள் பற்றி ஆராயும் விஞ்ஞானியான. பேராசிரியர் ரிச்சார்ட்.பீ.வுவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருத்துவ ஆய்வுகள் நிறுவனத்தின் பணிப்பாளரான மருத்துவ நிபுணர் அனில் சமரநாயக்க தெரிவிப்பதற்கு அமைய, ஏற்கனவே சிவப்பு மற்றும் மஞ்சள் மழை நீரின் மாதிரிகள் மற்றும் நிலத்தில் விழுந்துள்ள விண்கல் துண்டங்கள் சம்பந்தமாக இங்கிலாந்தின் காம்ப் மற்றும் பக்கிங்ஹாம் பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த ஆய்வுச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு பேராசிரியர் ரிச்சார்ட்.பீ.வுவர் தமது விருப்பைத் தெரிவித்துள்ளார். உயிரியல் விஞ்ஞானியான பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்கவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்- என்றும் மருத்துவர் சமரநாயக்க தெரிவித்துள்ளார். (ம-22)

## அமைச்சர் ஒருவரின் மாதச் சம்பளம் ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபா

கொழும்பு,ஜன.13

கொடுப்பனவுகளுடன் அமைச்சர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாவாகும்.

ஆயினும் மேல் மாகாணத்துக்கு வெளியே அமைந்துள்ள மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவருக்கு மாதம் ஒன்றில் 750 லீற்றர் பெற்றோலும், மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவருக்கு 600 லீற்றர் பெற்றோலும் மேற்குறிப்பிட்ட சம்பளத்துக்கு மேலதிகமாக இலவசமாக வழங்கப்படுகிறது.

டீசல் வாகனம் ஒன்று தொடர்பாக முறையே 600 லீற்றர் டீசலும் 500 லீற்றர் டீசலும் கிடைக்கிறது.

2011 ஆம் ஆண்டின் ஜூன் முதலாம் திகதியில் இருந்து அமைச்சர் ஒருவருக்கு மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளுடன் சம்பளங்கள் வழங்கப்படுவதாக அரசதரப்பு தலைமைக் கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் வழங்கப்பட்ட பதில்களுக்கு அமைய, அமைச்சர் ஒருவரின் இரண்டு அலுவலக தொலைபேசிகள் தொடர்பாக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாவும், அரசபணி நிமித்தம் பயன்படுத்தும் வீட்டுத் தொலைபேசிகள் இரண்டுக்கு 20 ஆயிரம் ரூபாவும் செல்லிடத் தொலைபேசி தொடர்பாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் ஒருவர் தொடர்பாக 63 ஆயிரத்து 500 ரூபா மாதாந்தச் சம்பளமாக வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கணிக்கப்பட்டு கூட்டங்களுக்கான கொடுப்பனவாக சமுகமளித்த தினம் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது. அத்துடன் விசேட கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## காணாமற்போன வயோதிபர் சடலமாக மீட்பு

வடமராட்சி,ஜன.13

காணாமற்போன வயோதிபர் ஒருவர் வியாபாரிமூலைப் பகுதியில் உள்ள தோட்டக்கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலைப்புலோலி பூவற்கரையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோணன் வேலும் மயிலும் (வயது 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைக்கான சாட்சியங்களை நெறிப்படுத்தினர்.

வீட்டில் இருந்து சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போன இவரை குடும்பத்தினர் தேடிய போது தோட்டக் கிணற்றில் சடலமாக இருக்கக் காணப்பட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டார்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தார் வைத்தியர்

## கடமையில் இருந்த வைத்தியர் மாற்றலாகிச் சென்று நான்கு மாதங்கள்.

விசுவமடு, ஜன.13
உடையார் கட்டு பிரதேச வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூங்கிலாறு பகுதியில் இது இயங்கிய போதும், கடமையில் இருந்த வைத்தியர் மாற்றலாகிச் சென்று நான்கு மாதங்களுக்கு மேலாக பிரதேச மக்கள் வைத்தியத்துக்காக பெரும் பிரச்சினையை எதிர்நோக்கி இருந்தனர்.

கிராம மக்கள் கிராம மட்ட அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கொடுத்து வந்த கோரிக்கையை அடுத்து புதிய வைத்தியர் மேற்படி வைத்தியசாலையில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-408)

# யானைகள் அட்டகாசம்

விசுவமடு, ஜன.13
கடும் காற்று, மழைக்கு மத்தியில் யானைகள் குடிமனைகளுக்குள் புகுந்து பயிர்ச் செய்கையை நாசம் செய்து வருகின்றன என்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் தேராவில் கிராமமக்கள் கூறுகின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தினால் பயன்தரு மரங்கள், விவசாயிகளின் வீட்டுத் தோட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கால நிலையும் தங்களுடன் போட்டி போடும் போது இந்த வனவிலங்குகளின் தாக்கமும் தம்மை மேலும் கவலையடையச் செய்வதாக இந்தப் பிரதேச விவசாயிகள் கூறுகின்றனர். (த-408)

# சிறுமி மீது வன்புணர்வு முயற்சி

கிளிநொச்சி, ஜன.13
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் பெற்றோர், உறவினர்களுடன் வசித்து வந்த பதினொரு வயதுச் சிறுமி மீது, அவரது உறவினர் ஒருவர் வன்புணர்வு முயற்சி மேற்கொண்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சிறுமி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (த-6)



யாழ்ப்பாணத்து பனங்கிழங்குக்கு வவுனியாவில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. வவுனியாவுக்கு வரும் பலரும் யாழ்ப்பாணப் பனங்கிழங்கை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். (த-402)

# ஒட்டுசுட்டான் – புதுக்குடியிருப்பு வீதி மோசமான நிலையில்

புதுக்குடியிருப்பு,ஜன.13
கனரக வாகனங்களின் அதிகரித்த போக்குவரத்தினால் ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதி வழியாகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த காலங்களில் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி இராணுவத்தினரின் உதவியுடன் செப்பனிடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றவகையில் சீராக்கப்பட்டிருந்தது.

தற்போது பெய்த மழையின் போது கனரக வாகனங்கள் பல மண், சல்லி என்பவற்றை ஏற்றியவாறு பயணத்தை மேற்கொண்டு வருவதால் மீண்டும் அந்த வீதி குன்றும் குழியுமாக காட்சி அளிக்கின்றது.

இந்த வீதியே புதுக்குடியிருப்புக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாக காணப்படுவதுடன், அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கான பொருள்களை விநியோகிக்கும் மார்க்கமாகவும் காணப்படுவது குறிப்பித்தக்கது.

இந்த வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதால் மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றில் செல்வோர் சேறடித்த நிலையிலேயே பயணத்தைத் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. (த-400)

# புதுக்குடியிருப்பு றோ.கவில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## மாணவர்கள் கல்வியில் பாதிப்பு

புதுக்குடியிருப்பு,ஜன.13
புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்விக்குரிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புக்களுக்கு 6 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதும் தற்போது மூன்று பேரே கடமையாற்றி வருகின்றனர். இந்தப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர்தற்காலிக இணைப்பைப் பெற்று கடமையாற்றி வருகின்றார். மற்றொருவர் பிரசவ விடுமுறையில் சென்றுள்ளார்.

தற்போது தரம் ஒன்றில் 50 மாணவர்கள் புதிதாக இணைந்துள்ளனர். இவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியையே பலத்த சிரமத்தின் மத்தியில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். அதேபோலவே ஏனைய வகுப்புக்களிலும் காணப்படுகிறது. தற்போது கடமையாற்றும் மூன்று ஆசிரியைகளில் ஒருவர் யாழ்ப்பாணம் சென்று வருபவர். சிலவேளை போக்குவரத்து இடர் காரணமாக சமுகம் தரா விட்டால் அன்றைய தினம் தமது பிள்ளைகளுக்கு எந்தப் பாடமும் நடைபெறாமலே வீடு திரும்புகின்றனர் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பப் பிரிவுக்கு வெற்றிடம் காணப்படுவதால் இடை நிலை வகுப்புக்களில் கற்பிக்கும் - ஆரம்ப நெறியுடன் தொடர்பில்லாத சில ஆசிரியர்களின் உதவியுடன் பாடசாலை நிர்வாகம் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றபோதும் அது திருப்திகரமானதாக இல்லை எனவும் பெற்றோர் குறைப்படுகின்றனர்.

இது தொடர்பாக பெற்றோர்களால் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து இந்தப் பாடசாலைக்கு வேண்டிய ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் சீராக இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-410)

# சொந்த இடம் திரும்ப நடவடிக்கை எடுங்கள்

## சீனியாமோட்டை மக்கள் ஆயர்களிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.13
போர் இடர்களால் இடம்பெயர்ந்து தற்காலிகமாக சீனியாமோட்டைப் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் தம்மைச் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆயர் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு இலங்கை ஆயர் மன்றத் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 10 ஆயர்களைக் கொண்ட குழுவொன்று பயணத்தை மேற்கொண்டிருந்தது.

இந்தக் குழுவினர் அன்றைய தினம் சீனியாமோட்டையில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்துக்குப் பயணம் செய்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக குழுவாகப் பிரிந்து சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

அப்போது அந்தப் பகுதி மக்கள் எமது சொந்த இடங்களுக்கு எம்மை அனுமதியுங்கள் என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தாம் தற்போது தங்கியுள்ள இடத்தில் அண்மைக் காலமாகப் பெய்த மழையால் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும், வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் -

போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் உட்பட பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் ஆயர் குழுவிடம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. (த-410)

வவுனியாவில் சிறப்புற நடைபெற்ற

# சுவாமி விவேகானந்தரின் நினைவு விழா நிகழ்வுகள்



வவுனியா,ஜன.13
சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நினைவு விழா வவுனியாவில் நேற்று சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட இந்து ஆலயங்கள் இணைந்து இந்த நிகழ்வை நடத்தியிருந்தன.

முன்னதாக குடியிருப்பு கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகள் ஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் உருவப்படம் தாங்கிய பவனி, பஜார் வீதி வழியாக சுந்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசாலை மண்டபத்தைச் சென்றடைந்தது.

இந்தப் பவனியில் இந்து மதகுருமார்கள், இந்து அமைப்புக்கள், அகிலாண்டேஸ்வரி சைவச் சிறுவர் இல்லத்தின் சிறார்கள், பாடசாலை மாணவர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து விழா மண்டபத்தில் நா.சேனாதிராஜா தலைமையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. 'வீர இளைஞர்களுக்கு விவேகானந்தர்' என்ற தலைப்பில் புளியங்குளம் இந்துக் கல்லூரி ஆசிரியர் பா.பாலசுந்தரமும், 'இந்துப் பெண் மணிகள்' என்ற தலைப்பில் பண்டிதை யோகாசோமசுந்தரமும், 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற தலைப்பில் ஆசிரியர் சி.வரதராஜனும், மதமாற்றம் என்ற தலைப்பில் ஐ.கதிர்காமசேகரனும், இந்து சமுதாய ஒற்றுமை என்ற தலைப்பில் தமிழ் மணி அகளங்கனும் சிறப்புரையாற்றினர். (த-400)

# றிஸானாவுக்கு வவுனியாவில் பிரார்த்தனை

வவுனியா, ஜன.13
சவூதியில் மரண தண்டனை மூலம் கொலை செய்யப்பட்ட இலங்கைப் பணிப் பெண் றிஸானா நபீக்கின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி நேற்று முன்தினம் வவுனியாவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் இது இடம்பெற்றது.

வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் முஸ்லிம் மௌலவிகள் பலரும் கலந்து தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் தெரிவித்ததாவது:-

றிஸானாவின் மரணம் எமக்கொரு படிப்பினையைத் தந்துள்ளது. இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்லும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அவருடைய ஆத்மா சாந்தி அடைய அனைவரும் மதம் மொழிகளைக் கடந்து பிரார்த்திக்க வேண்டும்.- என்றார். (த-400)

# தங்கம்மா அப்பாக்குட்டி ஆன்மிக விழா இன்று

வவுனியா,ஜன.13
வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆன்மிக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மங்கல விளக்கை கௌரிநாதன், திருமதி கௌ.வாசுகி ஆகியோர் ஏற்றிவைப்பர். திருமுறையோதலை த.பரந்தாமனும், தமிழ்த் தாய் வாழ்த்தை திருமதி ப.தனரஞ்சினி, திருமதி ஜெ.சசிரேகா ஆகியோர் பாடுவர். தொடக்கவுரையை எஸ்.என்.ஜி.நாதன் நிகழ்த்துவார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவ வழிபாடும் இடம்பெறும். நினைவுப் பேருரையை திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் இல்ல பணிப்பாளர் வே.பொ.மாணிக்கவாசகர் நிகழ்த்துவார்.

ஆன்மிகக் கருத்தரங்கு கவிஞரும் பிரதேச செயலருமான அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'இந்துமதம் நேற்று - இன்று- நாளை' என்ற பொருளில் கருத்துரையும் இடம்பெறும். (த-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1980 இல் பிறந்த ரோகினி 3 ஆம் பாதம், பாவம் 14½, உயரம் 5 அடி 6 அங்குலம் வங்கியில் நிரந்தர உத்தியோகத்தராகப் பணி புரியும் மணமகளுக்கு பொருத்தமான அரச அல்லது வங்கித்துறையில் பணி புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0772423215, 0718287793 (c/5373)(6.711)

## CAR PERMIT விற்பனைக்கு

தொடர்பு:
Doctor- 071 8474223,
0778578597. (28308) (6.7.4)

## மணமகன் தேவை

யாழ். RC பெற்றோர் தமது 33 வயது மகளுக்கு கொழும்பில் தொழில் புரியும் மணமகனைத் தேடுகின்றனர். சீதனமாகக் கொழும்பில் வீடும், காசும் கொடுக்கப்படும்.

தொடர்பு :0770609826 (c/5375)(6.711)

## பணியாளர்கள் தேவை

1.புத்தகம் கட்டுநர்
2.விற்பனையாளர்
3.முகாமையாளர்(ஓய்வுபெற்றவர்களும்)
4.கணினி தட்டெழுத்தாளர்

சுழிபுரம் பகுதியில் பணியாற்றுவதற்கு ஆண் , பெண் இருபாலாரும்.

தொடர்பு: 0757329630 (28312) (6.7.4)

## வாடகைக்கு

வெள்ளவத்தை, நெல்சன் வீதி, 45 காலி வீதியிலிருந்து 250 மீற்றர் தொலைவில் சகல வசதிகள் கொண்ட மூன்று, இரண்டு அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 Toilet கொண்ட 6 Apartment தனி அறையாகவும், நாள் மாத, கிழமை அடிப்படையில் வாடகைக்கு. அத்துடன் Airport Pickup & Drop . இலங்கையில் எப்பாகத்துக்கும் செல்ல வாகன வசதி செய்து கொடுக்கப்படும்

தொடர்பு: 0112502412/ 0112360544
Hot line: 0773038063/0777357673 (c/5374)(6.711)

## வீடு வாடகைக்கு

25, பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை, காங்கேசன்துறை வீதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் 5 அறை , சுற்று மதில், வாகனத் தரிப்பிடம், கிணறு மோட்டார் வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:
0718246941, 0715213888,
0112205223. (சி/5609) (6.7.4)

## காணி விற்பனை

சுண்டுக்குளி, விதான்ஸ் ஒழுங்கையில் 3 பரப்பும், 1½ குழியுமுள்ள காணி விற்பனைக்கு உண்டு. சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும், St.John's கல்லூரிக்கும், கச்சேரிக்கும் அண்மையில் இக் காணி உண்டு.

தொடர்பு :0776705157,
46, விதான்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (c/5371)(6.711)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, யாழ்ப்பாண வீதி, முதலாம் கட்டை பருத்தித்துறையில் 4 பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :0112366386 (c/5372)(6.711)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10.06.1935 விண்ணில் 06.01.2011



### அமரர் சாரதாமணிதேவி தம்பிராசா

(திதி:- மார்கழிப் பூர்வபக்க துதியை)

அன்னையாய் அரவணைத்தே
ஆறுதல் தந்தாய் - நாம் வாழ
உன்னலம் கருதமாட்டாய்
உறுதுணையாய் இருந்தாய் - என்றும்
மன்னராய் நாமெல்லோரும்
மகிதலம் போற்ற வைத்தாய்
உன்னையே என்றும் எண்ணி
உவப்புடன் வாழ்வோம் அம்மா

துரைவீதி, இணுவில். -குடும்பத்தினர்.


## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

★களஞ்சிய பொறுப்பாளர் (Store Keeper)
★கணினி அறிவுடைய கணக்கு உதவியாளர்

(ஆண்/ பெண்) நேரில் வரவும்.

தொடர்பு :மீடியா எலக்ரோமாட்
இல.1-I, 1-H, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0212224566 (c/5610)(6.711)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் கருவேப்புலம் வீதியில் ஆறு அறைகளும், இரண்டு பெரிய வரவேற்பறையுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும், நிறுவனங்கள் இயங்குவதற் குரிய விசாலமான இடம் உள்ளது.

தொடர்பு: 0773099649, 077 0764494 (28304)(6.7.4)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் பலாலி வீதி, கந்தர்மடத்தில் அலுவலகத்திற்கு/ களஞ்சியத்திற்கு உகந்த வீடுவாடகைக்கு உண்டு.

தொடர்பு :0777558340 (c/5386)(6.711)


## புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலய பெருவிழா



இன்று (13.01.2013) மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை திங்கட்கிழமை (14.01.2013) காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பங்குத்தந்தை (பரிபாலகர்)
புதுக்குடியிருப்பு. (28315)(6.2)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாபூஷணம்

### கந்தையா வல்லிபுரம்

(செல்லத்தம்பி)

அரியாலையூர் நாடகக் கலைஞர் திரு. கந்தையா வல்லிபுரம் அவர்கள் 13.12.2012 அன்று கொழும்பு ஜோண். டி. சில்வா மண்டபத்தில் கலாபூஷணம் விருது பெற்றமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல்லாண்டு காலம் நலமோடு வாழ இறையாசியை வேண்டுகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
க. பவுண்ராஜா- குடும்பம்,
நிலன்செல்வக்கண்டு-குடும்பம்,
வே. நாகலிங்கம்-குடும்பம்,
க. இரத்தினம்-குடும்பம்,
வே: ஐயாத்துரை-குடும்பம்.

அரியாலை (28506)(45.6.7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபரின் தாயார்

### திருமதி கனகமணி சுப்பிரமணியம்

அவர்களின் பிரிவால் ஆறாத்துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/ அழகாபுரி வித்தியாலயம்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

கிளி/ அழகாபுரி வித்தியாலயம்,
இராமநாதபுரம். (26138)(7.2)

## மரண அறிவித்தல்



### தம்பு செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை ஊழியர்)

பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாக வும், வசிப்பிடமாக வும் கொண்ட தம்பு - செல்வரத்தினம் நேற்று (12.01.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கப் பொன் மற்றும் கனக சபாபதி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வகுமாரன் (காசாளர், நல்லூர் பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம்), ஞானகுமார், சந்திரகுமார், சசிகௌரி, சுகந்தினி (நல்லூர் பலநோக்கு கூட்டு றவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வளர்மதி, ஜெயவிஜயகுமாரி, காஞ்சனாதேவி, சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனும், மிருஷன் - பவித்திரா, பகீரதி, பபிதா, சாளினி, துஷ்யந் தன் (டோகா), நிசாந்தன், பிரசாந்தன், கிருஷாந்தன், சாரந்தன், நவரசன், சுருதிகா, அபிராம், தாரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28310) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.


## சாரதி,சாரதி உதவியாளர் (கிளினர்)வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் சாரதிக்கும், சாரதி உதவியாளருக்கும் வெற்றிடங்கள் உண்டு. கீழ்த்தரப்படும் தகைமை உள்ளவர்கள் 15,16-01-2013 ஆகிய நாட்களில் காலை 9.00-12.00 மணி வரைக்கும் நேரில் சமுகமளிக்கவும்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**சாரதிகளுக்கான தகமைகள்**

1. 25-45 வயதுக்கு உட்பட்டவர்கள்...
2. பாரவூர்தி செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள்.....
3. யாழ்-கொழும்பு பிரயாணப் பாதைகளில் வாகனம் செலுத்திய அனுபவம் உள்ளவர்கள்.....
4. சிங்களம் பேசத் தெரிந்தவர்கள்.....

*தேவைக்கு ஏற்ப தங்குமிட வசதி செய்துதரப்படும்

முகாமையாளர்.
லக்ஸ்மி இஞ்சினியரிங்
105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 567 0256


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு (MLT)

01. யாழ்.நகரின் முன்னணி வைத்தியசாலை ஒன்று, அரச பதிவுள்ள ஆய்வுகூட வியலாளர்கள் (MLT) 4 பேரை எதிர் பார்க்கிறது.

* ஒய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை
* கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள்

02. மேற்படி நிறுவனத்துக்கு இரண்டு உதவியாளர் களுக்கு வேலைவாய்ப்பு உண்டு.

* மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் முக்கியமானது
* கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை.

தொடர்பு: விளம்பர இல.4430, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (28140)(7.2)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சிவசுப்பிரமணியம் சியோதாரணியின் அன்பு அப்பம்மா

**விசுவலிங்கம் கதிராசிப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

அதிபர், ஆசிரியர்கள்,
மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மாங்குளம். (சி/5804)(7.2)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP-XJxxxx என்னும் இலக்கமுடைய 6000km ஓடிய Hero Honda HUNK கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 6693839.
30,சுவாட்ஸ் லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (28309) (6.7.4)

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் (30m) 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 077 8716657 (28301) (6.7.4)

## வீடு/ காணி விற்பனைக்கு

* யாழ். நகருக்கு அண்மையில் பலாலி வீதியில் 4 பரப்புக் காணியில் அமைந்த கட்டடத் தொகுதி விற்பனைக்கு அல்லது வாடகைக்கு.
* நல்லூர் அரச வீதியில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
* நல்லூர் ஆடிய பாதம் வீதியில் ராணி வீதிக்கு முன்பாக 2 பரப்புக் காணி விற்பனைக்கு.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு:
021 221 9767, 077 9371896. (28302) (6.7.4)

## மணமகள் தேவை.

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1983, புனர்பூசம் 3 ஆம் பாதம், 12 இல் சூரியனுடன் செவ்வாய், கிரகபாவம் 24 ½, 5'7" சுதேச வைத்திய மணமகனுக்கு அந்தஸ்துள்ள அழகான படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 353 55 16, 021 221 9088. (28307) (6.7.4)

## After O/Levels...

*Only IT Diploma with an International Recognition!*

Join **IT Diploma** @ ESOFT

The Leader in Professional ICT Education



DiTEC INTERNATIONAL Diploma in Information Technology

Duration : 4 months — 15% DISCOUNT

பெறுபேறுகளுக்கு முன்னர் இரு டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

** Payable in Installments*

**Other Diplomas**

- DiWE — Diploma in Web Engineering — காலம் 6 மாதங்கள்
- DiBM — Diploma in Business Management — காலம் 4 மாதங்கள்
- DiE — Diploma in English — காலம் 4 மாதங்கள்
- DiSE — Diploma in Software Engineering — காலம் 6 மாதங்கள்
- DiHN — Diploma in Hardware & Networking — காலம் 4 மாதங்கள்
- DiGD — Diploma in Graphic Designing — காலம் 4 மாதங்கள்

| புதிய பிரிவுகள் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | உடுப்பிட்டி |
|---|---|---|---|---|
| | 16th & 19th Jan at 9.00 am | 16th & 19th Jan at 9.00 am | 16th Jan at 9.00 am | 15th Jan at 9.00 am |
| | 077 309 9308 | 077 990 5611 | 077 154 7677 | 021 320 1303 |

ESOFT — Shaping Lives, Creating Futures.
**ESOFT Metro Campus**
No 137 , K.K.S Road, Jaffna.
Tel: 021 222 4142 Hotline: 077 309 9 308

## VACANCIES @



ESOFT — The Leader in Professional ICT Education
Join Srilanka's #1
Northern Region

VACANCIES @ ESOFT

**LECTURER in IT (Full Time)**

Should possess degree or higer Diploma in relevent field. Experience in lecturing for atleast one year is essential. ability to on weekends is must.

**ASS . LECTURER in IT – Kilinochchi**

Should possess degree or higer Diploma in relevent field. Conducting the Programming or Hardware & networking moduels. Able to work in Kilinochchi.

**NETWORK & HARDWARE ADMINISTRATOR**

Should be qualified in the relevant field and have the ability to conduct classes and also coordinate the programs and maintain the labs.

**HOW TO APPLY**

Send your CV **within 10 Days** to reach The Manager. mark the position that you are applyng for on the top left corner of the Envelope.

ESOFT — Shaping Lives, Creating Futures.
**ESOFT Metro Campus -Jaffna**
137 K K S Road Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142
Mail : jaffna@esoft.lk Web : www.esoft.lk


## பெண் உதவியாளர் தேவை



கொக்குவிலில் இயங்கும் பிரபல அழகுக் கலை நிலையத்துக்குப் பெண் உதவியாளர் தேவை.
(வயது எல்லை 18 – 25)

தொடர்புக்கு:- 0770540935 (சி/5499)(2.6.7)

## சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகங்கள்



522 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர்
**ந.சுந்தரம்பிள்ளையின்**
நாடகங்கள்
யாழ்.சேவையில் ஒலி பரப்புச் செய்யப்படுகின்றன
**மாணவர்களே!**
அவற்றைக் கேட்டு வானொலி நாடகம் எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.

- ந.சுந்தரம்பிள்ளை.

## காணி விற்பனைக்கு

நீர்வேலி- கரந்தன் வீதியில் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P:0772484662. (28144) (6.7.4)

## ஆடுகள் விற்பனைக்கு

2 வயது, கறுப்பு, ஒரு வயது 6 மாதம் நிரம்பிய கிடாய் ஆடுகளும், 6 மாதம் நிரம்பியமறி ஆட்டுக்குட்டியும், ஆட்டெருவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : இல. 25,பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P: 0212227535, 0777158476 (28145)(6.711)

## மணமகள் தேவை

யாழ்.கிறிஸ்தவ (NRC)அரச உத்தியோகம் புரியும் 31 வயது மணமகனுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ மணமகள் தேவை.
தொடர்பு :0772624440,
மின்னஞ்சல்: jeya1945@yahoo.com (27816)(6.711)

## விற்பனைக்கு

* TIGER (டைகர் என்ஜின்)
* DIESEL GENERATOR
* TDG 5000 SE (ATS)

5.3 KVA விற்பனைக்குண்டு.

தொடர்பு
077 315 1317 (சி/5802)(2.6)

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 - 01 - 1939 — மறைவு 02 - 12 - 2012

**அமரர் சண்முகம் இராசரெட்ணம்**

கடந்த 02.12.2012 அன்று இறைபதம் அடைந்த அமரர் சண்முகம் இராசரெட்ணம் அவர்களின் 41ஆம் நாள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி அற்புத அன்னை தேவாலயத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மேலும் அவரின் மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங் கள் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறப்பாக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சாவகச்சேரி வணிக மன்றத்தினருக்கும் வளர்மதி சனசமூகத்தினருக்கும் (கைதடி மத்தி) மலர் வளையங்கள் தந்துதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதித் திருப்பலியின் போது திருப்பலியை ஒழுங்குபடுத்திய பங்குத் தந்தை பீடப்பணியாளர்கள்,பாட கர் குழாம், இளைஞர் மன்றத்தினர், வீட்டில் வழிபாடு செய்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித் தாகட்டும்.

லோறன்ஸ்
(மகன்-சுபா பான்ஸி உரிமையாளர், சாவகச்சேரி)

கைதடி கிழக்கு,
கைதடி. 077 868 0358 (28198)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர்களுக்கான கடன்களில் நெகிழ்வுத் தன்மை வேண்டும்

## இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற தலைவரிடம் கோரிக்கை



அண்மையில் தீ விபத்துக்குள்ளான நெல்லியடி சந்தைப் பகுதியில் அமைந்துள்ள ஆஷா ரேடர்ஸ் வியாபார நிலையத்துக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுத் தொகையான 21 லட்சத்து 32 ஆயிரத்து 926 ரூபாவை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன் கடை உரிமையாளர் ப.பரமேஸ்வரனிடம் கையளிக்கிறார்.

அருகில் நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் சி.அகிலதாஸ், நெல்லியடிக்கிளையின் முகாமையாளர் கி.ஆறுமுகன் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி இ.சிவசுந்தரம், நெல்லியடிக்கிளையின் அமைப்பாளர் ஜெ.கமலராணி ஆகியோர் உள்ளனர். (த-253)

தென்மராட்சி,ஜன.13

யாழ்.மாவட்ட வணிகர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை குறைப்பதற்கு இலங்கை வங்கியினர் வணிகர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் அதிகப்பற்று போன்றவற்றில் நெகிழ்வுத்தன் மையினை உருவாக்கி வணிகர்கள் தொடர்ந்தும் வணிக நடவடிக்கையில் ஈடுபட ஆவன செய்ய வேண்டும் என இலங்கை வங்கியின் இளைப்பாறிய தலைவரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டது.

அண்மையில் இலங்கை வங்கியின் யாழ்.தலைமையகத்தில் இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற தலைவர் காமினி விக்கிரமசிங்கவுக்கு நடத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவில் உரையாற்றிய சாவ கச்சேரி வணிகர் மன்றத் தலை வர் அ.ஸ்ரீபிரகாஸ் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வணிகர்களைப் பொறுத்தவரையில் இலங்கை வங்கியினர் தமது உதவியினால் யாழ்.மாவட்டத்தில் வணிகத்தில் பெரு வளர்ச்சியினை உருவாக்கினர். நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியினால் வணிகம் பாதிக்கப்பட்டு பெற்ற கடனையும், அதிகப்பற்றினையும் மீளச் செலுத்த பெரும் சிரமங்களுக்குள்ளாகி வணிகர் வங்கியினதும், வணிக நிலையத்தினதும் கௌரவத்தினைக் காப்பாற்ற தனியாரிடம் அதிகளவு வட்டிக்கு பணம் பெற்று வங்கிக்கு செலுத்துகின்றனர். இதன் விளைவாக மாவட்டத்திலிருந்த பல வணிகர்கள் தமது வணிக செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.

இதனால் இலங்கை வங்கியினை முழுமையாக நம்பியுள்ள யாழ்.மாவட்ட வணிகர்க ளின் நலன்கருதி கடும் போக் கினை மேற்கொள்ளாமல் நெகிழ்வுத் தன்மையை உரு வாக்கினால் வணிகர்கள் வீழ்ந்துபோகும் தமது வணிக நடவடிக்கைகளை சீர்செய்து வணிகசெயற்பாடுகளை மேம்படுத்துவர்.

வணிகர்கள் தமது வணிக நிலையத்தினை மேம்படுத்த வங்கியில் கடன்பெற்று நடத்தி வருகின்றனர். பொருள்களின் விலை அதிகரிப்பு வருமான வீழ்ச்சி ஆகியவற் றினால் மக்கள் அத்தியாவசி யப் பொருள்கள் கொள்வனவு செய்வதையும் கணிசமான அளவு மட்டுப் படுத்தியுள்ளனர்.

மக்களின் பங்களிப்பின்மையால் பாதிக்கப்பட்டவர் கள் வணிகர்களே. முன்னைய காலத்தில் 50 ஆயிரம் ரூபாவுக்கு வியாபாரம் நடைபெற்ற வணிக நிலையங்களில் இப்போது5 ஆயிரம் ரூபாவுக்கு வியாபா ரம் நடைபெறுவதில்லை. இவற்றினைக் கருத்தில் கொண்டு யாழ்.மாவட்ட வணிகர்களுக்கு கை கொடுத்து தூக்கி விட வேண்டிய பொறுப்பு தற்போது இலங்கை வங்கியின் அதிகாரிகளிடமே உள்ளது.- என்றார். (த-9)



மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் 18+ கணக்கு வைத்திருந்த மூன்று பெண்களுக்கு புதுவருட தினத்தன்று ஒரு பவுண் நிறையுடைய தங்க நகை வங்கி முகாமையாளர் ஜி.சகாதேவனால் வங்கியில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நகைகளைப் பெற்றுக் கொண்ட மூவரும் வங்கி முகாமையாளர் ஜி.சகாதேவன் மற்றும் உத்தியோகத்தர்களுடன் காணப்படுகின்றனர். (த- 100)

# தைப்பொங்கலைக் கொண்டாட எயார்ரெல் வழங்கும் சலுகை

தைப்பொங்கலைக் கொண்டாடுவதற்கு, பார்த்தி எயார் ரெல் லங்கா புதிய வாடிக் கையாளர் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று பற்றி இன்று அறிவித்துள்ளது. எயார் ரெலுக்கு றீலோட் பண்ணுவதன் மூலம் சிறந்த தமிழ்த் திரைப்படமான அலெஸ்க் பாண்டியனைப் பார்ப்பதற்கான இலவச அனுமதிச் சீட்டுக்களை வாடிக் கையாளர்கள் வென்றெடுக்க முடியும்.

இந்தச் சீட்டிழுப்பில் பங்கு கொள்வதற்கான தகுதி யைப் பெறுவதற்கு வாடிக் கையாளர்கள் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை குறைந்தது ரூபா 598/= வுக்கு றீலோட் செய்திருக்க வேண்டும். பல தடவை Top-ups பண்ணுவதன் மூலம் எயார்ரெல் வாடிக்கையாளர்கள் பல அனுமதிச்சீட்டுக்களை வென்றெடுக்க முடியும். 700 இற்கும் அதிகமான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அவர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும்.

பார்த்தி எயார்ரெல் லங்கா பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைப் பணிப்பாளருமான சுரேன் குணவர்த்தன இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிக் கருத்து வெளியிடுகையில் 'எயார்ரெல் நிறுவனம் செலுத்தும் பணத்துக்குப் பெறுமதியான புதிய உற்பத்திகளை யும் சேவைகளையும் வாடிக் கையாளர்களுக்கு தொடர்ந் தும் வழங்கி வருகின்றது. திரைப்படங்கள் தொடர்பாக வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதன் மூலம் இந்தப் புதிய பரபரப்பூட்டும் ஊக்கு விப்பு திட்டத்தின் ஊடாக எமது வாடிக்கையாளர் களுக்கு மேலும் மகிழ்ச்சி யூட்ட நாம் எண்ணியுள்ளோம் என்று தெரிவித்தார். அலெக்ஸ் பாண்டியன் ஒரு விறுவிறுப்பான திரைப்படம் ஆகும். இத்திரைப்படம் நாட்டின் முன்னணித் திரைய ரங்குகளில் திரையிடப்படும் அதே வேளையில் எயார்ரெல் வாடிக் கையாளர்களுக்கென பிரத்தியேக காட்சியொன்று 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு யாழ் செல்லா திரையரங்கில் இடம் பெறவுள்ளது.

# ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிடெலின் 20 வருட கால வெற்றிப் பயணம்



நாட்டின் தேசிய கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநரான ஸ்ரீலங்கா டெலிகொம் மொபிடெல், இன்று 20 வருடங்களின் நிறைவைக் கொண்டாடுகிறது. 1993 ஆம் ஆண்டு தனது பயணத்தை ஆரம்பித்த மொபிடெல், இலங்கையில் முன்னணி கையடக்கத் தொலைபேசி வழங்குநர்களில் ஒன்ருகத் திகழ்கின்றது. 'Advanced Mobile Phone System' (AMPS) எனப்படும் அபிவிருத்தியடைந்த அடிப்படை செலூலர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அது தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இந்த சாதாரண ஆரம்பத்திலிருந்து இலங்கையை தெற்காசியாவின் அடுத்த அதிசயமாக மாற்றவென, மொபிடெல் நிறுவனம் தகவல் தொழில்நுட்பத் (ICT) துறையில் முன்னணி நிறுவனமாக துரித வளர்ச்சி கண்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மொபிடெல் நிறுவனம் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக மாறியது. அடுத்த வருடங்களில் மொபிடெல் படிப்படியாகப் பலமடையத் தொடங்கியது. 2004 ஆம் ஆண்டு இரட்டை அலையில் (Dual band) செயற்படக்கூடிய EDGE/GPRS வசதியுடனான 2.52 G GSM வலைப்பின்னலை ஆரம்பித்தது.2007 ஆம் ஆண்டு 3.5 G HSPA வலையமைப்பை ஆரம்பித்ததன் மூலம் உலகில் முதன் முதலில் இவ்வசதியை வழங்கிய 10 கையடக்கத் தொலைபேசிச் சேவையை முதன் முதலில் வழங்கியவர்களில் ஒருவராக இது விளங்கியது. இதன்மூலம் கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பத்துறையில் அது தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது. தெற்காசியாவில் Super 3.5 G வலையமைப்பைக் கொண்ட முதலாவது நிறுவனமாகவும் மொபிடெல் விளங்குகின்றது. அத்துடன் HSPA+ MIMO தொழில்நுட்பத்தையும் முதன் முதலில் மொபிடெல் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. இதன் டவுன்லிங்க் (Downlink) வேகம் 28.8 Mbps ஆகும். இந்நிறுவனம் 96 Mbps க்கும் கூடுதலான டவுன்லிங்க் வேகம் கொண்ட 4G/LTE தொழில்நுட்பத்தையும் தெற்காசிய பிராந்தியத்தில் முதன் முதலாக வெற்றிகரமாக பரீட்சித்ததுடன் 4 4G/LTE தொழில்நுட்பத்தையும் அண்மையில் மொபிடெல் அறிமுகப் படுத்தியது.

பெறுமதிமிக்க புதிய அம்சங்கள், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவை, தொழில்நுட்பத்தின் மூலம் மிகச் சிறந்த பயனை அடைதல், விநியோக முறை, உற்பத்தித் துறை, சேவைகள், பெறுமதிசேர் சேவைகள், வாடிக்கையாளர்களின் தேவைகள், ஆர்வங்கள் குறித்து கவனம் செலுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தனது மூலோபாயத்தை மொபிடெல் நிறுவனம் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றது. ஆகக்கூடிய சேவைத் தரம், பாவனையாளர் மீது அக்கறை, வசதிகளை வழங்குதல், தொடர்பாடல் ஆகியவற்றின் ஊடான வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மூலோபாயம் குறித்து கவனம் செலுத்தும் அதே வேளையில், அலைவரிசை (Channel) முகாமைத்து வத்தை தீவிரப்படுத்தும் முகமாக விநியோக முறைகளை விஸ்தரித்து, பிரிவுக்கான உட்கட்டமைப்பொன்றை அறிமுகப் படுத்தவும் மொபிடெல் நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

மொபிடெல் நிறுவனம் அதன் வலையமைப்பை தரமுயர்த்துவதில் ஈடுபட்டுள்ளது. தற்போதைய விஸ்தரிப்பின் மூலம் நாடளாவிய ரீதியில் 1,800 தள நிலையங்கள் உருவாக்கப்படும்.

சனத்தொகையில் 100 வீதத்தையும் உள்ளடக்கும் வகையில் சேவையாற்றுவதே இதன் நோக்கமாகும். மொபிடெலின் தற்போதைய அபிவிருத்தி மற்றும் மாற்றங்கள் காரணமாக, கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பத்தில் அது முன்னணி பங்கை வகிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது.

இது இலங்கையின் அடுத்த கட்ட ICTதொழில்நுட்ப அபிவிருத்தியை வடிவ மைப்பதற்கு நிச்சயம் உதவியாக இருக்கும். மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின்னர், இலங்கையை ஆசியாவின் அறிவுத் துறை கேந்திரமாக விளங்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயத்தில் முன்னுரிமை பெற்றுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முக்கிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநராக மொபி டெல் தற்பொழுது விளங்கு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் மூன்று தசாப்தகாலமாக ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி அர்ப்பணிப்புடன் கல்விப்பணி செய்த இளைப்பாறிய

**ஆசிரியப் பெருந்தகை**
**விஸ்வநாதஐயர் ஜெகதீஸ்வரசர்மா**

அவர்கள் சிவபதம் அடைந்தமையையிட்டு எமது கல்லூரிச் சமூகம் தனது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்துகின்றது.

யாழ்ற்ரன் கல்லூரிச் சமூகம்,
**யாழ்ற்ரன் கல்லூரி-காரைநகர்.**

(28147) (6.7.4)

# பயிலுநர் பதவி வெற்றிடங்கள்

கீழ்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் '**தலைவர்,விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு**' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

1. பதவி - எழுதுநர் (பயிலுநர்)
   சம்பளக் குறியீட்டு இல. - 302/16
   சம்பள அளவுத்திட்டம் - 9200-70x10-75x10-10650

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுநிருபம் 02/2012 இற்கமைய விசேட படிகளும் வழங்கப்படும்.

அவையாவன

* நாளொன்றிற்கு ரூபா 195/= உம்
* நாளாந்த சம்பளத்தின் 15% உம் ஆகும்.

தகைமைகள்:

அ) க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06(ஆறு) பாடங்களில் சித்தி.

நிபந்தனைகள்

01) வயதெல்லை 18-45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02) விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ்,பிறப்புச்சான்றிதழ்,வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.
03) மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
04) வெளிமாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.01.2013

தலைவர்,
விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ. சங்கம், விசுவமடு.

(சி/5500)(5-6-7)

## போட்டிப் பரீட்சை

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் (வகுப்பு -II 'ஆ' மற்றும் பயிற்சித் தரம்) பதவிக்கான பரீட்சையும், 21 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் குடியேற்ற உத்தியோகத்தர் (வகுப்பு III. பயிற்சித் தரம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சையும் நடைபெறவுள்ளன. (3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## திருமதி பத்மநாதன் சிவசக்தி (சிவம்)

தெல்லிப்பழை, குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், வெள்ளவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் சிவசக்தி 10.01.2013 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தெல்லிப்பழை, குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மு.க. வேலுப்பிள்ளை - சுந்தரம் தம்பதியரின் மகளும், கட்டுவனைச் சேர்ந்த மாணிக்கம் பத்மநாதனின் அன்பு மனைவியும், பிரதீபன் ('தீபன் நெற்கபே', சாவகச்சேரி), சஞ்சீவன் (World wide Entertainment வெள்ளவத்தை), பிரியா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற மகேந்திரன் (செந்தில் அச்சகம் - சாவகச்சேரி), மனோன்மணி (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர் - திருநெல்வேலி), காலஞ்சென்ற தவமணி (ஆசிரியர் - றம்புக்கனை) மற்றும் பராசக்தி (இளைப்பாறிய தாதி - கொழும்பு பெரியாஸ்பத்திரி), மகாதேவன் (சட்டத்தரணி), செல்லம்மா (கிளி- சுவிஸ்), பரமேஸ்வரி (இளைப்பாறிய கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா), மனோகரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (K.V.M - சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனகாம்பிகை, காலஞ்சென்ற கருணாரத்னா மற்றும் L.T. பெரேரா, பவானி (பிரசித்த நொத்தாரிசு), வசந்தகுமார் (சுவிஸ்), செகராசா (இளைப்பாறிய லிகிதர் - கொழும்பு), அன்னவதனி (சுவிஸ்), தவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விகாரை லேன்,
வெள்ளவத்தை,
தொ.பே. 011 4907 336, 077 7570 056

(சி/2876) (45.6.7)

தகவல்:
**கணவர்,**
**பிள்ளைகள்.**

# ஓராண்டு நினைவு அஞ்சலி

## திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்



தாயின் மடியில் **15.12.1936**

மண்ணின் பிடியில் **26.12.2011**

**திதி:– 13.01.2013 துதியை**

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
- குறள் -

பேரன்புள்ள மனைவியாய், பிரியமுள்ள தாயாய், எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் எமக்கெல்லாம் நல்வழி காட்டிய எங்கள் தீபமே, எம்மை விட்டுச்சென்று இன்று ஆண்டொன்று ஆகின்றது. ஆனால் உங்கள் நினைவுகள் எம்மோடு என்றும் வாழ்கின்றது–அம்மா! உங்கள் சிரித்த முகத்தையும், உங்கள் அறிவுரைகளையும் நினைத்த வண்ணம் உள்ளோம். ஊரார், அயலவர்கள் போற்ற வாழ்ந்தீர்கள், அம்மா! நீங்கள் பிள்ளையார், முருகன் என்று திரிந்து நல்ல வழியைக் கேட்டு காற்றோடு பறந்துவிட்டீர்கள் தாயே! எங்கள் கண்ணீர் பூக்களை காணிக்கை தருகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 04, செட்டித்தெரு,
நல்லூர்.


என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(28494)(3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 98

## நீங்கள் பற்களை இழக்க முக்கிய காரணம் பற்சூத்தை



வாயை சுகாதாரமாக வைத்திருக்க பற்களை நன்றாக பராமரிக்க வேண்டும். காலை எழுந்தவுடனும் இரவு நித்திரைக்கு செல்ல முன்பும் நாளுக்கு இருமுறை பல்துலக்க வேண்டும். ஒவ்வொருமுறை உணவு உண்ட பின்பும், நன்றாக அலசி வாயைக் கொப்பளிக்க வேண்டும். அச்சமயம் வெறும் தூரிகை கொண்டு சுத்தம் செய்வது நன்று.

பற்தூரிகை வாங்கும் போது சிறிய தலையுடைய மிருதுவான வகையாக வாங்குவது நன்று. அப்போதுதான் பற்களின் வெளி மற்றும் உட்புறத்தை இலகுவாக சுத்தம் செய்ய முடியும். நான்கு மாதத்துக் கொருமுறை அதை மாற்ற வேண்டும். ஒரு கடலையளவு (Pea Nut) பற்பசையைத் தூரிகை மேல்வைத்து நீரில் நனைத்து இருமுறை தட்டும் பொழுது பற்பசை தூரிகையினுள் செல்லும் பிறகு பற்களை மேலும் கீழுமாக துலக்க வேண்டும். பக்கவாட்டில் துலக்கினால் பற்களின் மிளிரி (Enamel) தேய்மானமடையும். வலது கை பழக்கமுள்ளவர்களுக்கு இடது பக்க மேல்பற்களும், இடதுகை பழக்கமுள்ளவர்களுக்கு வலது பக்க மேல்பற்களும், முரசுக்கு அண்மையாக வெளிப்புறத்தில் தேய்மானமடையும். எவ்வளவு கூடுதலாக அழுத்தம் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கு பல் தேய்மானமடையும். புளோரைட் சேர்ந்த பற்பசைகளை உபயோகிப்பது சாலச் சிறந்தது. புளோரைட் பற்சூத்தை வருவதைத் தடுக்கும்.

நாக்கை சுத்தம் செய்ய நாக்கு சுத்திகரிப்பான்களை (Tongue cleaners) உபயோகிப்பது நன்று. வாய் கொப்பளிப்பான்களை (Mouth Wash) மருத்துவரின் பரிந்துரையுடன் உபயோகியுங்கள். தொடர்ச்சியாக உபயோகித்தால் உடலுக்கு தேவையான வாயிலுள்ள நுண்ணுயிர்களை கொன்று விடலாம். சமையல் உப்பை தண்ணீரில் கலந்து வாய் கொப்பளிப்பது சாலச் சிறந்தது.

பற்பொடி, மணல், உமி, சாம்பல், கரித்தூள், செங்கல் தூள் பல்லின் மிளிரியைத் (Enamel) தேய்த்து விடும். இதை விளித்து நம் சான்றோர்கள் இவ்வாறு பாடியுள்ளார்கள்.

**கல்லும் மண்ணும் கரியுடனே பாளையும்**
**வல்லதொரு வைக்கோலும் வைத்திழுத்து-பல்லதனைத்**
**தேய்த்திடுவாராயின் வாராளே தேவி**
**வாய்த்திடுவாள் மூதேவி வந்து**

இதில் எவ்வளவு உண்மையிருக்கின்றது பார்த்தீர்களா?

தாயின் கருவறையில் இருக்கும் போது டெட்ராசைகிளின் மாத்திரைகளை உட்கொண்டால் (Tetracycline) பற்கள் நிறம் மாறித் தோன்றலாம். அதிக புளோரைட் (Floride) குடிக்கும் நீரில் இருந்தால் நிறம்மாறி உருவ அமைப்பும் மாறலாம். Vit.D குறைபாடு பல்லின் வன்மையைப் பாதிக்கலாம். (hy poplasia) Vit. A,C,D கற்ப காலத்தில் நிச்சயமாக பல்லுருவாக்கத்திற்கு தேவைப்படும். எனவே பற்களைக் கருவறையிலிருந்து கல்லறை வரை பாதுகாக்க வேண்டும்.

பற்கள் வாயில் முளைத்த பின் கல்சியம் மாத்திரைகள் பாவிப்பதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. கல்சியம் மாத்திரைகள் குடலினால் உறிஞ்சப்பட்டு இரத்தத்தில் கலந்தாலும் எனாமலில் இரத்த நாளங்கள் இல்லாமை எனாமலினுள் செல்லாது. பல் உருவாகிக் கொண்டிருக்கும் காலத்திலேயே பற்கள் கல்சியக் கனிமத்தை உள்வாங்க முடியும். (பதின்மூன்று வயது வரை) வாயில் முளைத்த பற்களில் கல்சியம் படியவேண்டுமானால் உமிழ் நீரிலிருந்து மட்டுமே படியமுடியும்.

(Topical ca absorbtion) மருத்துவரின் ஆலோசனைப் படியே பல் உருவாகும் காலத்தில் கல்சியம் பயன்படுத்துங்கள்.

நீங்கள் பற்களை இழப்பதற்கு முக்கிய காரணம் பற்சூத்தையும் முரசு வருத்தமுமே. நீங்கள் மேற்கூறிய முறையில் வாய் சுகாதாரத்தை பேணினால் வாழ்நாள் முழுக்க சொந்தப் பற்களுடன் வாழலாம். பற்கள் இருக்கும் வரை தான் வாய் விட்டுச் சிரிக்க முடியும். நீங்கள் ஒவ்வொருமுறை வாய்விட்டு சிரிக்கும் பொழுதும் ஸ்டீரொயிட் இரசாயன பொருள் இரத்தத்தில் குறைகின்றது. இந்த வேதிப் பொருள் தான் வலி (Pain) உண்டாவதற்கு அடிப் படைக் காரணம் . இதன் வேகம் கட்டுப்படும் போது நோயின் வேகமும் குறையும்.

வாய் சுகாதாரத்தைப் பேணி வாய்விட்டுச் சிரியுங்கள் நோய் விட்டுப் போகும்

**வ.தேவானந்தம்**
பல் மருத்துவர், யாழ். போதனா வைத்தியசாலை



## நகங்களைப் பாதுகாப்போம்

எமது கை விரல்களினதும், கால் விரல்களினதும் நுனியைப் பாதுகாப்பது நகங்களாகும். அது மட்டுமன்றி உடல் கடிக்கும் போது சொறிவதற்கும் கை விரல் நகங்களையே பயன்படுத்துகின்றோம்.

உங்கள் விரல் நகங்களை எப்போதாவது நீங்கள் நோக்கியதுண்டா? அவை தடிப்பாக அல்லது இறுக்கமாக காணப்படுகின்றனவா, அல்லது நிறத்தில், வடிவத்தில் வித்தியாசமாக உள்ளனவா என ஒரு நிமிடம் அவதானியுங்கள்.

நகத்தில் வரும் பாதிப்புக்களுக்கு மிகப் பொதுவான மூல காரணிகளாக அமைவது பங்கசு கிருமித் தொற்றும், சொறாசிஸ் (Psoriasis) எனப்படும் ஒரு வகைத் தோல் நோயுமே ஆகும்.

நகங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள காலங்களில் மட்டுமன்றி ஆரோக்கியமாக உள்ள போதும் கூட அதேயளவு கவனத்துடன் சுத்தமாக வைத்திருத்தல் இன்றியமையாததாகும்.

### நகங்களை ஆரோக்கியமாகப் பேணும் முறைகள்

★தோல்களை மிருதுவாக்கும் க்ரீம் (Cream) ஐ கைகளுக்கும், கால்களுக்கும் பூசுதல் வேண்டும். இதன் போது நகங்களுக்கும், நக வளைவுகளுக்கும் நன்கு பூசி அழுத்துதல் வேண்டும்.

★ வீடுகளில் புற்கள் பிடுங்கும் போது/ கடும் குளிர் பதார்த்தங்களைக் கையாளும் போது கையுறை அணிதல் வேண்டும்.

★ நீண்ட நேரம் நீருக்குள்/ இரசாயனப் பதார்த்தங்களுடன் விரல்கள் தொடு கையுடன் இருக்கும் சந்தர்ப்பங்களில் கையுறை/ காலுறை அணிதல் வேண்டும்.

★கிழமைக்கு ஒரு தடவை கை நகங்களையும், மாதத்துக்கு ஒரு தடவை கால் நகங் களையும் வெட்டுதல் வேண்டும். அப்போது பின்வரும் விடயங்களைக் கவனிக்கவும்.

1. குளித்து முடித்த பின் வெட்டுதல் சிறந்தது. அப்போது தான் உங்கள் நகம் மென்மையாகி, வெட்டுவதற்கு இலகுவானதாக இருக்கும்.

2. நகங்களை விரல் நுனியுடன் ஒட்ட வெட்டுதல் கூடாது.

நகம் வெட்டும் உபகரணத்தை மட்டுமே பயன்படுத்தவும். கத்தி/ சவர அலகினால் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

4. கால்களின் நகத்தைக் குறுக்காக நேரே வெட்டுதல் வேண்டும். இரு மூலைகளிலும் நகம் விரல் தசையை விட நீளமாக இருத்தல் வேண்டும்.

★குழந்தைகளுக்கு நகங்களை வெட்டும் போது மிக அவதானமாக இருத்தல் வேண்டும்.

★நகங்களை வாயினால் கடிக்கவோ பிய்த்து இழுக்கவோ வேண்டாம். இதனால் நகத்தைச் சுற்றிய தசைகளிலும், வாயிலும் பற்றீரியாக் கிருமித் தொற்றுக்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

### தாக்கத்திலிருந்து நகத்தைப் பாதுகாக்க

காலைச் சுத்தமாகவும், உலர்த்தியும் வைத்திருக்கவும். ஏனெனில் ஈரலிப்பான சூழலிலேயே பங்கசுத் தொற்றுக்கள் இலகுவில் ஏற்படும்.

1.சுத்தமான உலர்ந்த காலுறைகளை அணிதல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒன்று என உபயோகியுங்கள். (socks) ஈரலிப்பானால் உடனே காலுறையை (socks) மாற்றுங்கள்.

2.கால் விரல்களைக் காற்றோட்டமான சூழலில் வைத்திருங்கள்.

★நகங்களில் பிரச்சினை ஏற்பட்டு நீங்கள் வைத்தியரை நாடும் போது கீழ் வரும் வினாக்களுக்கான விடை களை ஆயத்தப்படுத்திச் செல் லுங்கள்.

1.எவ்வளவு காலமாக இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது?

2.நகம் ஏதாவது தாக்கத்துக்கு காயங்களுக்கு உள்ளானதா?

3.இதே மாதிரி முன்பும் நகப் பிரச்சினை ஏற்பட்டதா? அப்படி ஏற்பட்டிருப்பின் எவ்வாறு குணப்படுத்தப்பட்டது.

4.வீட்டில் ஏதாவது மருத்துவ முறைகள் கையாளப்பட்டதா? என்ன முறை கையாளப்பட்டது.

5.அதனால் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா?

6.வேறு ஏதாவது காரணிகள் உங்கள் நகப் பிரச்சினையை கூட்டுகின்றனவா? குறைக்கின்றனவா?

7.வேறு நோய்கள் உள்ளதா வேறு மருந்துகள் பாவிக்கிறீர்களா? மருந்துகள் ஒவ்வாமை உள்ளதா? கர்ப்பமாக இருக்கின்றீர்களா?

நகங்களில் நேரடியாக ஏற்படும் தாக்கங்கள் மட்டுமன்றி உடற்றொகுதிகளில் ஏற்படும் நோய்களாலும் நகமாற்றங்கள் (நிறமாற்றம், தடிப்படைதல், உருமாற்றம்) ஏற்படும் என்பதை அனைவரும் அறிந்திருத்தல் நன்று. நகங்களில் இந்த மாற்றங்கள் ஏற்படுவதை அவதானித்தால் உடனே வைத்தியரை நாடுங்கள்

**கு.அபர்ணா**
மருத்துவ பீட மாணவி,
நீரிழிவு சிகிச்சை நிலையம்.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., **நீரிழிவு சிகிச்சை நிலையம்**, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டோபர்மன்X ரிச்பக் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு.
தொடர்பு:0770357307.அரசடி, வட்டுக்கோட்டை.
(28102)(6.7.4)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் விக்ரோரியா கல்லூரிக்கு அருகில் நல்லநீர் கிணறு உள்ள விசாலமான வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0719 260 228

## வேலை வாய்ப்பு

தொழில் செய்பவர்களுக்கும், தொழில் அற்றோர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு. (வெளிநாடு) Visa,Bank,Studio,Print, Software சம்பந்தமான Marketing வேலை வாய்ப்பு. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். மாத வருமானம் 100,000/= மேல். info@danshalk.com 0773637864 (வி/5325)(5-6-7)

## வீடுகள் விற்பனைக்கு

தெஹிவளையில் Galle Road இற்கு அருகில் அமைதியான சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 2B/R, 3 B/R வீடுகள் விற்பனைக்கு உண்டு. விபரம் 0777368764
(10,6,7)

## உடனடி வேலைவாய்ப்பு

உதவியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள் - 32,000/- பணிப்பெண்கள்-35,000/-, காவலாளிகள்- 42,000/-, வயது 21-42 வரை
தொடர்பு:0774-193321/011-7220626
(10,6,7)

## ஆடுகள் விற்பனைக்கு

நல்லின மறி ஆடுகள் 3 உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778019172.
(28229)(6.7.4)

## கடைகள் வாடகைக்கு

யாழ். கே.கே.எஸ் வீதி. மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகில் கஸ்தூரியார் வீதிக்கு இடையில் "சாயி கோட்டம்" இல் அமைந்துள்ள 9 கடைகளும் 6000 சதுர அடிகள் (கீழ்தளம்
4 கடைகள் 2400 சதுர அடிகள் +முதலாம் மாடி
5 கடைகள் 3600 சதுர அடிகள் ) ஒன்றாக/ இரண்டாக வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 5413070
(27591)(6.7.4)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
அழையுங்கள்: 077 303 2004, அனுராதபுரம்.

## கார் விற்பனைக்கு

Nissan Sunny இலக்கம் 13- XXXX உடைய கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777353581.
(28207) (6.7.4)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NC-UY-XXXX இலக்கம் கொண்ட CBZ (XTREME) வகை மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :0778309650
(28136)(6.711)

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்பு: 077 3033 803
(27611) (45.6.7)

## காணி விற்பனைக்கு

இல.46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 6 பரப்பு 1.22 குளி விஸ்தீரணம் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :0772487301, 0777763436
(28048)(6.711)

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மோல்டிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப் படும். (நல்லூர் பின் வீதி) (28228)(5-6-7)
இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:கி.கேதீஸ்வரன் 077351 2591

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்குகொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் உடன் தேவை.தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 9000/= லிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும் - வயது 18 லிருந்து 22 வரை.
தொடர்பு:11-A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857 (28216)(6.7.4)

## British English Technical Training Centre
### இன் வீட்டிலிருந்தபடியே ஆங்கிலம்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க 3 மாத தபால் மூலமான பயிற்சி நெறி மிக இலகுவாக தமிழ் மொழி விளக்கங்களுடன் கூடிய பாடநெறி .விவரங்களுக்கும் இலவசப் பாடநெறி ஒன்றிற்கும் 10/- முத்திரை ஒட்டி சுய முகவரியிடப்பட்ட நீண்ட கடிதயுறையுடன் BETC 33, பொன்னப்பா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். SMS மூலமும் தொடர்பு கொள்ளலாம். உங்கள் பெயர், முகவரியை 0777619048 ற்கு SMS செய்து விவரங்களைப் பெறலாம்.
Adobe Photoshop (DTP) தமிழ் மூலமான CD வழிப்பயிற்சியும் உண்டு. (28245)(6.7.4)

## இளங்கலைஞர் மன்றம்-பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.முகாமையாளர்-
- க.பொ.த(சா/த) க்குக் குறையாத கல்வித் தராதரம்.
- நிர்வாக அலுவலர் /எழுதுவினைஞர்/கணக்காளர்/ பாடசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்றோர் விண்ணப்பிக்கலாம்
- வயதெல்லை: 45-65

2.காவலாளி-
- நல்ல தேகாரோக்கியம்
- 05 வருடத்துக்குக் குறையாத அனுபவம்
- வயதெல்லை: 30-65
- விண்ணப்ப முடிவு திகதி:- 21.01.2013

மன்றத்திலிருந்து 03 மைல் தூரத்துக்குள் வசிப்பவர் மட்டும்.
- ஊதியங்கள் பேசி நிர்ணயிக்கப்படும்.

செயலாளர்,
இளங்கலைஞர் மன்றம்,
சட்டநாதர் வீதி,நல்லூர்
(அ/5464) (6.7.4)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா
### Course Length - Six Month

24

January 2013 - June 2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013

## நாளை 14.01.2013 திங்கட்கிழமை முதல் மீண்டும் புதுப் பொலிவுடன்
## சுதா றேடர்ஸ்

இல.286/1 ,அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்ட வுள்ளதை வாடிக்கை யாளர், அன்பர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம். தச்சு வேலைக்குரிய மெசின்கள் , கட்டடப் பொருள்கள், மோட்டார் ரில்லர்கள் மற்றும் சகல வகையான மெசின்களும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
T.P- 0770760496 (27995) (6.7.4)

## கருங்கல் விற்பனைக்கு

ABC ,¾" , கிறவல் போன்றவை விற்பனைக்கு உண்டு. விநியோக வசதியும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: அனுர
0710561202, 0776258995
(28240) (6.7.4)

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன்தெற்கு, பலாலி வீதிக்கருகில் இரண்டாவது காணி, 3பரப்பில் அமைந்த 1500 சதுர அடி விசாலமான வீடும், இணைந்த 2பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0777 251188

## சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு

கந்தரோடையில் அமரர். தர்மலிங்கம் M.P வீட்டுக்கு அருகில் சகல நவீன வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 3286827.
(28242)

## தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின்.....
## ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி - வவுனியாவில்

Manual Fabric Screen Printing





காலை 10 மணி முதல் பி.ப 4 மணி வரை
ஜனவரி 19, 20 ஆம் திகதி (சனி, ஞாயிறு)

பிரவீனா என்ரபிரைசஸ்
55, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா.
பதிவுகள், விபரங்களுக்கு: 077 890 4131, 077 728 3192, 0715863151
(27972)(6.7.11)

## கார் விற்பனைக்கு

HD-XXXX தொடரிலக்கமுடைய Toyota camy கார் விற்பனைக்குண்டு
(Reverse camera, alloy wheel, DVD player, TV, silver color)
மேலதிக விபரங்களுக்கு 0773747825,0212228984
(சனி,ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம்)



## சைக்கிள் ரயர் விற்பனை முகவர்கள் தேவை

சைக்கிள் ரயர் விற்பனையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

எம்மிடம் எல்லா அளவுகளிலுமான சைக்கிள் ரயர்கள், ரியூப்கள் நியாயமான விலையில் தொகையாக பெற்றுக்கொள்ள முடியும். மாவட்ட ரீதியாகவோ அல்லது பிரதேச ரீதியாகவோ உள்ள விற்பனை முகவர்கள் எம்மை தொடர்புகொள்ளவும்
தொ.பே. 077 8833 091, 077 8408 614.
(28218) (45.6.7)

## 50 ஆம் ஆண்டு (பொன் விழா) திருமண நல்வாழ்த்து



1963 → 2013

## பிலிப்பையா- கத்தறின்

மேலும் பல்லாண்டு காலம் இறை அருளோடு வாழ வாழ்த்தும்
அருட்தந்தை பி.ஜேக்கப் யோகராஜ்(omi), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(28165)(6.7.11)

## The Jaffna Academy & School of Technology and St. John's College Jaffna

## PRELIMINARY COURSE IN ENGLISH

- A three-month English Course for School leavers/Job seekers.
- The course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the course.
- Free Handouts.

*Commencement: 16th Jan 2013*
*Lessons on Weekdays from 3.30 - 5.30 p.m.* (C/5426)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் புத்தூர் வீதியில்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்திக்கு அருகில்
19¾ பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 775 5036 (சி/5318)(5-6-7)

## விநியோகஸ்தர்கள் தேவை

எமது நிறுவனத்தின் தயாரிப்புக்களை விநியோகம் செய்வதற்கு பின்வரும் பிரதேசங்களில் விநியோகஸ் தர்கள் தேவை.(யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி).
வேண்டப்படும் வசதிகள்:

* பிணை வசதி
* களஞ்சிய வசதி
* வாகன வசதி

தொடர்பு கொள்ள வேண்டிய இல: 077 8269516. (28143) (6.7.4)

## 2013 இற்கான உடனடி வேலை வாய்ப்பு

DMI அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கு,வடகிழக்கில் ஆரம்பிக்கப் படவிருக்கும் புதிய ஆண்டின் 5 புதிய கிளைகளுக்கு 75 புதிய வெற்றிடங்கள்

* Manager
* Asst. Manager
* Customer Service
* Administration
* Supervisor

((O/L/A/L) படித்த இளைஞர் யுவதிகளுக்கு) இலவச பயிற்சியும் சான்றிதழும் வெளிநாடு செல்லும் வாய்ப்பும், நிரந்தர வேலை வாய்ப்பும் உண்டு. பயிற்சியின் போது (10,000/= 15,000/=) பயிற்சியின் பின் 35,000/= க்கு மேல்.
தங்குமிட வசதியுண்டு. (28197)(5.6.7)

T.P : 021 7201521, 077 0308484, 077 8920777

## பணி வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கும் உல்லாச உணவு விடுதிக்கு (SEA FOOD RESTAURANT) கீழ் காணும் பணிகளுக்கு பணியாளர்கள் கோரப்படுகின்றனர்.

1) ORDER TAKER (ஆண்) 3) KITCHEN HELPER (ஆண்)
2) WAITER (ஆண்) 4) REST CLEANER (ஆண் / பெண்)

தொலைபேசி எண், பாஸ்போட் சைஸ் புகைப் படம் உட்பட உங்கள் சுயவிவரக் கோவையினை அனுப்பவும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
No.32, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
விண்ணப்பங்கள் 20.01.2013 இற்கு முன் அனுப்பப்பட வேண்டும். (28255)(6.711)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றும்
திருமதி சசிதேவி அன்பழகன் அவர்களின் தாயாரான
திருமதி வெல்லிபுரம் பாக்கியம்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை (28260) (6.7.4)

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் யவிந்திரா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் யவிந்திரா நேற்று முன்தினம் (11.01.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற நவரத்னத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவேந்திரன் மற்றும் சுபத்ரா (குஞ்சு -லண்டன்), ராஜினி(ராணி), நகுலேஸ்வரன் (அப்பன்) ஆகியோரின் சகோதரியும், சதிஸ்கண்ணன், மகிந்தன், சதிஸ் குமார், சதிஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும்,விஜிதாவின் அன்பு மாமியும் கௌதமனின் பேர்த்தியும், ஜெயசீலி, ஜெகநாதன் (பாலு - லண்டன்), நாகராசா, சுபத்திரா ஆகியோரின் மைத்துனியும், பிரதீப், தீபன், பிரசாத், ஆனந், குலலோஜினி, ஜீத்தேந்திரா, சிந்துஜா, உஷாந்தினி, நிஷாந்தினி, மிருஷா, கம்ஷிகா ஆகியோரின் மாமியும், றஜீதா, மதுரா, சுமிலா, ரஞ்சித்குமார், நந்தினி, ஜீவராஜ் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராதம்பு, கோப்பாய் வடக்கு,கோப்பாய். (28259)(5-6-7) குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

நாவலர் வீதி(கஸ்தூரியார் வீதி நாவலர் வீதிச்சந்திக்கு அருகில்) மாடி வீடு மேல் தளம் 06 அறைகள், கீழ்தளம் 06 அறைகள்,04 குளியல் அறைகள் மற்றும்வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய 2000 சதுர அடி வீடு அரச சார்பற்ற நிறுவனம் அல்லது கம்பனிகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0716179216 (27375) (6.4

## வியாபாரக் கட்டடம்/ கடை வாடகைக்கு

யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியில் ஸ்டான்லி (Stanley) வீதியை அண்மித்து வியாபாரக் கட்டடம் / கடை தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு.
தொடர்பு :0774316197 (28174)(6.711)

## மாதகல் நுணசை வித்தியாலய ஒன்று கூடல்

யாழ். மாதகல் நுணசை வித்தியாலயமானது 02.01.2013 முதல் தனது சொந்த இடத்தில் இயங்கி வருவதால் பாடசாலையின் வளர்ச்சி அபிவிருத்தி தொடர்பாகவும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் உருவாக்கம் குறித்தும் கலந்துரையாடுவதற்காக பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், முன்னைய ஆசிரியர்கள், தற்போதைய ஆசிரியர்கள், மாதகல் கிராமமக்கள், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோருக்கிடையிலான ஒன்றுகூடல் ஒன்றினை நடத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் இந்த ஒன்று கூடலில் மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 20.01.2012
நேரம்: பி.ப. 3 மணி

பழைய மாணவர்கள். (C/5601)(6.711)

## வீடு வாடகைக்கு உண்டு

உடுவில், லவ் லேனில் குறுகிய காலத்துக்கு , வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773549811. (18011)(6.7.4)

## Van உடன் விற்பனைக்கு

57 - xxxx தொடர் இலக்கமுடைய TOYOTA HIACE வான் கட்டை மொடல் உடன் விற்பனைக்கு உண்டு. லீசிங் இல்லை. (விலை பேசித் தீர்மானிக்கலாம்)
தொடர்பு :0779934740 (28148)(2.6)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி- இருபாலை வீதி சந்தியில் கடை , வீடு கட்டக்கூடிய 2 ¼ பரப்பு நல்ல காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :0771033347 (28169)(6.711)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

# AAT
## (Srilanka)

Foundation Intermediate & Final
Medium : English & தமிழ் (C/5603)(6.711)

## External Degree
(Jaffna University)
GAQ, BA 1 & BA Final
1st in com, Bcom (1&11), Final

Furthur Detail
Director
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
T.P: 021 222 3382/ 021 2229149

## தேவை

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு அதன் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்குடன் யாழ். நகரத்தை அண்டிய பிரதேசத்தில் காரியாலயத் தேவைகளுக்காக வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய சிறிய வீடு ஒன்று நீண்டகால அடிப்படையில் எங்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.மேலதிக விவரங்களுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
077 2104550. (28140)(6.7.4)

## பெண் உதவியாளர் தேவை

நோயாளியான பெண் வயோதிபரை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்குப் பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு :0773405539 (28186)(6.711)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில், வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.
தொடர்பு :0771942050, 0775591366 (28010)(6.711)


## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நகர்களில் அமையவிருக்கும் அபான்ஸ் காட்சியறைகளுக்குக் காட்சியறை உதவியாளர் பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை
1) க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது க.பொ.த.சா.தரம்
2) போதிய கணினி அறிவு பெற்றிருத்தல் வேண்டும்
3) போதிய ஆங்கில அறிவு பெற்றிருத்தல் வேண்டும்
4) மோட்டார் உந்துருளி அனுமதிப்பத்திரம் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு விரும்பத்தக்கது
5) ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கவேண்டிய இறுதித் திகதி:- 18.01.2013
அனுப்பவேண்டியமுகவரி:- Mr.S.Kugan(manager)
JVC Abans showroom
No,21.1st cross street, Kandy road, Vavuniya,
Abans ltd
Kanagapuram road, Kilinochchi.
T.P 0776112095.
Email:-jvckilinochchi@gmail.com
Abans (27613)(2.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
நவரெட்ணம் ஜீவரெட்ணம்
தோற்றம்
02.03.1954
மறைவு
15.12.2012

கடந்த 15.12.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நவரெட்ணம் ஜீவரெட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (15.01.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சொர்ணாம்பிகை மண்டபத்திலும் (TCT Hall, 527 Navalar Road) நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

186, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (28135) (45.6.7) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



### நாகலிங்கம் தங்கராசா

(ஓய்வுபெற்ற அதிபர்/ நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை, நீர்வேலி)

கடந்த 16.12.2012 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எனது கணவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 15.01.2013 செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசகேசரிப்பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. -மனைவி. (28217) (2-6)

## நீங்கா நினைவுகள்



மண்ணில் 21 * 09 * 1921
விண்ணில் 09 * 03 * 2004

அமரர்
சோமசுந்தரம் நடராசா
திதி: அபரபக்க திருதியை

திருமதி
அழகம்மா நடராசா
திதி: வளர்பிறை துதியை

மண்ணில் 02 * 06 * 1926
விண்ணில் 22 * 12 * 2006

ஆண்டுகள் பல கடந்தாலும்
நீங்கா நினைவுகளாய்
இன்று போல் என்றுமே
வாழ்ந்திடுவீர் எம் மனதில்!
தாங்கள் கற்றுக்கொடுத்த
இனிய நல் வாழ்வியல்
தத்துவங்களைப் போற்றி
என்றென்றும் உமை
மறவாது போற்றிடுவோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
10/1, அம்பக்கர் லேன்,
பிரம்படி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அல்லாஹ் ஆணையாக குழந்தையின் கழுத்தை நான் நசிக்கவில்லை'

## றிஸானா நபீக் எழுதிய கடிதம்



றிசானா நபீக்கிற்கு சவூதி அரசு நிறைவேற்றியுள்ள மரண தண்டனையை மனித உரிமைப் போராளிகள் மட்டுமின்றி முஸ்லிம் அறிஞர்கள், மார்க்க நெறியை மீறாத முஸ்லிம்களெனப் கண்டிக்கின்றனர்.



30.01.2007,
அல் தவாத்மி சிறைச்சாலை,
அல் தவாத்மி,
இலங்கையில் எனது முகவரி
எம்.எஸ்.நபீக், சாலி நகர், மூதூர்

எனது உண்மையான வயது 19, நான் பிறந்த திகதி 02.02.1988. எனது வயதை எனது சப் ஏஜன்ட் அஜிர்தீன் என்பவர் 2.2.1982 எனக் குறிப்பிட்டு கடவுச் சீட்டை வழங்கினார்.

நான் 01.04.2005ல் சவூதி அரேபியாவுக்கு வந்தேன். நான் சவூதி அரேபியாவில் ஒன்றரை மாதங்கள் வீட்டில் வேலை செய்தேன்.

இந்த வீட்டில் சமைத்தல், கழுவுதல், 4 மாதக் குழந்தையை பார்த்தல் போன்ற பணிகளைச் செய்து கொண்டு இருந்தேன்.

குறித்த சம்பவ தினம் ஞாபகமில்லை. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, பகல் 12.30 மணியிருக்கும். அப்போது யாரும் வீட்டில் இருக்கவில்லை. அங்குள்ள 4மாதக்குழந்தைக்கு நானே பால் கொடுப்பேன். வழமை போல அன்றும் பாலூட்டிக்கொண்டிருக்கும் போது குழந்தையின் மூக்கின் மூலம் பால் வெளியே வர ஆரம்பித்தது.

அப்போது நான் குழந்தையின் தொண்டையை மெதுவாக தடவினேன். குழந்தை கண் மூடியிருந்தபடியால் குழந்தை தூக்கமென நினைத்தேன்.


குழந்தையின் தாய் (எனது எஜமானி) 1.30 மணியளவில் வந்து சாப்பிட்டு விட்டு பிள்ளையை பார்த்தார். அதன் பின்னர் அந்த எஜமானி எனக்கு செருப்பால் அடித்துவிட்டு குழந்தையை தூக்கிக்கொண்டு போனார்.

அப்போது (எஜமானி) குழந்தையின் தாய் எனக்கு செருப்பால் மூக்கிலும் கன்னத்திலும் அடித்த அடியினால் இரத்தம் வந்து கொண்டிருந்தது.

பின்னர் என்னை பொலிஸுக்கு கொண்டு போய் அங்கு ஒரு பட்டியால் அடித்தார்கள். குழந்தையின் கழுத்தை நசித்ததாகக் கூறுமாறு அடித்து வற்புறுத்தினார்கள். அவ்வாறு கூறும் வரை 'கரண்ட்' பிடிக்கப்போவதாக கூறினார்கள்.

இந்த நிலையில்தான் அவர்கள் எழுதிய பேப்பரில் கையொப்பம் வைத்தேன். அப்போது எனக்கு பயங்கரமாக இருந்தது.

ஞாபக சக்தி அப்போது எனக்கிருக்கவில்லை. அல்லாஹ் மீது சத்தியமாக குழந்தையை கொல்ல நான் கழுத்தை நசிக்கவில்லை. மேற்படி எனது வாக்கு மூலம் வாசித்து விளங்கிய பின்னர் உறுதி யென உணர்ந்து கையொப்பமிடுகின்றேன் என அதில் றிஸானா தெரிவித்திருந்தார். ✱




---

தருவது
வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?




**மேடம்:** பூர்த்தியாகாத வேலைகள் நிறைவடையும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புத்துணர்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.



**இடபம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். எதிர்பார்ப்புகள் தாமதமாகும்.



**மிதுனம்:** புதியவர்களின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.



**கடகம்:** உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் இரட்டிப்பு இலாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.



**சிங்கம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். கோபம் குறையும்.



**கன்னி:** பிரச்சினைகளைச் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**நாளை**

தை -01 திங்கட்கிழமை 14.01.2013
திதி: திருதியை மு.இ. 09.13 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ. 09.32 வரை
சுபநேரம்: 12.34- 02.04 வரை
ராகுகாலம்: 08.04- 09.34 வரை



**துலாம்:** அரசு காரியங்கள் விரைந்து முடியும். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். நினைத்ததை முடிப்பீர்கள்



**விருச்சிகம்:** கடனாக வாங்கியிருந்த பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் அனுபவ மிக்க வேலையாள்களைத் தேடுவீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பொறாமை பிரச்சினை ஏற்படும்.



**தனுசு:** ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். விவாதம்வேண்டாம்.



**மகரம்:** மறைமுக விமரிசனங்களும், தாழ்வு மனப்பான்மையும் வந்து நீங்கும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தைத் தவிருங்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள்.



**கும்பம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விபனையாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.



**மீனம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். முயற்சிகளுக்கு சிறந்த பலன் கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 8 | 4 | 3 | | | |
| 1 | 3 | | | 7 | | 8 | | 4 |
| | | | | | 9 | | | 6 |
| 9 | | | 7 | | 8 | 1 | 2 | |
| 7 | | | | 5 | | | | 9 |
| | 2 | 5 | 9 | | 1 | | | 7 |
| 6 | | | 2 | | | | | |
| 2 | | 4 | | 9 | | | 1 | 8 |
| | | | 6 | 1 | 4 | 7 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 7 | 5 | 2 | 1 | 3 | 4 | 9 |
| 5 | 9 | 2 | 3 | 8 | 4 | 1 | 7 | 6 |
| 3 | 1 | 4 | 7 | 6 | 9 | 5 | 2 | 8 |
| 7 | 3 | 1 | 6 | 4 | 2 | 9 | 8 | 5 |
| 2 | 5 | 9 | 8 | 1 | 7 | 6 | 3 | 4 |
| 4 | 6 | 8 | 9 | 3 | 5 | 2 | 1 | 7 |
| 8 | 7 | 3 | 2 | 5 | 6 | 4 | 9 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 9 | 8 | 7 | 5 | 3 |
| 9 | 4 | 5 | 1 | 7 | 3 | 8 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பணியாளர் மீதான தாக்குதலுக்கு கண்டனக் குரல்கள்

## காட்டுமிராண்டித்தனத்தின் வெளிப்பாடே தாக்குதல்

உதயன் பத்திரிகை விநியோகஸ்தர் பிரதீபன் மீதான தாக்குதலும் உதயன் பத்திரிகைப் பிரதிகள் தீயிட்டு எரித்து சாம்பராக்கப்பட்டமையும் மிகவும் கோரத்தனமான, மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களாகும். இவ்வாறான சம்பவங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2000 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை சீல் வைக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு உதயன் அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுதக் கும்பல் ஒன்று உதயன் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில், சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஸ்குமாரும் அலுவலக உதவியாளர் ரஞ்சித்தும் உயிரிழந்தனர். பல பணியாளர்கள் காயமடைந்தனர். அதே ஆண்டு பத்திரிகை விநியோகிக்கச் சென்ற சாரதி பாஸ்கரன் சுட்டுக் கொல்லப்பட்டார். ரஜிவர்மன் என்ற செய்தியாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒப்புநோக்குநர் பிரிவில் கடமையாற்றிய நிமல்ராஜன் என்பவர் கடத்தப்பட்டார் இன்று வரை அவர் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. காணாமல்போனோர் பட்டியலில் அவரது பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு உதயன் - சுடரொளி ஆசிரியராக அப்போது கடமையாற்றிய வித்தியாதரன் கடத்தப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார். அதன்பின் 2011 இல் அலுவலகச் செய்தியாளர் கவிதரன் தாக்கப்பட்டார். அதே ஆண்டு செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டார்.

இவற்றின் தொடர்ச்சியாகவே இந்தத் தாக்குதல் அரங்கேறியுள்ளது. பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும். சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும். -என்றுள்ளது.

## மக்களின் சுதந்திரத்தைப் பறித்தெடுக்கும் செயற்பாடு

### கண்டிக்கிறது உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு

உண்மைகளை அடக்கி ஒடுக்கி மக்களின் சுதந்திரத்தை பறித்தெடுக்கும் செயலாக நாம் இதனைக் கருதுகின்றோம்.

ஜனநாயக ரீதியில் மக்களுக்கான பிரச்சினைகளை வெளிக்கொணரும் உதயன் பத்திரிகையின் பணியாளர் தாக்கப்பட்டதுடன் பத்திரிகைகளும் தீயிட்டு எரிக்கப்பட்டமை ஜனநாயகம் எந்தளவுக்குப் பேணப்பட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. அது மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு என்ற ரீதியில் தனி மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசாட்சியில் இவ்வாறான ஓர் அராஜகம் நடைபெற்றுள்ளது.

மக்களை அடக்கி ஒடுக்கி சுதந்திரமாக வாழ முடியாத ஒரு சூழலையே அரசு உருவாகியுள்ளது. பத்திரிகைத்துறை என்ற ரீதியில் உண்மைகளை வெளிக்கொணரும் உதயன் பத்திரிகைக்கு தொடர்ச்சியாக இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறேன்.

மக்கள் சுதந்திரமாக தமது உரிமைகளைப் பெற்று நிம்மதியாக வாழ வழி வகுக்க வேண்டும். மக்களுக்காக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (த)

## அதிகாரத்தின் அடாவடி இது

### நல்லூர் பிரதேச சபை உபதலைவர் கண்டனம்

உதயன் பத்திரினை விநியோகஸ்தர் பிரதீபன் மீதான தாக்குதல் அதிகாரத்தின் அடாவடித்தனமே. என நல்லூர் பிரதேச சபை உபதலைவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1974 ஆம் ஆண்டு தமிழர் ஆராய்ச்சி மகாநாட்டில் மிலேச்சத்தனமாக தமிழ் இனம் தாக்கப்பட்ட அதே நாளில் பணியாளர் தாக்கப்பட்டு பத்திரிகைகள் எரிக்கப்பட்டதும் மிகமிக கொடூரமான செயலாகும். உதயன் பணிமனை ஆசிரியர், ஊடகவியலாளர்கள், பணியாளர்கள் என தொடர் தாக்குதல்கள் ஏற்பட்டும் ஜனநாயக நாடே என்ன நடவடிக்கை எடுத்தாய்? ஒரு நாட்டில் போற்றப்படுவது பத்திரிகைச் சுதந்திரம். அதுகூட முறைக்கு முறை எரிந்து சாம்பலாகிறது.

எத்தனை அகிம்சைப் போராட்டங்கள் நடத்தி எதைக் கண்டோம். உடனுக்குடன் வெளிப்படுத்துவது ஊடகம்.

அந்த வகையில் உதயன் பத்திரிகைச் சுதந்திரம். எந்த வகையிலாவது தாக்குவது கையால் ஆகாத செயலாகும். பணியாளர் தாக்குதலை மிக வன்மை யாகக் கண்டிக்கின்றேன்.- என்றார்.

## தமிழ்த் தேசிய இனத்தின் குரலை நசுக்கும் செயல்

### மாநகர உறுப்பினர் விந்தன் கண்டனம்

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதும் தாக்கி காயப்படுத்துவதும் ஊடக வாகனங்களைத் தாக்குவதும் அதன் பணியாளர்களை அச்சுறுத்துவதும் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன் ஒரு கட்டமே உதயன் பணியாளர் மீதான தாக்குதல். இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று யாழ்.மாநகரசபை எதிர்க் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

உதயன் பத்திரிகையின் விநியோகப் பணியாளரான நா.பிரதீபன் இனந்தெரியாதவர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். மற்றொரு விநியோகப் பணியாளர் தாக்குதலிலிருந்து மயிரிழையில் தப்பியுள்ளார்.

இலங்கையில் தாக்குதல்களையும், உயிரிழப்புக்களையும், அச்சுறுத்தல்களையும், அடக்கு முறைகளையும் அதிகளவில் எதிர்கொண்ட ஒரேயொரு பத்திரிகையின் நிறுவனமென்றால் அது உதயனாகத் தான் இருக்கும்.

கருத்தைக் கருத்தாலும், எழுத்தை எழுத்தாலும் எதிர்கொள்ளத் தெரியாத காடையர் கூட்டத்தில் இத்தகைய வன்முறைச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகவும் அதன் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து அதற்கு எதிராக கட்ட விழ்த்து விடப்படும் அத்தனை அராஜகச் செயல்களையும் துணிச்சலோடு தட்டிக் கேட்டு நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் தர்மத்துக்காகவும் தொடர்ந்து குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதும் தாக்கிக் காயப்படுத்துவதும் ஊடக நிறுவனங்களை அடித்து நொருக்கி அதன் பணியாளர்களை அச்சுறுத்தும் ஈனச் செயல்கள் இலங்கையிலேயே அதிகமாக இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகளாக நரமாமிச வெறி கொண்டவையும், பாசிச பேய்களையும் ஊழிக் கூத்து என்பன எதைக்காட்டி நிற்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இத்தகைய காட்டு மிராண்டித்தனமான கீழ்த்தரமான மனிதகுலமே வெட்கித்தலை குனியக் கூடிய நிகழ்வுகள் இலங்கையில் தொடர்ந்து அரங்கேற்றப்படுகிறது.

இறுதியாக நடந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் உதயன் பணியாளர் நா.பிரதீபன் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவரது குடும்பம் , பத்திரிகை நிறுவன குடும்பத்தினரோடும் எமது கவலையைப் பகிர்ந்து கொள்கிறோம்.- என்றார். (த-4)

## ஊடகப் பணியாளர் மீது தொடர்ச்சியான அச்சுறுத்தல்

வடமராட்சி,ஜன.13

உதயன் பத்திரிகைப் பணியாளர் மீது வடமராட்சிப் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது எமக்கு மிக அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகைப் பணியாளர்கள் அச்சமின்றி சுயாதீனமாகப் பணியாற்றக் கூடிய நிலை ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் உதயன் பணியாளர் தாக்குதல் தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஜனநாயக நாடான இலங்கையில் பத்திரிகைகள் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இத்தகைய சம்பவங்களை சம்பந்தப்பட்டோர் இனி மேலாவது நிறுத்த வேண்டும். ஊடக சுதந்திரத்தை நிலை நிறுத்தி ஊடகங்களுக்குரிய மதிப்பு, மரியாதையைக் கொடுத்து இலங்கை நாட்டின் நற்பெயரை பாதுகாக்க அனைவரும் முயலவேண்டும்-என்றுள்ளது. (த-8)

## உதயன் ஊழியர் மீதான தாக்குதல் காட்டுச் சட்டத்தின் பிரதிபலிப்பு

'உதயன்' பத்திரிகை விநியோகப் பணியாளர் மீது வடமராட்சி, மாலுசந்தி பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவமானது வடக்கில் காட்டுச்சட்டம் - சர்வாதிகார ஆட்சி நிலவுகிறது என்பதையே எடுத்துக்காட்டுகிறது. மேலும், அங்கு ஊடக சுதந்திரம் இல்லை, ஜனநாயகம் நிலைநாட்டப்படவில்லை என்பதும் இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கரா.

வடக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது என சர்வதேசத்துக்கு அரசு படம் காட்டி வருகிறது. ஆனால், தமிழர் தாயகப் பகுதிகளில் காட்டுச்சட்டம் உச்சம் பெற்று வருகிறது. அதன் பிரதிபலிப்பாகவே உதயன் பத்திரிகை ஊழியர் தாக்கப்பட்டு, அவர் எடுத்துச் சென்ற பத்திரிகைப் பிரதிகள் மோட்டார் சைக்கிளுடன் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் அமைந்துள்ளது.

தமிழர் தாயகத்தில் அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் துணைக்குழுக்களும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் அராஜகங்கள் , அடாவடிகளை உதயன் பத்திரிகை மிகத் துணிச்சலுடன் பட்டவர்த்தனமாக வெளியிடுவதால் அதன் மீது தொடர்ந்தும் இவ்வாறான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டே வருகின்றன.

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்க்கத் திராணியற்றவர்களே உதயன் ஊழியர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேலும், இந்தத் தாக்குதலை நடத்திய குற்றவாளிகளைக் கண்டுபிடித்து பொலிஸார் சட்டத்தின் முன் நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழிலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை இன்று ஆட்சியாளர்களுக்கும், அமைச்சர்களுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்து வருவதால் அதன் மீது தொடர்ச்சியாக குறிவைக்கப்பட்டு வருவதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, ஊடக சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கும் கடப்பாட்டை எவராலும் மீற முடியாது. இதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார் பாஸ்கரா.

## கருத்துச் சுதந்திரத்தை முடக்குவதற்கான முயற்சி

### பருத்தித்துறை நகர சபைத் தலைவர்

வடமராட்சி,ஜன.13

உதயன் விநியோகப் பணியாளர் மீதான தாக்குதலானது அரசியல் வாதிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் ஒன்றாக விழுந்த அடியாகும். இந்த அடி மூலம் அவர்களது பணியை ஒருபோதும் முடக்கிவிட முடியாது என பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கண்டனம் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

ஊடகத்துக்கு எதிரான அடக்குமுறை காலத்துக்கு காலம் இலங்கையில் இருந்து வருகிறது.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக எந்தவிதமான நியாயமும் இதுவரை கிடைக்கவில்லை. நியாயம் கிடைக்காத நிலையில் அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கடந்த 25 ஆண்டுகளாக உதயன் பத்திரிகை மீது காலத்துக்கு காலம் அடக்கு முறைகளும், தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இதன் மூலம் தமிழ் மக்களுக்கு செய்திகளை வழங்கும் உதயனின் பணியை நிறுத்தப் பார்க்கின்றார்கள். அடக்குமுறைகளும், தாக்குதல்களும் நடைபெற்ற போதிலும் உதயன் வீரியத்துடன் எழுந்து தமிழ் மக்களுக்கு செய்திகளை வழங்கி வருவது இறைவனின் உந்து சக்திதான் காரணமாகும்- என்றார். (த-8)

## அநாகரிகமான செயற்பாடு கண்டிக்கிறார் ஆனந்த ராஜ்

வடமராட்சி, ஜன.13

ஊடக நிறுவனங்களையும், உடகப் பணியாளர்களையும் மிலேச்சத்தனமாகத் தாக்குவது அநாகரிமான செயற்பாடாகும் என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

உதயன் விநியோகப் பணியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது:-

ஊடக சுதந்திரத்தினை நடைமுறைப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் முக்கிய தூண்களாக அதனைத் தாங்கி நிற்பவர்கள் ஊடகவியலாளர்களும், ஊடகங்களைச் சார்ந்துள்ள பணியாளர்களும் தான். நாடளாவிய ரீதியில் ஊடாகவியலாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறானவர்களை மிலேச்சத்தனமாக தாக்குவது என்பது அநாகரிகமான செயற்பாடாகும்.

இலங்கையில் கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை. சில தினங்களுக்கு முன்னர் உதயன் பணியாளர் பத்திரிகை விநியோகித்தில் ஈடுபட்டிருந்த போது தாக்கப்பட்டு, அவரது மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இச் சம்பவம் தொடர்பாக குற்றவாளியைக் கண்டுபிடித்து பாரபட்சமற்ற முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். ஊடக சுதந்திரத்தின் நற்பெயருக்கு இடமளிக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்து இலங்கை அரசின் நற்பெயரை சர்வதேசத்தில் வளர்த்துக் கொள்வதற்கென நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதே இலங்கை மக்களின் எதிர்பார்ப்பாகும்.- என்றார். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வைத்தீஸ்வராக்கல்லூரி நூற்றாண்டு விழா 1913-2013

யாழ்.மண்ணில் சாதிமத பேத மற்ற சமரசசன்மார்க்க இலட்சியத்துடன் கல்வியை கடந்த நூறு ஆண்டுகளாக சமூகத்துக்கு அள்ளித்தந்த கற்பக தருவாயும், கற்பதற்குரிய ஆர்வமிருந்தும், வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட குழந்தைகளைக் கல்விமான்களாகவும், மேன்மைமிக்கவர்களாகவும் மாற்றி வந்த ஞான விருட்சமாகிய எமது கல்லூரி, முன்பு வித்தியாலயமாக இருந்து இன்று கல்லூரியாகி பல்வேறு வகையில் பரிணாம வளர்ச்சியைக் கண்டு, இவ்வருடம் நூறு ஆண்டு நிறைவு விழாவை எட்டியுள்ளதால் இதனை நாம் சிறப்பாக கொண்டாட எண்ணியுள்ளோம். இதன் நிமித்தம் இக் கல்லூரியின்,

- முன்னாள் அதிபர்கள்
- முன்னாள் ஆசிரியர்கள்
- பழைய மாணவர்கள்
- நலன் விரும்பிகள்.

அனைவரும் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களை 31.01.2013 ற்குள் வழங்கி உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு: 1.திரு.மு.மகேந்திரன்(அதிபர்)
யா/வைத்தீஸ்வராக்கல்லூரி
யாழ்ப்பாணம்
2. மின்னஞ்சல் முகவரி: Vaidyeshwara.College.@ gmail.com
3.தொலைபேசி இலக்கம்: 021 2223322

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

## யாழ்.தட்டாதெரு கலாஜோதி ச.ச.நிலையம் நாளை மீளத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.தட்டாதெருச் சந்தியிலுள்ள கலா ஜோதி சனசமூக நிலையம் பல வருடங்களின் பின்னர் நாளை புதுப்பொலிவுடன் மீளத்திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை மாலை 5 மணிக்கு சனசமூக நிலைய இளைஞர் ஒன்றிய மூத்த உறுப்பினரும் போசகருமான கலாபூணம் இராசையா பீதாம்பரம் சனசமூக நிலையக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

நிலையத்தலைவர் தெ.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (16)

## சர்வசாதனசங்க சனசமூக நிலைய தைப்பொங்கல் விழா

சாவக்ச்சேரி, நுணாவில் கிழக்கு , சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவும் தைப்பொங்கல் விழாவும் நாளை திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நிலைய முன்றலில் இடம் பெறும்.

சம்பிரதாய நிகழ்வுகளைத் தொடர்ந்து மாலை 6.45 மணிக்கு வசந்தன் கூத்து நிகழ்வும் 7.30 மணிக்கு யாழ். ரமணனின் (ராஜன்ஸ்) இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் அலுவலகப்பணியாளர்களாகக் கடமையாற்றும் க.சுரேஸ்குமார் அவர்களின் பாசமிகுதந்தையாரும்,சி.யோகேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனாருமாகிய

**தம்பிமுத்து கந்தசாமி**

அவர்கள் 10.01.2013 அன்று காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதேச செயலக குடும்பம்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

## மரண அறிவித்தல்

## சுப்ரமணியம் கனகமணி



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் கனகமணி நேற்று முன்தினம் (11.01.2013) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா (பாபு) மற்றும் செல்வராணி, சாந்தினி, வரதராசா, நடராசா (அதிபர், கிளி/ அழகாபுரி வித்தியாலயம்), விமலராசா, ஜெயராசா, தேவிகா, வசந்தினி, ஜெயந்தினி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும், யோகராணி, நகுலாம்பிகை, நவரத்தினம், கனகலிங்கம், நிர்மலராணி, ஜெயந்தி (ஆசிரியர், யாழ்/ பாசையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.ம.வி), அம்பிகை, விஜயா, சந்திரராஜ், கோணேஸ்வரன், குகன், ஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காகத் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்
- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபபிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

காணி விற்பனை
மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் லோட்டன் (Lawton) வீதியில் மூன்று (03) பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. வாங்கவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி: 011 2362498

SICHER GERMANY ஜெனரேட்டர்கள்
இப்பொழுது யாழ் மண்ணில்
3 தினங்களுக்கு மட்டும்
20% வரை விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்
இடம் துரையப்பா விளையாட்டு அரங்கில்
திகதி ஜனவரி 18 | 19 | 20
JITF 2013 JAFFNA INTERNATIONAL TRADE FAIR
2013 யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்து இக்கழிவினை பெற்றுக்கொள்ளலாம்
கடை எண் 5-6-7
நீர்பம்பி | ஐபிரசர் | பவர்டூல்ஸ் | வெல்டிங் இயந்திரம் | 20%
என்ஜின் நீர்பம்பி 20% | டெமோலிசன் பிரேக்கர், செயின்சோ, வைப்ரேட்டர், எயர் கொம்பிரஸர். 15%
SICHER GERMANY INDUSTRIAL GENERATOR SERIES 10 KW to 1000 KW
German Technology Manufactured in China
உங்கள் மின் தேவைக்கேற்ப தெரிவுகள்
650W: 1 TV, 3 CFL Bulb & 1 Ceiling Fan
1KW: 1 TV, 1 DVD Player, 7 CFL Bulb & 2 Ceiling Fan
2KW: 1 TV, 1 DVD Player, 1 Waterpump, 10 CFL Bulb & 4 Ceiling Fan
3KW: 1 TV, 1 DVD Player, 1 Waterpump, 1 Iron OR 1 Oven, 10 CFL Bulb & 5 Ceiling Fan
5KW: 1 TV, 1 DVD Player, 1 Waterpump, Air Conditioner, 1 Iron or 1 Oven, 15 CFL Bulb & 5 Ceiling Fan
8KW: 1 TV, 1 DVD Player, 1 Waterpump, Air Conditioner, 1 Iron OR 1 Oven, 25 CFL Bulb & 7Ceiling Fan

SICHER GERMANY ஜெனரேட்டர்களுகான இலவச சேவை
SICHER வாடிக்கையாளர்களுக்கு யாழ் மண்ணில் ஓர் அரிய சந்தர்ப்பம்.
FREE SERVICE
5 தினங்கள் மட்டுமே இந்த அரிய வாய்ப்பு
தேவைப்படுகின்ற உதிரிபாகங்களுக்கு கட்டணம் அறவிடப்படும்.
15, 16, 17, 18, 19 திகதிகளில், ஜனவரி மாதம் 2013ல்
275, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
SERVICE CENTER
(ஸ்ரீதரன் திரையரங்குக்கு அருகாமையில்)
மேலுள்ள எமது சேவை நிலைய முகவரிக்கு வருகை தந்து எமது சேவைகளை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ் முகவர்
MALABAR Reliable Equipment
இல.81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 2043, 021-492 3609
இலங்கையின் உத்தியோக பூர்வ முகவர்
Reliable Equipment
இல.408, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
Tel : 0117 444 408
Fax : 0112 389 265
www.reliablesl.com
Azhar : 077 385 67 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2013,2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு.**

வினாத்தாள்I இல் 100% மதிப்பெண்களைப் பெறுவதற்கு DVD ஊடாக விரிவான கற்பித்தல் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூலும் DVD உம் விற்பனையாகின்றது

**விளக்கம் 2013-2014**
**1200 வினாக்களும் 18 மணிநேரவிரிவான விளக்கமும்**

அன்னை புத்தகசாலை
இல. 7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P : 0212229881**

# அடுத்த நீதியரசர் யார்?

## அரச உயர்மட்டத்தில் வாதம்

கொழும்பு, ஜன. 13

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்டால் அடுத்த பிரதம நீதியரசராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் அரச உயர்மட்டத்தில் விவாதம் இடம் பெற்று வருகின்றது.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சாட்சியமளித்த ஷிராணி திலகவர்த்தன மற்றும் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் இருவரில் யாரை நியமிப்பது என்பதில் குழப்பங்கள் நிலவிவருகின்றது. இருப்பினும் மொஹான் பீரிஸே நியமிக்கப்படுவார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. அதன்போது ஜனாதிபதியால் குறித்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டால் அடுத்த பிரதம நீதியரசராக யார் நியமிக்கப்படுவார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதில் முன்னாள் சட்டமாஅதிபர் மொஹான் பீரிஸ், ஷிராணி திலகவர்த்தன, சத்யா ஹெட்டிகே ஆகியோரது பெயர்கள் முணுமுணுக்கப்படுகின்றன. எனினும் மொஹான் பீரிஸுக்கு குறித்த பதவியை வழங்க அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக அரச உயர்மட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

**மரண அறிவித்தல்**

திருமதி **றோஸ் மனோன்மணி ஜெயராஜசிங்கம்**

Manns' School Lane, உடுவிலைச் சேர்ந்த றோஸ் மனோன்மணி ஜெயராஜசிங்கம் நேற்றுமுன்தினம் (11.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மான்ஸ் ஸ்கூல் லேன்,
உடுவில்

தகவல்:
M.ஜெயராஜசிங்கம்
0213007470

**e-Bankers.Net**
E-Learning System

வங்கியாளர் கற்கை நெறிகளிற்கான இணையத்தளம்

வீட்டில் இருந்தவாறே இலங்கை வங்கியாளர் நிலையத்தால் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு உங்களைத் தயார் செய்ய உதவும் இணையத்தளம்.

CBF,DBF பரீட்சைகளுக்கு உங்களை முழுமையாக வழிகாட்டும்.

வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஏற்படுகின்ற நேரமின்மை பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் 24 மணிநேர கற்கைநெறிகள். விரும்பிய நேரம் விரும்பிய பாடத்தை கட்டுப்பாடின்றி மிக குறைந்த கட்டணத்தில் கற்றிடுங்கள்.

CBF, DBF பாட நெறிகளிற்கான
- Notes for Subjects
- Pass Papers(Tamil& English)
- Answers(Tamil & English)
- Model Questions
- Downloads
- Assignments
- More Reading References

www.ebanker.net ல் உங்களை பதிவு செய்யுங்கள்

மேலதிக விவரங்களுக்கு : 0772193179 ற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

மின்னஞ்சல் முகவரி: email@ebankers.net

Director,Ebankers.net,Pallimunai Road,Mannar.

**வீடு காணிவிற்பனை**

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில் (168 Bus root) அளகொல்லைப் பிள்ளையார் வீதிக்கருகாமையில் வீடு கட்டக்கூடிய காணியும், பெரியவீடும் விற்பனைக்குண்டு.

RG ads

0776030148 / 0775023448

**Vinoth Curtains**
இப்பொழுது யாழ். மண்ணில்......

கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
இல-50/1, நாவர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்பு- மைக்கல் 0774906323.0723995447

**மலேசியாவில் சம்பளத்துடனான தொழிற்பயிற்சி**

யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு........

யாழ். மண்ணில் படிப்பு (3 மாதங்கள்)
மலேசியாவில் சம்பளத்துடனான தொழிற்பயிற்சி
மலேசியா அமைச்சின் சான்றிதழ்
Certification by: Malaysian Skills Department (Ministry of Human Resources Malaysia)

Malaysian Skills Diploma
Hospitality Management
Creative Multimedia
Computer System

மொத்தக் கட்டணம்: (VISA,Course Fee) Rs. 210,000/= (RM 5000)

பயிற்சியின் போது மாதாந்த ஊக்கிவிப்புத் தொகை Rs. 32,250/= (RM 750) வழங்கப்படும்.

முதன்முறையாக மலேசியா விரிவுரையாளர்களின் நேரடி வகுப்பு யாழ். மண்ணில்............

**Mind Vishion**
Affiliated to
SG Academy (Malaysia) Sdn,Bhd
No-04, Clock Tower Lane, Jaffna
Tel: 021 221 9456
(பொருளியற் கல்லூரி அருகாமை, சயன்ஸ் கோணர் ஒழுங்கை)

After O/L Join World's No-1 **Aptech** COMPUTER EDUCATION

**ACCP** உலகளாவிய ரீதியில் 45 நாடுகளில் 1500றக்கும் மேற்பட்ட கிளைகள் கொண்ட யாழ்.மாணவர்களுக்குச் சேவையாற்றும் ஓரே நிறுவனம்....

INTERNATIONAL DIPLOMAS
- Diploma (DISM)
- Higher Diploma (HDSE)
- Advanced Diploma (ADSE)

எமது நிறுவனத்தால் வழங்கப்படும் சான்றிதழ்
- உலகளாவிய ரீதியில் தொழில்வாய்ப்பை உறுதிப்படுத்தக் கூடியது
- SQA அங்கீகாரம் பெற்றது
- உலகளாவிய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பில் பாடவிலக்கைப் பெறக்கூடியது.

C,C++ C# ORACLE JAVA J2EE J2ME JSP .NET SQL PHP Perl My SQL APACHE ASP AJAX

Short Term Courses
- MS Office
- DTP
- Web Designing

புதியவர்களுக்கு முன்னுரிமை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
- 15/01/2013- 2.00PM
- 19/01/2013- 9.00AM

APTECH Computer Education- Jaffna Branch
Managed By:- **MIND VISHION**
No-04, Clock Tower Lane, Jaffna
Tel; 021 221 9456
(பொருளியற் கல்லூரி அருகாமை, சயன்ஸ் கோணர் ஒழுங்கை)

**Be an Aircraft Engineer**
Study in MALAYSIA
NEXT INTAKE - MAY 2013

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விமான பொறியியலாளர் தொழில்நுட்பம்




**DIPLOMA IN AIR CRAFT MAINTENANCE TECHNOLOGY**
(2 1/2 years with 3 - 6 months Industrial Attachment)
TRAINING PROVIDERS....
- Air Asia (regional) Air lines
- Sabah Air lines
- D Nest Aviation
- Erocopter

KOLEJ tafe SEREMBAN — SABAH AIR — AirAsia — dnest

**EASA PART 66 AIRCRAFT MAINTENANCE LICENSE PROGRAM**
(3 years with Industrial Attachment)
COLLABORATION WITH ....
- D Nest Aviation
- AIR – TECH Bildung Germany

Other Courses
Diploma in Automotive engineering
Diploma in Civil Engineering
Diploma in Electrical & Electronic Engineering
Diploma in Mechanical Engineering

2013 ஜனவரி 24ம் திகதி காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை யாழ்ப்பாணம், Green Grass Hotel இல் வெளிநாட்டு பிரதிநிதிகள் முன்னிலையில் FREE Semminar நடைபெறும்.

தொடர்புக்கு : திரு.ஜோய் - 0777 359519

Minimum Requirement - G.C.E. O/L
Our Services - Assist in VISA Application process Accommodation Arrangement Free Airport Pick up

ABEC CONSULTANTS
**AUSTRALIAN BUSINESS EDUCATION CENTRE (PVT) LTD.**
No 26, Rotunda Gardens,Colombo 03. Tel : 0112439118 , 0773265931
Email: info@abeclk.com Web: www.abeclk.com
Branches
No 115/1, Pushpadana Shopping Complex, D.S Senanayaka Street, Kandy. Tel: 0812205156 / 0719998070
No 66, Sanasa Ideals, Bauddhaloka Mw, Gampaha. Tel: 0334934633 / 0770692940

**பிரசாந்த்** குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

PRASHANTH FERTILITY RESEARCH CENTRE
கலந்து சிறப்பிக்கும்
குழந்தையில்லா தம்பதியருக்கான இலவச ஆலோசனை முகாம்
The Most Successful IVF Team From India

இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# 7, 57th Lane,Wellawetta,Colombo-06.
திகதி : 27.01.2013
நேரம் : 9.00am - 3.00pm

Dr. Geetha Haripriya
MD., DGO., FRCOG(Lon)

IMSI
குறையுள்ள ஆண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

கீழ்காணும் நவீன சிகிச்சை முறைகளுக்கான இலவச ஆலோசனை

EMBRYOSCOPE

Organized by: Mighty Health Club of Colombo
Sponsered By: HOME NURSING CENTRE WELLAWATTA, PRASHANTH HOSPITAL

இலவச முன் பதிவுகளுக்கு: 0777 56 93 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Distributors wanted
# விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையின் முன்னனி UK Based Detergent Companyயின் ஏற்றுமதித் தரமுடைய தயாரிப்புகளை விநியோகம் செய்வதற்கு வடக்கு மாகாணத்துக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

**பிரதேசங்கள்.**

- *01. யாழ்ப்பாணம்.*
- *02. வவுனியா / கிளிநொச்சி*
- *03. மன்னார் / முல்லைத்தீவு*

உலகத்தரமும் உயர் சான்றிதலும் பெற்றதரமான எங்களுடைய தயாரிப்புகளை விநியோகம் செய்யக்கூடிய விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
தொலைபேசி- 0776 275113 / 0777 543116 -கொழும்பு.
0779 064739 - யாழ்ப்பாணம்.
E-mail: distriad@gmail.com, skumar257@ymail.com

உங்களின் வியாபாரத்தின் முன்னேற்றத்தின் பங்காளியாய் என்றும் நாங்கள் உங்களுடன்.

# மலேசியா

## தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 34,000 |

- * கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- * மெடிக்கல் (Medical) - இலவசம்
- * இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- * விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- * தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
- * உணவு (Food) - இலவசம்
- * 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் முற்றும் இலவசம்

Labour Licence No.1785
**Rizviya Travels & Tours**
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011-3091521, Hotline : 077-3179592

# மலேசியா
## வேலை வாய்ப்பு

## இலவசம்! இலவசம்! இலவசம்!

**வெளிநாட்டு முகவர்களுடன் நேர்முக தேர்வு மிக விரைவில் !!!**

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| பணிப் பெண் Housemaid | 25 | 850RM (Rs. 36,000/-) |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்.
- * ஒப்பந்த காலம் 2 வருடங்கள். நாளொன்றுக்கு 12 மணி வேலை நேரம்
- * உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருந்துவ வசதி அனைத்தும் இலவசம்.
- * ஏனைய வசதிகள், சட்டதிட்டங்கள் மலேசிய தொழிற்சங்க சட்டத்திற்கு அமைவானது.
- * ஒப்பந்த முடிவில் நாடு திரும்ப விமான டிக்கட் இலவசம்.

AL/1980/ADVT/ 66/12

மலேசியாவில் பிரசித்தி பெற்ற Royco நிறுவனத்திற்கு

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| உற்பத்தி இயக்குனர் Production Operator | 50 | 650RM |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்
- ஒப்பந்த காலம் 3 வருடங்கள். நாளொன்றுக்கு 8 மணி வேலை நேரம்
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி அனைத்தும் இலவசம்.
- மேலதிக வேலைநேர கொடுப்பனவு மற்றும் ஏனைய வசதிகள், சட்டதிட்டங்கள் மலேசிய தொழிற்சங்க சட்டத்திற்கு அமைவானது
- பயிற்சி காலம் 3 மாதங்கள், ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமான டிக்கட் இலவசம்.
- வயது 21 முதல் 35 வரை

AL/1980/ADVT/ 55/12

**நேர்முகப் பரீட்சை ஜனவரி 18 -25 வரை**

18-புத்தளம் , 19 - யாழ்ப்பாணம் (ஹோட்டல் சுபாஷ் 8.00am - 12.00pm)
20- கிளிநொச்சி, 21-திருகோணமலை (நகர சபை மண்டபம் 9.00am - 2.00pm)
22-மட்டக்களப்பு (காத்தகன்குடி ஹிரா பவுன்டேஷன் 8.00am - 11.00am)
23- குருநாகல் (கென்டியன் ரீச் ஹோட்டல் 9.00am - 2.00pm
24/25 - கொழும்பு (பான் குளோபல்)

பான் குளோபல் PAN GLOBAL வெளிநாட்டு வேலை வாய்ப்பு L/L 1980
**பான் குளோபல்**
351/1, ஆர் ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 3.
(மஹனாம கல்லூரிக்கு அருகில்)
தொலைபேசி : 011 5300100, 0773 502201 / 0773 140788

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

*அல்ஸ்ரேசன் ஜேர்மன் சப்போட் (45 நாள் நிரம்பிய ஆண், பெண் தடுப்பூசி போட்டது)
*கிறேடன் - 1,3 வயது (ஆண், பெண்)
நேரம்: 3மணிக்கு பின்பு
தொடர்பு:0779592945
(C/28272)

### கார் விற்பனைக்கு

KI XXXX தொடரிலக்கம் உடைய VIVA கார் விற்பனைக்கு உண்டு.
T.P
0770782255, 0777549786
(28269)(6.14)

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு குழந்தை ஒன்றைப் பராமரிப்பதற்கு பணிப்பெண்தேவை.
உணவு, தங்குமிடவசதியுடன் கவர்ச்சி கரமான சமபளம் வழங்கப்படும்.
தொடர்பு:0774843932
(28267)(6.14)

### நாய் விற்பனைக்கு

ஆறு மாதம் நிரம்பிய தடுப்புசி போடப்பட்ட நல்ல இன ஜேர்மன் சப்போட்டர் பெண் நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0777965852
(28266)

### குடியிருப்புக் காணி விற்பனை

கரவெட்டி, புதுத்தோட்ட வீதியில் கொடிகாமம் றோட்டிலிருந்து 100 யார் தூரத்தில்,கிணற்றுப்பங்கு வழிவாய்க்கால் நல்ல தண்ணி குழாய்க் கிணறு , சிவப்பு மண் உரித்துடன் 2 பரப்பு (இரண்டு) காணி நல்ல சுற்றாடலில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. புதுத் தோட்ட வீதியுடன் வடக்கு எல்லையைக் கொண்டது. கூடிய விலை கோருபவருக்கு விற்கப்படும்.
தொடர்பு: உரிமையாளரின் சட்டத்தரணி
(சி/5339)(6.7.4) 077 0597784

### அறைகள் வாடகைக்குண்டு

நல்லூர் பிரதேசத்தில், பாதுகாப்பான சூழலில், வசதியுடன் கூடிய அறைகள் உண்டு. பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பெண்கள், தொழில்புரியும் பெண்கள் விரும்பத்தக்கது
தொடர்பு-0711205486

### கெண்டர் விற்பனைக்கு

NPLE XXXX தொடரிலக்க நீல நிற இசுஸ் (250) கெண்டர் லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0777273691
(28262)

### கணக்கீடு பகுதி01

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொடர்புகளுக்கு: 0776169470
Student Support Centre
செங்குந்தா கட்டடத் தொகுதி,
கல்வியங்காடு.

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் சச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 4 அறைகள், பெரிய வரவேற்பறை, 2 குளியலறைகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் உண்டு.
தொடர்பு: 077 4527671,
021 7903444. (27565) (6.7.4)

### ஐஸ்கிறீம் கொம்பனி வான் விற்பனைக்கு உண்டு

(26ஸ்ரீXXXX,29ஸ்ரீXXXX)250LF பிறிஜ் வகைகள் வாத் பெட்டி டயனமோ இஞ்சின்
தொடர்பு - 0779592945

### REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1981, அனுஷம்,Engineer,Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1980, அனுஷம், AAT, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1982, மிருகசீரிடம் 3ம், Cashier, Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1969, Christian Rc, Divorced, Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1979, சித்திரை 1ம், IT Professional, Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1980, ரேவதி, Company Director, Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1976, அவிட்டம் 1ம், Tecnician, Uk PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1989, பூராடம், Accountant, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1986, கேட்டை, Doctor, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1972, அனுஷம், Doctor, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1988,கார்த்திகை2ம்,Management Assistant, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1984, சித்திரை 3ம், Engineer, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1977, அத்தம் Clerk, Christian Rc, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1979, மூலம், Programme Officer, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை

**Real Matrimony(Pvt)Ltd**
Tel: 021 4923739 / 864 / 738
Web : www.realmatrimony.com
Email : support@realmatrimony.com

### யாழ் மண்ணில் ஓர் கணனி புரட்சி

**DELL Optiplex GX 520 Computer**



- Inter Pentium IV - 3.2Ghz
- 01GB DDR II RAM
- 80GB SATA Hard Disk Drive
- DVD ROM Drive
- Network / Sound
- 17" LCD Monitor
- Keyboard and Mouse

1 வருட உத்தரவாதம்
மாணவர்களுக்கான விசேட சலுகை
இன்றே அழையுங்கள் : 0771 098 332
விநியோகஸ்தர்கள் Cloud Lanka
ஒரு கணனியின் விலை ரூபா 18,800 மட்டுமே

### காணி விற்பனைக்கு

K.K.S. வீதி, கோண்டாவில் மேற்குதுறை வீதிக்குள் "பாகுதேவன் புலம்" என அழைக்கப்படும் வெற்றுக் காணி மூன்றே கால் பரப்பு. கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்துடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0713 526991


### கண்ணீர் அஞ்சலி



எமது சகதோழர் செ.செல்வகுமரன் (காசாளர், நல்லூர் ப.நோ.கூ.ச) அவர்களின் அன்புத் தந்தை

**தம்பு செல்வரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர்
தொழிற் சங்கம்,
(C/28261) கிளை நல்லூர் ப.நோ.கூ.ச.


### எமது சிகிச்சைகள்

- இருதய நோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினை
- மூட்டுவலி, இடுப்புவலி
- புரோட்ஸ்டிரேட் பிரச்சினை
- ஒற்றைத்தலைவலி
- மன அழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்
- நீரிழிவுப்புண்
- விஷ வைரஸ் பாதிப்பு

Hotline : 0777708310
0777708434
Tel : 011 5517897
5551879
5558442
Fax : 11 5517756

வளமான வாழ்வுக்கு நலமான இதயம் தேவை

இதய நோயினால் அவதிப்படுபவர்கள் சுகம் பெறமுடியும். விரும்பும் பலனை ஆயுர்வேத மருந்தினால் அடைய முடியும். அது இருதயத்திற்கான இரத்தோட்டத்தை சீர்படுத்தும். நெஞ்சு வலியை நீக்கும் சிக்கலான சிகிச்சை இன்றி நலமடைவீர்கள்.



இருதய அடைப்புகள் அறிகுறி
- இருதயம் எரியும் உணர்வு
- குறைவான சுவாசம்
- நெஞ்சு வலி

இந் நோய்களால் துன்பப்படுகிறீர்களா...?

மூட்டுவலி, மூட்டுகளில் வீக்கம், மூட்டுகளில் இறுக்கம், நடமாடுவது கஷ்டம், முதுகு வலி, கழுத்து வலி உடனே எங்கள் மருத்தவரை சந்தியுங்கள்



Jaffna Tra. Fair 18, 19, 20/01/2013 Stall No- B-01
துரையப்பா அரங்கு.
சீனி, இரத்தஅமுத்தம், உயரம் - இலவச பரிசோதனை

**Free Consultation**
Daily @ World Trade Centre
Monthly Clinics are conducted inlandwide

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

Level 5, East Tower, 1C,
World Trade Centre,
Colombo 01, Sri Lanka.
E : fairpharmasrilanka@yahoo.com
W : www. ayurveda.lk

Approved by Department of Ayurveda, BOI, an ISO 9001 : 2008 QMS Certified Company


### 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
04
06
1951

மறைவு
15
12
2012

## திருமதி நவரத்தினம் முத்துலட்சுமி

கடந்த 15.12.21012 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் நாளை (14.01.2013) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

நவம் பந்தல் சேவை,
நுணாவில் மத்தி, கல்வயல் றோட்,
சாவகச்சேரி. (28314)(5.6.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிக் கல்வி வலயத்தில்

# உதைபந்தாட்டதில் மோதல் போர்க்களமானது மைதானம்

வடமராட்சி, ஜன.13

வடமராட்சி கல்வி வலயத்தில் நேற்று இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி குழுச் சண்டையாக மாறியதால் 2 வீரர்கள் சிவப்பு அட்டை காட்டி களத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதைவிட 2 வீரர்களுக்கு மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட 18 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டம் இமையாணன் அ.த.க. பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நெல்லியடி ம.ம.வி.அணியும், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் அணியும் மோதிக்கொண்டன.

முதற்பாதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் ஆரம்பித்து 10 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் வீரர் பிரியங்கன் அற்புதமான கோலொன்றை அடித்து தனது அணியை முன்னிலை பெறச்செய்தார். பதிலுக்கு நெல்லியடி ம.ம.வி. அணியினரும் கோலடிக்க முயன்றனர். ஆனால் அந்த முயற்சிகள் பலிக்கவில்லை. இதனால் முதற்பாதி ஆட்ட நிறைவில் 1-0 என்ற ரீதியில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும், நெல்லியடி ம.ம.வி. அணி வீரர்கள் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதன்பயனாக அந்த அணியின் வீரர் பிரேம்நாத் இரண்டாம் பாதி ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்து அசத்தினார். இதனால் இரு அணிகளும் சமநிலை பெற்றன. இந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவுறுவதற்கு 3 நிமிடங்கள் எஞ்சியிருந்த நிலையில் முறையற்ற ஆட்ட முறைமை காரணமாக இரு அணி வீரர்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றி கைகலப்பு வரை சென்றது. மைதானம் போர்க்களமானது. எனவே மைதானத்தில் விளையாட்டின் பண்புகளை மறந்து அநாகரிகமாக நடந்துகொண்ட இருவருக்கு நடுவர்கள் சிவப்பு அட்டை காட்டினர். இன்னும் இருவருக்கு மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதன் பின்னர் தலா 9 வீரர்களோடு மட்டும் இரு அணிகளும் மீண்டும் விளையாடின. எனினும் 1-1 என்ற ரீதியில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் 5-4 என்ற கோல்கள் அடிப்படையில் நெல்லியடி ம.ம.வி. அணி வெற்றியீட்டியது.

பாடசாலை மாணவர்கள் மைதானத்தில் விளையாட்டின் அடிப்படைப் பண்புகளை மறந்து தமக்கிடையே மோதிக்கொண்டமையை விளையாட்டுத் துறையினரும், கல்விச் சமூகத்தினரும் கண்டித்துள்ளனர்.

(ந-422)

## இன்றைய ஆட்டங்கள்




யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்கு மான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடல்களில் நடத்தி வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

★யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடல்

காலை 8.30 மணி (ஆண்கள் பிரிவு )

★முல்லைத்தீவு விளையாட்டுக் கழகம் எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக 'பி' அணி.

முற்பகல் 9.30 மணி (பெண்கள் பிரிவு )

★கே.ஸி.ஸி.விளையாட்டுக் கழகம் எதிர் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி.

பி.ப. 2.30 மணி (பெண்கள் பிரிவு )

★இராமநாதன் விளையாட்டுக்கழகம் எதிர் கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம்.

மாலை 4 மணி

★இராமநாதன் விளையாட்டுக் கழகம் "பி" அணி எதிர் பட்டபிளை விளையாட்டுக் கழகம்.

மாலை 6.30 (ஆண்கள் பிரிவு )

★ஆண்களுக்கான இரண்டு கால் இறுதி ஆட்டங்கள் இடம்பெறுகின்றன.

★ ★ ★

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி

★றெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வை விளையாட்டுக் கழக, 'பி'அணி.

★ ★ ★

★வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

★786 விளையாட்டுக் கழகம் எதிர் அம்பன் விளையாட்டுக் கழகம்.

(ந-23)

# வவுனியா பிரதேச செயலகத்தின் விளையாட்டுக்கள் இன்று ஆரம்பம்

வவுனியா,ஜன.13

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இன்று ஆண், பெண்களுக்கான பூப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் என்பன நகரசபை ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் மேசைப்பந்தாட்டமும்,

25 ஆம் திகதி வலைப் பந்தாட்டமும் நகரசபை ஆடுகளத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

கரப்பந்தாட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி கலைமகள் ஆடுகளத்திலும்

கபடி எதிர்வரும் 27 ஆம் திகதி நகரசபை மண்டபத்திலும், ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே சுற்றுப்போட்டி அடுத்த மாதம் 2 ஆம் திகதியும், 3 ஆம் திகதியும்

உதைப்பந்தாட்டம் அடுத்த மாதம் 4 ஆம் , 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நகரசபை மைதானத்திலும் , கிரிக்கெட் 23 ஆம் , 24 ஆம் திகதிகளில் நகரசபை மைதா னத்திலும்,

கொக்கி மார்ச் மாதம் 2 ஆம் திகதி சாந்தபுரம் சரஸ்வதி வித்தியாலயத்திலும்

கடற்கரை கரப்பந்தாட்டம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி பொழுது போக்கு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது என வவுனியா பிரதேச விளையாட்டு அலுவலர் எல்.கமலன் தெரிவித்தார். (த-400)

## வீரர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.13

மன்னார் வை.எம்.சி.ஏ. மன்னார் மடு கல்வி வலயத்துடன் இணைந்து மன்னார் மாவட்ட செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வீரர்களின் திறன் மதிப்பீடு தொடர்பான செயலமர்வு ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மன்னார் கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த செயலமர்வில் இந்திய அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து வருகைதந்த பேராசிரியர் டாக்டர் வி. கோபிநாத் வளவாளராகக் கலந்து கொண்டு வீரர்களின் திறன்களை இனங்காண்பது தொடர்பாக விரிவுரைகள் வழங்கினார்.

இந்தச் செயல் அமர்வில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் மன்னார் மாவட்டப் பயிற்றுநர்கள் உடற்கல்வி ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

செயல் அமர்வின் ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் உதவி மாவட்ட செயலாளர் எம்.பரமநாதன் சிறப்பு விருந்திநராக மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் சியான் மற்றும் ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி யூட்சிகரடோ ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)

## பமிலியன்ஸ், ஐக்கியம் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே ஆண், பெண் இருபாலாருக் குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின் றது.

இதில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் ஆண்கள் பிரிவில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 38:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளை யாட்டுக் கழக "ஏ" அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக "ஏ"அணி 77:58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த-23)

### யுனிபைட் வெற்றி

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை யொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான லீக் முறையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் யுனிபைட் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## தேசிய உதைபந்தாட்ட அணிக்கு யாழ்.வீரர்கள் இருவர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

வயதுப் பிரிவுக்கான இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 30 பேர் கொண்ட குழாமில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அல்விஸ் யுனிட்டன், மரியதாஸ் நிதர்சன் ஆகிய இரு வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமைவரை கொழும்பிலுள்ள விளையாட்டுத் திணைக்களத்தின் மைதானத்தில் குறித்த தேசிய அணிக்கான தெரிவுப் பயிற்சிகள் இடம்பெற்றன.

இதன்போது மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அல்விஸ் யுனிட்டன், மரியதாஸ் நிதர்சன் ஆகிய யாழ்.மாவட்ட வீரர்கள் தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ந-23)







உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முதலில் இடம் பெறும் [illegible] ஸ்போர்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெல்லியடி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக [illegible] இடம்பெறும் இறுதியாட்டத்தில் கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை தோற்கடிக்க முடியாத 96 உலகக்கிண்ண சம்பியன்கள்



1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு உலகக்கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த அணி, இன்னமும் தாங்கள் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்பதை நிரூபித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற கண்காட்சி ஆட்டமொன்றில் அந்த அணி இலங்கைப் பதினொருவர் அணியை 7 இலக்குகளால் இலகுவாகத் தோற்கடித்தது.

'பேபி ஷெரமி' நிறுவனத்தின் 'பக் ஹார்ட்' திட்டத்துக்கு நிதி சேகரிக்கும் முகமாக நடத்தப்பட்ட நிதிசேகரிப்புப் போட்டியிலேயே 1996 உலகக்கிண்ணத்தை வெற்றி கொண்ட அணி வெற்றி பெற்றது.

கொழும்பு என்.சி.சி. மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற 1996 உலகக்கிண்ண அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைப் பதினொருவர் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கைப் பதினொருவர் அணி சார்பாக ஹேமந்த தேவப்பிரிய 30 ஓட்டங்களையும், ஹேமந்த விக்ரமதுங்க 30 ஓட்டங்களையும், எரிக் உபஷாந்த 25 ஓட்டங்களையும், சாமர சில்வா 23 ஓட்டங்களையும், சிதாத் வெத்தமுனி 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அணி சார்பாக அணித்தலைவர் அர்ஜூன் ரணதுங்க, அரவிந்த டீ சில்வா, உபுல் சந்தன, சனத் ஜெயசூரிய ஆகியோர் தலா ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

138 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய 1996 உலகக்கிண்ண அணி 14.1 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பாக ரொமேஷ் களுவிதாரண 31 பந்துகளில் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும், அர்ஜூன் ரணதுங்க 28 பந்துகளில் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கைப் பதினொருவர் அணி சார்பாக அஷோக்க டீ சில்வா 17 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக ரொமேஷ் களுவிதாரண தெரிவானார்.

1996 உலகக்கிண்ண அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களில் முத்தையா முரளிதரன், குமார் தர்மசேனா ஆகிய இருவரும் இந்த ஆட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை.


உதயனின்
தமிழர் திருநாளில்
பொங்கும் திருவிழா
2013

விழாவை முன்னிட்டு
நடத்தப்படும் போட்டி

முதலாம் பரிசு - 7,000/=
இரண்டாம் பரிசு - 5,000/=
மூன்றாம் பரிசு - 3,000/=
மேலும் 10 பேருக்கு தலா ஆயிரம் ரூபா

கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்...

கேள்விகள்
1) 2012/12/21 அன்று உலகம் அழியும் என்று குறிப்பிட்ட நாள்காட்டியின் பெயர் என்ன?
2) இலங்கையின் பிரதம நீதியரசர் யார்?
3) 'திவிநெகும' என்ற திட்டத்தின் தமிழ்ப் பதம் என்ன?
4) நல்லூர் இராசதானியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
5) வடமாகாணத்தின் அடையாளமாகக் கொள்ளப்படும் மரம் எது?

நிபந்தனை
- வயது - வேறுபாடு கிடையாது.
- 'உதயனில்' வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- குலுக்கல் மூலமே வெற்றியாளர்கள் நிகழ்வில் வைத்துத் தேர்வு செய்யப்படுவர்.
- நிகழ்வில் வைத்து மாத்திரம் உடனடியாகவே பரிசில் வழங்கப்படும்.
- பரிசுக் கூப்பன்களை எதிர்வரும் 15/01/2013 அன்று மாலை 6 மணி வரையில் அனுப்ப முடியும்.
- உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றைக் குறிப்பிட மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
தமிழர் திருநாளில் பொங்கும் பெருவிழா - 2013
'உதயன்' வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........
முகவரி: ..........
பிறந்த திகதி: ..........


## தென்னாபிரிக்காவுக்கு எதிரான பாகிஸ்தான் குழாம்

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் தலைமையிலான 16 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ள 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடருக்கான குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு பயணம் செய்த பாகிஸ்தான் குழாமில் இடம்பெற்றுச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய நசீர் ஜம்ஷெத், மொஹமட் இர்பான் ஆகியோருக்கு டெஸ்ட் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, அந்தத் தொடரில் இடம்பெற்றிருந்த கம்ரன் அக்மல், உமர் அக்மல் ஆகியோர் இந்தத் தொடரில் சேர்க்கப்படவில்லை.


அண்மைக்காலமாக பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் விக்கெட் காப்பாளராகச் செயற்பட்டுவந்த அட்னன் அக்மல் இந்தக் குழாமிலிருந்து நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக சப்ராஸ் அஹமட் இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த டெஸ்ட் குழாமில் மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், அஷார் அலி, உமர் குல், அசத் சபீக், யுனிஸ் கான், ஜூனைத் கான், மொஹமட் இர்பான், இஷான் அடில், சயீட் அஜ்மல், அப்துர் ரெஹ்மான், ஹரிஸ் சொஹைல், பைஸல் இக்பால், தௌபீக் உமர், சப்ராஸ் அஹமட் ஆகியோர் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கராயன் குளத்தின் வான்பகுதியில் மண்மூடைகளை அடுக்கி அதிக நீரைச் சேமித்து வைக்கும் முயற்சியில் ஸ்கந்தபுரம் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (க-18)



வவுனியாவில் இருந்து சபரிமலை ஐயப்பன் ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்கள் வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் . (க)




செட்டிகுளம் துட்டுவாகைப் பகுதியில் புலம் பெயர் தமிழ் மக்களின் நிவாரணங்களைப் பெறுவதற்குக் காத்திருக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள். (க-400)



வெள்ளத்தில் மூழ்கிய மன்னார் தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தமது இருப்பிடத்துக்கு திரும்பிவந்த பின்னர் வீட்டினுள் கடுமையான ஈரம் காணப்படுவதால் வெளியே நிற்கும் மரத்தின் கீழ் தஞ்சமடைந்துள்ளனர். (க-12)



பனை, தென்னை சார் கைப்பணிப் பயிற்சி நெறியைப் போதித்த பனை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த போதனாசிரியை திருமதி சபாநேசன் புவனறஞ்சிதத்துக்கு ஒட்டுசுட்டான் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பிரிவுபசார நிகழ்வில் ஏற்புரை நிகழ்த்துகிறார் விழா நாயகி. (க-500)



ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் பொலிஸாரின் அனுசரணையுடன் இடம்பெற்ற கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் ரி. அமிர்தலிங்கம், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.பி.தசநாயக்க ஆகியோர் கலந்து கொண்ட போது. (க-500)




நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் மோசமாகக் காட்சியளிக்கும் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள வீதி ஒன்று. (க-500)



உலக சிறுவர் தினத்தை யொட்டி மக்கள் வங்கியால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட 'சிசுஉதன' சேமிப்புக் கணக்கு சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற மாணவி வங்கியின் வவுனியாக் கிளை முகாமையாளரான கே. கோடீஸ்வரனிடமிருந்து சைக்கிளொன்றை பரிசாகப் பெற்றுக் கொள்கின்றார். (க-400)



கிளிநொச்சி உதயநகர் கிழக்கில் பொது நோக்கு மண்டபம், மாலை நேரக் கல்வி நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கு தமக்குச் சொந்தமான அரை ஏக்கர் காணியை வழங்கிய க.மகேஸ்வரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகின்றார். (க-18)





அக்கராயன் மகாவித்தியாலயத்தில் புதிதாக குழாய்க் கிணறு அமைக்கப்படுகின்றது. நீரைக் கண்டவுடன் பொங்கல் வழிபாடு இடம் பெறுகிறது காண முடிகின்றது. (க-18)



துணுக்காய் திருநகர் பகுதியிலுள்ள வீதியொன்றின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FRENCH LANGUAGE CENTRE
சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.

**FRENCH CLASSES- பிரெஞ்சு வகுப்புகள்**

யாழ். ஆரிய குளத்தில் கடந்த பிரிவில் அனுமதி கிடைக்காதோரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் ஓர் பிரிவு விரைவில் ஆரம்பம். (ஒரு வகுப்பில் 10 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்குகிறோம்.....)

இதுவரை 650க்கும் மேற்பட்டவர்கள் எமது ஆசிரியரிடம் French கற்றுச் சென்றுள்ளனர். ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in france- 2007) 2006 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் French கற்பிக்கின்றார்.

FOR BETTER FRENCH உடன் பதிவுகளை மேற்கொள்ள 0779789456
International Certificate இனை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்

ஆரம்பம்: வெகு விரைவில்.
No.23, Palaly Road, Jaffna. (அப்பலோ வைத்தியசாலை முன்பாக) ஆரியகுளம்.

16.01.2013 புதன் 3.30P.m
181, 1st Floor, Jaffna Road, Nelliady. (சோதி வீதி முன்பாக உள்ள மாடியில்)

இணைவு: BCLL இன்
English Courses (IELTS, A1, B1, Spoken, Etc), German (Deutsch), சிங்கள வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

## COMPUTER COURSES

SPECIAL OFFER



| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

## உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ஜெனரேற்றர் விற்பனைக்கு
உற்பத்தி வருடம் 1996, 100K.v, Perkingh, இங்கிலன்ட் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777300882

## SPECIAL OFFER INTERNATIONAL COURSES.


# IELTS
ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Course Fee : 12,000/-

## SPOKEN ENGLISH WITH GRAMMAR
> ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
> இரண்டே மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
> பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Duration: 20 hrs Course Fee : 6,000/-

UK VISA பெறுவதற்கான பாடநெறி
100% SUCCESS!
Full Time & Part Time

City & Guilds
## A1, A2, B1, B2
City & Guilds International English for Speakers of Other Languages (ESOL) Diploma
Duration: 48 hrs Course Fee: 12,000/-

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
0212227230 | 0217538395

## MAHESH TRAVELS
"மகேஸ் ட்ரவல்ஸ்" தினமும் பயணிகளுக்காக பஸ் சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

| | புறப்படும்நேரம் | சென்றடையும் நேரம் |
|---|---|---|
| கொழும்பு - | 9.30P.m | 6.00am |
| யாழ்ப்பாணம்- | 7.30P.m | 5.30am |

★வவுனியா ★மாங்குளம் ★கிளிநொச்சி ★பரந்தன் ★ கொடிகாமம் ★சாவகச்சேரி ★கைதடி ஆகிய பிரதேசங்களிலிருந்து ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் பயணிகளுக்கு உங்களுக்குரிய ஆசனம் வழங்கப்படுவதோடு, ஆசனப்பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
கட்டணம் 700/= ஆசனப்பதிவுக் கட்டணம் ~~700~~/= 600/= மட்டுமே
ஆசனப் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்- 0776917691, 0777254199, 0777283565
குறிப்பு- கல்வியங்காடு, நல்லூர், நாச்சிமார் கோயிலடி, கொக்குவில், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் உள்ள பயணிகள் ஆசனப்பதிவு மேற்கொண்டால் உங்களின் இடத்துக்கே வந்து ஏற்றப்படும்.

## iPhone Lock உடைத்துத் தரப்படும்
iPhone 5/ iPhone 4S Lock
உடைத்துத் தரப்படும்
தொடர்பு : 077779 4324
(c/5363)(6.711)

## கடைத்தொகுதி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மாதகல் வீதியில் யூனியனுக்கு முன்பாக 12½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6 கடைகளுடன் கூடிய கடைத் தொகுதி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772719485, 0031223668676

## பிளசர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
VD- இலக்க தனிப்பாவனை Hero Honda Pleasure விற்பனைக்கு.
0778418344.

## யாழ். அக்கூரியம் அன் பிளான்ட் பரடைஸ் இன் மலிவு விற்பனை
பல் இன பூங்கன்றுகள், பழமரங்கள், நிழல் மரங்கள், புதியவகை செவ்வரத்தை இன்னும் பல பூமரங்கள், சாடிகள், மீன்தொட்டிகள், குருவிகள், கூடுகள் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (எம்மிடம் நல்லின பொமேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு)
9/7, K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

12-01-2013 9.00am & 4.00pm
16-01-2013 3.00pm

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..

## Personal Class (கணினி)
* உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
* Ms Office, DTP, Internet and E-mail, WebDesign, Graphic Design
* சான்றிதழ்கள் வழங்கப்படும்
குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
T.P :077 9672038
(27559)(6.711)

## இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(29772)(15-14)

## ஈஸ்வரன் போக்குவரத்து சேவை
இதுவரை காலமும் வெள்ளவத்தை வரை சேவையை நடத்திய எமது பயணிகள் போக்குவரத்துச் சேவை. அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தைப்பொங்கல் தினமான நாளை (14.01.2013) திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளவத்தை, தெஹிவளை, மவுன்லேனியா, கல்கிசை வரை சேவையை விஸ்தரித்துள்ளது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆசனப்பதிவுகளுக்கு

| யாழ்ப்பாணத்தில்....... | கொழும்பில்....... |
|---|---|
| ஈஸ்வரன் ரேடர்ஸ் 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0212219331 | ஈஸ்வரன் ரேடிங் கோ 201. B. டாம் வீதி, கொழும்பு - 12 0112433889, 0776136911 |
| 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0212222813, 0773865439 | சென் திரேசா தொலைத் தொடர்பு நிலையம், 457, காலி வீதி, கொழும்பு-6 |

## வெளிநாடு விசா பெற அவசியமான ஆங்கிலக் கற்கை நெறி - (IELTS)


ஆஸ்திரேலியா நாட்டவரானவண. மைக்கேல் அவர்களிடம் ஒரு மாதத்தில் கற்கலாம். சனி, ஞாயிறு காலை 9 மணி

## விசா ஆலோசனைகள்
•நியூசிலாந்து/ஆஸ்திரேலியா Skill,Student Visa, குடும்ப விசா
•மலேசியா/சைப்பிரஸ்/ லிதுவேனியா போலந்து/ சிங்கப்பூர்
•எல்லா நாடுகளுக்கும் Visit Visa 10 நாள்களில்

திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016

## STUDY IN UK
உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

GCE(O/L) தகமை போதுமானது
Feb/March Intakeற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
• வருடாந்தம் ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருக்கின்றது.
• பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
• 4 வருட visa உத்தரவாதம்.
• உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படின் ஒரு மாதத்தில் உங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியும்.
• 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week).
• ஆகக் குறைந்தது GCE(O/L) தகமை போதுமானது.
• இலவச IELTS,CITY&GUILDS (B1,B2) வகுப்புகள்.

HOTLINE : 021 2227230 /021 7538395 011 7 555511/14

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## Professional Training in open Source PHP Development
**PHP Programmer ஆக வருவதற்கான சந்தர்ப்பம்**

Conceptual Training 40 - 50 hrs Lectures → Certificate in PHP Programming
Eligibility Criteria - An Exam
Industry Training 50 hrs Real Project → Experience Letter + Guidelines to apply jobs

சர்வதேச துறைசார் Development Team மற்றும் யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாகக் கற்பிக்கும் விரிவுரையாளர்களினால் பயிற்சி வழங்கப்படுவதுடன், துறைசார் வேலை வாய்ப்பிற்கான சகல அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்.
Discussion Date/Time: 13.01.2013 at 3.30 pm
Programming இல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மட்டும்
Weekend Only 4-5 months
MIS Sabapathy Lane, Jaffna. Call: 0773795291, 0776577359

## STUDY IN UK / LONDON


⇨City&Guilds B1, IELTS ஆங்கிலப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களா நீங்கள்???
⇨இன்றே எம்முடன் இணைந்து FULL PACKAGE (AFTER VISA PAYMENTS) முறையில் வீசாவை பெற்று உங்கள் LONDON செல்லும் கனவை நினைவாக்கிடுங்கள்.
விசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.
கடந்த சில மாதங்களில் இவ்வாறு எம்நிறுவனத்தினூடாக LONDON சென்ற மாணவர்கள் விபரம்....



⇨ கடந்த வாரம் UK வீசாவை பெற்ற மாணவன். "S.Thasanivethan" (மன்னார்)



▶City&Guilds நிறுவனத்தில் ஆசிரியப்பயிற்சிபெற்ற பிரபல மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில்,
A1 ⇨ திருமணமாகி LONDON செல்பவர்களிற்கான ஆங்கில வகுப்புக்கள்.
B1 ⇨ STUDENT VISA முறையில் LONDON செல்லும் மாணவர்களிற்கான ஆங்கில வகுப்புக்கள்.
▶மிகக் குறுகிய காலத்தில் 100% பரீட்சையில் சித்தியடையும் முறையில் Audio&Video Visuals மூலமாக நடாத்தப்படுகின்றது.
▶ Reading,Listening,Writing,Speaking- இவ்வாறு ஒவ்வொரு பகுதிகளிற்கும் தனிப்பட்ட கவனம் வழங்கப்படும்.

புதிய பிரிவுகள் (A1,B1) :- 17.01.2013 (thursday-1pm) ஆரம்பம்.
WORLD EDUCATION CONSULTANCY WEC
Sangathanai, Chavakachcheri.
Mobile: 0779 265 447 T.P: 217 200 989

## Advanced Microsoft Excel
அலுவலகங்களிலோ அல்லது உங்களது கடைகளுக்கோ Microsoft excel இனை பாவிப்பவர்கள் சில இலகுவான விடயங்கள் தெரியாமல் தேவையற்று உங்கள் நேரத்தை வீண்விரயமாக்கலாம். முதலில் எம்முடன் தொடர்பு கொண்டு சில உதாரணங்களை பார்த்த பின்னர் நீங்கள் முடிவுகளை எடுக்கமுடியும்.

தொடர்புகளுக்கு:
0776169470

| Student Support Center | Soft View Computer Center |
|---|---|
| செங்குந்தா கட்டட தொகுதி, கல்வியங்காடு | இல: 102, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

குழப்பும் குண்டர்களுக்கு பின்னணியில் யார்?




போர்க் குற்றவாளிகளுக்கு பிரிட்டனில் ஆபத்து







இலங்கைத் தீவின் விதி




மனிதாபிமானமற்ற மரண தண்டனை





# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 13 ஜனவரி 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


ஔண்யன்

# விழ விழ நிமிர்தல்

காட்டாற்றை தடுக்கவென அதன் குறுக்கே வீழ்ந்ததாம் ஒரு மரம்.ஆனாலும் அதனையும் அடித்துதள்ளிக்கொண்டே எதுவுமே நிகழாதது போல தன் பாதையில் வேகமெடுத்துப் பாய்ந்துகொண்டேயிருந்தது அந்தக்காட்டாறு. ஊடகங்களும் காட்டாறு போன்றவைதான்.அவை சவால்களையும், தடைகளையும், வலிகளையும் சந்தித்தாலும் கூட தம் பயணத்தில் தடம் மாறுவதில்லை.(சூழ்நிலையின் மாறுதல்களுக்கேற்ப தம் குரல்களின் தொனியையும் மாற்றும் பச்சோந்திகளும் இருக்கத்தான் செய்கின்றன். எனினும் அவற்றை ஊடகங்கள் என்று அடையாளப்படுத்துவது, நேர்மையான ஊடகங்களை அவமானப்படுத்துவது போலாகிவிடும். வேண்டுமானால் ஊதுகுழல்கள் என்று சொல்லலாம்.)



இலங்கையில் அதிக வன்முறைகளை எதிர்கொண்ட ஊடகமான உதயன் மீது இன்னொரு கோழைத்தனமான தாக்குதல் வடமராட்சியில் அரங்கேறியிருக்கிறது.வழமை போன்று உதயன் பிரதிகளை , பனிக்குளிரையும் ஊடறுத்துக்கொண்டு, முகவர் நிலையங்களுக்கு கொண்டு சென்ற விநியோகப்பிரிவுப் பணியாளர் மீது இரும்புக்கம்பியால் அடித்து அவரின் கையை முறித்திருக்கிறார்கள். தெய்வாதீனமாக அப்போது பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸில் ஓடிச்சென்று ஏறியதால் அவரின் உயிர் தப்பியது. இல்லாவிட்டால் முடிவு விபரீதமாக அமைந்திருக்கலாம். ஏனெனில் முள்ளுக்கம்பியால் சுற்றப்பட்ட இரும்புக்கம்பியால் குறித்த பணியாளரின் தலையை இலக்கு வைத்தே அடிக்க ஓங்கினர் மோட்டார் சைக்கிளில் வந்த அடாவடித்தனக்காரர்கள். ஆனால் நிலைமையை உணர்ந்துகொண்ட பணியாளர் தனது கையால் அந்த அடியை தடுக்க முனைந்தபோது அவரின் கை எலும்புகள் உடைந்தன. பணியாளர் தப்பித்ததும், இனந்தெரியாக் கோழைகளின் கோபப்பார்வை அந்தப் பணியாளர் விட்டுச் சென்ற உதயன் பிரதிகள் மீதும், சரிந்து கிடக்கும் மோட்டார் சைக்கிளின் மீதும் படர்ந்தன. அடுத்தகணம் எழுந்தது பெருநெருப்பு. ஆசைதீர அந்த நெருப்பு மோட்டார் சைக்கிளையும், உதயன் பிரதிகளையும் விழுங்கத் தொடங்கியது.

இந்த வன்முறைக்கு யார் காரணம்? எதற்காக இப்படி அப்பாவிப் பணியாளரை அடித்தார்கள்? எதற்காக உதயன் பிரதிகளுக்கு கொள்ளிவைத்தார்கள்? இப்படி நிறையக்கேள்விகளுக்கு பகிரங்கமான விடைகளில்லை. ஆனாலும் எல்லோருக்கும் உள்ளூர இந்தக்கேள்விகள் அனைத்துக்குமான மிகச்சரியான விடைகள் நிச்சயம் தெரியும். தன்னுடைய தடத்தில் இருந்து விலக மறுப்பவர்கள் -முள்ளந்தண்டுள்ளவர்கள்- எப்போதுமே அதிகாரத்துக்கு பிடித்தமில்லாதவர்கள் தான்.

வடமராட்சியில் இந்த ஈனத்தனம் நடப்பதற்கு இருநாள் முன்னதாக லங்கா ஈ நியூஸ் என்ற இணையத்தில் ஒரு செய்தி உலாவந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தியாகி திலீபனின் துயிலுமில்லத்தின் படத்தை தன்னுடைய நாள்காட்டியில் பொறித்து விநியோகம் செய்துள்ளது. இவ்வாறான செயல்கள் விடுதலைப் புலிகளின் மனோநிலையை ஸ்திரப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது குறித்து படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதே அந்த செய்தி. கொழும்பிலிருந்து வெளிவரும் லங்கா ஈ நியூஸ் இணையம் முன்னாள் சிவப்புக்கட்சிக்காரரான ஒருவருக்குச் சொந்தமானது அரசின் அதிமுக்கிய அடிவருடியான விமலின் இணையத்தளத்தின் கருத்துக்கள் கிட்டத்தட்ட அரசின் உத்தியோகபூர்வ கருத்துக்களாகவே கொள்ளத்தக்கவை.

எனவே அதிகாரத்தின் கழுகுப்பார்வை உதயனை வட்டமிடுகிறது என்பதை இந்த இணையத்தால் ஈனத்தாக்குதல் இடம்பெறுவதற்கு இருநாள்களுக்கு முன்னரே உணர்த்தியுள்ளது. ஏனெனில் உதயனின் நாட்காட்டியில்தான் திலீபனின் நினைவுக்கல்( குறித்த இணையம் தெரிவித்தது போன்று திலீபனின் துயிலுமில்லம் அல்ல) பொறிக்கப்பட்டிருந்தது. அதுவும் திட்டமிட்டு செய்யப்பட்டதல்ல. கடந்த வருடம் தமிழர் தாயகத்தில் நடந்த முக்கிய சம்பவங்களின் புகைப்படங்கள் அந்த நாட்காட்டியில் இடம்பெற்றிருந்தன. அவற்றில் ஒன்றாகவே குறித்த நினைவுக்கல்லும் இடம்பெற்றிருந்தது. ஒரு நினைவுக்கல் நாட்காட்டியில் பொறிக்கப்பட்டது புலிகளை ஸ்திரப்படுத்தும் என்று சொல்கின்ற அரச ஊதுகுழல்கள்தான், புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் முழங்கி வருகின்றன. முற்றாக ஒழிக்கப்பட்ட புலிகளை எப்படி இந்த ஒரு புகைப்படம் ஸ்திரப்படுத்த முடியும்? அப்படி உண்மையிலேயே தம்மை எரித்த சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் போல புலிகளும் இந்தப் படத்தைப் பார்த்த கணத்திலேயே உயிர்த்தெழுவார்கள்

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாடு; வென்றாடு தமிழா!

**செந்தூரி**

பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமக்கள்-உழவர்களோடு இணைந்த தொடர் ஆண்டை நிலைநாட்ட முயலாதது பெரும் விந்தையே, சித்திரைப் பிறப்பினை வருடத் தொடக்கமாக வரவேற்று, தமிழினத்தின் பழமையையும் , பண்பையும், சிறப்பையும், செல்வாக்கையும் சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக்கேடான, நகைப்புக்கிடமான செயல் இதுவொன்று மட்டுந்தானா? தமிழ் மக்களின் ஆலயங்களில் இன்று தமிழ் மொழியும், தமிழிசையும் கூடத்தான் ஒதுக்கப்பட்டுள்ளனவே?''

பண்டிதர் கா.பொ.இரத்தினம் இன்றைக்கு அரைச் சகாப்தத்தின் முன் கடுமையாக விமர்சித்து தமிழனை சாடியிருந்த கணைகளிலிருந்து பிறதி பண்ணியவை இவை. வெறுமனே தமிழ்நாட்டுத் தமிழர்களை நோக்கியெறிந்த சொற்கணைகளாக மட்டுமல்லாது, ஈழத் தமிழர் உள்ளிட்ட உலகத் தமிழர்கள் யாவரும் என்றோவொருநாள் இழந்துவிட்ட தனித்துவத்திற்கான ஏதுவாக பதில் சொல்லியே ஆக வேண்டிய கேள்வி அது.

### ஏன் எமக்கு வேண்டாம், ஆரிய வருடம்?

இன்றைக்கு இந்து சமயம் கைக்கொள்கின்ற ''பிரபவ'' தொடங்கி, ''விய'' வில் முடிகின்ற அறுபது ஆண்டுகளின் பிறப்பே, கொஞ்சம் அசூசை கலந்த புராண நம்பிக்கையோடு தான் தொடங்குகின்றது. மஹாவிஷ்ணு, நாரதரைப் பெண்ணாக்கி அவர் மூலம் பெற்றெடுத்த குழந்தைகளே இந்த அறுபது ஆண்டுகளும் என்பதாக, ''இப்படித்தான் நடந்ததாக கூறும்'' இதிகாசங்கள் தமிழனிடமிருக்கும் ''ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான கற்பினை''ப் பார்த்துக் கைகொட்டி சிரிக்கின்றன. தனியொழுக்கமும், தனிப் பண்பாடும் நிறைந்த இனமொன்றின் பின்பற்றுனர்களால், கைக்கொள்ளப்படுகின்ற வருடக் கணக்கு முறைமையின் அத்தி பாரத்தையே ஆட்டங்காண வைக்கின்றது, அவை தோன்றிய முறை.

மேலும், அறுபது ஆண்டுகள் எனும் குறுகிய சக்கரம் அதே பெயர்களோடு மீள்வதனால், அவற்றிற்கான தனித்துவமும் கேள்விக்குள்ளாகின்றது. உதாரணமாக அறுபத்தி இரண்டு வயதான சிவசிதம்பரப் பிள்ளையவர்களின் வாழ்க்கைச் சக்கரம் இரண்டு முறைகள், ஒரே பெயரிலான ஆண்டைக் கடந்திருக்கும் சந்தர்ப்பம் உடையதாக இருக்கின்றமையால், குறித்தொருவர் ''நந்தன'' வருடத்தில் பிறந்தார் எனும் கூற்று, எந்த ''நந்தன'' வருடம்? எனும் கேள்வியையும் சேர்த்தே சுமக்கின்றது. இதன் காரணமாக வரலாற்றின் பரிசோதனைக் கூடங்களுக்குள், பார்வையாளர்களாகக் கூட நுழையும் தகுதியவற்றவை இவ்வறுபது ஆண்டுகளும் என்று சுடுமொழி பகர்கின்றார்கள் தமிழறிஞர்கள்.

அறுபது ஆண்டுகளும் தாங்கியுள்ள பெயர்களும் கூட, மருந்துக்கும் தமிழ் கலவாத சுத்த வடமொழிப் பெயர்களேயாகும். மூன்றாவது ஆண்டான ''சுக்கில'', விந்தினை குறிக்கின்றது. இருபத்தி மூன்றாவது ஆண்டு, எதிரி மற்றும் பகைவன் எனும் பொருள்பட ''விரோதி'' எனும் பெயரிலும், முப்பத்திமூன்றாவது ஆண்டான ''விகாரி'' என்பதன் பொருள் அழகில்லாதவன், அல்லது செல்வமில்லாதவன் என்றும், முப்பத்தி எட்டாவது ஆண்டான ''குரோதி'' பொருளில் ''பழிவாங்குபவன், பழி சுமப்பவன்' எனும் சாரத்திலும், ஐம்பத்தி ஐந்தாவது ஆண்டு அழிபுத்தி அல்லது துட்டபுத்தி எனும் பொருளில் ''துன்மதி'' என்றும் சூட்டப்பட்டு வழங்கப் படுகின்றன. குறித்த வடமொழிச் சொற்கள் தமிழில் தரும் அர்த்தங்கள் சாதாரண நடைமுறைக்கு ஏற்புடைத்தல்லாததாக மட்டுமன்றி 365 நாள்களுக்கும் சுமந்து திரிய வேண்டிய அழுக்கு மூடைகளாக எம் முதுகில் கட்டப்பட்டுள்ளன என்பது இன்னொரு இழிவு!

மரபொன்றின் திணிப்பினை எவ்வித எதிர்ப்பும் காட்டி விடாமல் பின்பற்றுவது மட்டுமல்லாமல், சுயமொழியில், சுயகலாசாரத்தில் தீமை விளைவிப்பவை என்று கருதப்படுகின்ற இன்னொரு மொழிக்கலப்பில், இன்னொரு இனச் சாயத்தில் இலகுவாக எம் வழக்கங்களுக்குள் புகுத்திவிட்ட ஆரியம் அதி புத்திசாலிகளா, இல்லை இன்னமும் இதற்கு எதிராக துலங்கலைக் காட்டாத தமிழன் தான் பேதையா?

### காலத்தைப்பிரித்தறிந்தவன் -ஞாலத் தமிழன்

''தமிழரின் வான்நூற் கணித முறையே வழக்கில் உள்ள எல்லாக் கணிதங்களிலும் சிறந்தது'' என்றார் மேலைத்தேய அறிவியலாளரான ஸ்லேட்டர் என்பவர். ''கணியர்'', ''அறிவர்'', ''பணிவர்'' எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட பழந்தமிழ் வானியலாளர்கள் என்போர் எம் பார்வையில் இன்றுள்ள தொலைக்காட்சிச் செய்திகளில், வானிலையறிக்கை வாசிக்கும் தொகுப்பாளர்கள் அல்ல ''மூவகைக் காலமும் நெறியினாற்றும்'' அறிவர்களின் பெருமைகளை தொல்காப்பியமும், அரசவை அமர்நிறை பெருங்கணிகள் பற்றி சிலப்பதிகாரமும் சொல்லால் கல்லாகிக் காலங்கடந்து நிற்கின்றன. ஆரிய ஊடுருவலுக்கு முன்னரே பழந்தமிழன், தலைமேல் விரிந்த வானத்தை பகுத்தறிந்து பிரித்துயர்ந்த அறிவுடையோனாய் வாழ்ந்தமைக்கான சான்றுகள் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழறிஞர் வெங்கட்ராமனின் கூற்றின்படி ''குறிப்பிட்ட காலங்களில் கலவையில், ''மழை'', ''வெயில்'', ''குளிர்'', ''பனி'', ''தென்றல்'' ''வாடை'', என்பன மாறி மாறி தமிழரின் வாழ்வை ஆண்டு வந்ததால், இக்காலச் சேர்வையை தமிழன் ''ஆண்டு'' என்று அழைத்துப் பெருமைப்படுத்தினான்'' என்று தெரிய வருகின்றது.

நேரத்தையும், பருவத்தையும் நன்கு ஊன்றியுணர்ந்த தமிழரின் கதை வழக்கின்படி ஒரு நாள் எனப்படும் இரவும் பகலும் சேர்ந்த இருபத்தி நான்கு மணி நேரத்தினை தற்போது வழக்கில் உள்ள 24 நிமிடங்களை ஒரு ''நாழிகை'' எனக் கணக்கிட்ட பழந்தமிழர், ஒரு நாளில் அறுபது நாழிகைகள் இருப்பதாக கணித்தும் பாவித்தும் வந்துள்ளனர். அக்கணிப்பின் படியிலான ஒரு நாள்பொழுதின் 60×24 இனால் கிடைக்கும் 1440 நிமிடங்கள் என்பவை இன்றைய இருபத்திநான்கு மணிநேரத்துடன் அச்சொட்டாகப் பொருந்துகின்றமை, நவீனத் தத்துவத்துக்கு முன்னான தமிழ் நுட்பத்திற்கான பேராதாரமாகும். அனுபவ நாழிகைகளும் கழிவதற்கு தேவையான ஒரு முழுநாளை ''வைகறை'', ''காலை'' ,''நண்பகல்'', ''ஏற்பாடு'', ''மாலை'', ''சாமம்'' எனும் ஆறு சிறு பொழுதுகளாகக் கணக்கிட்டு தன் நாள்சக்கரத்தை கணித வலுவில் இயங்கவிட்டு தானும் சேர்ந்தோடியவன் எம் மூதாதை.

ஒரு நாளை, ஆறு சிறு பொழுதுகளாகப் பிரித்த அறுபது நாழிகைகளாக மட்டுமன்றி, தமக்கான ஆண்டொன்றை உழவுத் தொழிலின் அடிநாதமான ஆறு பருவங்களாக பிரித்து வைத்திருந்தமையும், தமிழனின் இன்னொரு சிறப்பு. பின் வந்த ஆரியர்கள் வருடமொன்றை நான்காக வகுத்து தமிழனிலிருந்து வேறுபட்டனர். தமிழனின் ஆறு பெரும் பருவங்களான ''இளவேனில்''-தை, மாசி மாதங்களையும், ''முதுவேனில்'' பங்குனி, சித்திரை மாதங்களையும், 'கார்' வைகாசி ஆனி மாதங்களையும், ''கூதிர்'', -ஆடி, ஆவணி மாதங்களையும், ''முன்பனி''- புரட்டாதி, ஐப்பசி மாதங்களையும், ''பின்பனி''- கார்த்திகை, மார்கழி மாதங்களையும் குறித்து நிற்கின்றன.

தமிழனைப் போலவே, விவசாயத்தைத் தெய்வத் தொழிலாக வழிபடும் சீனர்கள், ஜப்பானியர்கள், கொரியர்கள், மஞ்சூரியர்கள் எனும் தொல்லினத்தோர் பலரும் தமது புத்தாண்டினை ''இளவேனிற்'' காலத்திலேயே தொடங்குகின்றமை, அறுவடைக்குப் பின்னான நன்றியறிவித்தலின் நற்பண்புக்கு உதாரணமாகும்.

### பொங்கலோடு பிறக்கும் புத்தாண்டு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழர் இலக்கியங்களில் வருடமொன்று தையோடு தொடங்குவதற்கான காரணங்களை பின்வரும் இலக்கியங்கள் கூறுகின்றன.

''தை இத்திங்கள் தண்ணியம் படியும்''-(நற்றிணை)

''தை இத் திங்கள் தண்கயம் தரினும்''-(குறுந்தொகை)

தை இத் திங்கள் தண்கயம் போல்''-(புறநானூறு)

''தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ''-(கலித்தொகை)

முந்தைத் தமிழகம் தை முதல்நாளை தமிழ் வருடப் பிறப்பாகவும், பின் காலத்திரிதலினால் ஆவணி முதல்நாளை ஆண்டுத் தொடக்கமாகவும் கொண்டாடி, ஆரியர் கலப்பினால் சித்திரை முதல்நாளை தமிழ் வருடமாக கைக்கொண்டது.

செம்மொழித் தமிழின் பேரகராதிகள் ''பொங்கல்'' எனும் சொல்லினை ''பொங்குகை'', ''பெருங்கோபம்'', மிளகு- சீரகம்- உப்பு- நெல் முதலியன கலந்து இட்ட அன்னம், ''உயர்ச்சி'', ''பகுமை'', ''மிகுதி'', ''கள்'', ''கிளர்தல்'', ''சமைத்தல்'', ''பொலிதல்'', ''எனும் விளக்கங்களினால் போற்றியுரைக்கின்றன. இயற்கையோடு தன் வாழ்வை ஒன்றிணைத்திருந்த உலகின் ஆதிக்குடியொன்று, தனக்கான வருடப்பிறப்பினை இனப்பொது நாளொன்றில் கணித்துக் தேர்ந்தமையும், தம் பண்பாட்டின் ஒரு பகுதியாக, தமக்கான வாழ்வொழுங்கின் இன்னொரு பகுதியாக ஆக்கித் தனித்துவம் கொண்டமையும் காணக்கிடைக்கின்றன. சூரியன் தனது தென்திசை நோக்கிய நகர்வினை முடிவுறுத்தி, வடதிசை நோக்கிய நகர்வினைத் தொடங்கும் மகர ராசியிலிருந்து தமிழனின் முதல்நாள் தொடங்குவதே உழவுத் தொழிலுக்குதவும் ஆதவனை அடிபணிந்து தொழும் காலக் கடமைகளில் ஒன்றாக பணித்து வாழ்ந்தான் பழந்தமிழன்.

ஆரியர் கலப்போடு அறப்போரிட்ட தமிழறிஞர்கள், அறிவாராய்ச்சி இல்லாத குருட்டுத்தனமான தமிழர்களின் புத்தாண்டு நம்பிக்கைகளை புடமிடும் நோக்கில், அறுபது ஆண்டு கால முறையைக் கடைப்பிடிப்பதால் தமிழனுக்கு நேரும் இனவிழிவினைத் துடைத்தழிக்கவென 1921 ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ''தமிழ்க்கடல்''- மறைமலையடிகளின் தலைமையில், பேராசிரியர்.கா.நமச்சிவாயர் தொடக்கி வைத்தார் மாநாடொன்றினை.

''திருவள்ளுவர், யேசு கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு தைத்திங்கள் முதல் நாள் பிறந்தவர் என்றும் அவர் பெயரிலேயே தமிழ்த் தொடர் ஆண்டுகளை பின்பற்றுவதென்றும், திருவள்ளுவர் ஆண்டே இனித் தமிழாண்டு எனவும், மாநாட்டில் கலந்து கொண்ட தமிழறிஞர்களின் அறிவு, ஆராய்ச்சி, பட்டறிவு ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவென்றும் அறிவிக்கப்பட்டன. தமிழனின் தனிப்பெருமையை உலக ரங்குகளில் சொன்ன வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாநாட்டில் பெருந்தமிழறிஞர்களான தமிழ்க் கடல் மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார், தமிழ்க் காவலர்.திரு. கா.சுப்பிரமணியபிள்ளை, சைவப் பெரியார் திரு.சி.சச்சிதானந்த பிள்ளை, நாவலர் திரு.ந.மு. வேங்கடசுவாமி, நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ் காவலர் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம், பேராசிரியர் கா.நமச்சிவாயம் ஆகியோர் கலந்து கொண்டவர்களில் முதன்மையானவர்கள்.

இதன் பின்னரான சுமார் பதினைந்து ஆண்டுகள் கழிந்து 1935 ஆம் ஆண்டு திருச்சியில் அகிலத் தமிழர் மாநாடு எனும் பெயரில் அழைக்கப்பட்ட மாநாட்டில் தைப்பொங்கல் சமய விழா வல்ல-தமிழனத்தின் விழா என்ற முக்கியமான முடிவு எடுக்கப்பட்டது.

''பொங்கலைச் சமய விழா என்று சொல்லிச் சர்ச்சையைக் கிளப்ப யார் முயன்றாலும் அவர்கள் இம்மாநாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். எந்தச் சமயக்காரன் இவ்விழாவை எடுத்துள்ளான்? மற்றைய எல்லாத் திருநாள்களையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஏதாவது ஓர் அரசனை, வீரனை கடவுளை குறிப்பிட்டு கதை புனையப்பட்டு அவ்விழா உருவாகியதற்கான காரணம் இருக்கும். ஆனால் பொங்கல் சாமானியனான உழவனையும், அவனுக்கு உதவிய கதிரவனையும், காளைளையும் போற்றுகின்றது. இது சமயச் சார்பு இல்லாத விழா. இதை எனது அருமை நண்பர் ஈ.வெ.ரா ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி,'' என்று மறைமலையடிகள் முழங்கி ஓய்ந்தபோது, பகுத்தறிவுப் பகலவன் தந்தை ஈ.வெ.ரா பெரியார் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழினமுமே அதனைத் தன் தலை நிமிர்ந்து ஏற்றுக் கொண்டது.

வான் சார்ந்து, மண் சார்ந்து, வாழ்க்கை சார்ந்து, வேளாண்மை சார்ந்து கண்ணுக்குத் தெரிகின்ற பெருஞ்சக்தி முதல் ஞாயிறுக்கு நிகராய் ஐந்தறிவு ஜீவன்களான காளைகளை போற்றிப் படையலிடுகின்ற சமவுடைமைத் திருவிழாவாக தைப் பொங்கல் பெயர் சூடிப் பெருமிதம் கொண்டது.

### இருதலைக் கொள்ளி எறும்பான ஈழவர்கள்

இந்துத்துவத்தும், திராவிடத்துக்குமிடையில் தமது தலையினை பெரிதும் உடைத்துக் கொள்பவர்களான ஈழத்தமிழர்கள் தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு என்கின்ற தமிழகத்தின் நியாயத்துக்கும், இரட்டை விடுமுறையோடு அனுஷ்டிக்கப்படுகின்ற சிங்கள- தமிழ் சித்திரைப் புத்தாண்டு எனும் இலங்கையின் இனம் கலப்புக்குமிடையில் ஈடாடுவதே உண்மை. ஆரியக் கலப்பு மிகுந்து வருவதை நன்குணர்ந்த போதிலும், வடமொழி இந்துத்துவ வழிபாட்டு முறைகளை இலகுவில் கைகழுவ மறுப்பவர்களாக தங்களை குறுகிய வட்டத்துக்குள் குறுக்கிக் கொண்டு இரண்டையும் கொண்டாடுவோம் என்

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவோடு மட்டும் கொழும்பு தேன்நிலவைக் கொண்டிருந்தால் அதைப் பகை நிலையில் வைத்துக் கையாள முடியும். இந்தியாவோடும் கொழும்பு தேன்நிலவை வைத்திருக்கின்றது. எனவே, நிலமைகளை பகைமை எல்லைக்குள் தள்ளாமல் அதாவது, கொழும்பை முறிக்காமல் வளைத்தொடுக்க முடியுமா என்று இந்தியாவும், அமெரிக்காவும் முயற்சிக்கின்றன. ஒரே நேரத்தில் இரு பெரும் பகைச் சக்திகளை தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருக்கக் கூடிய அளவிற்கு தனது பேரம் பேசும் சக்தியின் கவர்ச்சியை தொடர்ந்து தக்கவைத்திருப்பதில் இலங்கை அரசு இன்று வரையிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு சுழித்தோடியிருக்கிறது.

# இலங்கைத் தீவின் விதி



■ நிலாந்தன்

நந்திக் கடலில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமல்ல. இலங்கைத் தீவில் அரசுக்குச் சவாலாக இருக்கக் கூடிய ''எதிர்ப்பு வெளி'' எனப்படுவதும் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனப்படுவது அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தூலமான இருப்பைக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்ட மற்றும் ஏற்றுக்கொள்ளாத அரசுக்கு எதிரான எல்லா சக்திகளுக்கும் அது ஒரு தூலமான, திட்டவட்டமான முன்னுதாரணமாகக் காணப்பட்டது. ஆனால், அந்த இயக்கம் தோற்கடிக்கப்பட்டபோது, அப்படிப்பட்ட ஓர் இயக்கமே தோற்கடிக்கப்படலாம் எனில் மற்றவை எல்லாம் எம்மாத்திரம் என்றதொருநிலை தோன்றிவிட்டது.

போரில் வெற்றிபெறுவதற்காக அரசு மேற்கொண்ட வழிமுறைகள் மூலம் அது தென்னிலங்கையிலுள்ள தீவிரவாத சக்திகளை எல்லாம் மிஞ்சிவிட்டது. இதனால், ஜே.வி.பி. போன்ற தீவிர சக்திகள் அரசாங்கத்தை விட தீவிரம் குறைந்தவையாகிவிட்டன. இதற்கு முன்பிருந்த எந்தவொரு அரசாங்கத்தினாலும் முடியாதிருந்த ஒன்றை இந்த அரசாங்கம் நந்திக் கடலில் சாதித்துக் காட்டியதால் எந்த ஓர் எதிர்க்கட்சியும் அந்த வெற்றிக்கு முன் நின்றுபிடிக்க முடியாது போய்விட்டது. எனவே, எதிர்க்கட்சிகள் யாவும் அரசாங்கத்திற்கு கீழ்ப்பட்டவையாயின. இப்படியாக வெகுஜன அரசியலை முன்னெடுக்கவல்ல மைய நீரோட்டத்திலுள்ள பெரும் கட்சிகளும், இனத் தீவிரவாத சக்திகளும் தலையெடுக்க முடியாத ஓர் அரசியற் சூழலில் மைய நீரோட்டத்திற்கு வெளியே காணப்பட்ட மாற்றுக் குரல்களும் மேலெழ முடியாத படிக்கு ஒரு பெரும் யுத்த வெற்றி வாதம் தென்னிலங்கையை மூழ்கடித்துவிட்டது. இதனால், அரசாங்கத்திற்கு சவாலான எதிர்ப்பு வெளி என்ற ஒன்று அநேகமாக இல்லாதுபோய்விட்டது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கம் பெற்றுக்கொடுத்த வெற்றி எனப்படுவது சாதாரண சிங்கள மக்களைப் பொறுத்தவரை தாங்கமுடியாத ஒரு வெற்றி. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் வேறெந்த சிங்களத் தலைவர்களும் பெற்றுக்கொடுத்திராத வெற்றியை இப்போதுள்ள தலைவர்கள் பெற்றுக்கொடுத்திருக்கின்றார்கள். எனவே, இந்த வெற்றி ஒன்றே போதும் அவர்களும், அவர்களுடைய வம்சமும் மேலும் சில சகாப்தங்களுக்கு இச்சிறு தீவை ஆட்சி புரிய முடியும்.

இப்படியொரு வெற்றியைப் பெற்ற அரசைப் பொறுத்தவரை அதற்கு எதிராக எழுக்கூடிய எந்தவொரு எதிர்ப்பும் பொருட்டில்லை. பிரபாகரனையே தோற்கடித்த ஓர் அரசுக்கு எந்தவொரு எதிர்ப்பும் பொருட்டல்ல என்ற ஒரு மனோநிலை கொழும்பில் பலமாக ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இத்தகைய ஒரு மனோநிலைக்கு முன் இலங்கைத் தீவில் அரசாங்கத்திற்கு சவாலாக யாரும் அல்லது எதுவும் நின்று பிடிக்க முடியாத ஒரு நிலை தோன்றிவிட்டது என்பதால் தான், அந்த வெற்றியின் பங்காளியான சரத் பொன்சேகாவே கூர் மழுங்கிப்போனார். அவர் மட்டுமல்ல, சக்தி மிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்கப்பட்ட குமார் குணரட்ணத்தாலும் எதுவும் செய்யமுடியவில்லை. தொழிற்சங்கப் போராட்டங்கள், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள், பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டங்கள் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களும் அவற்றின் இறுதி வெற்றியைப் பெற முடியவில்லை. யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தையும் இப்பின்னணியில் வைத்தே விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதாவது, பிரதம நீதியரசர், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் உயர் கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளிட்ட எந்தவொரு தரப்பாலும் இலகுவாக அசைக்க முடியாத அளவிற்கு அரசு சக்தி மிக்கதாக காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு விளக்கத்தின் அடிப்படையில் கூறின், இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களில் உள்நாட்டில் மிகவும் சக்தி வாய்ந்த அரசாங்கங்களில் ஒன்றாக இப்போதுள்ள அரசாங்கத்தைக் கூற முடியும். இந்த அரசாங்கத்தை நாடாளுமன்றத்திற்குள்ளும் தோற்கடிப்பது கடினம், நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் தோற்கடிக்கப்படுவது கடினம்.

தமிழர்கள் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டத்திற்கும் மேல் செல்ல முடியாதிருப்பதும் இதனால்தான். தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி ஒரு கட்டத்துக்கும் மேல் போராட முடியாமல் இருப்பதும் இதனால்தான்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் வாக்கியம் ஒன்று உண்டு. ''எந்தப் பெரிய பலத்திற்குள்ளும் ஏதோ ஒரு பலவீனம் இருக்கும்'' என்று. நாலாம் கட்ட ஈழப்போரின் போது புலிகளுக்கு இது பொருந்தியது. நந்திக் கடலில் பெற்ற வெற்றிக்குப் பின் இப்பொழுது அரசுக்கும் இது பொருந்துகிறது. இந்த அரசாங்கம் உள்நாட்டில் சக்தி மிக்கதாகக் காணப்படுகின்றது. ஆனால், சர்வதேச அளவில் பலவீனமானதாகக் காணப்படுகின்றது. எனினும், பிராந்திய அளவில் அது இடைநிலைப் பலத்தோடு காணப்படுகின்றது. அதாவது, உள்நாட்டளவிற்குப் பலமாகவும் இல்லை, சர்வதேச அளவிற்குப் பலவீனமாகவும் இல்லை.

பிராந்தியப் பலம்தான் இந்த அரசின் மெய்யான பலம். அல்லது இதனுடைய பலத்தின் உயிர் நிலை அது எனலாம். பிராந்தியத்தில் தனக்குள்ள கவர்ச்சியான பேரம் பேசும் சக்தியை வைத்து இருபெரும் பிராந்திய பேரரசுகளுக்கிடையில் கயிற்றில் நடக்கும் அரசு இது. ஒருபுறம் சீனாவின் உலகளாவிய எழுச்சியை ரசித்து, ஆதரிக்கும் இந்த அரசாங்கம் இன்னொருபுறம் இந்தியாவிற்கு நெருக்கமானது போலக் காணப்படுகின்றது. இந்தியாவுடன் அது கொண்டிருக்கும் உறவு எனப்படுவது ஒரு வித நிர்ப்பந்த உறவு. அதவாது பிராந்தியத்தில் மிக அருகில் இருக்கும் ஒரு பேரரசு என்பதாலும், தமிழர்களை இலகுவாகக் கையாளக்கூடிய வாய்ப்புக்களை அதிகம் பெற்றிருக்கும் ஒரு அயல் நாடு என்பதாலும் இந்தியாவுடன் அனுசரித்துப் போகவேண்டியிருக்கின்றது. ஆனால், இதயம் சீனாவிடம்தான் இருக்கிறது. இது இந்தியாவிற்கும் தெரியும்.

இந்தப் பிராந்தியத்தில் இலங்கை அரசு தனக்குள்ள வரையறைகளை உதாசீனம் செய்துவிட்டு சீனாவை நோக்கி முழு அளவுக்குச் சாய்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் புதுடில்லி கொழும்பை நோக்கி நெருக்கி நெருங்கி வருகின்றது. அதற்காக தமிழர்களைப் புறக்கணிக்கவும் தயாராகக் காணப்படுகின்றது.

இப்பிராந்தியத்தின் வரலாற்றிலேயே இந்தியாவின் தெற்கு மூலையில் சீனர்கள் இத்துணை செறிவாகப் பிரசன்னமாகியிருப்பது இது தான் முதற்தடைவ.

இந்தியாவும், அமெரிக்காவும் இதனை கவலை கலந்த எச்சரிக்கையோடு கவனித்து வருகின்றன. சீனாவோடு மட்டும் கொழும்பு தேன்நிலவைக் கொண்டிருந்தால் அதைப் பகை நிலையில் வைத்துக் கையாள முடியும். இந்தியாவோடும் கொழும்பு தேன்நிலவை வைத்திருக்கின்றது. எனவே, நிலைமைகளை பகைமை எல்லைக்குள் தள்ளாமல் அதாவது, கொழும்பை முறிக்காமல் வளைத்தெடுக்க முடியுமா என்று இந்தியாவும், அமெரிக்காவும் முயற்சிக்கின்றன. ஒரே நேரத்தில் இரு பெரும் பகைச் சக்திகளை தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருக்கக் கூடிய அளவிற்கு தனது பேரம் பேசும் சக்தியின் கவர்ச்சியை தொடர்ந்து தக்கவைத்திருப்பதில் இந்த அரசாங்கம் இன்று வரையிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு சுழித்தோடியிருக்கிறது.

இந்தியாவை தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருப்பதிலேயே இந்த அரசாங்கத்தின் வெற்றிகளில் அநேகமானவை தளமிடப்பட்டிருக்கின்றன. நந்திக் கடல் வெற்றிகளில் தொடங்கி இந்த அரசாங்கம் பெற்றுவரும் எல்லா வெற்றிகளும் அது இந்தியாவை தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருப்பதால்பெறப்பட்டவை தான். மேற்கு நாடுகளின் மத்தியில் ஒப்பீட்டளவில் பலவீனமானதாகக் காணப்பட்டபோதிலும் இந்தியாவிற்கு நெருக்கமானதாகக் காணப்படுவதால் தான் எல்லா எதிர்ப்பையும் சமாளிக்க முடிகின்றது. ஏனெனில் இந்தப் பிராந்தியத்தில் சீனாவிற்கு எதிரான அமெரிக்க வியூகத்தின் முற்தடுப்பாக இந்தியாவே காணப்படுகின்றது. எனவே, இந்தியாவிற்கு கதவுகளைத்திறந்து விடுவதன் மூலம் இலங்கை அரசாங்கமானது மேற்கு நாடுகளின் எதிர்ப்பை குறிப்பிடத்தக்க அளவிற்குத் தணிக்க முடிகின்றது.

ஆக மொத்தம், இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையில் தனது பேரம் பேசும் சக்தியின் கவர்ச்சியை தக்கவைத்திருப்பதன் மூலம் இலங்கை அரசு உள்நாட்டில் சக்தி மிக்கதாக எழுச்சிபெற்றுவிட்டது. இருபெரும் பிராந்திய இழுவிசைகளுக்கு இடையில் சுழித்தோடும் இந்த அபாயகரமான விளையாட்டில் சறுக்கும்போதுதான் இந்த அரசு பலவீனப்படும். இலங்கைத்தீவில் இப்போது நிலவும் அரசியல் போக்கிலும் மாற்றங்கள் ஏற்படும்.

அதாவது பிராந்திய இழுவிசைகளுக்கு இடையிலான வலுச்சமநிலையில் ஏற்படக்கூடிய மாற்றங்களால் மட்டுமே இலங்கைத் தீவின் உள்நாட்டு அரசியலில் புதிய திருப்பங்களை ஏற்படுத்த முடியும். இதை இன்னும் நுணுக்கமாக விளங்கிக்கொள்வதானால், நாம் இப்போதுள்ள சர்வதேசச் சூழலை அதன் உள்ளோட்டங்களோடு சிறிது ஆழமாகப் பார்க்கவேண்டும்.

இப்போதுள்ள உலகச் சூழலை அமெரிக்காவின் நோக்கு நிலையிலிருந்து கூறின் ''பச்சை ஆபத்திற்கு'' எதிரான போரின் இறுதிக் கட்டம் என்று வர்ணிக்கலாம். சில மேற்கத்தைய ஆய்வாளர்கள் கடந்த நூற்றாண்டில் ரஷ்யா தலைமையிலான கெம்யூனிச நாடுகளுக்கு எதிராக நடந்த கொடுபிடிப்போரை சிவப்பு ஆபத்திற்கு எதிரான போர் என்று வர்ணித்தார்கள். சிவப்பு ஆபத்திற்கு எதிரான போரின் முடிவில் அமெரிக்கா உலகின் ஏகப்பெரும் வல்லரசாக எழுச்சி பெற்றது. அந்த போரின் இறுதிக் கட்டத்தில் பச்சை ஆபத்து என்று அவர்கள் அழைக்கும் இஸ்லாமியத் தீவிரவாதம் முன்னிலைக்கு வந்தது. ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நிகழ்ந்து வரும் இந்தப் பச்சை ஆபத்திற்கு எதிரான போரின் முடிவானது மஞ்சள் ஆபத்திற்கு எதிரான போரின் தொடக்கமாக அமையலாம் என்றும் மேற்படி ஆய்வாளர்கள் விளக்கமளிக்கின்றார்கள்.

மஞ்சள் ஆபத்து என்று இங்கு கூறப்படுவது மஞ்சள் அல்லது மங்கோலிய இனமான சீனர்களைத் தான். எனவே, இப்போது நிலவும் பச்சை ஆபத்திற்கு எதிரான போரின் இறுதிக் கட்டமே மஞ்சள் ஆபத்திற்கு எதிரான போராக விரிவடையக்கூடிய ஏது நிலைகள் ஊகிக்கப்படுகின்றன. பச்சைஆபத்திற்கு எதிரானபோரின் இறுதிக் கட்டத்தில் சிரியாவும், ஈரானும் மிச்சமுள்ளன.

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழப்பும் குண்டர்களுக்கு பின்னணியில் ஒரு சக்தி

# அது எதுவோ..?

சந்திரசேகர ஆஷாத்



ஞாயிறு காரம்

அண்மையில் களனி பிரதேச சபையின் உறுப்பினர் ஹசித்த மடவல தனது வீட்டுக்கருகில் வைத்து அதிகாலை வேளையில் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டு அங்கு மரணமானார். ஏற்கனவே இவர் அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் களனி பிரதேச சபை விடயங்கள் தொடர்பாக முரண்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் பகிரங்கமாகவே அவர் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்தவர். அதுமட்டுமன்றி அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர் ஒருவருடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்.

இவரின் கொலை தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதான சந்தேகநபர் நாட்டை விட்டுத் தப்பியோடும் முகமாக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்றிருந்த போது அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக களனி பிரதேச சபைத் தலைவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது கைது செய்யப்பட்டவர்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தீவிர ஆதரவாளர்கள் எனவும் மேர்வின் சில்வாவுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இருக்கலாம் எனவும் அதனால் அவரும் கைது செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

ஆனால் இதுவரை அப்படி எதுவும் இடம்பெறவில்லை. ஏற்கனவே மேர்வின் சில்வா சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு தான்தோன்றித்தனமான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போதும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தான் சென்றபோது அங்கு பிரசன்னமாகவில்லை என்ற காரணத்துக்காக அவர் ஒரு சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைத்துத் தண்டனை வழங்கினார்.

இது தொடர்பாக எதிர்ப்புக் குரல்கள் எழுந்தபோது இவர் பிரதியமைச்சர் பதவியிலிருந்து நிறுத்தப்பட்டு பின்பு சில நாள்களில் அமைச்சராக நியமிக்கப்பட்டார். முனீஸ்வரம் காளிகோயிலில் பலி கொடுப்பதற்கென மக்களால் வழங்கப்பட்டிருந்த ஆடு,கோழிகள் ஆகியவற்றைத் தனது அடியாள்களுடன் சென்று அபகரித்தார். அது தொடர்பாகவும் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

களனி பிரதேசத்தை மது, மாமிசம் இல்லாத பிரதேசம் ஆக்கப் போவதாக சவால்விட்ட போதும் ஏனோ அது நிறைவேறவில்லை. அது முஸ்லிம்களின் இறைச்சி வியாபாரத்தை முறியடிக்கும் நோக்குடனேயே முன்வைக்கப்பட்டது.

களனி மீன்சந்தையில் மேர்வினின் ஆதரவாளர்களால் கட்டாய கட்டணம் வசூலிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. எனினும் பிரதேச சபை எடுத்த இறுக்கமான நடவடிக்கைகளால் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

இவரின் மகனும் ஓர் இரவு விடுதியில் ஆயுதப் படையைச் சேர்ந்த ஒருவரை நையப்புடைத்துப் படுகாயப்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஆனால் அமைச்சர் மேர்வின் சில்வா இப்படியான குற்றச்சாட்டுக்கள் எழும்போது மறுப்பதில்லை. முன்னாளில் சிங்கள மன்னர் நடப்பது போலவே தான் நடப்பதாக மார்தட்டிக் கொள்வார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தான் நெருங்கியவன் எனவும் தன்னை எவரும் எதுவும் செய்ய முடியாதெனவும் அவர் சவால்விடுவார். இப்போது பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல கொல்லப்பட்டுள்ளார். அது தொடர்பாக அமைச்சர் மேர்வின் சில்வா கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் இதில் கொல்லப்பட்டவரும் கொலைக்குப் பின்னணியில் நின்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவரும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள்.

இதேபோன்று ஜனாதிபதியின் தொழிற்சங்கங்கள் தொடர்பான ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்குமிடையே பட்டப்பகலில் மக்கள் முன்னிலையில் இடம்பெற்ற மோதலில் லக்ஸ்மன் கொல்லப்பட்டார். துமிந்த சில்வா படுகாயமடைந்து கடந்த பல மாதங்களாக சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகிறார். இதில் ஒருவர் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர். மற்றவர் பாதுகாப்புச் செயலாளருக்கு மிகவும் வேண்டியவர்.

ஒரே ஆளும் அரசைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும் பகிரங்கமாகத் துப்பாக்கிகளால் மோதிக் கொண்டனர்.

இப்படி ஒரே அரசைச் சேர்ந்த ஒரே ஜனாதிபதியைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் இவர்கள் ஒருவரையொருவர் கொன்று தள்ளும் நிலைமை எப்படி உருவாகிறது.

எந்த ஓர் ஆட்சி பீடத்திலோ அரசியல் கட்சியிலோ முரண்பாடுகளும் மோதல்களும் இருப்பது தவிர்க்க முடியாத ஓர் இயல்பாகும். அவை பேச்சுக்களின் மூலம் தீர்க்கப்படும் அல்லது ஒரு பகுதி அந்த அமைப்பை விட்டு வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும். இது வழமையாகக் கையாளப்படும் நடைமுறை.

அப்படியான ஒரு நிலையில் முரண்பாடுகளின் விளைபலன்களாக உயிர்ப் பலிகள் என்றளவுக்கு நிலைமைகள் மாறியது ஏன்?

அடிப்படையில் இது ஒரு பரிணாம வளர்ச்சியின் இன்னொரு கட்டமே என்றுதான் கருத வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் பொதுமக்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வேறு தரப்பினர் மீது பல்வேறு வன்முறைகள், உயிர்ப் பலிகள் என்பன மேற்கொள்ளப் பட்டன. இவற்றில் பெரும்பான்மையான சம்பவங்களை மேற்கொண்டவர்கள் இனம் காணப் படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை. எனவே அரசியல் பின்னணியில் செயற்படும் கோஷ்டிகள் எவ்வித வன்முறையிலும் சுதந்திரமாக ஈடுபட முடியும் என்றொரு தோற்றப்பாடு உருவாகியது. இப்படியான பல குழுக்கள் அரசுக்கெதிரான பல்வேறு தரப்பினரின் நடவடிக்கைகளை அடக்கியொடுக்க மேலும் பலவிதமான வன்முறைகளை மேற்கொண்டன.

உத்தேச தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராக சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவர்கள் மேல் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஓர் ஊழியர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். இத் தாக்குதலில் பொலிஸாருடன் இணைந்து காடையர்களும் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் இது வரையில் அந்தக் காடையர் யார் என இனங்காணப்படவுமில்லை தண்டிக்கப்படவுமில்லை.

தென்னிலங்கையில் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் போதும் பொலிஸார் முன்னிலையில் குண்டர்கள் மாணவர்கள் மேல் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆனால் அது மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் எனத் திரிபு படுத்தப்பட்டு மாணவர்களே கைது செய்யப்பட்டனர்.

விலைவாசி உயர்வுக்கு எதிராக ஐக்கியதேசியக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இனம் தெரியாதவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதையும் பொலிஸார் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனரேயன்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் எவரையும் கைது செய்யவுமில்லை. இப்படி அரசாங்கத்துக்கு எதிராகவும், நியாயமான கோரிக்கைகளை முன் வைத்தும் அரசியல் கட்சிகளோ, மாணவர்களோ, தொழிலாளர்களோ நடத்தும் ஜனநாயகப் போராட்டங்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்றால் சம்பந்தப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் இவர்களின் பின்னணியில் நிற்பவர்கள் யார் என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இப்படியான வன்முறைகள் மக்கள் போராட்டங்கள் மீது மட்டும் தான் நடத்தப்படுகிறது என்று சொல்லி விட முடியாது. ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது, காணாமற் போவது, அச்சுறுத்தப்படுவது எனப் பல அடாவடித்தனங்கள் அந்த இனம் புரியாதவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக துணிச்சலுடன் கருத்துகளை வெளியிட்டும் விமர்சனங்களை முன் வைத்தும் வந்த டெய்லி மிரர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க தனது வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மரணமடைந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் எவரும் தண்டிக்கப் படவில்லை.

பிரபல கேலிச் சித்திரக் காரரும் ஊடகவியலாளருமான பிரகீத் எக்னலிகொட காணாமற் போனார். இன்று வரை அவர் கண்டுபிடிக் கப்படவில்லை. ஆனால் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர் ஒரு பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் தானே. துமிந்த சில்வாவின் கட்டளைப்படி பிரகீத்தை கொலை செய்து நீர்கொழும்புக் கடலில் புதைத்ததாகக் கூறியதாக லங்கா நியூஸ் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டது. ஆனால் அந்த விடயம் அத்துடன் அடங்கிப் போய்விட்டது.

இதேபோன்று ஏராளமான ஊடகவியலாளர்கள் சண்டே ரைம்ஸ் இக்பால் அத்தாஸ் கூட உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு ஓடி விட்டனர். ஊடகவியலாளர் தொடர்பான கொலை, கொலை அச்சுறுத்தல், காணாமற் போதல் என்பவற்றுக்கு இவைசில உதாரணங்கள் மட்டுமே. இவை போன்ற சம்பவங்கள் ஏராளமாக நடந்தேறியுள்ளன.

இப்போது இந்த இனந்தெரியாதவர்களின் கரங்கள் நீதித்துறையின் மீதும் விரிந்து விட்டது. நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்தின பட்டப்பகலில் நட்ட நடுவீதியில் வைத்து காடையர்களால் தாக்கப்பட்டதுடன் அவரின் கையடக்கத் தொலைபேசியும் பறித்துச் செல்லப் பட்டது. சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவருக்குத் தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட்டது. இவை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவுமில்லை. எவராவது கைது செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை.

வடக்குக் கிழக்கில் இடம் பெறும் இப்படியான சம்பவங்களைப் பட்டியல் போட்டால் அது மிகவும் நீண்டு விடும்.

யதார்த்தம் என்னவெனில் அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களே இனம் தெரியாதவர்களால் கொல்லப்படுகின்றனர்; கடத்தப்படுகின்றனர்; தாக்கப்படுகின்றனர்; அச்சுறுத்தப் படுகின்றனர். அவர்கள் கண்டு பிடிக்கப்படுவதுமில்லை. கைது செய்யப்படுவதுமில்லை. குழப்பும் குண்டர்களுக்குப் பின்னணியில் யார் இருக்கிறார்கள், யாருக்காக அவை செய்யப்படுகின்றன என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் வெளியே சொல்ல முடியாத விசித்திரமான இரகசியம்.

இன்று அது பரிணாம வளர்ச்சி பெற்று ஆளுங்கட்சிகளுக்குள்ளேயே கொலைகளாகவும், தாக்குதல்களாகவும் மேலோங்க ஆரம்பித்து விட்டது. ஏவி விட்டவர்களையே திரும்பி வந்து அடிக்கும் பிசாசாக மாறி இந்தக் காடைத்தனம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. கட்டுமீறிய காடைத்தனம் எய்தவர்கள் மேலேயே பாயும் அம்பாகி விட்டதன் அறிகுறியே இப்போது நடைபெறும் கொலைகளாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகலத் திறக்கும் விவாதக் கதவுகள்

## பவானியின் சிறுகதைகள்; ஒரு பகிர்வு

த.அஜந்தகுமார்



இன்று பெண்களும் பெண்களின் எழுத்து முறைகளும் தம்மை மாற்றத்துக்கு உட்படுத்தி வருகின்றனர். பெண்மொழி சமூக உடைப்பு, புனித நீக்கம் என்று; அதிர்ச்சி, ஆபாசம், திறந்த உரையாடல் என்ற வெளியை மொழியின் சாத்தியங்களின் ஊடாக ஏற்படுத்தி வருகின்றார்கள். பெண் படைப்பாளிகள் சமூகப் பிரச்சினை ஒன்றைப் பொது நிலையில் நோக்குவதற்கும் தனிநிலையில் நோக்குவதற்கும் பெருத்த வேறுபாடுகள் உண்டு. பெண் தனது அனுபவத்தை பிரச்சினைகளை தானே பேசும்போது அதிலுள்ள கோபம், ஆற்றாமை, துன்பம், இலட்சியம் என்பன எம் கவனத்தைக் கோருகின்றன.

பெண் தனது அனுபவத்தைப் பேசுவதை 'பள்ளமடை' என்பர். மேட்டிலிருந்து பள்ளத்துக்குள் பாய்ந்து வரும் நீர் போன்றது. அது இடையிலுள்ள பல விடயங்களை தூக்கியெறிந்தே பிரவாகிக்கிறது, கலந்தும் ஒடுகிறது. இந்த அனுபவத்தை படித்தலும் விளங்குதலும் தனித்த அனுபவத்திற்குரியவை.

ஒரு பெண் படைப்பாளி உருவாக்குகின்ற பெண் பாத்திரங்களை இலட்சியப் பெண்கள் ,யதார்த்தப் பெண்கள், கனவுப் பெண்கள்,புரட்சிப் பெண்கள் என்று பலவகைப் படுத்தலாம்.

இலங்கையிலே தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பெண்களின் தொகுதி நிலையான ஆழமான வகிபாகத்தை பவானியிலிருந்தே ஆரம்பிப்பது ஆரோக்கியமானது. பவானியின் தொகுதி கடவுளும் மனிதரும் என்பதாகும். இது 1962 இல் வெளிவந்த போதிலும் அதில் இடம்பெறாத இன்னும் சிறிய கதைகளைச் சேர்த்து 1994 ஆம் ஆண்டு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. பவானியின் சிறுகதைகளைப் பற்றிய ஒரு நோக்காக இந்தப் பத்தி அமைகிறது.

பவானி தன் கதைகளிலே பல வகையான பெண்களையும் ஆண்களையும் சந்திக்க வைக்கின்றார். பிரச்சினைப்பட வைக்கின்றார், புரட்சி செய்ய வைக்கின்றார், துன்பப்பட வைக்கின்றார், அவற்றினூடாக சமூகப் பிரச்சினைகளை பெண் நிலைத் தீர்வுகளை அணுகுமுறைகளை பார்வையாளராய் தனது கோபங்களை வெளிப்படுத்துகின்றார். இவற்றிலே முடிந்தமைக்குணங்களும், பெண்மையின் இயல்புகளும்,காதலின் ஏக்கங்களும் கனவுகளும் வடிந்து போவதைக் காண்கின்றோம். சுரந்து எழும் தியாகங்களையும், புதிரிடும் மனோபாவங்களையும் நிறைவுச் சுடர்களையும் காண்கின்றோம்.

பவானிலட்சுமி என்ற கதையிலே பெண் குழந்தையோடு காணப்பட அதை குத்திக்கிளறும் ஆணின் அதிகாரத்தைச் சொல்லுகிறார் அவனின் குடியும் அடியும் எல்லோருக்கும் முன்பாகவே அவளை மனநோயாளியாக்கி குழந்தையை இறக்கச் செய்து விடுகிறது. இங்கு 'கதைசொல்லி' எந்தப் புரட்சியையும் செய்யாமல் வெறும் பார்வையாளராக நின்றுவிடுகின்றார். இது மிக முக்கயமான ஓர் அம்சம். லட்சுமி என்ற பெண்ணின் நிலை அவரின் மனதை அலைக்கழிக்கவே இப்படைப்பு உருப்பெற்றிருக்கின்றது.

இங்கு எழுத்தாளரின் கோபம் படைப்பில் நேரடியாக வெளிப்படவில்லை. ஆனால் அவரின் கோபம் வாசகனில் மனமாற்றம் செய்யப்படுகிறது. லட்சுமியின் நிலையை எண்ணி நாம்கொதிக்கின்றோம். இது மிகுந்த கூர்மையான அவரின் வெளிப்பாட்டுக்குச் சான்று எனலாம்.

பவானி தனது கதைகளிலேயே செய்யும் புரட்சிகள் வாசகர்களுக்கு அதிர்ச்சியும் அதேநேரத்தில் அதன் யதார்த்தம் பற்றிய கேள்விகளையும் எழுப்பிவிடுகின்றன. இந்த வகையில் 'மன்னிப்பாரா?' 'சந்திப்பு' ஆகிய கதைகள் முக்கியமானவை சமூகத்தின் சாதி வேறுபாடுகள் தாழ்ந்த சாதிப் பெண்ணான சுசிலாவை மூர்த்தி திருமணம் செய்ய முடியாமல் தடுத்துவிடுகிறது. ஆனால் சுசிலா தனது திருமணத்துக்கு மறுநாள் தனது உடலை மூர்த்திக்கு அர்ப்பணமாக்குகிறாள். மூர்த்தியால் சமூக வரையறைகளைத் தாண்ட முடியவில்லை. ஆனால் சுசிலாவால் கடவுள் மன்னிப்பார் என்ற நம்பிக்கையில் ஒழுக்க வரையறைகளைக் கூட தாண்டிவிட முடிகிறது. இது ஆணிலும் வலிமையானவளாக பெண்ணைக் காட்டுவதோடு சமூக ஏற்றத்தாழ்வுகளை சொல்லுகின்ற சமூகத்துக்கு சாட்டையடியும் கொடுக்கின்றது. மறைமுகமாய் ஆணின் துணிவை கேலியும் செய்கின்றது. இந்த வகையிலே தான்

'காதலித்தவனையே கணவனாகக் கொள்வதுதான் கற்பெனில் இந்த என் முடிவு கற்புநெறிக்கு சிறிதும் புறம்பானதல்ல' என்று சுசிலா கற்புக்கு சிறு விளக்கம் தருகின்றாள். இது ஆசிரியரின் புரட்சி மு டிவாக இருந்தாலும் 'பொன்னகரம்' கதையில் காமாட்சியின் செயலை எப்படி பூரணமாக நியாயப்படுத்தி விடமுடியாதோ அவ்வாறே இதை யதார்த்த நிலையில் அவளின் திருமணத்துக்கு பிந்தியதான உளவியல் நிலையில் பொருத்தும் போது எழும் பிரச்சினைகளை யோசித்தால் இம்முடிவு திட்டமிட்ட புரட்சி என்பதை விளங்கலாம்.

[illegible] என்ற கதையிலே தனது [illegible] கோமதியை சுந்தரம் என்ற தனது நண்பனுடன் தவறாக யோசித்ததால்

''சீச்சீ! கேடு கெட்டவள் வெளியே போ! விபசாரி!! என்று சண்முகம் அனுப்பிவிடுகிறான். விபசாரி என்று சொன்னவள் உண்மையில் இறுதியில் விபசாரியாகிவிடுகிறாள். உண்மையறிந்து கொண்டவன் அவளை அந்த நிலையிலே ஏற்கச் சென்றபோதும் அப்போது தன்னைத் தாங்கும் ஆண் ஒருவனது மனதை நோகடிக்க விரும்பாமல் தனது கணவனை அனுப்பிவிடுகிறாள்.

ஒரு குடும்பப்பெண்ணை ஒரு விபசாரி என்ற பட்டம் சூட்டி இறுதியில் விபசாரியாக்கி விபசார நிலையிலும் தன்னைப் ஏற்க வந்தவனை அவள் மறுதலிப்பது ஆண் அதிகார வர்க்கத்துக்கு எதிரான காறிஉமிழும் செயல் எனலாம்.

பெண்களின் இயல்பான மனச் சஞ்சலத்தை பெரிதாக்கும் என்ற கதை மிக அற்புதமாக வெளிப்படுகின்றது. ஆண் பெண் உறவின் புதிரான கணங்களே வாழ்கைப் புயலில் வீசி எறியப்பட்ட அண்ணன் தங்கையை கணவன்-மனைவியாக்கும் காலத்தின் குரூரத்தை அதன் விளைவுகளோடு 'அன்பின் விலை ' கதை பேசுகிறது.

இறக்கப் போகும் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுத்து மகிழ்ச்சிப்படுத்த நினைக்கும் ஓர் ஆணையும் அதனை முதலில் எதிர்த்தாலும் பிறகு ஏற்கும் அவனின் காதலியையும் காட்டுவது ஆண்-பெண் தியாக நிலைகளை 'வாழ்வது எதற்காக?' என்ற கதை கூறுகிறது.

குடும்ப அமைப்புக்குள் இருந்து விடுதலையாகும் பெண்ணின் விரோதகுணங்களையும், வினோ்த மனங்களையும் 'சரியா? தப்பா?' கதைபேசுகிறது.

பவானி தான் பெண் படைப்பாளி என்பதற்குரிய புரட்சிக் குணத்துடன் செயற்பட்டது மாத்திரமன்றி பெண்களின் பல வீனங்களையும் ஆண்களின் உன்னதங்களையும் கூடப் பேசுகிறார். தொன்மங்களில் நுழைந்து அவற்றின் உணர்வுகளை பேசுவதில் கூட வெற்றிகாண்கின்றார்.

பவானியின் மொழி மிகச்சரளமாக நகர்கிறது. பாத்திரங்களுக்கு உயிரையும், உணர்வையும் உருக்கொள்ளச் செய்கிறது. சாட்டையாகி சமூகத்தின் முதுகில் சுழல்கிறது. மயில் இறகாகி வருடுகிறது. தன்னோடு உள்ள அனுபவத்தை எமக்குக் கடத்தி சிந்திக்கத் தூண்டி அந்த அவலங்களில், சிந்தனைகளில், அனுபவங்களில் பங்கெடுக்க அழைக்கின்றது. பவானியின் முடிவுகளோடு நாம் முரண்பட்டாலும் விவாதங்களுக்கான கதவுகளை அகலத் திறக்கின்றது.

1959-1965 களில் எழுதப்பட்ட இந்தக் கதைகள் காலம் தாண்டியும் எம்மை ஈர்க்கும் ஆற்றலோடு விளங்குவது அவரின் எழுத்து வன்மைக்கு சான்று பகிர்கின்றது.அவரது அக்காலத்துத் துணிவை எண்ணி அவர் அன்று எதிர்கொண்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை எண்ணி மனம் இப்போதும் பரபரக்கவே செய்கிறது.


★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

## நவீன வாழ்க்கை முறையும் மறுபரிசீலனையைக் கோரி நிற்கும் கண்ணோட்டங்களும்

■விநயன்



ஏதோ ஒரு வகையில் பலரும், பல பத்திரிகை சஞ்சிகைகளும் கவனத்திலெடுக்கின்ற - விமர்சனம் தெரிவிக்கின்ற - பாராட்டு வழங்குகின்ற - பொது விடயங்களாகத் திகழ்ந்து வருவன 'பெண்கள் சார்ந்த' கண்ணோட்டம் மற்றும் கருத்துகளாகும்.

ஒரு விழிப்புள்ள ஆரோக்கியமுள்ள சமூகத்தில் இவ்வகையான அணுகுமுறைகள் அவசியமானவையாகவும் இருக்கின்றன. எந்த ஒரு கனதியான சமூக விடயமும் 'நமக்கென்ன' என்கிற மாதிரி ஒதுக்கிவிடப் படக்கூடாது. ஏனெனில் ஒரு சமூகமாகக் கூடிவாழ்கிற நாம், ஏதோ ஒரு வகையில் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்கிற தேவைக்கும் சூழ்நிலைக்கும் உரியவர்களாகவே இருக்கிறோம். ஒரு மறைமுக நிலையில் சமூக மனிதர்கள் தமது சூழலுக்கு ஏற்ப ஒருவரை ஒருவர் எதிர்பார்ப்பதும் சார்ந்திருப்பதுமான நிலையில் வாழ நேரிடுவது இயல்பானது. அத்தகைய ஒரு நிலையில் அடுத்தவர்களின் அபிப்பிராயம் அல்லது ஒரு மாற்றுக் கருத்து உருவாகும் பட்சத்தில் நாம் அனைவருமே அக்கறையுடன் அதனைக் கவனத்திற் கொள்வது அவசியமாகிறது.

துரதிர்ஷ்டவசமாக நமது பெண்களின் இருப்பு மற்றும் வாழ்க்கை காலத்துக்குக் காலம் சர்ச்சைக்குரிய ஒரு சமூகப்பிரச்சினையாக வடிவெடுத்துக் கொள்வதைத் தவிர்க்க இயல்வதில்லை.

எமது மண்ணின் பெண்களது வாழ்வை போர்க்காலம் ஒரு வகையில் துன்பமயமாக்கியது என்றால் போர் ஓய்ந்துவிட்டதாகச் சொல்லப்படுகிற நிகழ்கால நிலையில் பெண்களின் வாழ்வு வெவ்வேறுவகையான சோதனைகளுக்கு உள்ளாகின்ற பெருந்துயர் கூர்மையுற்று வருகிறது.

போர் உயிர்களைக் காவு கொண்டது என்றால் போருக்குப் பின்னரான நிலை பெண்களின் வாழ்க்கை பாதுகாப்பும் கௌரவமும் கொண்ட ஒன்றாக இருக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிர்ப்பந்தமாய் நிலையெடுத்திருக்கிறது. இந்தச் சூழலில் புறநிகழ்வுகளின் தாக்கத்தை

## நம்மை நாம்...





உணர முடியாத சௌகரிய வழ்வின் உரிமையாளர்களாகத் தம்மை நினைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சிலர் தமது வாழ்வோடு கிஞ்சித்தும் சம்பந்தமில்லாத மாயைகளின் வண்ணக் கவர்ச்சியில் கண்ணிழுந்து தொலைக்காட்சித் தொடர்களையும் சினிமாவின் ஆக்கிரமிப்பால் ஓய முடியாத கருவிகளாய் மாறிவிட்ட தொலைக் காட்சி நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கிறங்கிப்போய் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சினிமாவைத் தொழிலாகவும் தமக்குரிய பெருஞ் சம்பாத்திய மார்க்கமாகவும் விரித்துக் கொண்டிருக்கின்ற உபகண்ட சினிமா வாசிகள், சினிமாத் துறையினரின் பல்துலக்கும் கிரியை முதல் படுக்கை விரிப்புக்குரிய நிறத்தைத் தீர்மானிக்கிற விடயம் வரை நிகழ்ச்சிகளாகத் தொகுத்தளிப்பதைப் பார்வையிட்டுச் சூடு கிளம்பும் சர்ச்சைகளில் முனைந்திருக்கிறார்கள் அந்த நாட்டின் குடிமக்கள். சரி அது அவர்களின் அபிமானம் சம்பந்தப்பட்ட விடயம் என்று ஒதுக்கிவிடப் பார்த்தாலும் துரதிர்ஷ்டவசமாக 'கேபிள் சனல்' களினூடாகவேனும் அவற்றைப் பார்த்துத் தாங்களும் முக்தி பெற மார்க்கமுண்டோ என ஏங்கித் தவிக்கிறார்கள் எமது மண்ணின் குடிமக்கள் - குறிப்பாக இளஞ்சமூகத்தினர்.

''கண்களினூடாகவே பாவங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன'' என யாரோ சொன்னாற்போல அத்தகைய சினிமா ஞானத்தை அடைய நாடும் எம்மவர்கள் அந்த 'Non Stop' கொண்டாட்டங்களைக் கண்டு மகிழ்கிற அதேபோதில் சினிமாவின் நடை, உடை, பாவனைகளையும் பெறும் முன்மாதிரிகளாக ஏற்றுக் கொள்ளச் சித்தமாகி விட்டார்கள்.

இந்தப் பாதிப்புப் பெரும்பாலும் இளம் பெண்களிடையே பரவலாகக் காணப்படுவதை அவதானிப்போர் புரிந்துகொள்வார்கள். பாவம் அவர்கள். சினிமாத் தொழிலாளிகள் பிழைப்புக்காக நடிக்கிற கனவுக் காட்சிகளின் தோற்ற மாதிரிகளை இவர்கள் தமது நடைமுறையில் இணைத்துக் கொள்ளவும் தமக்கான Style ஆக வரித்துக் கொள்ளவும் எத்தனிப்பதுதான் துக்ககரமான விடயம்.

வெறும் உள்ளாடைகளோடு மட்டும் காட்சிகளில் தோன்றுவது இன்றைய பல நடிகைகளுக்கு மிகவும் சாதாரண விடயமாகிவிட்டது. அத்தகைய ஒரு நடைமுறையை சாதாரண வாழ்க்கை நடைமுறையாக ஏற்றுக் கொள்ள எமது இளசுகள் முனைவதுதான் கவனத்திற் கொள்ள வேண்டியிருக்கிற விடயம். சரி இப்படியெல்லாம் அணிவதால் என்ன தீமை நேர்ந்துவிடப் போகிறது? எனச்சிலர் கேட்கவும் கூடும். தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதாகக் கூடச்சொல்லக்கூடும். இத்தகைய அலங்காரங்களோடு பொது இடங்களுக்குப் போகும்போது இளவட்டங்களிடையே இவர்களுக்குக் கிடைக்கும் வரவேற்பு வித்தியாசமானதாக இருக்கும்.

தரக்குறைவான பார்வை, தரக்குறைவான கருத்துப் பரிமாற்றம் + விமர்சனம் இவையெல்லாம் தம்மை நோக்கித்தான் எனப்புரிந்து கொள்கின்ற இவர்கள் சில சமயங்களில் இதையெல்லாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவும் கூடும். இத்தகைய சினிமா வழி நாகரிக மாற்றங்களின் கா[illegible]மாகப் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தில் பெரிய மாறுதல் தோன்றிவிட்டதோ என்று ஐயுறும்படியாக அவ்வப்போது பல நிகழ்வுகள் அரங்கேறி வருகின்றன. குறிப்பாக மக்களின் நேரத்தில் பெருமளவை விழுங்கிக் கொள்கிற தொலைக் காட்சியும் சினிமாவும் காட்சிப்படுத்தப்படுகின்ற பல விடயங்களில் பெண் உடல் ஒரு விளம்பரக் கருவியாக ஆகிவிட்டிருப்பதைப் பலரும் அவதானித்திருப்பார்கள் - இது எத்தனை பேருக்கு உறுத்தலான விஷயமாய் இருக்கிறது? கேசம் வளர உதவுகிற தைலத்துக்கோ, 'ஷம்போ' வுக்கோ செய்கிற விளம்பரத்தில் ஒரு பெண் பயன்படுவதை ஒப்புக்கொள்ளலாம். அல்லது நகைகளை விளம்பரம் செய்ய ஒரு பெண்ணின் அழகுத்தோற்றம் உதவலாம். ஆனால் அனைவருக்கும் ஆரோக்கியம் தருகிற சவர்க்காரத்தின் விளம்பரத்தில் அல்லது அழகான மோட்டார் சைக்கிளுக்கான விளம்பரத்தில் ஒரு பெண்ணின் அழகுத் தோற்றம் (அரைகுறை ஆடைகளோடு) பயன்படுகிறது என்றால் பெண் என்பவள் இன்றைய வர்த்தக உலகத்தின் விளம்பரத்துக்கு உதவும் பண்டமாகக் கருதப்படுகிறாள் என்பதுதானே அர்த்தம்.

அவ்வாறான தரக்குறைவான விடயமாகப் பெண்ணைக் கையாளலாமா? குறிப்பாக இது தொடர்பாகப் பெண்ணின் சுயகௌரவம் பற்றி மிகுதியும் பிரக்ஞை கொண்ட பெருமக்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்?

ஒரு பெண் தனது புற உடல் அழகை ஒரு பெருமிதமான விடயமாகக் கருதிக் காட்சிப் படுத்த முன்வருவது சரிதானா? அரைகுறை ஆடையில் காட்சி தருவதைப் பெருமையாகக் கருதும் அளவுக்கு ஏன் எமது பெண் மக்கள் தரம் தாழ்ந்து போகிறார்கள்? அன்னை தெரேசாவையும், ஆன் சாங் சூகி யையும் கொண்டாடும் அதேபோதில் ஆடைகுறைந்த ஒரு நடிகையையும் போற்றிக் கொண்டாடும் அளவுக்கு நாம் அறிவிலிகளாய் ஆகலமா? உண்மையிலேயே இந்த மனப்பாங்கு ஆரோக்கியமானதுதானா?

இப்படியெல்லாம் தரம் தாழ்ந்த நிலைக்குப் பெண்கள் இறங்கிப் போவதால்தான் இன்றைய புதிய தலைமுறையினர் பெண்களைக் கௌரவமான கண்ணோடு பார்க்கத் தவறுகிறார்கள்.


பெண் என்பவள் வெறும் அழகுப் பண்டமே என்ற கருத்தை வலியுறுத்துவது போல் விளம்பரங்களும், காட்சிகளும் சந்தைப் படுத்தப்படுவதால்தான் பெண்கள் சார்ந்த வன்முறைகள் அதிகரிக்கின்றனவோ என்று கூட யோசிக்க வேண்டியிருக்கிறது.

'கண்கள் இரண்டினில் ஒன்று' எனவும் தையலை உயர்வு செய்' என்றும் 'அன்ன மூட்டிய தெய்வ மணிக்கை' என்றும் 'பெண்கள் அறிவை வளர்த்தால் வையகம் பேதைமை அற்றிடும் காணீர்' என்றும் பாடிப் போனானே அந்த மீசைக் கவிஞன். 'ஆண்மை தவறேல்' என்ற வேதம் சொன்ன அவன் இன்றைய ஆண்கள் தையலரைக் கீழ்மை செய்யும் நிலை கண்டிருந்தால் எவ்வளவு தூரம் குமுறிப் புலம்புவான்? - யோசிப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத் துறையில் முதிர்ச்சி கண்டவர்

## கலைச்சுடர் சு.வரதராஜன்



சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்
76

வயாவிளான்
தவமைந்தன்

பல விதமான குண வியல்புகள், திறன்கள் கொண்ட கலைஞர்களை அன்றாடம் எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இவர்களை இலை மறை காயாக அமைதியாக இருப்போர், தமக்குத் தான் அனைத்துத் தெரியும் எனும் இறுமாப்போடு வாழுவோர், பட்டங்கள், விருதுகளுக்காக அலைந்து திரிவோர், உயர் அதிகாரிகளுக்கு வால் பிடித்து ஏனைய கலைஞர்களைச் சிக்கலில் தள்ளி விடுவோர், பணத்திற்காகக் கலையை விற்போர் எனப் பலவாறாக வகுத்துக் கொள்ளலாம்.

எனினும் பல ஆண்டுகளாகத் தான் கற்ற கலையை இலவசமாகக் கற்பித்து எண்ணற்ற ஆற்றுகையாளர்களை உருவாக்கிய மிருதங்க ஆசானாகவும் சிறந்த ஆற்றுகையாளராகவும் குரலிசை, பண்ணிசை போன்ற துறைகளில் ஆழமான ஈடுபாடு கொண்ட கலைஞராகவும் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவின் முதன்மை மாணவராகவும் தெல்லிப்பழை பாலர் ஞானோதய மன்றத்தின் தலைவராகவும் விளங்குபவர் மிருதங்க பூசணம் சு.வரதராஜன்.

மறைந்த சுந்தரமூர்த்தி ஐயர் திருமதி அன்னபூரணேஸ்வரி தம்பதியரின் மகனாக 02.05.1955 இல் தெல்லிப்பழையில் இவர் பிறந்தார். தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை, தெல். மகாஜனக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் அந்தக் காலத்தில் வயலின் கலைஞராக இருந்த தனது தந்தையின் வழிநடத்தலில் தெல்லிப்பழை விஸ்வநாத ஐயரிடம் குரலிசையை வரன்முறையாகக் கற்றுக் கொண்டார்.

1965இல் தொடங்கப்பட்ட தெல்லிப்பழை பாலர் ஞானோதயா எனும் கலை மன்றத்தில் மிருதங்க ஆசானாக இருந்த சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவிடம் பத்தாவது வயதில் இருந்து மிருதங்கக் கலையைக் கற்று வந்தார். ஒப்பற்ற குருவாக அமைந்த க.ப.சின்னராசாவிடம் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் கற்று 1975இல் அரங்கேற்றம் கண்ட இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் மிருதங்கக் கலாவித்தகர் எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இசை, நடன அரங்குகளில் சிறு வயதிலேயே ஆற்றுகையாளராக வலம் வந்த இவர் திருமுறையரசு வி.ரி.வி.சுப்பிரமணியத்தின் கச்சேரிகளிலும் நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானமாக அந்தக் காலத்தில் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளின் இசைச் சொற்பொழிவுகளிலும் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் மிருதங்கக் கலைஞராக அணி செய்தவர்.

1979இல் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் மாணவராக இணைந்து, அங்கே பணியாற்றிய மிருதங்கப் பேராசான் ஏ.எஸ். இராமநாதனிடம் மிருதங்கக் கலையை விரிவாகக் கற்று இசைக்கலைமணி எனும் பட்டத்திற்கான பரீட்சையில் முதல் பிரிவில் சித்தியடைந்தார். 1983 இல் இசைக்கலைமணி திலகேஸ்வரனுடன் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று ஆறுமாத காலம் தங்கியிருந்து இசைப்பணியாற்றிய இவர் அங்கே எண்ணற்ற ஒலிப்பதிவுகளிலும் பங்கு கொண்டார்.

1984இல் ஆசிரிய நியமனம் பெற்று நுவரெலியா பரிசுத்த திரித்துவக் கல்லூரி, வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், குளமங்கால் றோ.க.த.க., தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை போன்ற பல பாடசாலைகளில் செவ்விசை, பண்ணிசை, நாட்டார் இசை போன்ற கலைகளின் நல்லாசிரியராகப் பணியாற்றி இசைப் போட்டிகளில் மாணவர்களை வெற்றி பெறச் செய்து சாதனைகள் பல படைத்த இவர் 2006இல் ஓய்வு பெற்றார்.

தெல்லிப்பழை பாலர் ஞானோதயாவின் தலைவராகவும் மிருதங்க, சங்கீத, பண்ணிசை ஆசிரியராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்ற இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பலர் வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களுள் 1989இல் நல்லை ஆதீனத்தில் அரங்கேற்றம் கண்ட வர்ண குலசிங்கம் இராமேஸ்வரன் என்பவர் இவரது முதன்மை மாணவர் ஆவார்.

வட.இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைகளுக்கான பரீட்சகராகவும் கருத்தரங்குகளை நடத்திவருகின்ற வளவாளராகவும் பல ஆண்டுகளாக விளங்கி வருகின்ற இவர் இலங்கை வானொலி, ரூபவாகினி போன்ற ஊடகங்களிலும் பல நிகழ்வுகளை வழங்கி வருவதுடன் தனது பிள்ளைகளையும் கலைத்துறையில் ஈடுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(N.D) தற்கால இசைத்துறை பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பல விதமான பாடசாலைகளில் பல ஆண்டுகளாக இசை ஆசிரியராகப் பணியாற்றிய என்னால் தற்காலத்தில் இசை கற்பித்தலில் ஏற்பட்டிருக்கின்ற பின்னடைவுகளுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்த முடியும் என நினைக்கின்றேன்.

இசை ஆசிரிய நியமனம் பெற்று வருகின்ற இளம் பட்டதாரிகள், தாம் வேறு பாடங்களைக் கற்பிக்க விரும்புவதாகவும் இசை கற்பிக்க முடியாதுள்ளது எனவும் கூச்சமின்றிக் கூறுகின்றனர். இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், உயர் நிறுவனங்களில் சரியான கற்பித்தல் நிகழவில்லை என்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது.

ஒரு தேவாரத்தைக் கூடச் சரியாகப் பாடத் தெரியாத, ஒரு தானவர்ணத்தைக் கூடக் கற்பிக்கும் திறன் அற்ற, பஞ்சரத்தினக் கீர்த்தனை என்றால் என்ன வென்றே தெரியாத, அடிப்படை இசை ஞானமற்ற பலர் உயர் அதிகாரிகளுக்கு வால் பிடிப்பதன் ஊடாக உயர் பதவிகளைப் பெற்று இசை கற்பிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பளத்தை உயர்த்துவதும் அரச விருதுகளைப் பெறுவதும் குளிரூட்டப்பட்ட அறைகளிலும் வாகனங்களிலும் தமது நேரத்தைக் கழிப்பதுமே இவர்களது முழு நோக்கங்களாக இருக்கின்றனவே தவிர மாணவர்களுக்கான கற்பித்தலில் தூய மனதுடன் செயற்பட வேண்டும் என்று இவர்கள் கனவிலும் நினைப்பதில்லை.

செய்முறைத் திறன் இல்லாமல் உயர் பட்டங்களைப் பெற்றவர்கள் தராதரமற்ற பாடத்திட்டங்களின் அடிப்படையில் இசைப் பட்டதாரிகளை இசைத் திறன் அற்றவர்களாக உருவாக்குவதால் எமது தமிழ்ச் சமூகமே பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அதைவிட இசை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் செயன்முறை விளக்கங்கள் போன்றவையும் சம்பந்தப்பட்டவர்களால் சரியாக நிகழ்த்தப்படுவதும் இல்லை.

எனவே எதிர்காலத்தில் சிறந்த இசை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்கும் பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட உயர் நிறுவனத்தார் முன்வர வேண்டும் எனக் கண்ணீருடன் கருத்துரைக்கின்றார் இசைக்கலைமணி சு.வரதராஜன். ★

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

### நீர்மேல் நெருப்பு

வேறுபெயர் - கல்லுருவி
தாவரவியற் பெயர்-Ammania vesicatoria
(அம்னியா வெசிகற்றோரியா)
குடும்பம் -Lythraceae
சமஸ்கிருதப் பெயர்- அக்னி கர்ப்ப

இது உலர் வலயத்துக்குரிய பூண்டு. நெல் வயல்களில் சாதாரணமாகக் களையாகக் காணப்படும். கபில நிறம் அல்லது செந்நிறமானது. தனி இலைகள். சிறியவை, பூக்கள் மஞ்சள் நிறம்.

**கரப்பனுக்கு**

இலைச்சாற்றுக்குச் சம அளவு வேப்பெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி அந்த எண்ணெயைப் பூசி வரக் கரப்பன், சொறி, சிரங்கு என்பன மாறும்.

**சுரத்துக்கு**

உலர்ந்த நீர்மேல் நெருப்புச் செடியுடன் வேர்க்கொம்பு, கோரைக்கிழங்கு சம அளவு சேர்த்துக் குடிநீர் செய்து காலை, மாலை கொடுத்து வரச் சுரம், முறைச் சுரம் என்பன நீங்கும்.





Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி



உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**1. வேலையில் இருந்து தப்பிக்க முயற்சிக்கிறேனா?**- உங்கள் வேலையை வெறுப்பதால் அல்லது வேலை இழந்துவிட்டவராக இருப்பதால் மட்டும் நீங்கள் சுயவேலை வாய்ப்புக்குத் தகுதியானவர் ஆக மாட்டீர்கள். தவறான காரணத்துக்காக சுய வேலை வாய்ப்பைத் தொடங்குவதை விட, வேலை செய்யும் இடத்தில் வரும் பிரச்சினைகளை எதிர் கொள்வது துன்பம் குறைந்தது.

**2. பணத்தைப் பற்றிக் கவலைப்படுகிறேனா?**- சுய வேலை வாய்ப்பு என்றால் மாதாமாதம் முதலாம் திகதி சம்பளம் கிடைக்காது என்று அர்த்தம். இவ்வாறு ஒழுங்கற்று அவ்வப் போது வரும் பணத்தைக் கொண்டு உங்களால் சமாளித்துக் கொள்ள முடியுமா?

**3. எனது குடும்பம் ஆதரவாக உள்ளது?**- குடும்பத்தின் ஆதரவு இல்லாமல் நீங்கள் வெற்றிபெற முடியாது. பிறந்த குழந்தையைவிட பிஸ்னஸுக்குத்தான் அவர்களின் ஆதரவு அதிகம் தேவை. அதற்கு செய்ய வேண்டிய தியாகத்தைப் பற்றி குடும்பத்தினர்கள் அறிந்திருக்க வேண்டும்.

**4. எது எனக்கு பிடிக்கும்?**- உங்களுக்கு பிடிக்காத விஷயங்களைச் செய்யத் தொடங்க வேண்டும் என்ற யோசனையே தேவையில்லை. எது உங்களுக்கு மிகவும் பிடிக்குமோ, அதை மட்டுமே செய்யுங்கள்.

**5. நான் செய்வதற்கு அதிக தேவை இருக்கிறதா?**- கண்டிப்பாக உங்களுக்கு நிறைய வாடிக்கையாளர்கள் தேவை.மேலும் நீங்கள் செய்ய விரும்பும் தொழிலுக்கான தேவை அதிகரித்து வருகிறதா?

**6. நாம் இருக்குமிடத்திலிருந்தே இதைச் செய்யலாமா?**- மாறுபட்ட தன்மைகளுடன் இருப்பதைப் பல நிறுவனங்கள் விரும்பும்.உங்கள் முதலாளியின் நிறுவனத்துடனேயே பிஸ்னஸ் செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் அதை ஒதுக்கி விடாதீர்கள் . ஏற்றுக் கொள்ளுங்கள். செயல்திறன் அடிப்படையில் போனஸ் கேளுங்கள்.

**7. என்னால் சமாளிக்க முடியுமா?** நீங்கள் பெரிய அதிர்ஷ்டசாலியாக இருந்தால் மட்டுமே பிஸ்னஸ் தொடங்கிய முதல் ஆறு மாதத்துக்குள் பணம் வரும் . ஏனெனில் தொடக்கத்தில் பிஸ்னஸ் செலவை உண்டாக்குமே தவிர வருமானத்தைக் கொடுக்காது. அதனால் பணச்சேமிப்பு இருப்பது முக்கியம்.

**8. ஓய்வூதியம்**- பணியாளராக இருப்பதில் பல பயன்கள் உள்ளன. சுய வேலை வாய்ப்பில் அத்தகைய பல சலுகைகளை இழப்பீர்கள்.

**9. பணக்காரர் ஆவதுதான் என் விருப்பமா?**- சில தொழில் முனைவோர்கள் பெரும் பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள். மற்றவர்கள் நடுத்தரமான வசதியுடன் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

**10. எனக்கு வேறு ஏதாவது வாய்ப்பிருக்கிறதா?**- சில சமயங்களில் ஒரு வேலையை இழந்த பிறகு இன்னொரு வேலை கிடைப்பது என்பது மிகச் சிரமமானதாக இருக்கும். இவ்வாறு இருப்பது கூட சுய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பை வழங்கலாம். அந்தப் பாதையைப் பின்பற்றிச் செல்லுங்கள்.

ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பேர் தொழில் தொடங்குகிறார்கள். அதில் தொடங்கியவர் தான் வேலை செய்பவராகவும் இருப்பர். இது போன்றவர்கள் எப்படி வெற்றி பெறுகிறார்கள் என்று பல ஆராய்ச்சிகள் கூட நடந்துள்ளன. சிறிய வியாபாரங்கள் உலக பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அது பெரிய நிறுவனங்களை அச்சுறுத்தும் வகையிலும் இருக்கின்றன. அதனால் நீங்கள் சிறு தொழில் செய்ய விரும்பினால், அதில் நீங்கள் வெற்றி பெற நிறைய சாத்தியங்கள் உள்ளன.

சிறிய வியாபாரங்கள் உலக பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அது பெரிய நிறுவனங்களை அச்சுறுத்தும் வகையிலும் இருக்கின்றன. அதனால் நீங்கள் சிறு தொழில் செய்ய விரும்பினால், அதில் நீங்கள் வெற்றி பெற நிறைய சாத்தியங்கள் உள்ளன.



# மாயப் பொய்கையும் மந்திர நீராடலும்......

எவன் வந்து அடைப்பான் என
ஏங்கிக்கிடக்கிறது தமிழ் வேலி....

யார் வந்து திறப்பார்கள் என
எதிர்பார்த்திருக்கிறது தமிழ் புத்தகம்...

பயங்கரவாதம் என்ற பழிச்சொல்-பல
பளிங்குகளைப் பழிவாங்கியது.

ஒற்றைத் தீபத்தில்
ஒட்டியிருந்த தமிழ்மானத்தை
ஒரு பெட்டிக்குள் கட்டிவைக்க
பெரும் பிரயத்தனம் செய்தது அநியாயம்.

மாட்டேனென மறுக்கும் அதை
காட்டிக்கொடுத்தது வஞ்சகம்.

கிணற்றடிப் பாசியில்
வழுக்கி விளையாடிக்கொண்டிருந்தன
சில அழுக்குகள்.

உணவு கிடைக்காமலேயே
உடைபட்டுப்போனது-ஒரு
பசித்திருந்த வரலாறு.

இன்னும் இன்னும்
நெஞ்சம் முழுதும்
நெருடல்களை அடைத்துக்கொண்டு
கை காட்டிப் போகிறது
நேற்றைய காற்று....

இன்று இருட்டறையின் கதவு திறந்து
பெருவெளிப்பரப்பில் நுழைகிறது காற்று.


உருகி நீராகிப்பாய ஆயத்தமாகின்றன-பல
உறைந்திருந்த நதிகள்.

நேற்றைய நெருப்பு மழையை..
வற்றிப்போன ஊர்க்குளத்தை..
பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்த
சேற்று வயல் நிலத்தை...
தொட்டுத் தடவ

நம்பிக்கை மழைத்துளிகள்
வாழ்க்கை நிலம் நோக்கி
பயணிக்கத் தயாராகின்றன..!

மாயப் பொய்கைகளில்
கால் நனைத்து
மந்திர நீராடல்களில்
உடல் சிலிர்த்து
மயங்கிக் கிடந்த
நிலை உடைத்து
கரை கடந்து வெளியே வர
சில கடவுள்கள் புறப்படுகிறார்கள்..!
சில கடவுள்கள் புறப்படுகிறார்கள்...!!

-உயிரோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

நெடுந் தொடர் 33

ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், தன் வெற்றிக்காகப் பாடுபட்ட குடியரசுக் கட்சிக்காரர்களுக்கு ஒரு கடிதம் எழுத நினைத்தார் லிங்கன். கிட்டத்தட்ட 22 ஆண்டுகள் வழக்கறிஞர் தொழிலில் அனுபவம். ஏகப்பட்ட கடிதங்களை எழுதியிருக்கிறார். எத்தனையோ வழக்கு கட்டுக்களைப் பார்த்திருக்கிறார், எழுதியிருக்கிறார். அப்படியும் அந்த மனிதருக்குத் தான் எழுதிய கடிதம் சரியாக வந்திருக்கிறதா என்று ஒரு சந்தேகம்.

நேராக ஓர் ஆசிரியரிடம் போனார். "ஐயா! எனக்கு இலக்கணம் அதிகமாகத் தெரியாது. இந்தக் கடிதத்தில் ஏதாவது பிழை இருக்கிறதா என்று பார்த்துச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். அந்த ஆசிரியரும் அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதில் சிறிய இலக்கணப் பிழைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். உடனே அந்தக் கடிதத்தை வாங்கித் திருத்தினார் லிங்கன். அதற்குப் பிறகுதான் அதை எல்லோருக்கும் அனுப்பி வைத்தார். ............................

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தச் சூழலில் குடியரசுக் கட்சியின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி பிளவுபட்டது. காரணம் டக்ளஸ் ஜனநாயகக் கட்சியின் சார்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். டக்ளஸின் முரண்பாடான கருத்துத்தான் ஜனநாயகக் கட்சி பிளவுபட்டதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள்.

தென்மாநிலங்களில் இருக்கும் அடிமை முறையை ஆதரிக்கும் முதலாளிகள், கென்டகியைச் சேர்ந்த ஜான் சி.பிரெக்கின்ரிட்ஜ் என்பவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினார்கள்.

பழைய விக் கட்சி 'யூனியன் கட்சி' என்று மாறியிருந்தது. அந்தக் கட்சியின் சார்பாக டென்னஸியைச் சேர்ந்த ஜான் பெல் என்பவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நான்கு முனைப் போட்டி லிங்கனின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியது. அப்போதெல்லாம் வேட்பாளர்கள் தாமே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக் கூடாது என்று மரபு இருந்தது. அதனால் லிங்கன், ஸ்பிரிங்ஃபீல்டில் தங்கியிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக வரும் கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. எனவே லிங்கன், கவர்னர் மாளிகையின் இரண்டாவது மாடியில் இருந்த ஓர் அறைக்குக் குடிபெயர்ந்தார். இப்போது அவருக்கு இரண்டு உதவியாளர்கள் வேறு. ஜேர்மனியில் பிறந்த ஜார்ஜ் நிகொலே என்பவர் லிங்கனுக்குத் தனிச் செயலாளர். ஜான் ஹெ என்பவர் உதவியாளர்.

அவர் இன்னும் ஜனாதிபதியாகவில்லை. அதற்குள் அவரிடம் பதவி, வேலை கேட்டு ஆயிரக் கணக்கில் கடிதங்கள் வர ஆரம்பித்திருந்தன. எல்லாக் கடிதங்களுக்கும் தம் கைப்பட பதில் எழுதினார் லிங்கன். நேரில் பார்க்க வந்த அத்தனைபேரையும் புன்னகையுடன் வரவேற்றார். புன்னகை மாறாமல் வழியனுப்பி வைத்தார்.

லிங்கன் அடிமை முறையை ஒழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு அலைந்தவர். எனவே, அவர் தேர்தலில் வெற்றிபெற்றால் தங்களது அடிமை வியாபாரம் பாதிக்கும் என்று நினைத்தார்கள் தென்பகுதி முதலாளிகள். அதோடு, குடியரசுக் கட்சியின் பொருளாதாரத் திட்டமும் அவர்களுக்கு அவ்வளவு உவப்பானதாக இல்லை. அந்தத் திட்டத்தைத் தென்னகத்தைச் சுரண்டி வடபகுதியை வாழ வைக்கும் திட்டம் என்று சாடினார்கள். லிங்கனுக்குத் தென்பகுதியில் எதிர்ப்பு வலுத்துக் கொண்டிருந்தது.


''லிங்கன் ஜனாதிபதியானால் அமெரிக்காவின் ஒற்றுமை குலைந்து போய்விடும். தேசம் இரண்டாகப் பிரிந்துவிடும்'' என்று பீதியைக் கிளப்பிப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள் ஜனநாயகக் கட்சிக்காரர்கள்.

டக்ளஸ் இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தாலும், சூழ்நிலை அவருக்குச் சாதகமாக இல்லை. வடமாநில மக்கள் அவரை அடிமை முறையை ஆதரிப்பவர் என்று நினைத்தார்கள். தென்பகுதி மக்கள் அவரை அடிமை முறையை எதிர்ப்பவர் என்று நினைத்தார்கள். அதேசமயம், தென்பகுதி கொஞ்சம் கொஞ்சமாகப் பிரச்சினைகளின் பூமியாகிக் கொண்டிருந்தது. மக்கள் மத்தியில் எந்த நேரத்திலும் கலவரம் வெடிக்கலாம் என்பது போன்ற ஓர் அச்சம் பரவிக் கொண்டிருந்தது.

அடிமை எதிர்ப்புத் தீவிரவாதிகள், கறுப்பின மக்களோடு சேர்ந்து கலவரம் செய்யப் போகிறார்கள் என்ற வதந்தி. இன்னொரு பக்கம் கடுமையான வறட்சி. விவசாயிகள் கடனாளியாக மாறிப்போனார்கள். இந்தச் சூழ்நிலையில், தென்மாநிலத்தில் இருந்த ஆறு மாநிலங்கள் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து தனியாகப் பிரிந்து போவது என்று முடிவெடுத்தன.

1859, நவம்பர் 6. ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தல் நாள். லிங்கன் வெற்றிபெற்றார் என்னும் தகவல் அன்று இரவு வந்தபோது, லிங்கன் ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்தார். அமெரிக்கத் தேர்தல் முறைப்படி மற்ற மூன்று வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை ஒன்று சேர்த்திருந்தால்கூட லிங்கன்தான் வெற்றிபெற்றிருப்பார். வடமாநிலங்கள் முழுவதும் லிங்கனுக்கு ஆதரவளித்திருந்தன. நியூ ஜெர்ஸியின் வாக்குகளை லிங்கன், டக்ளஸ் இருவரும் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். தென் மாநிலங்களில் லிங்கன் ஒரு வாக்குக் கூடப் பெறவில்லை.

**(மீட்பர் வருவார்...)**



# ஆலமரப் பாட்டி 'திம்மக்கா'


80 ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழகத்திலுள்ள கூதூர் என்ற கிராமத்தில் மரம் செடிகளை பார்ப்பதே அரிதான விடயம். ஆனால் இன்று அந்தக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் இருபுறத்திலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலமரங்கள் பசிய இலைகளோடு நிழல் பரப்பி நிற்கின்றன. இந்த ஆயிரம் மரங்களுக்கும் மூலவேர் திம்மக்கா என்கின்ற மூதாட்டிதான். சிறுவயதிலிருந்தே இயற்கையின் மீது நேசிப்புக் கொண்ட திம்மக்கா தன்னுடைய சொந்த முயற்சியால், கூதூர் கிராம மண்ணில் வளரக் கூடியது ஆலமரம் என்பதை கண்டறிந்தார். அதன் பின்னர் பக்கத்து ஊர்களிலிருந்து ஆலங்கன்றுகளை கொண்டு வந்து வீதியோரமாக நாட்டி, தண்ணீர் ஊற்றி இப்போது அவற்றை பெரு விருட்சங்களாக மாற்றிவிட்டார். இப்போது மரங்களுக்கு உயிர் கொடுத்த திம்மக்காவுக்கு வயது 101. ஆனாலும் இன்னமும் அவர் அதே கம்பீரத்தோடு ஆலமரங்களை நட்டுக் கொண்டே இருக்கிறார்.

நாம் வீதிகள் எங்கும் ஆயிரம் மரம் வளர்க்கா விட்டாலும் குறைந்தது வீட்டுக்கு இரண்டு மரம் வளர்ப்போம்...!!! அதுவே மிகப் பெரிய பசுமை புரட்சி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 248



அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. நிகழ்ந்த ஒன்று
4. குரங்கு
6. உயிர்ப்பின் ஆரம்பம்
7. வருடம்
8. பூந்தாது
11. வெட்டு
12. இரண்டு
13. சரம்
14. மகன்
16. கொடையளித்தல்
18. தூறல்
19. ஆப்கானின் போராளி இயக்கம்
21. படித்தவர்
22. ஒரு தானிய வகை

### மேலிருந்து கீழ்

1. இணக்கம்
2. கூற
3. கஷ்டமுறுகல்
4. விழி
5. சிறையிலிருந்து சுதந்திரம் கிடைத்தல்
7. சம்மதச் சொல்
9. உணவில் சோறுடன் சேர்ப்பது
10. ஒரு தோல் வாத்தியம்
13. சாதுவான காட்டு மிருகம்
14. மகள்
15. பனை மரத்தின் இள நிலை
16. உடலின் உள்ளுறுப்பு ஒன்று
17. குழு
18. மடிய
19. தன்னுடைய
20. அரைவாசி

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 246 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) உற்சவம் (4) சகா (6) மறு (7) சுவடு (8) சாமர்த்தியம் (11) கடை (12) தரும் (14) பால் (15) வதம் (17) நரி (18) நரம்பு (19) நாண் (20) சுகம் (21) குடும்பம் (22) ஓம்.

**மேலிருந்து கீழ்**

(1) உற்சாகம் (2) சமர் (3) வறுத்தல் (4) சவம் (5) காடு (7) சுயம்வரம் (9) மடை (10) திரு (13) அம்புஜம் (14) பாரி (16) தம் (17) நண்டு (18)நகம் (19) நாகு (20) சுப

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 248**

*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (23.01.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.248இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.01.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 246 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**ரா.பாவேந்தன்,**
2 ஆம் வட்டாரம், கைவேலி, புதுக்குடியிருப்பு.

**2 ஆம் பரிசு**

**திருமதி க.பரமேஸ்வரி,**
அரசடி வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**

**ம.மேசிலெற்றீஷியா,**
இல.1625, இரத்தினபுரம், கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**

**வி.துவாரகி,**
மடத்தடி, கண்டி வீதி, கொடிகாமம்.

**5 ஆம் பரிசு**

**த.சுஜேஸ்மன்,**
இல.9, கேசாவில் வீதி, யாழ்ப்பாணம்.


**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி சி.இராசமணி,**
முள்ளானை, இளவாலை.

**க.செல்வராணி,**
வெடியரசன் வீதி, காரைநகர்.


**ச.கஸ்தூரி,**
தரம்- 10, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



## விரக்திப் புன்னகையுடன்......

காற்றலையில்
காந்தியத்தின்
குரலின் ஓசை
மீண்டும் இந்த
மனித குலத்தின்
காதுகளில் விழுந்த போது
கிட்லரின்
பாதணிகள்
உயிர்பெற்று
நடமாடிக்களிக்கிறது
இதயத்தின் வலிகளின்
கரங்கள்
எரிமலை
தீ தாக்குகளை
தழுவி
தற்கொலை புரிகின்றது
மனிதம் எரிந்து... எரிந்து
சாம்பலாய்
அண்ட சராசரி
வெளிக்குள்
விரக்திப்புன்னகையுள்



## மழைகால நினைவுகள்..

மழைகால
நினைவுகள்
மனதோடு
கதை பேசும்
காலை நனைக்கும்
மாரி வெள்ளம்
முற்றவெளி
திடலில் காடாய்
பரவி நிற்கும்
காக்காய்களும்
குருவிகளும்
சிறகை நனைத்து
குதூகலிக்கும்
பேத்தை வால்களும்
நீந்தத் துடிக்கும்
குளிர் காற்றில்
உடல் சிலிர்க்கும்
வெள்ளத்தில் கால்களும்
கைகளும் தப்பு தாளமிடும்
காகிதக் கப்பல்கள்
நர்த்தனமிடும்
சந்தோஷ வானில்
மனம் பட்டமாய்
பட படவென பறக்கும்
அந்த மாரிகால
நினைவுகளை
மனம் சுமந்து
இதயம் பல மறை
மீட்கும்

ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமில்லா இதயங்கள்

தமிழ்
(கரவெட்டி)



"ம் ....... ஆஹா" தூக்கத்திலிருந்து எழுந்ததும் சுடச்சுட அம்மாவின் கையால் தேநீர் குடிப்பதும் ஒரு சுகம்தான் என எண்ணியபடி தேநீரை சுவைத்த எனது கவனம் பத்திரிகையில் குவிந்தது. " இன்று யாழ். தனியார் பேருந்துக்கள் வேலை நிறுத்தம்" எனறு சற்றே குரலுயர்த்தி வாசித்தேன். சமையலறையில் இருந்த என் அம்மா "இண்டைக்கு தோல் கிளினிக் கெல்லோ? பெரியாஸ்பத்திரிக்கு போகோணு மெல்லோ?" என்றார் அவசர அவசரமாக. நான் மறந்தாலும் எனக்கான தோல் கிளினிக் திகதியை அம்மா மறந்தது இல்லை. அதிகாலையிலிருந்தே மதிய உணவை ஆயத்தப் படுத்திக்கொண்டிருந்தார்.

"ஓமம்மா போவம் ஒம்பதரைக்கு பஸ் எடுப்பம்" எனப்பதிலளித்தபடி பத்திரிகையைத் துளாவினேன். " இல்லை எட்டு மணிக்கு பஸ் எடுத்தாத்தான் நேரத்துக்கு போய்ச்சேருவம். இண்டைக்கு மினிவானும் ஓடாதல்லே" எனப்பதிலளித்தபடி தனது கடமையில் கருத்தாயிருந்தார். அவரது குறிக்கோள் எட்டுமணி பேருந்தில் ஏறிவிட வேண்டும் என்பதே. அனுபவசாலி அவர் கூறும் போது நான் நிராகரிப்பது முட்டாள் தனம் என எண்ணியபடி அம்மாவைப் பார்த்தேன். முகத்தில் இனம் புரியாத ஒரு கவலை அதை மறைத்தபடியே எப்போதும் சிரித்த முகம். மெலிந்த உடல் வாகு வயதை மீறிய முதிர்ந்த தோற்றம். எல்லாவற்றுக்கும் மேலாக இருபது வயதுப் பெண்ணான என் முகத்திலும் உடம்பிலும் பரவிவரும் இனம்புரியாத தோல் வியாதியை குணப்படுத்தி விடவேண்டும் என்ற வேகம். எத்தனையோ வைத்தியம் செய்தும் சுகம் காணவில்லை. அம்மாவின் நிம்மதிக்காய் நானும் வைத்தியம் செய்வதைக் கைவிடவில்லை. என் அம்மாவின் வதனத்தை கண்களில் சிறைப் பிடித்தபடி குளிக்கச் சென்றேன்.

நேரம் காலை ஏழரை இருக்கும் " என்னடி இவ்வளவு நேரமா குளிக்கிறாய்? கெதியா வா போகணும்" என்ற என் அம்மாவின் அதட்டலுக்கு அடி பணிந்து என் அலுவல்களை சற்றே விரைவு படுத்தினேன்.

நானும் அம்மாவும் பேருந்து நிலையத்தை அடையும் போது நேரம் காலை எட்டேகால். பதினைந்து நிமிட தாமதத்தை என் அம்மா பதினைந்து யுக தாமதமாய் உணர்ந்தார். மேலும் பதினைந்து யுகம் காத்திருக்க வேண்டும் என்பதை மறந்து பேருந்தைக் காணவில்லை என அவசரப் பட்டார். " இல்லாட்டி இந்த நேரத்துக்கு ரெண்டு மினிவான் வந்து போயிருக்கும்" என அருகில் நின்ற சக பயணி கூற அரச பேருந்து எந்தப்பக்கம் சாய்வது எனத்தெரியாது ஆடி அசைந்து வந்து நாம் நின்ற நெல்லியடிப் பேருந்து தரிப்பிடத்தில் தரித்து நின்றது. பயணிகள் அடித்துப்பிடித்து ஏறினர். ஏறும் வாசல் எது? இறங்கும் வாசல் எது? என்று இல்லாமல் இரு புறத்தாலும் ஏறினர், இறங்கினர். நானும் அம்மாவும் ஒரு வழியாக ஏறி விட்டோம்.

நெரிசலினுள் நிற்பதற்கு அம்மா மிகவும் கஷ்டப்பட்டதை என்னால் உணர முடிந்தது. ஆனால் என்ன செய்ய முடியும்? நான் சமாளித்து நின்றுவிடுவேன். ஆனால் அம்மா..... என் கண்களுக்குள் சிறைப்பட்ட இருக்கைகளில் இளம்பராயத்தினரே அமர்ந்திருந்தனர். நின்றபடி பயணித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 50 வயதைத் தாண்டியோராகத் தென்பட்டனர். தள்ளாடும் வயோதிபர் பலரும் நின்றபடியே பயணித்தனர். "என்ன சமூகமடா இது?" என் எண்ணிக் கொண்டேன். " வயது போன முதியவர்களுக்கு அமர இடம் விட்டுக்கொடுக்காத நீங்களும் மனிதர்கள்தானா?" எனக் கேட்க வேண்டும் போல் இருந்தது. என்னுள் இன்றைய இளைஞர்கள், யுவதிகள் மீதிருந்த கோபம் அனலாய் கொப்பளிக்க அடக்கிக்கொண்டேன்.

அப்போது தான் கவனித்தேன் சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஓர் பெண், மிகவும் அழகாக இருந்தாள். ஆனால் முகம் அஷ்ட கோணலாய் கோணி இருந்தது. அது சன நெரிசலால் வந்த முகச்சுழிப்பு அல்ல, பின்னால் நின்ற இளைஞனால் வந்த முகச்சுழிப்பு. காற்றுக்கூட உட்புக முடியாதவாறு பயணிகளுக்கிடையில் காணப்பட்ட நெருக்கத்தை அவன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டான். அவனுக்கு நேர் எதிரில் "பேருந்தில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் நடைபெறும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்" என்ற வாக்கியம் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டிருந்தது.

அப்போதுதான் தெரிந்தது, இந்தமாதிரியான இளைஞர்களால் தான் கூகுள் இணையத்தின் பாலியல் தொடர்பான தேடலில் இலங்கை முன்னிலை வகிக்கிறது என்று " தேட லுக்கு எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. போயும் போயும் இதையா நாம் தேடுகின்றோம்? நம் தேசத்திற்கே இது தலைகுனிவு இல்லையா? இலங்கை ஆசியாவின் ஆச்சரியம் என்கிறோமே நாமே நம் நாட்டை அவமான சின்னமாக்குகிறோமே. சாதிக்க எவ்வளவோ இருக்க எம்மவர்கள் இதைத் தேடிச் சாதிக்கின்றார்களே" எனப் பல ஆவேசமான வாக்கியங்களை கொட்டித்தீர்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் ஏதோ ஒரு விசை என்னை முற்றாக அடக்கியது.

என் மன ஆழ்கடலில் அமைதியை வர வழைத்தபடி மறுபக்கம் திரும்பினேன் என்பதை விட என் பார்வைப்புலத்தை மாற்றிக்கொண்டேன் என்று கூறுவதே சிறந்தது. அம்மா இருக்கையில் அமர்ந்திருப்பதை பல தலைகளுக்கு ஊடாக கண்டு கொண்டேன். அந்த நெரிசலினுள்ளும் சற்றே நிம்மதியடைந்தேன். அவர் கண்கள் என்னைத் தேடின தனது இருக்கையை எனக்கு அளிப்பதற்காய். சற்றே மறைந்து கொண்டேன்.

என் தோளை ஒரு கை பற்றுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். ஒரு வயோதிபப் பெண்மணி முகமெல்லாம் வியர்த்து களைத்துப்போய் நின்றிருந்தார். அவர் உதடுகள் ஏதோ கூற முயல்வதை புரிந்து கொண்ட நான் வாகன இரைச்சலை ஊடறுத்துச் செவி சாய்த்தேன். " பிள்ளை, கொஞ்சம் விலத்துவியோ? உந்த சீற்கம்பியில் பிடிச்சுக் கொண்டு நிப்பன். முழங்கால் மூட்டு வீங்கிப் போச்சு கால் விறைக்குது ஒப்பிரேசனுக்குத்தான் பெரியாஸ்பத்திரிக்குப் போறன். முழங்கால் மூட்டு தேஞ்சு போச்சுதாம்" என தன் துன்பத்தை விளக்கினார்.என்னால் இயன்றளவு விலத்தி நின்று இடமளித்தேன்.

அந்த வயோதிபப் பெண் இருக்கைப் பிடியில் சாய்ந்து நின்றவாறு ஆறுதல் பட்டுக் கொண்டாள். அவள் நின்றிருந்த இருக்கையில் ஓர் மாணவன் அமர்ந்திருந்தான். ஏதோ பிரத்தியேக வகுப்புக்குச் செல்பவன் போல் தோற்றமளித்தான். அவன் நினைத்திருந்தால் அந்த வயோதிபப் பெண்ணுக்கு இடமளித்திருக்கலாம். ஏனெனில் அவ்வளவு அருகில்தான் அந்த வயோதிபப் பெண்மணி நின்றிருந்தாள். ஏதோ அந்த வயோதிபப் பெண்ணைத் தான் பார்க்காது போன்று பாசாங்கு செய்தான். " இவர்கள் தான் இன்றைய தலைமுறையினர்" என எண்ணியபடி பேருந்து எவ்விடத்தில் பயணிக்கிறது என அறிய முற்பட்டும் முடியவில்லை.

அதே வயோதிபப் பெண் என் அருகில் தான் நின்றிருந்தாள் அவளுக்கும் எனக்குமான இடைவெளி வெறும் 5 c.m. தான் இருக்கும். மீண்டும் ஏதோ கூற முற்பட்டாள். இந்தத் தடவை மிகவும் களைத்திருந்தாள். " பிள்ளை, கால் ஏலாம இருக்கு. விறைச்சுப் போச்சுது. உணர்ச்சி இல்லாம இருக்கு விழுந்திடுவன் [illegible] டா இடம் [illegible] கூப்பிட்டனான் கேக்கேலப்போல எனக்கும் குரல் எழும்பாதாம் நீ கொஞ்சம் கேட்டு விடுறியோ பிள்ளை" என்றார். உண்மைதான் பேருந்து இரைச்சல் மற்றும் பாட்டு இரைச்சலினால் அவன் காதுகள் மரத்திருக்கலாம். நான் கொஞ்சம் உயர்ந்த குரலில் அவனுக்குக் கேட்கும் படியாக " பிறதர், ப்ளீஸ் இந்தப்பாட்டிக்கு இடம் கொடுங்கோவன்" என்றேன். என் ஒலியதிர்வுகள் அவன் செவிப்பறையைத் தாக்கியிருக்க வேண்டும் என நினைத்தேன். கையடக்கத் தொலைபேசியை எடுத்து அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இரு சிறு ஒலி பெருக்கிகளைத் தன் காதுகளில் திணித்துக் கொண்டான். ஓங்கி ஒரு அறை விடலாம் போன்றிருந்தது.

அவன் கற்ற கல்வி, கற்றுக் கொண்டிருக்கும் கல்வி, கற்ற பாடசாலை, கல்வி கற்றுக்கொண்டிருக்கும் கல்வி ஸ்தாபனம் அனைத்தையும் ஒரு நொடியில் அர்த்தமற்றதாக்கி விட்டான்.

"இவ்வாறான இளைஞர்களா நாளைய தலைவர்கள்?" நினைக்கும் போது சிரிப்பு வந்தது. " சிலவேளை நான் வெள்ளைத் தோல் போர்த்தியிருந்த அந்த வயோதிபப் பெண்ணுக்காய் இடம் கேட்டிருந்தால் தந்திருப்பானா?" எனவும் எண்ணிக் கொண்டேன். ஏனெனில் இன்றைய இளைஞர்கள் அப்பிடித்தானே. " இப்படிப்பட்ட சமூகத்திலா நாம் வாழ்கிறோம்?" என எண்ணி வேதனைப்பட்டேன்.


" மனிதாபிமானம், மனிதநேயம் அற்ற ஜடங்கள் நாம். ஒரு தடவை உங்கள் செருப்பால் உங்களை நீங்கள் அடித்துக் கொள்ளுங்கள். நானும் அடித்துக் கொள்கின்றேன். நானும் இன்றைய இளைய சமுதாயத்தில் ஒருத்திதானே அந்தப்பாவத்துக்காய் அடித்துக் கொள்கிறேன்." என அந்த மாணவ இளைஞனைப் பார்த்து பொரிந்து தள்ள வேண்டும் என ஆசைப்பட்டேன். வழக்கம் போல அடக்கிக் கொண்டேன்.

அந்த வயோதிபப் பெண்ணின் கண்ணில் உருண்டோடத் தயாரான கண்ணீர்த்துளிகளைக் கண்டேன். அவற்றில் முற்று முழுதாக வலி நிரம்பியிருந்தது. உடைந்து ஒழுகியது கண்ணீர் முட்டி. பேருந்து யாழ்.பிரதான பேருந்து தரிப்பிடத்தில் தனது ஓட்டத்தை நிறுத்தியது. "நாளைய எதிர்காலத் தூண்கள்" பலர் பேருந்தை விட்டு இறங்கினர். இறந்த காலத்தூணான அந்த வயோதிபப் பெண்மணி வெற்றுப் பேருந்து இருக்கையில் களைப்பு, வலி தீர அமர்ந்திருப்பதைக் கண்களுக்குள் சிறைப்பிடித்த படி இறங்கினேன்; என் அம்மாவின் கையைப் பற்றியபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமல் : சரித்திரமும்

■ ஆதங்கன்



கமலஹாசன். தமிழ் சினிமாவில் தவிர்க்கப்பட முடியாத பெயர். களத்தூர் கண்ணம்மாவில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான போது கமலஹாசன் இந்தளவு தூரத்துக்கு உயர்வார் என்று யாரும் கனவில் கூட எண்ணியிருக்க மாட்டார்கள். ஆனால் தன்னுடைய பன்முக ஆளுமைகளை ஒரு வரையறைக்குள் குறுக்கி விடாது எப்போதும் தேடலோடு அலைகின்ற கலைஞனான கமல் தமிழ் சினிமாவை உலக அரங்கில் முதன்மையான இடத்தை பிடிக்க வைத்திருக்கிறார்.

ஏனைய சராசரி நடிகர்களைப் போலவே ஆரம்பத்தில் கமலஹாசனும் திரையில் தோன்றினாலும், நாடகக் குழுவில் இருந்து வந்த அனுபவம் படத்துக்குப் படம் அவரை பட்டை தீட்டிக் கொண்டே இருந்தது. அத்தோடு படப்பிடிப்புத் தளத்துக்கு வந்து, கமராவுக்கு முன்னால் நடித்ததுடன் திருப்திப்பட்டுக் கொண்டு செல்கின்ற ஏனைய நடிகர்களுக்கு மத்தியில் கமல் மட்டும் வித்தியாசமானவராக இருந்தார். தன்னுடைய படங்களில் நடிப்பைத் தவிர்ந்த ஏனைய தளங்களை நோக்கியும் தன்னுடைய அவதானத்தை கூர்மையாக்கினரார். முறையாக கற்காமல் துரோணரின் வித்தைகளை தூரத்தில் இருந்தே பார்த்துக் கற்ற ஏகலைவன் போல திரைப்படத்துறையில் எல்லா நுட்பங்களையும் கரைத்துக் குடித்தார்.

கமலுக்கு வாய்த்த இயக்குநர்களும் அவருடைய அசாத்திய எழுச்சிக்கு காரணமாகினர். குறிப்பாக பாரதிராஜா, பாலச்சந்தர், சிங்கிதம் சீனிவாசன், பாலுமகேந்திரா என்று மிகச் சிறந்த இயக்குநர்களின் முதற்தேர்வாக கமலஹாசனே இருந்தார். தமிழ் சினிமாவை இன்னொரு தளத்துக்கு அழைத்துச் சென்ற இந்த இயக்குநர்களின் அருகிருப்பு கமலஹாசனையும் வித்தியாசமான கலைஞனாகச் செதுக்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் நடிப்பில் வித்தியாசத்தைக் காட்டத் தொடங்கினார். படத்துக்குப் படம் ஒரே தன்மையோடு தோன்றாமல் தனது எல்லாப் படங்களிலும் ஒப்பனையில் இருந்து கதாபாத்திரத்தின் குணவியல்பு வரை வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்பதில் கமல் கவனம் காட்டினார். இதனாலேயே மூன்றாம்பிறை, இந்தியன் என்ற படங்கள் கமலுக்கு இந்தியாவின் சிறந்த நடிகர் என்ற விருதைப் பெற்றுக் கொடுத்தன. தனியே நடிப்போடு மட்டும் நின்றுவிடாது பாடல், இசை, நடனம், திரைக்கதை என்று சினிமாவின் எல்லாச் சந்து பொந்துகளுக்குள்ளும் தலைகாட்டினார். தன்னுடைய படங்களை வேறு இயக்குநர்கள் நெறியாள்கை செய்யும் போது கூட அவற்றில் தானும் பங்கெடுப்பது கமலின் குணம். இது பல இயக்குநர்களுக்கு சினிமாவின் பரிமாணங்களைக் கற்றுக் கொள்ள உதவியது. ஆயினும் சில இயக்குநர்கள் தங்களுடைய . வேலையில் கமல் தேவையின்றி மூக்கை நுழைக்கிறார் என்று குறைபட்டுக் கொண்டதும் உண்டு. தமிழில் மட்டுமல்லாமல் ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் என பிறமொழிகளிலும் முத்திரை பதித்தார் கமல். மொத்தத்தில் தமிழ்த் திரையுலகில் சகலகலா வல்லவனாக வலம்வருகிறார்.

இப்படியெல்லாம் திரைத்துறையில் சாதனை படைத்த கமலஹாசன் நிறைய சர்ச்சைகளுக்கும் பெயர்போனவர். இவருடைய குடும்ப வாழ்க்கையும் எப்போதும் ஒரே திசையில் பயணித்ததில்லை. சரிகா, வாணி என இருவரைத் திருமணம் செய்து அவர்களை விவாகரத்தும் செய்துவிட்டார். பின்னர் பல நடிகைகளோடு இணைத்து கமலஹாசனின் பெயர் உலா வந்து கொண்டே இருந்தது. சில வருடங்களுக்கு முன்னர் கூட சிம்ரனோடு கமலஹாசன் ஒன்றாகச் சுற்றுகிறார் என்ற கதை பரவலாக அடிபட்டது. பின்னர் மறைந்து போனது. இப்போதும் கௌதமியோடு கரம்கோர்த்துக் கொண்டு தான் எந்த விழாவுக்கும் அவர் வருகிறார். தன்மீதான இத்தகைய கதைகளை கமலஹாசன் ஏற்றுக்கொண்டதோ, மறுத்ததோ கிடையாது. தன்னுடைய இயங்கியலை தனது பாட்டுக்கு தொடர்ந்து கொண்டிருப்பார் அவர்.



வாழ்க்கையில் மட்டுமல்லாது திரையிலும் பல்வேறு சர்ச்சைகள் அவரைச் சூழ்ந்து கொண்டன. ஹேராம், ஆளவந்தான், விருமாண்டி, தேவர்மகன் போன்ற இவரது படங்கள் சினிமா உலகை மட்டு மல்லாது அரசியலையும் வம்புக்கு இழுத்து பெரும் சலசலப்பை உரு வாக்கின. மனித நேயத்தை மட்டுமே வலியுறுத்தும் கமல் சாதிச் சண்டைகள், இனத்துவப் பிளவுகள் என்பவற்றை எல்லாம் தனது படங்களில் கேலி செய்வது வழமை. அத்தோடு அவர் ஒரு நாத்திகரும் கூட. ஆகவே கடவுள்களை கிண்டலடிப்பதும் கமல் படங்களில் தவறாது இடம்பெறும் விடயமாகும். (இத்தனைக்கும் கமலஹாசன் பிறப்பால் பிராமணர்) இவையெல்லாம் இனவாதிகளையும், மதவாதிகளையும் பொங்கியெழ வைத்தன. கமலின் அநேக படங்கள் ஆர்ப்பாட்டங்கள், திரையரங்கு மீதான தாக்குதல்கள், கொடும்பாவி எரிப்பு, வழக்குகள் என்பவற்றைச் சந்திப்பது சாதாரணமான விடயமாகிவிட்டது.

இந்த வகையில் கமலின் இப்போதைய சர்ச்சை 'விஸ்வரூபம்' என்ற ரூபத்தில் வந்திருக்கிறது. எப்போதும் புதுமைக



“ கமல் காட்
கோச்சடை
தெரியவரு
படங்களை
திரைப்பட
இலாபத்தை
திரையரங்கி
ஏராளமான
போகிறார்

## முஸ்லிம்களும் போர்க்கொடி!

விஸ்வரூபம் திரைப்படம் சர்வதேச தீவிரவாத வலைப்பின்னலை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம் மக்களை இழிவுபடுத்தும் காட்சிகள் இடம்பெற்றிருக்கலாம் என ஆரம்பத்தில் பல முஸ்லிம் அமைப்புகள் விஸ்வரூபத்துக்கு தடை போடக் கிளம்பின. ஏனெனில் இதற்கு முன்னர் வெளிவந்த துப்பாக்கி திரைப்படத்தில் முஸ்லிம் குடும்பங்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பது போன்ற ஒரு காட்சி இடம்பெற்றிருந்தது. முஸ்லிம் மக்களை புண்படுத்தும் வகையில் இந்தக் காட்சி அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, படத்தில் இருந்து அந்தக் காட்சி தூக்கப்பட்டது.

இதேபோன்று விஸ்வரூபத்திலும் சர்ச்சைக்குரிய காட்சிகள் இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆயினும் இந்தத் திரைப்படத்தைப் பிரத்தியேகமாகப் பார்வையிட்ட முஸ்லிம் அமைப்புப் பிரதிநிதிகளும், தணிக்கையின்போது கண்டுகளித்த தணிக்கைக் குழு அதிகாரிளும் விஸ்வரூபத்தில் முஸ்லிம் மக்களை இழிவுபடுத்தும் காட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். இதன்பின்னரே முஸ்லிம் அமைப்புகளிடையே தோன்றிய விஸ்வரூப எதிர்ப்பலைகள் அடங்கியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைகளும்



ளையே புகுத்தி அதில் வெற்றி காண்பது கமலோடு கூடப் பிறந்த குணம். தொழில் நுட்ப ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், நடிப்பு ரீதியாகவும் கமல் அமைத்துக் கொடுத்த பாதையில்தான் இப்போதைய தமிழ் சினிமா அலுங்காமல் குலுங்காமல் பயணிக்க முடிகிறது. அதேபோன்று தமிழ் சினிமாவின் தற்போதைய இக்கட்டான நிலைக்கு முடிவு கட்ட கமல் கண்டு பிடித்துள்ள உபாயம்தான் திரைப்படங்களை திரைக்கு வர முன்னரே 'டி.டி.எச்' என்ற தொழில்நுட்பத்தின் ஊடாக தொலைக் காட்சிகளில் ஒளிபரப்புதல்.

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை ஒரு காலத்தில் போட்ட முதலுக்கு மேலாகப் பன் மடங்கு உழைக்கக் கூடியதாக இருந்தது. இதனால் திரைப்படத் துறையில் முதலீடு செய்ய பலர் ஆர்வம் காட்டி இருந்தனர். ஆனால் இப்போது அப்படியல்ல. பிரபல நடிகர், நட்சத்திர இயக்குநர்கள், பிர மாண்டமான தயாரிப்பு என்பன உள்ள படங்கள் மட்டுமே வசூலை அள்ளிக் கொடுக்கும் என்ற நிலை. சிறு முதலீட்டுப் படங்களுக்கு திரையரங்குகள் கிடைப்பது அரிது. அப் படியே கிடைத்து அந்தப் படங்கள் வெற்றி பெற்றாலும் கூட இலாப வீதம் மிகக் குறை வாகவே இருக்கும். அத்தோடு இணையங் களிலும் திருட்டு வீ.சி.டிகளிலும் இத் தகைய திரைப்படங்கள் திரையிடப் பட்ட கையோடே வெளியாகி விடுகின்றன. இதனால் திரையரங்குக்கு வரு வோரின் எண் ணிக்கை பாதி யாகக் குறைந்துவிட்டது. தயாரிப்பாளர்கள் எல்லோரும் திரைத்துறையில் முதலீடு செய்வதை விடவும் வேறு தொழில்களில் முதலீடு செய்வதைப் புத்திசாலித்தனம் என்று நினைக்கத் தொடங்கி விட்டார்கள். இதே வேளை மேலே சொல்லப்பட்டது போன்று பிரபல நடிகர், நட்சத்திர இயக்குநர் என்ற கூட்டணியில் பிரமாண்டமாக உருவாகும் திரைப்படங்கள் படுதோல்வி அடைந்து விட்டால் அந்தப் படத்தின் இயக்குநர் பிச்சை எடுக்கும் நிலைக்குப் போய்விடவேண்டியது தான்.

ஐங்கரன் இன்ரநஷனல் நிறுவனம் (இதன் உரிமையாளர் இலங்கையின் இணுவிலைச் சேர்ந்தவர்) திரைப்படங்களை வெளிநாடுக ளில் வெளியிடும் உரிமத்தின் மூலம் பலகோடி ரூபாய்களைச் சம்பாதித்திருந்தது. அந்த ருசியில் ஐங்கரன் நிறுவனம் விஜய், அஜித் எனும் உச்ச நட்சத்திரங்களை வைத்து பிரமாண்டமான படத்தயாரிப்பில் இறங்கி யது. ஆனால் ஐங்கரனின் போதாத காலமோ என்னவோ இரண்டு படங்களுமே பப்படங் கள் ஆகின. ஆனால் அந்த நிறுவனம் தயாரித்த சிறுமுதலீட்டுப் படங்கள் இரண்டு வெற்றியளித்தன. இருந்தபோதிலும் பிர மாண்டமாகத் தயாரித்த படங்களால் ஏற் பட்ட நட்டத்தின் பத்து வீதத்தைக் கூட வெற்றிபெற்ற இரண்டு படங்களின் இலாபம் ஈடுசெய்யவில்லை. இதனால் இப்போது திரைப்படத் தயாரிப்புத் துறையில் இருந்து அந்த நிறுவனம் தூர ஓடிப்போய்விட்டது.

எனவே திருட்டு வீசிடியை ஒழிக்க திரைப்படத் துறையினரும் அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தன. ஆனால் அவையெல்லாம் விழலுக்கு இறைத்த நீரே. இந்தச் சமயத்தில் தான் 'டி.டி.எச்' தொழில் நுட்பம் மூலம் திரைப்படங்களை வெளியி டுவதால் தயாரிப்பாளர்கள் தமது முதலீட்டுச் செலவை இலகுவாகப் பெற்றுக் கொள்ள லாம் என்ற யோசனையைக் கமல் முன் வைத்தார். ஆயினும் குறித்த படம் திரை யிடப்படுவதற்கு முன்னர் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பப்பட்டால்தான் அதிகளவா னோரை படத்தைப் பார்க்கச் செய்ய முடியும். அத்தோடு 'டி.டி.எச்' தொழில்நுட் பத்தில் திரையிடப்படும் படங்களை தர விறக்கம் செய்யவோ, திருட்டு விசிடிகளில் பதிவு செய்வதோ கடினமானது. இந்த விஷப்பரீட்சைக்கு எவரும் துணியவில்லை. ஆனால் பரிசோதனை எலிகளைத் தேடிக் கொண்டிருக்காமல் தன்னுடைய படத்தையே பரிசோதனை எலியாக்கியுள்ளார் கமல்.

தான் உழைக்கும் வருமானம் அனைத்தை யும் திரைப்படத்துறைக்கே முதலீடு செய்யும் கமல் தயாரித்துள்ள படம் தான் விஸ்வரூபம். சர்வதேச தீவிரவாதத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படத்துக்கு 100 கோடிக்கும் மேல் செலவாகியுள்ளது. தற் போது இந்தப் படத்தில் 'டி.டி.எச்' உரிமத்தை நான்கு நிறுவனங்களுக்கு கமல் வழங்கி யுள்ளார். இதனால் இந்த மாதம் 11ஆம் திகதி படம் திரைக்கு வர முன்னரே 10ஆம் திகதியே தொலைக்காட்சிகளில் விஸ்வ ரூபத்தை ஒளிபரப்பு முடிவு செய்தார் கமல். ஆனால் இதற்கு திரையரங்கு உரிமையாளர்கள் போர்க்கொடி தூக்கினர். 'டி.டி.எச்'சில் விஸ்வரூபம் ஒளி பரப்பானால் திரையரங்குக்கு ரசிகர்கள் வரமாட்டார்கள் என்றும் எனவே தமது தொழிலையே நாசமாக்கும் இந்த முயற் சிக்குப் பதிலடியாக விஸ்வரூபம் படத்தை எந்தவொரு திரையரங்கிலும் காட்சிப்படுத்த மாட்டோம் என்றும் அறிக்கை விட்டனர். ஆயினும் வெளிமாநில திரையரங்குகளிலும், திரையரங்க உரிமையாளர் சங்கத்துக்கு எதி ரானவர்களின் திரையரங்குகளிலும் விஸ்வ ரூபம் திரையிடப்பட்டுள்ளது. இதேவேளை 'டி.டி.எச்'சில் கடந்த 30 இலட்சம் பேர் விஸ்வ ரூபத்தை கண்டு களிக்க முன்பதிவு செய்துள்ளார். இதன்மூலம் சுமார் 300 கோடி ரூபா கிடைத்துள்ளது. இதன்மூலம் தான் போட்ட முதலைவிட இலாபத்தையே கமல் சம்பாதிக்க முடியும். எனவே சர்ச்சைகளை சாத னையாக்கிய கமலின் விஸ்வரூபம் திரைப் படம் திரையில் ஒருநாள் ஓடினாலும் கூட அது வசூலில் அவரைக் கைவிடாது.

கமல் காட்டிய இந்த வழியை ரஜனியும் கோச்சடையானில் பின்பற்றவுள்ளதாகத் தெரியவருகிறது. இதேவேளை சிறுமுதலீட் டில் படங்களைத் தயாரிப்போரும் இனிமேல் தமது திரைப்படங்களை 'டி.டி.எச்'சில் ஒளிபரப்பி அதிக இலாபத்தை ஈட்டமுடியும். இதனால் மீண்டும் திரையரங்கில் நம்பிக்கை யோடு முதலீடு செய்ய ஏராளமான தயாரிப் பாளர்கள் படையெடுக்கப் போகிறார்கள். அத்தோடு வீட்டில் இருந்தபடியே மிகத் தெளிவான 'டி.டி.எச்'சில் விஸ்வரூபத்தை மக்கள் கண்டுகளித்து விட்டதால் அந்தப் படத்தை திருட்டு விசிடியில் பதிவு செய் தாலும் அதனை விற்கமுடியாதிருக்கும். இப் போது நட்டம் திரைப்படத் தயாரிப்பாள ருக்கோ, திரையரங்க உரிமையாளருக்கோ அல்ல. மாறாக திருட்டு விசிடிக்களை உற்பத்தி செய்வோருக்கு மட்டுமே 'டி.டி.எச்' எமனாக மாறியுள்ளது. நாளடைவில் திருட்டு விசிடி களுக்கு இந்த 'டி.டி.எச்' முறை முற்றுப் புள்ளி வைக்கும். அதற்கு கமல் போட்ட பிள்ளையார் சுழியே விஸ்வரூபம்.

**ட்டிய இந்த வழியை ரஜனியும் டையானில் பின்பற்றவுள்ளதாகத் ருகிறது. இதேவேளை சிறுமுதலீட்டில் ளைத் தயாரிப்போரும் இனிமேல் தமது டங்களை 'டி.டி.எச்'சில் ஒளிபரப்பி அதிக தை ஈட்டமுடியும். இதனால் மீண்டும் ங்கில் நம்பிக்கையோடு முதலீடு செய்ய ன தயாரிப்பாளர்கள் படையெடுக்கப் ர்கள்."**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறவேண்டிய கருத்துருவங்கள்



பெண்கள் எவ்வளவு தான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூகப்பார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் பெண்ணிற் பெருத்தக்க யாவுள' என்று வள்ளுவர் எழுப்பிய கேள்வி முதலாக இன்று வரை பெண்ணினம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

பெண்களின் மாற்றங்களும், முன்னேற்றங்களும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவில் இருந்தாலும் பெரும் பாலும் துயரமும் ஆதங்கமும் நிறைந்ததாகவே இருக்கின்றன. அண்மையில் நண்பர் ஒருவர். நீங்கள் [பெண்கள்] எல்லாம் நத்தைகள், ஓட்டுக்குள் தான் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார். இது அவரது தனிப்பட்ட கருத்து என்றாலும் கூட சமூகத்தில் காலம் காலமாய் பெண்கள் பற்றிய பார்வை இப்படித் தான் இருந்து வருகிறது என்பதற்கு இந்தக் கூற்று சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது.

பெண்களின் ஆற்றல்களை பலமாக அங்கீகரிக்க பலரும் விரும்புவதில்லை. உதாரணமாக, யாருக்கும் அடங்காமல் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த கொம்பன் யானையை தன் வலிமையால் அடக்கிக்காட்டிய வீரப்பெண் அரியாத்தை. ஆனால் இந்தப்பெண் தெய்வஅருளாலேயே யானையைப் பணியவைத்ததாக கூறுவோரும் உள்ளனர். அதாவது பெண்ணின் ஆற்றலை ஜீரணித்துக் கொள்ளமுடி யாத நிலையில் வெளிப்படுத்தும் கருத்தே இதுவெனக் கொள்ளலாம். தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்ல உலகிலுள்ள பெரும்பாலான இனச் சூழலில் சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் இருப்பதை நாம் அறியலாம். பிரான்ஸின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கரங்கள் நீண்டு விரிந்து தெரிந்த போது ஆர்க் எனும் கிராமத்திலிருந்து ஆவேசமாய் புறப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களை மோதிவென்று படைநடத்திய வீரப்பெண் ஜோன் ஒப் ஆர்க் பின்னாளில் சூனியக்காரி யென்று எள்ளி நகையாடப்பட்டு, உயிருடன் தீமூட்டிக் கொளுத்தப்பட்டாள் என்பது வரலாறு.

இன்றைக்கும் பல கிராமங்களில் பெண் பிள்ளைகள் பரீட்சைகளில் கூடிய பெறுபேறு பெற்றால், விளையாட்டுக் களில் பரிசுகள் பெற்றால் அதை பிள்ளையின் கெட்டித்தனம் என்று மெச்சுவதை விடுத்து கடவுளின் கிருபை' என்று மாற்றுவதை நாம் கண்கூடாய் பார்க்கின்றோம். காலம் காலமாகப் பெண்கள் பற்றி ஊன்றப்படுகின்ற கருத்து கருவூலங்களின் தோற்றப்பாடுகளே இவைகள். பெண்களின் உலகம் விரிவடைந்து வருகின்றது. பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். பெண்கள் சாதித்து வருகின்றார்கள். ஆனாலும் பெண்கள் மீதான சமூகப்பார்வை என்பது மாற்றம் காணாததாகவே இருக்கிறது.

இத்தகைய நிலைக்கு எந்த ஒரு தனிநபரையும் குற்றவாளியாகக் கூற முடியாது சமூகத்தில் பெண்கள் பற்றி ஆழப்பதிந்திருக்கும் அடிப்படைக் கருத்தில் மாற்றம் காணப்பட வேண்டும். பெண் என்பவள் யார்? இந்த உலக இயக்கத்தில் பெண்ணின் பங்களிப்பு என்ன? அவள் தனது பங்களிப்பை முழுமையாக செய்யவிடாமல் தடுத்துநிற்கும் காரணிகள் என்ன என்பவை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஆண்மைக்கும், பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது'. எனவே படைப்பியல் ரீதியாக பெண் வேற்றுமை காட்டப்படவேண்டியவள் அல்ல, மாறாக பெண் என்பவள் சமூகச் சுழற்சிக்கு உந்து சக்தியாகத் திகழவேண்டியவள்.

ஆனால் மிகவும் துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான பெண்கள் தம் நிலை உணர்வதில்லை. அகங்கள் குறுகியிருப்பதால் முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன. முன்னேற்றங்கள் தடைப்பட்டு குறுகிய வட்டத்துக்குள் வாழும் போது அவள் தன்னாலும் பிறராலும் சுமையாக உணரப்படுகிறாள். இந்த உணர்வு காலப் போக்கில் பெண்ணுக்குள் தாழ்வுச் சிக்கலை உண்டு பண்ணுகிறது.

காலம்காலமாய் பெண்பற்றி ஊன்றப்படும் பிற்போக் கான கருத்துகளும் பெண்ணுக்குள் உருவாகும் தாழ்வுச் சிக்கலும் சேர்ந்து அவளை அடிமைப்படுத்தி விடுகின் றன. அடிமையாகிப் போகும் மனநிலை காலப் போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவே வாழ்வாகிப்போகிறது. உண்மையில் பெண் என்பவள் தனக்குள் இருக்கின்ற திறமையை ஆற்றலை உணர்ந்து கொள்ளக்கூடியவளாக வேண்டும். கல்வியில் நாட்டங் கொண்டு சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தலைமைத் துவப் பண்புகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தன்னம்பிக்கை அற்று ஒதுங்கிக்கொள்ளும் நிலையை மாற்றவேண்டும்.

நிர்வாகம் என்பது பெண்களுக்கும் ஏற்ற விடயம் தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டு களுக்குப் பின் என்றாலும் பதிலளிக்க வேண்டும் உலக சனத்தொகையில் சரிபாதி பெண்கள் என்கிறார்கள். முன்னேற்றங் காட்டும் அல்லது ஆற்றல்களை வெளிப்படுத்தும் பெண்களின் தொகை மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது.

உலகம் அறிவியலில் எவ்வளவோ தூரம் முன்னேறி விட்ட போதிலும் பிற்போக்கான எண்ணங்களையும், சிந்தனை களையும் பற்றிப் பிடித்து தொங்கும் பெண்களும் இருக்கத்தான் செய் கின்றார்கள். இன்றைக்கும் சீதனப் பிரச்சினையால் திருமணமாகாத பெண்களின் பட்டியல் இருக் கின்றது.


வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவ தாகக் கூறி ஏமாற்றும் முகவர்களை நம்பி நடுத் தெருவில் நிற்கும் பெண்களின் கதைகள் வெளிவருகின்றன. காதலித்து ஏமாற்றப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது பெண்களின் உலகம் அறியாமையிலிருந்து இன்ன மும் முற்றாக விடுபடவில்லை என்றே கூறமுடிகிறது. குடும்பம் பல பெண்களுக்கு சுமையாக அழுத்து கிறது. 'யாராவது என் பாரத்திற் பாதியைச் சுமக்க முன்வரமாட்டார்களா?' என்று ஏங்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

பெண்கள் தம்மனவுலக இருளில் இருந்து வெளிவரவேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை சிந்திக்க வேண்டும். 'நன்மையும் தீமையும் பிறர்தர வாரா' என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். எமது வாழ்வும் வலுவும் எமது கரங்களிலேயே தங்கியிருக் கின்றது. ஆரோக்கியமான சமூகத்தை - தேசத்தைக் கட்டி எழுப்பவேண்டுமென்றால் பெண்கள் அக விடு தலை அடையவேண்டும்.

பெண்கள் பற்றி சமூகத்தில் நிலவுகின்ற பிற்போக்குத்தனமான கருத்துக்கள் களைந்தெறியப் பட வேண்டும். பெண்களின் ஆற்றல் களும், ஆளு மைகளும் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் தம்மீது ஆழப்புரையோடி நிற்கும் சமூக கொடுமையும் அநீதியுமான ஒடுக்குமுறையைப் பெண்கள் உடைத்தெறிய வேண்டும்.

# அவளும் ஒரு பெண்



அறிமுகமான
ஆரம்பத்திலேயே
என்னோடு நீ
அன்பான உரிமையோடும்
அனுசரணையான
அக்கறையோடும்
உறவாடி மகிழ்ந்த போதுதான்
உணர்ந்து கொண்டேன்
என் மீது அன்பு செலுத்தவும்
என் தவறுகளைச் சுட்டிக்காட்டி
இலட்சியமுள்ள மனிதனாக
செம்மைப் படுத்தி
வழிப்படுத்தவும்
எனக்கு இன்னொரு
தாய் கிடைத்து விட்டாளென்று
எங்கள் வீட்டு உறவுப்
பூந்தோட்டத்தில்
புதிதாய் பூத்த
அண்ணி என்னும் அருமலரே!
குலவிளக்காய் வந்த உம்மைக்
குறைவின்றிக் காப்பது
எமது கடனே !

செ.ரவிசாந்
குப்பிளான்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இருப்பதைக் கொண்டு மகிழுங்கள்



மனிதர்களாகப் பிறந்த அனைவருக்கும் வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்வதற்கு தேவை என்பது மிக முக்கியம். தம்முடைய வாழ்வாதார வசதிகளை இன்றைய மனிதர்கள் பெருக்கிக் கொண்டே போனாலும் ஆசை என்பது மனி தர்களை விடுவதில்லை. எல்லோரும் தாம் மற்றவர்கள் போல் வாழ வேண்டும்; தன்னையும் மிகைப்படுத்தி காட்ட வேண்டும் என்றே நினைப்பார்கள். அதிலும் குறிப்பாக நவீனயுகம் பொருளாதாரம் உயர்நிலையில் சென்றாலும் நாகரிக மோகமும் துளிர்விட்டு விருட்சமாகி வளர்ந்துள்ள நிலையில் பெண்கள் தமது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது பெரும் சிரமமாகவே இருக்கின்றது. ஆணுக்கு சமமாக பெண் எல்லா விடயத்திலும் முன்னேறி இருந்தும் ஆண்களை விடப் பெண்களுக்குத் தான் ஆசைகள் அதிகம். உடை அலங்காரம் ,ஆபரணச் சேர்க்கை , வசதி வாய்ப்புக்கள் எல்லாம் தமக்கே கிடைக்க வேண்டும் என்றே நினைப்பார்கள். பெண்களே ஒரு கணம் உங்கள் பொருளாதாரத்தை சிந்தியுங்கள். அதற்கு ஏற்றபடி உங்கள் ஆசை களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். உங்களது குடும்ப வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு செலவுகளைக் கட்டுப்படுத்தி இருப்பதைக் கொண்டு திருப்தியான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்ளுங்கள். அடுத்தவர்களைப் போல நானும் இருக்கவேண்டும் என்ற மன நிலையை மாற்றி விடுங்கள். மகிழ்ச்சி இல்லாமல் இருப்பதற்கு காரணம் எப்போதும் எம்மிடம் இல்லாதது பற்றி நாம் சிந்திப்பது தான். நமக்கு என்ன கிடைத்திருக் கின்றதோ அதைப்பற்றி சிந்திப்பது இல்லை. எது எம்மிடம் இல்லையோ அதைப்பற்றி கவலைப்பட்டு வாழ்க்கையை சுவாரஸ்யம் இல்லாமல் ஆக்கி விடுகின்றோம். எனவே பெண்களே இனி நாம் கிடைப்பதைக் கொண்டு வாழப் பழகிக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

18.01.2013 முதல் 19.01.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை பெற்று முக்கிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். பொறுமையுடன் செயற்பட அறிவுரை வழங்குவது நல்லது. உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும். இல்லறத்துணை குடும்ப சூழ்நிலையை உணர்ந்து உதவிகரமாக நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் அபிவிருத்திப் பணி செய்து முன்னேற்றமும், கூடுதல் பணவரவும் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் கால அவகாசத்தில் பணி இலக்கு நிறைவேற்றுவர்.

**இடபம்**- உங்கள் வாழ்வு வளம் பெற, கடந்த காலத்தில் உதவி செய்த நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கு நன்றியுடன் நடந்து கொள்வீர்கள். இதனால், நடைமுறை வாழ்க்கை இன்னும் சிறப்பாகும். எதிரியின் கெடு செயல் அணுகாத சுமுக வாழ்வுமுறை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டத்தை மதித்து நடந்து, அதிக முன்னேற்றம் பெறுவீர்கள். அதிகாரிகள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவர். மாணவர்கள் கவனமுடன் படித்து சராசரி தேர்ச்சியடைவர்.

**மிதுனம்**-எந்தச் செயலையும் பரிசீலித்து நிறைவேற்றுவதால், தகுந்த பலன் கிடைக்கும். புத்திரர் பழகுகிற நண்பர்களின் கெடுபிடியான பேச்சுகளை பொருட்படுத்தாமல், மன உறுதியுடன் செயற்படுவது நல்லது. நிர்ப்பந்த பணக்கடன் சரிசெய்ய, பொருள்களின் பேரில் கடன்பெறுகிற சூழ்நிலை இருக்கும். இல்லறத்துணையிடம் தேவையற்ற பேச்சைத் தவிர்ப்பதால் குடும்பவாழ்வு முறை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையை அதிகரிக்க அதிக கவனம் கொள்வது நல்லது. பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை உணர்ந்து செயற்பட வேண்டும்.

**கடகம்**- நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய வரைமுறைகளை மேற்கொள்வதால் செயல்கள் எளிதாகும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நிதானித்துப் பேசுவது நல்லது. எதிரியால் இருந்த தொல்லை குறையும். இல்லறத்துணையிடம் குடும்பத்தின் பழைய விவகாரம் குறித்த விவாதத்தைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற சிலரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அதிகாரிகளுக்கு விரும்பிய இடமாற்றம் பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

**சிங்கம்**- உங்கள் வாழ்வியல் நடைமுறை வியத்தகு முன்னேற்றம் பெறும். கடினமாக உழைப்பதிலும் தான தர்மம் ஆகிய அறப்பணியிலும் ஈடுபடுவீர்கள். மனதில் நிம்மதியும் பெருமிதமும் அதிகரிக்கும். எதிரியால் உருவான கெடுசெயல் பலமிழந்து போகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகைப்பயன் பெற அனுகூலம் உண்டு. மாணவர்களுக்கு ஞாபகத்திறன் அதிகரித்து கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**கன்னி**-வாழ்வியல் நடை முறையில் உள்ள சிரமங்களைச் சரிசெய்ய, அதிக கால அவகாசம் தேவைப்படும். எல்லோரிடமும் இனியவார்த்தை பேசுவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். குறைந்தளவில் பயன் தருகிற நீண்டதூர அலைச்சல் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. இளைய சகோதரர் வகையில், அவர்களிடம் மனக்கிலேசம் வராத அளவிற்கு நடந்து கொள்வதால் ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் கிடைப்பதில் தாமதம் இருக்கும். மாணவர்கள், சக மாணவர்களுடன் படிப்பு தவிர, ஏனைய விடயங்கள் பற்றி அதிகம் விவாதிக்க வேண்டாம்.

**துலாம்**- உங்கள் எண்ணத்திலும் செயலிலும் நேர்மைதிறன் அதிகரிக்கும். சமூகத்திலும் நண்பர்களிடமும் கூடுதல் அந்தஸ்து கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவதால் தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத்துணை, குடும்ப உறுப்பினர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சில நடைமுறை மாறுதல்களை உருவாக்கி உற்பத்தி, விற்பனையில் வளர்ச்சி பெறுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு, அரசு தொடர்பான அனுகூலம் எதிர்பார்த்த வகையில் கிடைக்கும்.

**விருச்சிகம்**- வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய திட்டங்களை ஆர்வமுடன் செயற்படுத்துவீர்கள். முயற்சி சிறந்து, கூடுதல் நன்மைகளைப் பெற்றுத்தரும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை மனநிறைவுடன் பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரித்து உபரி பணவரவைப் பெற்றுத்தரும். அதிக தொழில் உபகரணம் வாங்க தகுந்த வாய்ப்பு உருவாகும். மாணவர்கள் கல்வி தொடர்பான சந்தேகங்களை உரியவகையில் நிவர்த்தி செய்து சிறந்த தேர்ச்சி இலக்கை அடைவர்.

**தனுசு** - நன்கு பழகியவர்களிடமும் இதமான வார்த்தை பேசுவது அவசியமாகும். இளைய சகோதரர், உழைப்பின் மூலம் வாழ்வில் உயர்ந்து, உங்களுக்கு தேவையான உதவியை மனமுவந்து தருவார். எதிரி மறைமுகமான வகையில் உங்கள் வாழ்வுக்கு இடையூறு செய்கிற முயற்சியில் ஈடுபடுவர். நேர்மை வழியில் மாற்று உபாயங்களைப் பின்பற்றி நல்ல சூழ்நிலையை உருவாக்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ற அளவில் லாபவிகிதம் கிடைக்கும். மாணவர்கள் அதிக பயிற்சிமுறையால் மட்டுமே தேர்ச்சி இலக்கை அடைய இயலும்.

**மகரம்**-சமூகத்தில் ஏற்படுகிற மாற்றங்களால் மனதில் அதிருப்தி எண்ணம் உருவாகலாம். சொந்தப் பணிகளை நிறைவேற்ற முயற்சிப்பதால் மனநிலை சிறப்பாக இருக்கும். எதிரியின் தீய செயல் மறைமுகமாக இருக்கும். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனத்துடன் அதிக உழைப்பால், தேவையான நன்மையைப் பெறுவீர்கள். பணிபுரியும் பெண்கள் புதிய யுக்திகளைப் பயன்படுத்துவதால் பணி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். மாணவர்கள் ஆன்மிக விடயங்களை அறிந்து கொள்வதில் கூடுதல் ஆர்வம் கொள்வர்.

**கும்பம்** - உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் வளர்ந்து புதிய் நன்மைகளைப் பெற்றுத்தரும். சுய அந்தஸ்தை அதிகரிக்கும் நோக்கில் செயற்படுவீர்கள். எதிரியால் இருந்த தொல்லை குறையும். நண்பர், உங்களின் நல்ல செயல்களுக்கு உறுதுணையாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் தேவைக்கேற்ப கூடுதல் மூலதனம் செய்வீர்கள். பணவரவு சீராகும். அரசியல்வாதிகளுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்கள், கூடுதல் பயிற்சி முறை பின்பற்றுவதால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சி இலக்கை அடையலாம்.

**மீனம்**- இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி, சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாத்துக் கொள்வது நல்லது. உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை, குடும்பத்தின் எதிர்கால நலன் குறித்த எண்ணங்களை பகிர்ந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் முன்னேற தேவையான, அரச உதவி கிடைக்கும். பணியாளர்கள், சகபணியாளர்களிடம் அவசியமற்ற பேச்சைத் தவிர்ப்பது [illegible] பற்றி சிலர் சொல்லும் அவதூறுகளின் உண்மை நிலை அறிந்து செயற்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## காருண்யவான்களுக்கு.....

போரின் வடுக்கள்
பொதிந்து
ஊரின் வடுக்களில்
அமைதி கனக்க
தேற்ற முடியாத தேம்புதலோடு
குண்டு கிழித்ததில்
மீதித் துண்டுகளாய்....
வறுமைக்குள் சிக்குண்டு
வாழ்வுக்கு வழி தேடி
வலுவிழந்திருக்கும்
எம் உறவுகளை
கண் திறந்து பாருங்களேன்
காருண்யவான்களே...!
கண்டபடி கை கழுவும் (கை
துடைக்கும்)
கண்டுப் பணத்திலே ஒரு
துண்டு...
கண்ணீரில் ஒரு துளி
கஞ்சாவும் கசிப்பும்
கருக்கிய பணம்...
கட்டைப் பாவாடைக்காய்
வெட்டிய மிச்சம்....
சிகரெட்டுக்கு விலையாகும்
சில்லறைகள்
சிரிப்பில் பாதி....
விபசாரத்தில் வீணாகும்
வியர்வை
அறாவட்டியில் அவதரித்த
குட்டிகள் கோரச் சீதனமென்று
கொள்ளையடித்ததில் கொஞ்சம்
வெள்ளையுடையுடுத்து
வாங்கிய லஞ்சம்
வேள்வியன்று கோயிலிலே
கொட்டிய பொங்கல்
வீட்டில் கொலுவிருக்கும்
கொற்றவையின் உண்டியலில்
தத்தெடுத்த சுயநலத்தை
கொண்டு வந்து படையுங்கள்
கருணைப் பாலத்திலுள்ள....
உயிர்களுக்கு
கடவுள் உண்பது - உங்கள்
கண்களுக்குத் தெரியும்....!



கவிஞர் த.பருத்திதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை தெரியுமா? 194

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் வெந்நீர் ஊற்றுக்கள் அதிகம் உள்ள நாடு எது?
2. தாவரங்களில் வேகமாக வளரக் கூடியது எது?
3. கணினி யுகத்துக்கு வித்திட்டவர்கள் யார்?
4. சனநாதமங்கலம் என்று அழைக்கப்பட்ட இடம் எது?
5. ஒட்சிசனைக் கொண்டு செல்லும் குருதிக் குளாய் எது?

### விடைகள் 193

1. ஆஸ்திரேலியா
2. தென்னாபிரிக்கா
3. சுறா, திமிங்கிலம்
4. சகாரா
5. இளையதம்பி நரசிங்கன்


### வெற்றி பெற்றோர் விவரம் (192)

* கோ.துலக்சினி, தரம் -4, திருஞானசம்பந்தர் வித்தியாலயம்.
* ப.ஆரணி, யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.


### விடை தெரியுமா?

தெரிந்தால் 19.01.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



ர.காருனி, தரம்-2 எவ், சென்.ஜோண் பொஸ்கோ வித்தி.



எஸ்.அட்சயா, எலிம் பாலர் பாடசாலை மானிப்பாய்



கி.பவித்திரன், தரம்-5, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை



வி.கார்த்திகேயன், தரம்-7, சாவகச்சேரி இந்துக் கல்லூரி



எஸ்.அனிருத்தன், தரம்-1, மானிப்பாய் மகளிர் கல்லூரி



சி.பிரவீன், யாழ்.இந்துக் கல்லூரி



கி.முகுந்தனா, புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளி




பா.ஜசினேக்கா, தரம்-6, கைதடி விக்கினேஸ்வரா வித்தி.

## பழ மொழிகள்

ஏழை பேச்சு அம்பலம் ஏறாது
கோபம் பாவத்தைத் தேடும்
ஆழமறியாது காலை விடாதே
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
ஆனைக்கும் அடி சறுக்கும்

யாழ்ப்பாணக் கல்லூரி.

## கிழவனுக்கா கல்யாணம்?



கிருஷ்ணசர்மா தனது ஊரிலிருந்து தன் நண்பரான இராமசர்மாவைக் காண வந்தார். அங்கு அவர் தன் நண்பருடன் பேசிக் கொண்டிருக்கையில் அந்த நண்பரின் இரண்டு வயதுப் பெண் குழந்தை மழலை மொழி பேசி ஓடி விளையாடியது. அந்தக் குழந்தை நல்ல சிவப்பு நிறமாகவும் 'கொழு கொழு' என்றும் வளர்ந்திருந்தது. அந்தப் பெண் குழந்தையைக் கண்டு கிருஷ்ண சர்மா மகிழ்ந்து போனார்.

அவர் இராமசர்மாவிடம், "இவள் உங்கள் மகளா?" என்று கேட்டார். இராமசர்மாவும் "ஆம். இவளுக்கு இரண்டு வயதாகிறது," என்றார். கிருஷ்ணசர்மாவும், எனக்கு இவளை மிகவும் பிடித்திருக்கிறது. என் நான்கு வயது மகனுக்கு இவளை கல்யாணம் செய்துவிடலாம். இப்போதே நிச்சயித்துவிடலாமா?" என்று கேட்டார்.

அப்போது இராமசர்மா, "இப்போது உங்கள் மகன் வயது என் மகளின் வயதில் இரண்டு மடங்கு. என் மகளுக்கு இருபத்தைந்து வயதாக இருக்கும் போது, உங்கள் மகனின் வயது இவளது வயதைப் போல இரு மடங்காகி ஐம்பதாகிவிடும். நான் ஐம்பது வயதுக் கிழவனுக்கா என் மகளை மணம் செய்து வைப்பேன்? முடியாது!" என்றார். தனது நண்பரின் அறியாமையை எண்ணி கிருஷ்ணசர்மா சிரித்துக் கொண்டார்.

## உங்களுக்கு தெரியுமா?

மகாத்மா காந்தி நினைவுத் தபால் தலை முதன் முதலில் வெளியிட்ட நாடு அமெரிக்கா.
நியூக்கினித் தீவில் சிலந்தி வலையால் மீன் பிடிப்பார்கள்.
உலகில் அதிகம் சேமிப்பவர்கள் சிங்கப்பூர் மக்கள்.
விலங்குகளில் அதிகம் பல் வலியால் தவிப்பது கரடி.
குங்குமப் பூ தோன்றிய இடம் பாரசீகம்.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்

## அழகு

மலருக்கு அழகு மணமாம்
மனிதனுக்கு அழகு நற்குணமாம்
உணவுக்கு அழகு சுவையாம்
உறவுக்கு அழகு ஒற்றுமையாம்
வாழ்வுக்கு அழகு இலட்சியமாம்
வெற்றிக்கு அழகு நேர்மையாம்
மன்னனுக்கு அழகு வீரமாம்
மாணவனுக்கு அழகு பணிவாம்

## நிறம் தீட்டி மகிழுங்கள்




சு.பூரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரீகத்தில் அதிவேக உட்புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங்களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.

# 'அடிப்பார்த்தல்'

## அற்றுப் போகும் தடங்கள்

மனித குல வரலாற்றில் மனிதனின் சாதனைக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் மிகப் பிரதானமாக அமைந்த மனிதனின் மிக முக்கிய உறுப்பு கால் பாதம் ஆகும். மனிதனின் முதல் போக்குவரத்துச் சாதனம் கால் தான் மனிதனின் தேசங்களை கண்டறியவும், தேசங்களை வெல்லவும் ஆளவும் கால்களே பிரதான காரணிகளாக அமைந்தன.

இத்தகைய கால்களின் வெற்றிக்கு கால் பாதம் மனிதனுக்கு சாதகமாக அமைந்தமை முக்கியமானதாகும்.

மனிதனின் பாதம் ஏற்படுத்தும் தடம் '' காலடி'' எனப்பட்டது. சந்திரனில் நீல் ஆம்ஸ்ட்ரோங் ஏற்படுத்திய காலடியும் இது தான்.

எமது பிரதேசத்தில் இந்தக் காலடிகள் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றன. இதனால் எமது பிரதேசங்களில் ''காலடி'' பார்த்தல் எனும் மரபு உருவாகி இருந்தது. இதற்குள் நிறைய விடயங்கள் இருக்கின்றன. நுழைவோம்.

காலடி பார்த்தல் என்பது ஒருவருடைய காலடியை பார்த்து அவர் யார்? என்று சொல்வதாகும். இது நாளடைவில் 'அடிப்பார்த்தல்' என எம்மவர்களால் அழைக்கப்பட்டது.

ஒரு நாள் சின்னம்மாச்சி வீட்டுப் பக்கம் காலை 7 மணி இருக்கும் ' குய்யோ முறையோ' என்று ஒப்பாரி வைக்கும் சத்தம் கேட்டது. நான் காதை உற்றுக் கேட்டேன். சின்னம்மாச்சி தான் கதறும் சத்தம்.

முகம் கழுவிய குறையில் சின்னம்மாச்சி வீட்டுப் பக்கம் ஓடினேன். நான் போக முன்பே தேவண்ணை அங்கு போய் விட்டிருந்தார். சின்னம்மாச்சிக்கு ஒரு 65 வயதிருக்கும். புருஷனை எப்போதே இழந்து விட்டார். பிள்ளைகள் கிடையாது. சின்னம்மாச்சி முற்றத்தில் தலைவிரிகோலமாக கத்திக் கொண்டிருந்தார். அவிழ்கின்ற குறுக்கு கட்டை அடிக்கடி கட்டிக் கொண்டார்.

'' பாடையில போவார்
பாழ்படுவார் பாழ்படுவார்
ஒண்டும் விடாம உரிச்சுக் கொண்டு
போட்டாங்களடி போட்டாங்களடி''

நான் தேவண்ணையிடம் '' என்ன அண்ணா'' என்றேன்

' இராத்திரி ஆரோ கள்ளர் முழுத் தேங்காயையும் உரிச்சுக் கொண்டு போட்டாங்களாம்''

'' எத்தினையனை

'' ஐயோ முன்னூற்றி பதினைஞ்சடா.....''

அதுவும் பாட்டாகவே வந்தது

'' நானென்ன செய்வேன் கணேசுப் பிள்ளை கடைக் கென்னண்டு படியளப்பேன்''

சின்னம்மாச்சிக்கு இருக்கின்ற வருமானம் அந்த தேங்காய்கள் தான். கணேசபிள்ளை கடையில் தனக்குத் தேவையான உணவுப் பொருள்களை கடனுக்கு வாங்கிக் கொண்டு தேங்காயை விற்று காசை மாதா மாதம் கொடுப்பார்.

(கணேசபிள்ளையவர்கள் கடனுக்கு பொருள்களும் வழங்கி மீன் வாங்கவும் காசு கொடுக்கும் அற்புத மனிதர்)

'' ஐயோ தேவி ஓடிப்போய்
கனகுவை கூட்டிக் கொண்டு வா
அடிபாப்பிப்பம் ஒருக்கா''

கனகப்பா என்ற கனகசபை ஊரில் காலடி பார்ப்பதில் மிகவும் கெட்டிக்காரர். ஏழு கிராமங்களை சேர்ந்தவர்களது காலடி பார்ப்பதில் தேர்ந்தவர்.

நானும் தேவண்ணாவிடம் கனகம்மா வீட்டிற்கு வேகமாக போனோம்.

நாங்கள் அவரின் வீட்டிற்குள் நுழையும் போது அவர் மாடுகளை வண்டிலில் பூட்டிக் கொண்டிருந்தார். முன் கோபி. ''ஏன்'' என்று பாய்வார்.

தேவண்ணை மிகக் கவனமாக

''கனகப்பா இவ சின்னமாச்சியின்ரை தேங்காயை ஆரோ உரிச்சுக் கொண்டு போட்டாங்களாம். ஒருக்கா அடி பாக்கவாம்.....'' என்று இழுத்தார்.

'' சீ ... இப்ப நான் காலடி பார்க்கிறதில்லை.''

அவர் மாடுகளை நுகத்தில் பூட்டி முடித்தார்.

'' இல்லை கனகப்பா பாவம் தனியா இருக்கிற மனுசி''

'' அப்ப நீ போய் கூட இரன்''

'' இஞ்சை பகிடியை விட்டிட்டு ஒருக்கா வா''

'டேய் காலமை வெள்ளெண முகம் கழுவாம ஓடுங்கோடா. அங்காய் கடவாய் வழியுது''

'' அது வழியட்டும். நீ வா''

நாங்களும் விடுவதாயில்லை.

''போய் ஒருக்கா பாருங்கோவனப்பா பாவம்தானே கிழவி''

'' ஆய்...... அடுத்தவ அடுப்புக்கரி ...... என்ன அனுப்பிறா''

எல்லோரும் திட்டு வாங்கிக் கொண்டோம்.

வண்டி புறப்பட்டது.




'' ஏறுங்கோடா''.

வண்டி சின்னமாச்சி வீட்டுப் படலையடியில் நின்றது.

''ஐயோ கனகு இதை ஆரெண்டு பார்த்துச்சொல்லு''

''ஆரெண்டு பார்த்துச்சொன்னா புடிச்சுக் கொண்டந்து கப்பில கட்டிப்போடுவாய்''

''உன்னான ஆர் எண்டு சொல்லு. நான் கட்டுவன்''

சின்னமாச்சி அங்கு திருடிச் சென்றவர்களின் காலடிகளை வட்டம் போட்டு வைத்திருந்தாள்.

கனகப்பா ஒவ்வொரு காலடியாகக் கூர்ந்து பார்தார் .

''மூண்டு பேர் வந்திருக்கிறாங்கள்''

கனகப்பா துல்லியமாகச் சொன்னார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது

''ஆரெண்டு சொல்லு கனகு''

''ஆங்...? எனக்கு விளங்கேல்லை''

''உனக்கு விளங்காம விடாது''

''நானென்ன பொலிஸ் நாயே?''

''சொல்லு கனகு''

கனகப்பா வெற்றிலை கடதாசியை மடியில் இருந்து எடுத்து போடத் தொடங்கினார். 'புளிச்'சென்று துப்பி விட்டு சின்னமாச்சிக்கு கிட்ட போய் காதில் ஏதோ சொன்னார்.

சின்னமாச்சி மீண்டும் கத்தத் தொடங்கினார்.

''ஆய்... சத்தம் போடாதை நான் சொன்னதெண்டு சொல்லாதை''

'' பாழ் படுவார்
பாழ் படுவார்
பாடையில போவார்''

கனகப்பா சொன்னபடி சின்னமாச்சி நேரே அவர்கள் வீட்டுக்குப் போய் சத்தம் போட்டுக் கத்தினாள். தலை வாசல் வீட்டுக்குள் தேங்காய்ச் சாக்கு ஒன்றும் கிடந்ததாம்.

தேங்காய் எடுத்தவனின் தாய், கிழவியை கும்பிட்டு மன்றாடி தேங்காய்க் காசைக் கொடுத்து '' மரியாதை கெட்டுப் போய்டு மனை. சத்தம் போடாதை. இனி இப்பிடி செய்ய விடன். நீ போ'' என்று கிழவியை அனுப்பி விட்டாள்.

இன்று வரை எனது ஆச்சரியம் கனகப்பா அந்த அடிகளை எவ்வாறு அடையாளப்படுத்தினார் என்பது தான். எமது கிராமங்களில் அப்போது சனநெருக்கடி மிக அதிகம். சுமார் இரண்டாயிரம் பேர் இருந்திருப்பார்கள். ஐந்து கிராமங்கள் அணித்தாக இருந்தன.

அவ்வாறு இருக்கும் கிராம மக்களின் காலடிகளை துல்லியமாக பாடம் பண்ணி ஞாபகம் கொள்ள வேண்டும். அந்த நாள்களில் யாரும் செருப்பு போடுவதில்லை. தூர இடங்களுக்கு போவதொன்றாலும் செருப்பு போடுவது மிகக் குறைவு. இது-இச்செயற்பாட்டை - அடி பார்த்தலை மிக சுலபமாக்கியது எனலாம்.

மனிதனின் காலடிகள் ஒவ்வொன்றும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவை வித்தியாசமான அமைப்பைக் கொண்டவை. இந்த வித்தியாசத்தை அடிப்படையாகக் கொண்டே காலடியை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இது மிகவும் சிரமமான நிலையும் கூட. ஆனால் இது இன்னாரது காலடி என அறிய இந்த வித்தியாசம் உதவும். மனிதர்களின் காலடி போல வேறெந்த விலங்குக்கும் காலடி இருப்பதில்லை. ஆனாலும் ஒரு காலடி குறித்த ஓர் மனிதனது காலடி என்று அடையாளப் படுத்துவதற்கு நீண்ட அனுபவம் தேவை. அதாவது ஒவ்வொரு மனிதரதும் அடியையும் பின்பற்றி பல தடவைகள் அவதானித்து, இனம் கண்டு வைத்திருக்க வேண்டியது இந்தப் புலனாய்வு வேலைக்கு அவசியம்.

ஒரு காலடியைப் பார்த்து இது யாருடைய காலடி என்று சொல்ல வேண்டிய தன் காரணங்கள் பலவுண்டு. யாராவது உரியவரின் அனுமதியின்றி அவருடைய வளவில் நுளையும் போதே காலடி பார்க வேண்டி வரும். பொருள் திருட்டு, இளநீர்த் திருட்டு, கால்நடைத் திருட்டு போன்ற வேளைகளில்தான் காலடி பார்க்க வேண்டி வரலாம்.

அடிப்பார்த்து ஆள் சொல்வதால் பல சண்டைகளும் அடிப்பார்ப்பவருக்கு ஏற்படுவது வழமை.

இந்த திருட்டுக்களில் வித்தியாசமான ஒரு திருட்டு மேயக்கட்டின மாடுகளின் கட்டுக்கயிற்றை அவிழ்த்துக் கொண்டு போவதுதான்.

ஒருமுறை நாகலிங்க மாமாவின் மாட்டின் கயிறை யாரோ அவிழ்த்துக் கொண்டு போய்விட்டார்கள்.

நாகலிங்க மாமா அரைஞாண் கொடிக் கயிறு அவிழ்ந்து விட்டாலே தாலிக் கொடி தொலைந்தது போல் அழுதழுது தேடுபவர். இதை விடுவாரா?

''அட பாழ்படுவான். உதிலை பணைக்கை குந்தியிட்டு வரக்கிடேல முழுக்க அவிழ்த்துக் கொண்டு போட்டான்.

''பாடையில போவான்''

''பாடையில போவான்''

(எங்களூரில் வயது போன பலர் ''பாடையில போவான்'' என்ற பதத்தால் திட்டுவதை கேட்டிருக்கிறேன். ''பாடை'' என்றால் இறுதி ஊர்வலத்துக்கு பயன்படும் அமைப்பு. திட்டு வாங்குபவர் என்ன பாடையில் ஏறி உலகையா வலம் வரப்போகின்றார்? சடலமாகத்தான் போக வேண்டும். சடலம்பிரக்ஞை அற்றது. இவ்வாறு செய்பவர்கள் சடலத்துக்கு ஒப்பானவர்கள் என்பதே இதன் அர்த்தம். கடும் கோபம் வரும் போது இவ்வாறு திட்டுவார்கள்).

சரி மாட்டின் கயிற்றுக்கு என்ன நடந்தது ?.

நாகலிங்க மாமா தோட்டத்துக்கு காவலுக்கு நின்ற கனகப்பாவை கூட்டிக் கொண்டு வந்து அடிப் பார்ப்பித்தார்.

கனகப்பா சி.ஐ.ஏ. மாதிரி. அடிப் பார்த்து ஆளைபிடிப்பதில் விண்ணர். ஆனால் அன்றைக்கு ஏதோ அலுத்துக் கொண்டார். (சுவடுகள் பதியும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண் குடிசையில் வாழும் ஒக்ஸ்போர்ட் பட்டதாரிப் பெண்




அசை போட 61 ஒரு விடயம்

அந்தப் பெண்மணிக்கு 58 வயது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரி. நவீன நாகரிகம் உலகம் முழுவதும் பரந்து விரிந்து வளர்ந்துள்ள இந்தக் காலத்தில்- அதுவும் பெரிய பிரித்தானியாவில் பழைய பாணியில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார் என்பது ஆச்சரியமாகவிருக்கின்றது.

எம்மா ஓர்பாச் என்ற இந்தப் பெண் கடந்த பதின்மூன்று ஆண்டுகாலமாக தனது வீட்டில் மின்சாரம் இல்லாமல் தனது சொந்த முயற்சியில் தனக்குரிய வசதிகளைச் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார். தனது குடியிருப்பை தாமே அமைத்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி தனது உணவுகளையும் தாமே உற்பத்தி செய்து கொள்கின்றார்.

அவருடைய தினசரி வேலைகளில் தனது மரக்கறித் தோட்டத்தைக் கவனிப்பது, பழங்கள் சேகரிப்பது, தனது மூன்று வளர்ப்பு ஆடுகளையும் பராமரிப்பது, ஏழு கோழிகள் இரண்டு குதிரைகளையும் கவனித்துக் கொள்வதுடன் விறகு வெட்டிக் கொண்டு வருவதும் அடங்கும். தனக்குத் தேவையான தண்ணீரை அருகில் உள்ள நீரோடையில் இருந்து பெற்றுக் கொள்கிறார். தூரத்திலுள்ள கடைகளுக்கு எப்போதாவது போவதுண்டு, அரிசி மற்றும் சொக்கிலேட் வாங்கிக் கொள்வதற்காக. தினசரி அவரது மாலை நேரங்கள், உணவு சமைப்பது, நெருப்பில் குளிர் காய்வது மற்றும் தம்மிடமுள்ள ஹார்ப் வாத்தியத்தை இசைத்து மகிழ்வதில் கழியும். இரவு 7.30 மணியானதும் கம்பளி மெத்தைக்குள் நுழைந்து படுத்துக் கொள்வார்.

அவர் கூறுகிறார் "இப்படித்தான் நான் வாழ விரும்புகிறேன். இந்த வாழ்க்கை முறையானது என்னை மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வைத்திருக்கிறது. இதுவே எனது இலட்சிய வீடு"

இங்கிலாந்தில் வேர்ஸ்மாகாணத்தில் அமைந்துள்ள எம்மாவின் வீடு ஒரு மலைப் பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. ட்ரிஸ் பிரிடொல் என்று தனது வீட்டுக்குப் பெயர் சூட்டியுள்ளார். வேல்ஷ் மொழியில் ஆவிகளின் இடம் என்பதுதான் கருத்து.

அவருடைய பிள்ளைகள் 20, 30 வயதானவர்கள் லண்டன், பிரிஸ்டல் மற்றும் பிரைட்டன் ஆகிய இடங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் எப்போதாவது தமது தாயாரைப் பார்க்க வருவார்கள். ஆனால் நவீன தொழில் நுட்பங்கள், தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் கொண்டு வரலாகாது என தடை விதிக்கப்பட்டுள்ளது. அவை தனது வாழ்க்கைப் பாணியைக் கெடுத்துவிடும் என்று எம்மா அஞ்சுகிறார். அவரது தந்தையார் நல்ல வயலின் வாசிப்பவராக இருந்துள்ளார். தாயார் ஒரு நூலகர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலையில் சீன மொழியில் ஒரு பட்டத்துடன் கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறிய எம்மா ஒரு பாச் ஜூலியன் ஓர்பாச் என்ற கட்டடக்கலை வரலாற்று ஆசிரியரை மணமுடித்தார். இருவரும் சேர்ந்து 1993 ஆம் ஆண்டு நியுபேர்ட்டுக்கு அருகில் மலைப் பிரதேசத்தில் ஒரு பொருளாதார சமூக அமைப்பை நிறுவினார்கள். ஐந்து ஆண்டுகள் வாழ்க்கை மகிழ்ச்சியாக ஓடியபின்னர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்குள்ளாகி வழக்குவம்பு என்றுதிரிந்தபின் 2008 ஆம் ஆண்டு மீண்டும் வெற்றியுடன் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். அதிகாரிகள் அவர்களின் குடியமர்வு திட்டத்துக்கு அங்கீகாரம் அளித்தார்கள்.

எம்மா நோய் சிகிச்சை நிலையமொன்றையும் நடத்துகிறார். அருகிலுள்ள குடியிருப்புகளில் ஐந்தாறு பேர் குடியிருக்கிறார்கள். அவர்கள் வழங்கும் சிறு கட்டணத்தைக் கொண்டு எம்மா நகரசபை வரிகளையும், வீடு பழுதுபார்த்தல் முதலியவற்றையும் கவனித்துக் கொள்கிறார்.

★ ★ ★

### இரட்டைச் சகோதரிகளுக்கு ஒரே நாளில் பிரசவம்

இரட்டைச் சகோதரிகளுக்கு ஒரே நாளில் குழந்தை பிரசவம். அமெரிக்காவில் ஒகையோ மாகாணத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. புதுவருடத்துக்கு முதல் இரவு இந்த இரு சகோதரிகளும் இரண்டு மணி நேர வித்தியாசத்தில் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அய்மீ மற்றும் அஷ்லீ என்ற 19 வயது இரட்டைச்சகோதரிகளும் சிறு வயதிலிருந்தே ஒரே விதமான உடைகளை அணிவதை பழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இருவரும் ஏறக் குறைய ஒரே சமயத்தில் கர்ப்பிணிகள் ஆனார்கள்.

கடந்த வாரம் திங்கட்கிழமை அய்மீ தனது புதல்வனை இரவு 12.11 மணிக்குப் பெற்றெடுத்தார். அஷ்லீயின் மகன் இரவு 2.03 மணிக்குப் பிறந்தார். உறவினர்கள் வசதியாக அவர்களை வந்து பார்க்கக் கூடியதாக பிரசவத்துக்கு ஒரே மருத்துவமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குழந்தை பிறப்பு ஒரே நாளில் இடம்பெற வேண்டும் என்று சகோதரிகள் திட்டமிட்டிருக்கவில்லை. குறைந்தது ஒருவார வித்தியாசமாவது இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டதாக அவர்களின் தாய் மார் செலா பார்சன் பத்திரிகையாளர்களிடம் கூறியிருந்தார். இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் அவர்கள் வளர்ந்த பிறகு ஒரே மாதிரி உடையணிவதை நிறுத்தி விட்டாலும் திட்டம் எதுவும் இன்றியே பெரும்பாலும் ஒரேவிதமான காரியங்களையே செய்து வந்திருக்கிறார்கள் என்றார் அவர்களின் தாயார்.

பத்து தடவைகளில் ஒன்பது தடவைகள் ஏதாவது ஒருவிடயத்தை ஒருவர் ஊதா நிறத்தில் செய்து கொண்டு வந்தார் என்றால் மற்றவர் அதே விடயத்தை இளம் சிவப்பு நிறத்தில் செய்து கொண்டு வந்திருப்பார் என்றார் அவர். அதுதான் இப்போது குழந்தை பிறப்பிலும் நடந்து முடிந்துள்ளது.

★ ★ ★

### சிங்களவர்களும் திராவிடர்கள்தான்

டெய்லிமிரர் பத்திரிகையில் வந்துள்ள "உங்கள் சிந்தனை" கடிதம் ஒன்று: கமராள என்பவரால் இது எழுதப்பட்டுள்ளது:-

எம்மை இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதை எது தடுக்கிறது? சிங்கள மக்கள் இந்தியாவிலிருந்து வந்த திராவிடர்கள் என்பது உண்மைதான். ஒரு சாதாரண மரபணு சோதனை செய்து கொள்வதின் மூலம் எவரும் தமது முன்னோரின் வழித்தடத்தைக் கண்டறிந்து கொள்ளலாம். வெளிநாடுகளில் வாழும் பல சிங்கள நண்பர்கள் இந்த சோதனையைச் செய்து கொண்டுள்ளார்கள். இந்த பரம்பரையின் வழித்தடம் தென்னிந்திய ஆதி குடிகளைச் சென்றடைகிறது. அவர்களின் வழித்தடமானது கிழக்காபிரிக்காவுடன் தொடர்புடையது. (இவர்கள் எல்லாருமே ஒரேவித மரபணு தொடர்பைக் கொண்டுள்ளனர்) இவர்கள் எவருக்கும் ஆரியத் தொடர்புகள் இருக்கவில்லை. கடந்த காலத்தில் சில தீய நோக்கம் கொண்டவர்களால் உருவாக்கப்பட்ட மாயையாகும் இது. இப்பொழுது இதனை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்க முடியும். வட இந்தியர்களுக்கு ஆரியர்களோடு தொடர்பு இருந்துள்ளது. அவர்கள் ஈரானில் இருந்து வந்தவர்கள். சிங்கள மக்களுக்கு இவர்களுடன் மரபுத் தொடர்புகள் எதுவும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமும் மங்கையும்

■ சூர்யா

காலங்கள் தோறும் வீரர்களும் வீராங்கனைகளும் உலகில் அவதரித்த வண்ணம்தான் உள்ளனர். நாமும் அவர்கள் தொடர்பாக புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வாசித்த வண்ணம் தான் உள்ளோம். ஆனால் அவர்களது வீர வரலாறானது எமக்கு வெறும் கதையாக சுவைப்பதற்கல்ல. மாறாக நாம் அச்சத்தை ஒழித்து வெற்றி விளக்கை ஏற்றி செம்மையாக வாழ்வதற்கே. வீரம் என்பது உடல் பலம் மட்டுமல்ல. அது மனவலிமையையும் தன்னம்பிக்கையுமாகும்.

பிரச்சினைகள் மலைபோல் வரினும் கலங்காது எதிர்த்து நிற்பவர் ஒரு நல்ல வீரர். ஆம், அவர்கள் உடல்,மனபலம் மிக்கவர்கள்தான். ஆனால் எப்போது எண்ணங்கள் திசைமாறி ஆக்கத்திற்கன்றி அழிவுக்கு வீரம் உபயோகிக்கப் படுகின்றதோ, அப்போது அது பயனற்றுப் போகிறது. அவ்வாறான செய்கையில் ஈடுபடுவோர் வீரர்கள் என்பதற்கான தகுதியை இழந்து விடுகின்றனர். வீரரொருவருக்கு அன்பு, கருணை, ஒழுக்கம் என்பனவும் அவசியம் என்பதை நாம் மறந்துவிடலாகாது. 'என்னிடம் வீரம் இல்லை அது சிலருக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றது' என எண்ணுதல் தவறு. வீரம் அனைவரிடமும் உள்ளது எனினும் சிலரே அதனை உணர்ந்து விருத்தி செய்துள்ளனர். பிறரும் முயற்சித்து அதனை வளர்த்திடில் நாடு நலம் பெறும்.

ராணிமங்கம்மா, சத்ரபதி சிவாஜி, அலெக்ஸாண்டர் ஆகியோர் வரிசையில் ஜான்சி ராணி லக்ஷ்மி பாயும் ஒருவர். இவர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த வீராங்கனை. எமது நாடு 1815இல் முழுமையாக பிரித்தானியர் வசமானதன் பின்னரும் கூட இந்தியாவினை அவர்களால் முழுமையாக கைப்பற்ற முடியாது போனதற்கு இவரும் முக்கியமானதொரு காரணம். அதாவது பிரித்தானியருக்கு தமது ஏகா திபத்திய ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு பெரும் தலையிடியாக விளங்கியவர் ஜான்சி இராணியே. பிரித்தானிய இராணியை கூட அச்சுறுத்தியது அவரது நாமம். நிச்சயம் ஜான்சிராணி லக்ஸ்மிபாய் பிரித்தானிய இந்திய வரலாற்றில் மறக்கவும் மறைக்கவும் முடியாத ஒரு நபர். இவ்வாறான வீர மங்கையை சில வருடங்களுக்கு முன் எம் நாட்டில் பெரும்பான்மையானோர் அறிந்திருக்கவில்லை. அவரது பெயரினை மாத்திரம் சிலர் கேள்வியுற்றிருந்தனர். ஆனால் இன்றோ நிலை தலைகீழாகி அனைவரும் அறிந்த, விரும்பும் நபராகிவிட்டார் லக்ஸ்மி பாய். காரணம் ஜீ (Zee) டி.வி யில் ஒளிபரப்பாகிய ஜான்சி ராணி மெகாத்தொடரே.

ஜான்சி ராணி லக்ஸ்மிபாய் அவர்கள் 19 ஆம் திகதி நவம்பர் மாதம் 1828 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள வாரணாசி (காசி) என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் மோர்பந் தம்பே. தாயார் பெயர் பகீரதிபாய். தனது நான்காவது வயதிலே தனது தாயாரை இழந்தார். இவரது இயற்பெயர் மணிகர்ணிகா ஆகும். அனைவராலும் செல்லமாக மனு என அழைக்கப்பட்டார். சிறுவயதிலேயே குதிரையேற்றம், வாள்வீச்சு, வில்வித்தை, தற்காப்பு போன்ற பல்வேறு யுத்தக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். அதனைப் போல் அவர் கல்வியிலும், புத்திசாலித்தனத்திலும் சிறந்து விளங்கினார். அவர் அடைந்த அனைத்து வெற்றிகளுக்கும் இவரது குரு தாத்தையா தோப்பே அவர்கள் மூல காரணம் என்றால் அது மிகையாகாது. மனு சிறுவயதிலேயே சுதந்திரவேட்கை அடையப் பெற்றார். அதனால் விதுராவின் அரசனான பாஜிராவ் பேஷ்வாவின் அன்பைப் பெற்று அவரது மகள் போல் அரண்மனையில் வளர்க்கப் பட்டாள். மனுவின் தந்தையார் ஆரம்பத்தில் இவ் அரசரிடம் தான் வேலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிகர்ணிகா ஜான்சியின் மஹாராஜாவான கங்காரராவைத் திருமணம் செய்து லக்ஸ்மிபாய் எனும் பெயரில் ஜான்சியின் மகாராணியானார். சாதாரண பிராமண குலத்துப் பெண், ஜான்சியின் இராணியானது அவளது அதிர்ஷ்டம் எனப் பலர் எண்ணினும் உண்மையில் அது பாரத நாட்டின் வரப்பிரசாதமே. ஜான்சி ராணியின் மகன் தாமோதரரால் கொல்லப்பட்டதும் அனந்ராவை வளர்ப்புமகன் ஆக்கிக்கொண்டார். இவரது கணவன் கங்காதரராவும் இறக்கவே வளர்ப்பு மகனை முடிக்குரியவனாக ஏற்க முடியாது என மறுத்த ஆங்கிலேயர் ஜான்சியை தமதாக்க எண்ணினர். தன் நாட்டை விட்டுக்கொடுக்க இணங்காத லக்ஸ்மிபாய் ஆங்கிலப் படைகளுக்கெதிராக போரில் குதித்தார். பன்னாட்டு அரசர்களையும் ஒன்று திரட்டினார். போர்த் துக்கேய படை நடுநடுங்க ஆரம்பித்தது. எனினும் போர்த்துக்கேயருடனான போரில் காயமடைந்து குவாலியர் என்னும் இடத்தில் 18ஆம் திகதி ஜூன் மாதம் 1858 இல் உயிர்நீத்தார். இந்தியாவின் மூவண்ணக் கொடிக்கு வித்திட்டவரும் இவரே.



சரி, இவ்வளவு பராக்கிரமத்தை கொண்டிருந்த ராணியால் அவர் காலத்திலேயே சுதந்திரத்தை அடைய முடியவில்லை? அதற்குப் பல காரணங்கள் இருப்பினும் முக்கியமானது நம்பிக்கைத் துரோகிகளின் செயற்பாடே. லக்ஸ்மிபாய் ராணியின் வரலாற்றை நோக்குவோமானால் ஆரம்பம் முதல் இறுதிவரை நாட்டினுள்ளேயே ஏன் அரண்மனையினுள்ளேயே பல துரோகிகள் காணப்பட்டனர். சுதந்திரத்துக்காய் பாடுபடும் ராணிக்கு உதவுவதை விடுத்து பணம் மற்றும் பதவியில் நாட்டம் கொண்டோர் பலர் இருந்தனர். அவர்களது சதிவலையிலிருந்து தப்பிப்பதற்கே கடினமாக இருந்த சூழலில் வெள்ளையருடன் இந்த அளவிற்கு சமர் செய்ததே வெகு சிறப்புக்குரியது.

ஜான்சி ராணியின் வரலாறு வீரமும் விவேகமும் நிறைந்தது. நாம் இதிலிருந்து ஒற்றுமை ஒருநாட்டிற்கு இன்றியமையாதது என விளங்கிக்கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரை சூழ்ச்சிக்காரர்களை ஆரம்பத்திலேயே வேரறுத்திருப்பின் நிச்சயம் ஜான்சியின் இராணியால் வெள்ளயரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றிருக்க முடியும். சிலவேளைகளில் நம்மவர் என எண்ணி சிலர் மீது கொள்ளும் அதிக நம்பிக்கை நம்மை படுகுழியில் தள்ளலாம் 'நம்ப நட, நம்பி நடவாதே' என்ற கூற்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. அஹிம்சாவாதியான காந்தியின் மூலம் தான் இந்தியா சுதந்திரமடைய வேண்டும் என்பது விதி போலும். முன்னரே இந்தியா சுதந்திரமடைந்திருப்பின் காந்தி என்ற மகானை உலகு அறிந்து போற்றியிருக்காது. எது எவ்வாறிருப்பினும் இந்திய சுதந்திரத்திற்கு அடிப்படையானவர் ஜான்சியின் ராணி லக்ஸிமிபாய் என்பது மறுதலிக்க முடியாத உண்மை. அவரை கேள்வியுற்ற பின்புதான் பாரதி மனதில் புதுமைப்பெண் உதயமானாளோ? சரி, விடயத்திற்கு வருவோம். நாம் எதற்காக ஜான்சி ராணியைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும்? வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு மட்டுமா? இல்லை நாமும் அவரைப் போல் திடமானவர்களாகவும் தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் இருப்பதற்கே. சின்னஞ்சிறிய சாதாண பெண்ணால் ஆங்கிலேயருக்கு எதிராக யாதும் செய்ய முடியாது என மனு எண்ணியிருப்பின் பிற்காலத்தில் ஜான்சியின் ராணி லக்ஸ்மிபாய் உருவாகியிருக்கமாட்டார்கள். யார் நல்லவர், யார் கெட்டவர் எனக் குழம்பி சோர்ந்து பின்தங்கியிருப்பின் பிரித்தானியருடன் போரிட்டு இருக்கமுடியாது. அவர் குறைந்த வயதிலேயே இறந்திருப்பினும் அவர் புகழ் உலகில் கூடிய காலம் வாழும்.



(சென்றவாரத் தொடர்ச்சி)

# அகலிகைக்கு விமோசனம்

■ இ.நிஷாந்தன்.

இது இவ்வாறிருக்க அதர்மம் அழிந்து தர்மம் நிலைபெற்றிருக்கச் செய்யும் பொருட்டு மகாவிஷ்ணுவின் அவதார அம்சமாக இராமபிரான் தசரத மன்ன னுக்கு மகனாக வந்து உதிக்கின்றார்.

இவ்வாறு இருக் கும் கால் மகரிஷியாகிய விஸ்வாமித்திர மாமுனி அயோத்தி அரச சபைக்கு வருகை தந்து தசரத மகாராஜாவை நோக்கி "மன்னா நான் மேற்கொண்டு வரும் வேள்வி முதலான செயற்பாடுகளுக்கு அசுரர்கள் இடையூறு விளைவித்து வருகின்றனர். இதனால் வேள்விகளை முழுமையாக நடத்தி முடிக்க முடிய வில்லை, எனவே அவ்வரக்கர்களை அழிப்பதற்கு உன் நான்கு புதல்வர்களில் மூத்தவனாகிய இராமபிரானை என்னுடன் அனுப்புவாயாக என வேண்டி நின்றார்.

**'நின் சிறுவர் நால்வரிலும் கரிய செம்மல்**
**இராமனை தந்தீர்'**

என்பதன் ஊடாக இதனை அறிவோமாக.

விஷ்வாமித்திரர் இவ்வாறு கூறியதும் முதலில் மறுத்த தசரதன் பின் ஒருவாறு இராமனை முனிவருடன் அனுப்பி வைத்தார். இவ்வாறு அரக்கர் அழிவை ஆரம்பித்து வைக்கும் முகமாக இராமனை அழைத்து வந்த விஸ்வாமித்திரர் தாடகையைப் பற்றிக் கூறுகிறார். இராமபிரானும் தாடகையை வதம் செய்து முடிக்கிறார். பின்னர் மாரீசன், சுபாகு கதையை முடித்துச் செல்லும் கால் மகரிஷி மேற் கொண்ட வேள்வியைக் காத்த பின்பு மிதிலையை நோக்கிப் பயணிக்கின்றனர் அம் மூவரும்.


இவ்வாறு செல்லும் வேளையில் அகலிகை கல்லாகக் கிடக்கும் இடத்தினை வந்தடைகின்றனர். பின் விஸ்வாமித்திரர் அகலிகையின் சாப வரலாற்றினைக் கூறுகிறார். அதனைக் கூறி இராமபிரானை நோக்கி "இராமா கல்லாகக் கிடக்கும் அகலிகை உன் திருப்பாதம்படுவதனை எதிர்பார்த்து கிடக்கின்றாள். எனவே அப் பேதைக்குச் சாப விமோசனம் அளிப்பாயாக என வேண்டினார். மகரிஷியின் வேண்டுகோளுக்கு அமைய இராமபிரான் தாமரை மலர் போன்ற வெண்மையான தனது திருப்பாதத்தினை அக் கல்லின் மீது பதிக்கின்றான். இராமபிரானின் திருப் பாதம் பட்ட மறுகணமே அகலிகை சாபம் நீங்கி முன்னைய வடிவத்தினை அடைகின்றாள்.

**'கண்ட கல்மிசை காகுத்தன் கழல்துகள் கதுவ**
**உண்ட பேதமை மயக்கு அற வேறுபட்டு உருவம்**
**கொண்டு மெய் உணர் பவன் கழல்கூடிய ஒப்பு**
**பண்டை வண்ணமாய் நின்றனன்'**

**எனும்செய்யுள் ஊடாக இதனைக் காண்போமாக.**

பின்னர் அகலிகை தனக்கு மீண்டும் மறுவாழ்வு அளித்த அவதார சிசுவாகிய இராமபிரானின் திருப் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கின்றாள். இராமனும் அகலிகையைத் தூக்கி "தாயே இடையில் ஏற்பட்ட துன்பத்தை நினைத்து வருந்தாதே, மாறாக மிகுந்த தவத்தையுடைய கௌதமனது கருணையை பெறும் பொருட்டு பணிவிடை செய்வாயாக" எனக் கூறி அகலிகையினுடைய அழகிய பாதங் களை வணங்கி விடைபெற்றுச் செல்ல லானார்.

இவ்வாறு இந்திரனின் மாய வேடத்தில் தனது கணவன் கௌதமன் மீது கொண்ட அளவு கடந்த பாசத்தினால் மயங்கி அறியாமல் தன் உடலை மாசுபடுத்திக் கொண்ட அகலிகைக்கு இராமபிரான் சாபவிமோசனம் அளித்த காட்சியினை இங்கே நோக்கினோம்.



மகரிஷியின் வேண்டுகோளுக்கு அமைய இராமபிரான் தாமரை மலர் போல் வெண்மையான தனது திருப்பாதத்தினை அக் கல்லின் மீது பதிக்கின்றான். இராமபிரானின் திருப் பாதம் பட்ட மறுகணமே அகலிகை சாபம் நீங்கி முன்னைய வடிவத்தினை அடைகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைவின் நிழல்:

## உயிரியம் சார் அரசியல் உண்மைகள்

■ ந.மயூரரூபன்

ஓர் எழுத்தின் உண்மையை (fact) கண்டுபிடிக்க முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. நமது எழுத்துப் பரிணாமத்தின் முற்கூறுகளில் இதற்கான சாத்தியங்கள் இருப்பதான தோற்றம் இருந்தாலும் அது கலப்படமானது.

உண்மையில் வாசித்தல் எனும் அறிவு முறையின் மூலம் இதனை நாம் சென்றடைவதாக இன்பமடைகிறோம்.

ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கை முறை வேறானது. அவனது சமூக நுண்கூறுகள் , ஒன்றின் பிரதிகள் அல்ல. அவன் பெறும் நுண்ணுணர்வுகளும், அனுபவ உட்கிடக்கைகளும், மொழிக் கிடங்குகளும் (langue) வெவ்வேறானவை. இதே போலத்தான் படைப்புகளும் தங்களுக்கான சுயத்துவத்தைக் கொண்டன. அந்த சுயம் படைப்பின் நுண்ணரசியலுடன் இயங்குவது. ஏதோவொரு சார்பு நிலையைத் தக்க வைத்தது.

இங்கு உண்மை என்பது பல்பரிமாணங்களைக் கொண்டதாகவே அமையும்.

*'அலைக்கழிக்கப்பட்ட ஆதாம் ஏவாளிடம்*
*உம் தந்தையின் வனத்திலிருந்து*
*சாத்தான் களவாடிக் கொடுத்த கனியில்*
*உமது பற்களுமிருந்தனவாம்''*
(இருளில் வதைபட்டுச் சிதைகிற ஒளி ஓவியம் , சித்தாந்தன்)

*' மலை முகடுகளிலும் கடலோரத்திலும்*
*அவன் எழுப்பிய ஆயிரக்கணக்கான சிலுவைகளில்*
*மூன்று நூற்றாண்டுகள்*
*தொடர்ந்து அறையப்பட்டனர்*
*கறுப்பு நிறத்தில் கோடிக்கணக்கான ஏசுக்கள்''*
(மாயன் நகரம், சேரன்)

சித்தாந்தன், சேரன் ஆகிய இருவரின் கவிதைகளை மாதிரிகளாக தந்துள்ளேன். அவை பேசுகிற நுண்ணரசியல் படைப்பின் தளம் தருகிற வாசிப்பின் இயங்கியல், படைப்பாளரின் சுயம் என்பன இவற்றின் மூலம் பேசப்பட முடியுமா?

உண்மையில் இவர்களின் முழுமையான கவிதைகள் இங்கு தேவைப்பட்டாலும் ஒரு குறியாக மட்டுமே இந்த எடுத்துக் காட்டுகளைத் தருகிறேன்.

'ஏசு' என்கிற தொன்மம் இந்த இருவரின் எழுத்துக்களிலும் வெளிப்படுத்தும் படிமம் (புனைவு) எவ்வகையான நுண்ணுணர்வுகளை ஏற்படுத்துகின்றன என்பதே இங்கு அவசியமானது. உண்மையின் படிமத்தை புரிந்துகொள்ள இது வழியாக அமையும்.

நான் இவற்றினை முற்றுமுழுதாக எங்களது போர்- போருக்குப் பின்னான சிந்தனைப் படுகைகளில் வாசித்தேன்.

அது என்னுடைய வாசிப்பு. என்னுடைய நுண்ணரசியல். இக்கவிதைகளின் உண்மையானது வாசிப்பவனின் நுண்ணரசியலிலேயே தங்கியுள்ளது. அதுவே உண்மை: பன்முக உண்மை. படைப்புகளின் மொழி , எமக்கு யதார்த்தத்தைப் போன்ற பிரதிபலிப்பைத் தரவல்லது. ஆக படைப்புகளில் பிரமைக்கும் உண்மைக்குமான ஓர் இடைவெளி இருந்து கொண்டேயிருக்கும்.

இலக்கியத்தை, அதன் எழுத்து வடிவத்தை பிரமையின் உருவம் என்பார்கள். படைப்பு தொன்மைப் பண்பு கொண்டது. புலனாகாத உண்மையை குறிகளின் மூலம் அறிவதற்கான வாசல்கள் படைப்புகளில் திறந்தேயிருக்கின்றன.

மேற்குறித்த கவிதைகளின் அடிகளையே இதற்கான எடுத்துக்காட்டுகளாகக் கொள்ள முடியும்.

'பார்த்' சொல்வது போல எழுத்தாளன் உள்ளடக்கமற்ற சைகைகளை (மறை குறிகளை) எழுத்தின் வழி அனுப்பிக் கொண்டேயிருக்கிறான். அதனைக் கண்டடைவதே வாசகனின் பணி.

'பிரமையின் உருவம்' எனப்படும் புனைவுகள் தருகின்ற உணர்வுகளும் தூண்டுதல்களும் (Impulse) ஒரு படைப்பினை-கவிதையினை தாமாகவே விளக்கிவிடுகின்ற சக்தியைக் கொண்டனவல்ல. உண்மையில் அவை வேறொன்றின் விளைவுகளாக அமைந்தன. அவைதான் எழுத்தின் பிரதிமையைக் கட்டமைக்கின்றன. குறிப்பாக மனதினதும் உடலினதும் செயற்பாடுகளாக இவை அமைந்துவிடுகின்றன. அவை எழுத்தின் மன நிகழ்வாகவே அமையும்

*'' நான் நாயாகவும்*
*நாய் நானாகவுமாக இருக்கும்*
*மிகப்பிந்திய நிமிடங்களில்*
*நாய்களின் அதியுன்னத இசையை*
*என் புலன்களால் வேட்டையாடத் தொடங்கினேன்.''*
(புனிதத்தின் உன்னத இசையை வேட்டையாடும் நாய்- சித்தாந்தன்)

*'' களங்கமற்ற மனதுடன்*
*அவனுக்காகத் தன்னுடைய உயிரைத் தருகிற*
*ஒவ்வொருவருக்கும்*
*அவன் ஒரு சவப்பெட்டியைப் பரிசாகத் தருகிறான்.''*
(கொலைக் கலைஞர்- சேரன்)

உண்மை; பிரமையின் உருவகமாக படைப்பின் இடுக்குகளில் அமர்ந்திருக்கிறது. வாசகன் மீது விழும் கண்ணாடி நிழல்தான் இப்புனைவு.

இலக்கியம்; உண்மையிலிருந்து விட்டசையும் தன்மை கொண்டது.

இங்கு படைப்புக்களில் 'உயிரியம் சார் அரசியல்' (Bio Politics) கவனிக்கத்தக்கது. இதுவரை சொல்லப்பட்ட எழுத்துக்களின் உண்மையும் புனைவும் எழுத்தாளனின் 'உயிரியம்' (Bios) தொடர்பானது. அவனின் வாழ்வு குறித்தது.

ஃபூக்கோ சொல்லுகின்ற மனித உயிரியின் வாழ்வு இதுதான். வாழ்க்கையின் மொத்த அரசியல், அரசு, சட்டம், மதம், அரசன் போன்ற அனைத்து அமைப்புகளின் அடிப்படை எழுத்தாளனின் உயிரியம் சார் அரசியலாக அவனது எழுத்துக்களில் அமருகிறது. அதுவே புனைவு.



## என் குலசாமி...



என் தீவைப் போல ஏது?
சாமியே
என் தாயைப் போல
யார்?
என்னில் கண்ணீர்
கண்டதும்
துடிப்பவள்,
காயம் கண்டதும்
வெடிப்பவள்
அழுக்குப் போக
என்னைத் துவட்டுவாள்
அழுக்கை உடுத்தியே
வாழுகிறாள்!
ஊர் சுத்தி சொந்தம்
ஏராளம்
தாய் சொந்தம் மட்டும்
எனக்கு தாராளம்

சாமக்கோழியா
முழிக்கிறாள்
சமைச்சுமுடிச்சதும்
எழுப்புவாள்
நினைச்ச பொழுதெல்லாம்
மடி தருவாள்,
எனக்கு வெளிச்சம் தர
தன்னை எரிக்கிறாள்
அடுப்பு நெருப்பையும்
உண்டு
ஆக்கிப் போடுகிறாள்
உணவு
வறண்ட நிலமா
வயிற்றை வைச்சு
என்னைக் காவல்
காத்தவள்
கிடுகு பின்னி

வேலி அடைச்சு...
பனங்காய் சுமந்து
பாத்தியாக்கி
கடல் கடந்து
காசாக்கி
காச்சட்டை,
சட்டையென்று
என்னை அழகாக்கினாய்
முருகைக் கல்லுக்கும்
கண்கலங்கும்
முரட்டு முள்ளும்
விலகி நிற்கும்
நீ வெறுங்காலோடு
மண் மிதிச்சா
புல்லும்
கூட பூப்பூக்கும்
தாய் மண்ணும்

தாயன்பும்
இருக்கும் வரை- நான்
ஊர்விட்டு போக
அகதியில்லை
சனங்கள் சாமி
சாமியென்று
திரியுதுகள்
சாமி கதவும்
திறந்ததில்லை
கண்ணும் திறந்ததில்லை
வீட்டில் வெறுப்பு வைச்சு
கோயிலுக்குப் பூ
வைப்பவனே,
புரியாத ஜடமாக
இருக்கிறாயே
பெற்ற உயிர்தானடா சாமி

எம்.நேதா,
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் புரிந்தவர்கள் பிரிட்டனுக்குச் சென்றால் அங்கே கைதாகும் அபாயம்

உலக நடப்புகள் ஒரு பார்வை


★ போர்க் காலத்தில் சித்திரவதை மற்றும் போர்க்குற்றம் புரிந்தவர்கள் பிரிட்டனுக்கு சென்றால் கைதாவர்.

★நேபாள போர் வீரர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

★பெண்கள் மீதான வல்லுறவு டில்லியில் மட்டுமா நடந்துள்ளது?

★சிரிய அதிபரின் நிலைப்பாடு தளர்கிறதா?

■ரெங்கன்



உலகின் எந்தப் பகுதியிலானாலும் மக்களை சித்திரவதை செய்தார்கள் என்று சந்தேகிக்கப்படும் எந்த ஒரு நபரையும் பிரிட்டிஷ் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் வைத்துக் கைது செய்ய முடியும். அவர் மீது சித்திரவதை செய்தமைக்கான மற்றும் போர்க் குற்றம் புரிந்தமைக்கான குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கையும் எடுக்க முடியும். இந்த அடிப்படையில்தான் சூடானில் ஐ.நா. அமைதிப்படையில் பணிபுரியும் நேபாள இராணுவ வீரர் ஒருவரான குமார் லாமா என்பவர் பிரிட்டனில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில் போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருந்தார் என்ற சந்தேகத்தில் இவர் கைது செய்யப்பட்டார்.

நேபாளத்திலுள்ள குர்க்கா இனத்தவர்களின் அமைப்பொன்று சம்பந்தப்பட்ட இராணுவ வீரரை உடனடியாக விடுதலை செய்யுமாறு பிரிட்டனை கேட்டுள்ளது. காத்மண்டுவிலுள்ள ஓய்வு பெற்ற இராணுவத்தினரின் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் நேபாள இராணுவத்தினரான குமார் லாமாவை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு பிரிட்டனை கேட்டுள்ளது. லாமா மீது 2005 ஆம் ஆண்டு நேபாளத்தில் உள்நாட்டுப் போர் உச்சநிலை அடைந்திருந்த போது சித்திரவதை குற்றங்களை புரிந்தார் என்று இரண்டு அம்ச குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. பணியில் ஈடுபட்டுள்ள ஓர் இராணுவ வீரரை கைது செய்வது ஆட்சேபத்துக்குரியது என்று குர்க்கா இராணுவ முன்னாள் பணியாளர்கள் சங்கம் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது. இம்மாதிரி விடயங்களில் நேபாள அதிகாரிகளே நடவடிக்கை எடுக்கும்படி விட்டுவிட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது சூடானில் ஐ.நா. அமைதிப்படையில் பணிபுரிந்து வரும் லாமா கடந்தவாரம் பிரிட்டிஷ் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டார்.

கேணல் தரத்திலுள்ள இந்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்ட சம்பவம் நேபாளத்துக்கும் பிரிட்டனுக்கும் இடையில் ராஜதந்திர சிக்கல் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது உலகப் போரின் போது பிரிட்டன் படைகளுக்காக சுமார் 200,000 குர்க்கா வீரர்கள் போரிட்டார்கள். வீரத்துக்கும் கொடும் செயல்களுக்கும் பெயர் போனவர்களாய் இருந்துள்ளார்கள். அவர்களுக்கே தனித்துவமான வளைந்த குக்ரி கத்திகளை பயன்படுத்துவதிலும் பேர் பெற்றிருந்தார்கள்.

நேபாள முன்னாள் போர் வீரர்களின் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குர்க்காக்களின் கிறான்ட் மற்றும் பௌத்த இனத்தவர்களை இந்து மதத்தைத் தழுவும்படி நிர்ப்பந்தித்ததுடன் குர்க்காக்கள் ஓய்வு பெற்றபின் பிரிட்டிஷ் குடியுரிமைக்கு மறுப்புத் தெரிவித்த பிரிட்டனால் எவ்வாறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தண்டனை வழங்க முடியும் என்று கேட்டுள்ளனர்.

இந்த மாதிரி சித்திரவதை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நேபாள அதிகாரிகள் எதிர்காலத்தில் வெளிநாடுகளில் கைது செய்யப்படாமல் இருப்பதற்கு காலம் தாழ்த்தாது உண்மைகள் மற்றும் மீள் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவை நியமிக்கும்படி நேபாள பிரதம மந்திரி பாபுராம் பாட்டாரே ஜனாதிபதி ராம் பாரன் யாதவை கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெண்கள் மீதான வல்லுறவு புதுடில்லியில் மட்டுமா நடந்தது?

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் 23 வயது பல்கலைக் கழக மருத்துவத்துறை மாணவி பிரயாணிகள் பேருந்து ஒன்றில் வைத்து ஆறுபேர் கொண்ட கும்பலால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலையுண்ட சம்பவம் இந்தியாவை பெரும் எடுப்பில் கலக்கியிருப்பது ஒரு புறமிருக்க அந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தியுள்ளது.

அந்தப் பெண் பல்கலைக்கழக மாணவி என்பதாலும் இந்திய தலைநகரில் சம்பவம் இடம் பெற்றதாலும் அங்கு பெரும் கிளர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது. நாடு முழுவதும் ஏற்பட்ட கொந்தளிப்பினால் இந்திய மத்திய அரசின் தலைவர்கள் விழுந்தடித்துக் கொண்டு நடவடிக்கைகளை எடுத்தார்கள். குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தவும் தீர்வுகளை வழங்கவும் தனிநபர் ஆணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உரத்த குரலில் முன்வைக்கப்படும் அதே நேரம் அவர்களுக்கு ஆண்மை நீக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் கூட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இந்தச் சம்பவம் ஒரு தனிப்பட்ட சம்பவமாகக் கருதிவிட முடியாது. தினமும் இந்தியாவில் மட்டுமன்றி வேறு நாடுகளிலும் கூட இந்த மாதிரி சம்பவங்கள் இடம்பெற்றே வருகின்றன. ஓரிடத்தில் நடக்கும் சம்பவம் அந்த இடத்தையும் சூழ்நிலையையும் பொறுத்து பெரிதாக்கப்பட்டு விடுகிறதே தவிர ஏனைய இடங்களில் நடைபெறுபவைகள் பெரும்பாலும் கண்டு கொள்ளாமல் போய்விடுகின்றன.

தமிழ்நாட்டிலும் கூட ஓர் இளம் பெண் வல்லுறவுக்குள்ளான சம்பவம் குறித்து செய்திகள் வந்திருந்தன. அந்தச் சம்பவத்தைக் கண்டித்து தி.மு.கழகத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன. வட இந்தியாவில் வல்லுறவுக்கு உள்ளான சிறுமி ஒருவர் தன்னைக் கெடுத்தவர்களை காட்டிக்கொடுத்தார் என்பதற்காக உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றிய தகவல் கடந்த வாரம் பத்திரிகைகளில் காணப்பட்டது. புதுடில்லி சம்பவத்தைக் கண்டித்து இலங்கையிலும் கூட பெண் விடுதலை அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தன. அவ்வளவு ஏன், சில வாரங்களுக்கு முன் நமது மண்டை தீவிலும் கூட சிறுமி ஒருவர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வெளிவந்திருந்தது. அதனைக்கண்டித்து அந்தப் பகுதி மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டமும் செய்திருந்தார்கள்.

அண்டை நாடான மாலைதீவுகளில் இவ்வாறான சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது. அதில் ஒரு வித்தியாசம் என்னவென்றால் வல்லுறவுக்குட்பட்ட இளம் பெண் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 15 வயதான அந்தப் பெண்ணை முன்னர் அவரது வளர்ப்புத் தந்தை வல்லுறவுக்குட்படுத்தி வந்துள்ளார். அதன் காரணமாக வேற்றுமனிதருடன் அவருக்கு ஏற்பட்ட உறவின் போது கண்டுபிடிக்கப்பட்டதால் பராயத்துக்கு வராத நிலையில் இவ்வாறு நடந்து கொண்டமைக்காக நீதிமன்றத்தில் பகிரங்கமாக பிரம்படி கொடுத்து தண்டிக்கப்பட விருப்பதாக செய்திகள் கூறுகின்றன. குற்றம் புரிந்தவராக கருதாமல் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் கருணை காட்டும்படி மாலைதீவு அரசு அதிகாரிகளை கேட்டிருக்கிறது.

குறித்த சிறுமியின் வளர்ப்புத் தந்தை அந்தப் பெண்ணை வல்லுறவுக்குட்படுத்தி வந்துள்ளார் என்றும் அவர் மூலம் உருவான குழந்தையை கொலை செய்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மாலைதீவு சட்டங்களின்படி அவருக்கு 25 வருடங்கள் சிறைதண்டனை விதிக்கப்படும் என்று அதிபரின் பேச்சாளர் மசூது இமாது என்பவர் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு சட்டங்களின்படி ஆண், பெண்கள் எவராயினும் முறைப்படி திருமணமானவர்களுடன் தவிர மாற்றாருடன் உடல் உறவு வைத்துக் கொள்வது தண்டனைக்குரிய குற்றம். 18 வயதுக்கு மேற்படாதவர்கள் இந்தக் குற்றத்துக்குள்ளானால் பகிரங்கமாக பிரம்படி கொடுக்கப்படுவர்.

### இறுக்கமான நிலையில் இருந்து இறங்கி வருகிறார் அசாத்

பேச்சுவார்த்தைக்குத் தயார். எதிர்த்தரப்பினருடனும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்த அரசு தயாராகவே இருக்கிறது. ஆனால் மேற்கு நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ள பொம்மைகளுடன் நாம் பேசத் தயாராய் இல்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சிரியாவின் அதிபர் பஷார் அல்-அசாத் நாட்டின் இன்றைய நிலைமை பற்றி அதிபர் அசாத் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்திய ஒரு முக்கிய உரையில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அதிபர் அசாத்தின் அரசு எதிர்த்தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தி நாட்டில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு நெருக்கடிக்கு முடிவு கட்ட வேண்டும் என்று ஐ.நா.வும் வேறு நாடுகளும் வற்புறுத்திவரும் நிலையில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த அதிபர் அசாத் விருப்பம் தெரிவித்திருப்பது அவர் தமது இறுக்கமான நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வருகிறார் என்பதை மட்டுமல்ல தமது நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் நடத்திவரும் போருக்கு முகம் கொடுத்து களைத்துப் போய்விட்டார் என்பதையும் காட்டுகிறது என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

அரசுக்கும் எதிர்த்தரப்பினருக்கும் இடையில் இந்தப் போர் நடைபெறவில்லை. தேசத்துக்கும் அதன் எதிரிகளுக்குமிடையிலேயே இந்தப் போர் நடைபெற்று வருகிறது என்றார் அதிபர் அசாத். அவர் மேலும் கூறுகையில் விரைவில் விரிவான தேசிய உரையாடல் ஒன்றுக்கு அரசு அழைப்பு விடுக்க விருப்பதாகவும் அறிவித்தார்.

### அமைதியும் நல்லிணக்கமும் தேவை

அதிபர் அசாத் மேலும் கூறுகையில் சிரியாவுக்கு இப்போது அமைதியும் மீள் நல்லிணக்கமும் தேவைப்படுகின்றது. ஆயுதக் குழுக்கள் தம்து பயங்கரவாத நடவடிக்கைகளைநிறுத்த வேண்டும் என்றார். நாட்டின் புதிய அரசமைப்பு மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்படும். பொதுமன்னிப்பு பற்றியும் அறிவிக்கப்படும் என்றார்.

சிரியாவை பிரிப்பதற்கு சிலர் திட்டமிட்டிருக்கிறார்கள். தேசம் எல்லோருக்கும் உரியது. நாம் அதைப் பாதுகாக்க வேண்டும். சிரியாவின் எதிர்காலம் அதன் சொந்த தொலைநோக்கில் உருவாக வேண்டும். எமது சொந்த அரசியல் செயற்பாட்டின் மூலம் முன்னேறுவோம். சிரியாவில் புரட்சி என்று பேசுவது வெறும் சவர்க்கார நுரை போன்றது என்றார் அவர். துருக்கியிலிருந்து போராளிகள் ஊடுருவ முயன்றபோது அதனைத் தடுத்து நிறுத்திய கிராம மக்களை அதிபர் பாராட்டினார். நாட்டை பாதுகாப்பவர்களுக்குத்தான் அது உரிமையுடையது என்றார்.

2011 மார்ச் மாத மத்தியிலிருந்து சிரியாவில் உள்நாட்டுக் கலவரம் நடைபெற்று வருகிறது. 60 ஆயிரம் பேருக்கு மேல் பலியாகியுள்ளார்கள். இவர்களில் இராணுவத்தினரும் அடங்குவர்.

### ஈரானை அமெரிக்கா எச்சரிக்க வேண்டும்

ஈரான்மீது ஒபாமா நிர்வாகம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று இஸ்ரேல் மீண்டும் வற்புறுத்தத் தொடங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியை இஸ்ரேல் கைவிடாத பட்சத்தில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கான இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுக்கும்படி இஸ்ரேல் அமெரிக்க அதிபரை நெருக்கி வருகிறது.

இந்த விடயத்தை ஒபாமா நிர்வாகத்திடம் வற்புறுத்திக் கூறுவதற்காக வொஷிங்டனுக்கு கடைசியாக பயணம் மேற்கொண்டிருக்கும் இஸ்ரேலிய தலைவர் இஸ்ரேலிய நிதி அமைச்சர் யூவல் ஸ்டீனிட்ஸ் ஆவார். அணுஆயுத செயற்பாடுகள் தொடர்பாக ஈரான் மீது கடுமையான நிலைப்பாடு ஒன்றை அமெரிக்கா எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எழுவை தீவு முருகவேள் வித்தியாலய ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ம)



ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், அவரது பாரியார் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர்.(ம)



வடமாகாண விவசாய சங்கங்களுக்கிடையே கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்திப் போட்டியில் முதலாவது இடத்தைப்பெற்று மாகாண விருதைப் பெற்றுள்ள யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.ஸ்ரீ பாலசுந்தரம், இளைப்பாறிய பொதுமுகாமையாளர் ரி.சிவலோகநாதன், இளைப்பாறிய பண்ணை முகாமையாளர் எஸ். வல்லிபுரம், பொதுமுகாமையாளர் ரி.ரவிமயூரன் ஆகியோர் மாகாண, மாவட்ட விருதுகளுடன் காணப்படுகின்றனர். (ம-8)



மாகியப்பிட்டி பணம் பொருள் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட சுளகு யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற கண்காட்சியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியது. சுளகுகளின் மாதிரிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.(ம-100)




நவாலி அட்டகிரி சிவன் ஆலயத்தில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கா.துரைசாமி குருக்கள் தலைமையில் நடைபெற்ற திருவாதிரை தேர் திருவிழாவின் போது சுவாமி வீதி உலாவரும் காட்சி. (ம-50)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற ஆருத்திரா அபிஷேகத்தின் போது.(ம-250)



இணுவில் வட்டுவினி பதியுறை கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் ஓதுவார்களுக்கு காயத்ரீ பீடம் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ம)



பிரசித்தி பெற்ற நவாலி கதிர்காமக் கந்தன் வீதியுலா வந்தபோது. (ம-50)





கரவெட்டி கோவிற்கடவை சித்தி விநாயகர் முன்பள்ளியின் கலை விழாவும் சிரேஷ்ட மாணவர்கள் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றன. அதன்போது மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். சிறார்களின் கலை நிகழ்வுகளின் காட்சிகள். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாப்பழமும் ஏங்கும் நரியும்

ஓடுகாலி

திராட்சைப்பழத்துக்கு ஆசைப்பட்ட நரியின் கதை எல்லோருக்குமே தெரிந்திருக்கும். தற்செயலாக திராட்சைப்பழங்களை கண்டுவிட்ட நரிக்கு நாவில் எச்சில் ஊறத் தொடங்கியது. எப்படியாவது திராட்சைப் பழங்களை ஒரு கை பார்த்து விடத்துடித்தது. ஆனால் எட்டாத உயரத்தில் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன திராட்சைப் பழங்கள். அதனால் நரி நினைத்தவுடனேயே உண்ணமுடியவில்லை. தூரத்தில் இருக்கிறதே பேசாமல் விட்டுவிட்டுப் போய் விடுவோம் என்று நரி முடிவெடுக்கவில்லை. எப்படியாவது- தன்னால் எட்டமுடியாது என்று தெரிந்தும் கூட- திராட்சைப்பழங்களை உண்டுவிட்டே அந்த இடத்திலிருந்து அகல்வதென்று நினைத்தது. எட்டி எட்டி பார்த்தது எட்டவில்லை, தொங்கித் தொங்கிப் பார்த்தது. அதுவும் பலிக்கவில்லை. பின் பக்கமாக நகர்ந்து, வேகமெடுத்து திராட்சைப்பழங்களை நோக்கி ஒரு பாய்ச்சல். நாரி அடிபட விழுந்ததுதான் மிச்சம். திராட்சைப் பழங்கள் விழவேயில்லை. நிறையத்தடவைகள் முயன்று தோற்றபின்னர்தான், இனியும் முயல உடலில் தெம்பில்லாமல் போன பின்னே சீச்சி! இந்தப்பழம் புளிக்கும் என்று நரி நகர்ந்தது.

வன்னியில் படைத்தரப்பும் கிட்டத்தட்ட திராட்சைப்பழத்துக்கு ஆசைப்பட்டு அலைந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்த நரிகள் அலைந்து கொண்டிருப்பது திராட்சைப்பழங்களை தேடியல்ல,மாறாக தமிழ் அடையாளங்களை மறக்கடிப்பதற்கும் மழுங்கடிப்பதற்கும் தான்.

போரின் இறுதிக்காலங்களில் , யாழ்ப்பாணத்தை விடவும் தென்னிலங்கையின் கண்களை உறுத்தியது வன்னிதான். விடுதலைப் புலிகள் இலங்கைக்குள்ளேயே தமக்கான நிர்வாகக்கட்டமைப்பை பேணி, தனியரசாங்கம் நடத்தியதால் தான் தென்னிலங்கைக்கு வன்னி மீது அத்தனை கோபம், இந்தக் கோபத்துக்கு இன்னும் எண்ணெயை ஊற்றினர் வெளிநாட்டுப் பிரதிநிதிகள். சமாதான காலத்தில் கொழும்புக்கு வரும் உயர் மட்ட சர்வதேசப் பிரதிநிதிகள் அனைவரும், வன்னிக்கு செல்வதையும் தவறாது செய்து வந்தனர். ஏறக்குறைய இலங்கை அரசுக்கு நிகரான மரியாதையைத்தான் வன்னி அரசுக்கும் கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னார்கள். இதெல்லாம் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்ற, உள்ளுக்குள் கருவறுக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது பேரினவாதம்.

ஊழி முடிந்தது. என்னவெல்லாம் நிகழக்கூடாதோ அவையெல்லாம் இம்மியளவும் பிசகின்றி நடந்தேற, வன்னி சுக்குநூறாகிற்று. இலட்சம் உயிர்களின் உயிரைக்குடித்த பின் பெருகியோடிய குருதியை மையாக்கி, சதுப்பு கடற்கரையொன்றில் தமிழர்களின் தனியரசுக்கு முடிவுரை எழுதப்பட்டது.

தமிழ்! தமிழ்!!தமிழ்!!! என்று மூச்சுக்கு முந்நூறுதரம் சொன்ன வன்னிமக்களின் தமிழ் அடையாளங்களையே அழித்தல் என்ற தன் நீண்டநாளையக் கனவை செயற்படுத்த அரசு முனைந்தது. சாம, தான, பேத, தண்ட வழிகளில் அதன் தமிழின அடையாள அழிப்பு தொடர்ந்தது.எல்லா வழிகளுமே பாதியுடன் முடிவடைந்து விட, மீண்டும் ஆரம்பப்புள்ளிக்கே திரும்பவேண்டிய நிலை. இத்தகைய திரும்புதல்கள் பேரினவாதத்தின் கோபத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தன. அதனால் முன்னரைக்காட்டிலும் அதிக பலன் தரக்கூடிய வழிகளைக் கண்டறிந்து, எப்படியாவது தான் நினைத்ததை அடைந்தே தீருவதென்ற கங்கணத்துடன் பாய்ச்சல்கள் நிகழ்ந்தன.

பலமுள்ள பகுதிகளூடாகப் பாய்வதாலேயே இலக்கை எட்டமுடியவில்லை என்றுணர்ந்து கொண்டு, பலவீனமான பகுதிகளைக் கண்டறிய , அதிகாரத்தின் மோப்ப நாய்கள் புறப்பட்டன.

வன்னி மக்களின் இப்போதைய பலவீனங்கள் பொருளாதாரமும், கல்வியும் தான். இந்த இரண்டையும் போர் விழுங்கியிருந்தது. தமது வாழ்தலுக்கான எந்த உத்தரவாதங்களுமற்ற இருளால் சூழப்பட்ட இந்த அபலைமக்களுக்கு மின்மினியின் சிறு வெளிச்சம் கூட கோடி சூரியனுக்கு நிகரானதாக இருந்தது. நடுக்கடலில் தத்தளிக்கும் போது, தாம் மிதப்பதற்கு எது அகப்படுகிறதோ அதை பிடித்துக் கொண்டு கரையேறவே எல்லோரும் நினைப்பார்கள். அவ்வாறு கையில் அகப்படுவது மரக்கட்டையாகவோ அல்லது பிணமாகவோ கூட இருக்கலாம். உயிரைக் கையில் சுமந்து கொண்டிருக்கும் அந்தத் தருணத்தில் இத்தகைய பேதங்களைப் பிரித்தறிய மனம் ஒப்புவதில்லை. கிட்டத்தட்ட வன்னிமக்களின் நிலையும் பொருளாதாரத்தைப் பொறுத்தளவில் இதேபோன்றதுதான். அவர்கள் சம்பாத்தித்திருந்த எல்லாச் சொத்துக்களையும், உறவுகளையும், நம்பிக்கைகளையும் தொலைத்திருந்தமையால் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு, தமது தாளத்துக்கு வாலாட்டுவார்கள் என்றே அதிகார ஏவலாளிகள் எண்ணினர்.



புழுக்களுக்குப் பதிலாக தூண்டில் முள்ளில் பணம். படைக்கு ஆள் சேர்க்கிறோம் , சேர்ந்தால் அள்ள அள்ளக் குறையாத பணம், வீடு, வசதி, சமூக மதிப்பு என்னும் ஆசை வார்த்தைகள் நூறுக்கும் அதிக பெண்களை படையில் சேரவைத்தன. வீட்டின் வறுமை அவர்களை எப்படியாவது பணம் சம்பாதித்தால் போதுமென்ற முடிவு நோக்கி உந்தித்தள்ளியிருந்தது.போனார்கள். பெற்றோரும் கண்ணீர் மல்க விடை கொடுத்தார்கள். ஆனால் பின்வந்த பொழுதுகள் அவர்களுக்கு நரகமாயின. பேய் பிடித்தவர்கள் போலானார்கள். சிலருக்கு உரு வந்து ஆடவும் தொடங்கினர். பிக்குகளின் பிரித்தும்,வெள்ளை நூலும் அவர்களின் நரக வாழ்வை மாற்றவோ அதனால் பீடித்த பேய்களை விரட்டவோ சக்தியற்றவைகளாயின. சீருடை வாழ்வைத் துறந்து வீடு வரவே எல்லாப் பெண்களும் விரும்பினர். ஆனால் அவர்கள் விருப்பத்தைக் கேட்டறிந்து,அதன் படி நடப்பதற்கு அதிகாரம் தயாராகவில்லை. மனதால் எரிந்து போனவர்களை சீருடைக்குள் எத்தனை நாளுக்குத்தான் பொத்தி,மறைத்து வைக்கமுடியும்? படைக்குப் போன பெண்களில் பலர் மனநோயால் பாதிப்புற்று வைத்தியசாலையில் சேர்க்கப்படுமளவுக்கு நிலைமை மோசமானது. அதன் பின்னும் தமிழ்ப்பெண்களை படையில் இருந்து விலகவிடாமல் தடுத்து வைத்திருந்தால் இன்னமும் கெட்டபெயர் ஏற்பட்டு, சர்வதேசத்தின் முன் தலைகுனியவேண்டியிருக்குமென்பதால், ஒவ்வொருவராக விடுவிக்க தொடங்கியிருக்கிறது படைத்தரப்பு.

படைக்கு பெண்களைச் சேர்த்து, பின் அவர்களை வைத்தே தமிழின அடையாளங்களை மெல்ல மெல்ல உருச்சிதைக்கும் திட்டமும் பழையபடியே , சுவரில் பட்ட பந்தாக திரும்ப, இன்னொரு திட்டத்தை உடனேயே அதிகாரம் கண்டுபிடித்தது.

அதுதான் இராணுவ ஆசிரியர்கள். இன நல்லிணக்கத்துக்காக . நடைமுறைக்கு வந்துள்ள, மும்மொழிக்கொள்கையைச் சாட்டாக வைத்து, வன்னிப் பாடசாலைகளில் பாடம் கற்பிக்க சீருடைக்காரர்கள் களமிறக்கப்பட்டனர்.சீருடைகளைப் பார்த்தால் பயம் தானே வரும். படிப்பு எப்படி வரும்?

நிணமும், கந்தகநெடிலும், துண்டாகிப் போன உடலங்களும், புசிக்கப்பட்டபின்னர் வீசப்பட்ட ஆடைகளற்ற பெண்ணுடல்களுமே சீருடைகளைப் பார்த்தேம் கண்ணுக்குள் ஓடிவரும். கடும் பச்சை, கறுப்பு, கபில வர்ணங்களுக்குள் ஒளிந்திருக்கும் குருதி வாசனையே மூக்கில் சட்டென்று அடிக்கும். தம் சொந்தங்களின் பிணங்களின் மீது படர்ந்த எக்காளச்சிரிப்பே மாணவர்களின் காதுகளுக்குள் ஒலிக்கும். தலைமைத்துவப்பயிற்சி என்ற போர்வையில் பல்கலை மாணவர்களுக்கு இராணுவப்பயிற்சி, அதிபர்களுக்கு கேணல் தரம் வழங்கல், என்ற கல்வித்துறைக்கு படைச்சீருடை அணிவிக்கும் இன்னொரு எத்தனமே இராணுவ ஆசிரியர்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. தம்மிடம் சேர்ந்த பெண்கள் தமக்கு வளையாது ,வந்தவேகத்திலேயே ஓட வெளிக்கிட்டதால், இப்போது ஐந்திலேயே தமக்கிசைவான தலைமுறையை உருவாக்க பேரினவாதிகள் நினைத்திருக்க வேண்டும்.

ஆனால் அதுவும் பயனற்ற வெற்றுத் தோட்டாவாக கருகி கீழ் விழும். சீருடைகளின் ஒவ்வொரு வருகையின் போதும் நாய்கள் கூட இன்னமும் குரைப்பதை நிறுத்தவில்லை. அப்படியிருக்க நாங்கள் மட்டும் எப்படி ....?. ★

## கொண்டாடு ...

(சூரியாகந்தி
22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றொரு இறுக்கமற்ற தீர்மானத்துக்குள் நெரிபடுவதே இங்குள்ள நடைமுறை.

தைப்பொங்கலின் நன்றியுணர்ச்சி, பொதுவுடைமை, மதச்சார்பின்மை போன்ற வலுவான விழாப் பண்புகளை தெளிவான முடிவோடு இன்னமும் தமிழ்ப் புத்தாண்டாக ஈழத்தமிழன் கொண்டாடத் தயங்கி வருவதும் கூட இணக்க அரசியலின் இன்னொரு தயக்கம் தான். போர் 'திருந்து நின்ற பொழுதுகளில் கொண்டாட்டங்கள், பண்டிகைகள் எம்மை கவனம் கலைக்கும் என்று இத்தகு சர்ச்சைகளைத் தவிர்த்திருந்தாலும் கூட, பேரினவாதத்தின் இனப்பழிவாங்கல்களின் இரத்தச் சுவடுகளில் நடந்து போய் சித்திரையில் தமிழ்- சிங்கள புதுவருடம் எனக் கூடிக் கொண்டாடுவது இனியும் தேவையா என விரைந்து விதப்புரைக்கும் காலம் இது இலங்கையின் பெரும்பான்மையினரிலும் மேலான உயர்வான பண்பாட்டுக் கலாசார அடையாளங்களை எம் கைகளில் வைத்துக் கொண்டு இன்னமும் புதுவருடப் பிறப்பு எதுவென்ற இரண்டுங் கெட்டான் நிலையில் தத்தளிப்பது அழகல்ல மாறாக, ஆரியத்தின் 'அப்பழுக்கற்ற திணிப்பு' என்று தெரிந்த பின்னாலும் கூட, சித்திரை முதல்நாளை வருடத் தொடக்கமாக தொடர்வதும் அணியல்ல! ''நீ வேறு- நான் வேறு'' என்று இன்னொரு முறை இறுக்கியுரைக்கும், வாய்ப்பின் வாசலில் நிற்கும் ஈழத் தமிழா! தட்டு நிச்சயம் திறக்கும் இன்னொரு புதுவழி. '' தை முதல்நாளை புத்தாண்டாக பிரகடனப்படுத்தும் அனுமதிக்காக எவனிடமும் கைகட்டும் தேவையும் உனக்கில்லை- காரணம்- 'பொங்கல்'' சமய விழாவல்ல- இனவிழா- தமிழ்விழா- இனியும் விழாதே!

## விழ விழ..

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் சனல்-4 காணொலிகள் வெளிவந்த போதே புலிகள் உயிர் பெற்று, பொங்கியெழுந்து பாய்ந்திருக்க வேண்டுமே. அது மட்டுமில்லாமல் புலிகளின் தலைவரின் இருப்பிடம், புலிகளின் ஆயுதங்கள், என்பவற்றை அரச ஊதுகுழல்கள்(ஊடகங்கள் என்று அவற்றைச் சொல்ல கூச்சமாகவே இருக்கிறது) காண்பிக்கும் போது புலிகள் ஸ்திரமடையமாட்டார்களா?

குறித்த இணையத்தில் வெளிவந்த செய்தியில் திலீபனின் துயிலுமில்லம் பொறிக்கப்பட்ட நாள்காட்டி தொடர்பாக படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்ற தகவல் உண்மையானால், அந்த விசாரணைகளின் முடிவில் 'விதிக்கப்பட்ட தண்டனை தானா இந்தபிரதிகள் தீயிட்டு எரிப்பும், பணியாளர் மீதான தாக்குதலும்? என்ற சந்தேகம் முளைகொள்கிறது.

ஆயினும் அடி மேல் அடி விழத்தான் இரும்பு இன்னும் உறுதியாகும். குருதியில் குளித்த பின்னும் கூட வலிகளை வலிமையாக்கி உதித்த ஊடகம் உதயன். அதே உறுதியோடு உண்மையின் குரல்கள் ஓங்கி ஒலிக்கும். ★

## இலங்கைத் தீவின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிரியா ஏற்கனவே, சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. எனவே, இறுதி இலக்காக ஈரான்தான் காணப்படுகின்றது. ஈரானை முறியடிப்பது என்பது ஏற்கனவே, அரபு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ''அரப் ஸ்பிறிங்'' எனப்படும் தூண்டப்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சிகளின் மூலம் மட்டும் சாத்தியப்படாது என்பது சிரிய அனுபவத்திலிருந்து தெரியவந்துவிட்டது. எனவே, அது உள்நாட்டுக் கிளர்ச்சி என்பதற்கும் அப்பால் இரு அல்லது பல நாடுகளுக்கிடையிலான நேரடி மோதலாக அமையக்கூடும் என்ற அச்சம் பரவலாகக் காணப்படுகின்றது. இது விடயத்தில் இஸ்ரேல் ஒரு கருவியாக பயன்படுத்தப்படலாம்.

இவ்விதம் ஈரானுக்கு எதிரான மோதலானது ஒரு பிராந்திய போராக விரியுமிடத்து அதன் இறுதிக் கட்டத்தில் உலகளாவிய ஒரு பேரழிவுப் போராக அது விரிவடையுமா இல்லையா என்பது சீனாவின் கைகளில்தான் தங்கியுள்ளது. சீனா இப்போது இருப்பதைப் போல அமைதியாக நூற்றாண்டின் முதலாளித்துவத்திற்கு தலைமை தாங்கும் வேட்கையோடு மோதல்களைத் தவிர்த்து ஒதுங்கியிருந்து முன்னேறும் ஒரு உத்தியை தொடர்ந்தும் பேணுமாக இருந்தால் நிலைமை வேறாயிருக்கும். எனினும் சீனாவானது மேற்காசிய மோதல்களிலிருந்து ஒதுங்கி நிற்பது என்பது அது மறைமுகமாக அமெரிக்காவின் மேலான்மையை அங்கீகரிப்பதாகவே எடுத்துக்கொள்ளப்படும். மாறாக, சீனாவும் களத்தில் இறங்கினால் நிலைமை பேரழிவுதான். அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகளும், இஸ்ரேலும் ஏற்கனவே, ஈரானைக் குறிவைத்துவிட்டன. பச்சை ஆபத்திற்கு எதிரான இறுதிக் கட்டப் போரை எப்பொழுது தொடங்குவது என்பது பெரும்பாலும் சிரியாவின் வீழ்ச்சிக்குப் பின்னரே தீர்மானிக்கப்படும்.

அப்படியொரு தருணத்தில் பச்சை ஆபத்திற்கு எதிரான போரில் இறுதிக் கட்டமே மஞ்சள் ஆபத்திற்கு எதிரான போராக விரிவடையுமா இல்லையா என்பதை சீனாதான் தீர்மானிக்கவேண்டியதாயிருக்கும். சீனாவின் முடிவிற்கு ஏற்ப பிராந்தியத்தில் தற்போது நிலவும் வலுசமநிலை குலையக்கூடும். இவ்வாறு பிராந்திய வலுச்சமநிலை குலையும் போதுதான் இலங்கைத் தீவில் இப்போதுள்ள அரசியல் நிலைமைகளில் ஏதும் பெரிய திருப்பங்களை எதிர்பார்க்கலாம். அதாவது இலங்கை தீவின் விதி எனப்படுவது இப்போதுள்ள நிலைமைகளைப் பொறுத்த வரை சீனப் பேரரசின் எழுச்சி அல்லது வீழ்ச்சியோடு பிரிக்கப்படவியலாதபடி பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபியாவில் குழந்தை ஒன்றின் மரணத்துக்கு காரணமானவர் எனக் கூறி மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மூதூரைச் சேர்ந்த ரிஷானா நபீக்குக்கு அந்த தண்டனை மிகக் கொடூரமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளையும் கண்டனக் குரல்களையும் ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

ரிஷானாவை மரண தண்டனையில் இருந்து விடுவிப்பதற்கு இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொள்வதாக தொடர்ந்து தெரிவித்து வந்த கருத்துக்கள் எல்லாம் வெறும் புஸ்வாணம் என்று இப்போது தெரிய வந்திருக்கிறது. அந்த இளம் பெண்ணை காப்பாற்றுவதற்கான முழு முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாத பொறுப்பும் இப்போது இலங்கை அரசின் தலையில் விழுந்திருக்கிறது.

இலங்கை வாழ் மக்கள் உட்பட உலக நாடுகளிலுள்ள அனைவரையும் பெரும் சோகத்துக்குள்ளும் அதிர்ச்சிக்குள்ளும் ஆழ்த்திய இந்தச் சோக சம்பவம் கடந்த புதன்கிழமை சவூதியில் நடந்து முடிந்திருக்கிறது.

வெறும் அரசியல் இலாபங்களுக்காகவும் பதவி மோகங்களுக்காகவும் அரசுடன் ஒட்டிக் கொண்டு அமைச்சுப் பதவிகளை தம் பக்கம் வைத்திருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் வெட்கி தலை குனியும் நிலைமையை ரிஷானாவின் தூக்குத் தண்டனை ஏற்படுத்தியிருக்கிறது.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி பணிப்பெண்ணாக சவூதிக்குச் சென்ற ரிஷானா மே மாதம் 15 ஆம் திகதி றியாத் நகரிலிருந்து 300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள 'டவாடமி' என்ற பகுதியிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண்ணாக சேர்ந்தார். அந்தக் குடும்பத்தின் குழந்தைக்கு புட்டிப் பாலை அவர் அருந்தக் கொடுத்துக் கொண்டிருந்தபோது மூச்சுத் திணறி அந்தக் குழந்தை மரணமானது. இதனையடுத்து கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு முகம் கொடுத்த ரிஷானாவுக்கு 2007 ஆம் ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் அவரின் விடுதலைக்காக பல பொது அமைப்புக்கள் கடுமையாக உழைத்தன. இலங்கை அரசும் இந்த விடயத்தில் தலையீடு செய்திருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ரிஷானாவை விடுதலை செய்யுமாறு சவூதி அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அத்துடன் மூதூரிலுள்ள ரிஷானாவின் பெற்றோரை இரண்டு தடவைகள் சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்த இலங்கை அரசு சிறையிலுள்ள மகளைப் பார்வையிட சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

இந்நிலையில் தமது மகள் விரைவில் நாடு திரும்புவாள் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த பெற்றோருக்கு கடந்த புதன்கிழமை அதிர்ச்சிதரும் சோகமான செய்தி கிடைத்தது.

கடந்த புதன்கிழமை காலை மூதூரின் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள ரிஷானாவின் வீட்டுக்கு அவரது உறவினர்களும் அயலவர்களும் சென்றிருந்தனர். அவர்கள் ஏன் அப்படி அங்கு வந்திருக்கிறார்கள் என்பது ரிஷானாவின் பெற்றோருக்குத் தெரிந்திருக்கவில்லை. சவூதியில் ரிஷானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட விடயம் பெற்றோருக்குத் தெரியாது. தமது வீட்டுக்கு உறவினர்கள் வருகை தருவதை வைத்து தமது மகளுக்கு ஏதோ நடந்திருக்கிறது என்பதை ரிஷானாவின் தந்தை ஊகித்துக் கொண்டார். அயலவர்கள் அவருக்கு ரிஷானாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட விடயத்தை தெரியப்படுத்தினர். இதன் பின்னர் இந்தச் செய்தி ரிஷானாவின் தாய்க்கும் கிடைத்தது. இந்தச் செய்தி கிடைத்த மறுகணமே கதறினார் தாயார். இந்தச் செய்தியால் அதிர்ச்சியில் உறைந்து போனார் தாய். அந்தத் தாயுடன் இணைந்து மூதூரும் சோகத்தில் உறைந்தது.

இலங்கையிலுள்ள முஸ்லிம்களை மட்டுமல்லாது அனைத்து இன மக்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்திய இந்தச் சம்பவம் சர்வதேச மட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் ரிஷானா தனது கைப்பட எழுதிய கடிதமும் இப்போது வெளியாகி இருக்கிறது. அதில் "அல்லாஹ் மீது ஆணையாகச் சொல்கிறேன். குழந்தையின் கழுத்தை நான் நசுக்கவே இல்லை" என்று அவர் உருக்கமாக குறிப்பிட்டிருக்கிறார். சவூதி அரேபிய மரபுப்படியே அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவரது கழுத்து வாளால் வெட்டப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த கொடூரமான செய்தி கிடைத்த மாத்திரத்தில் இருந்தே இலங்கை மட்டுமல்ல உலக நாடுகளிலும் உள்ள பலகோடி மக்கள் இது குறித்து தமது கண்டனங்களையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான்கீமூன், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆகியோரும் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலக நாடுகளும் தமது கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன. ரிஷானாவுக்கு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுப்பொறுப்பு என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் இவ்வாறு கண்டனங்கள் குவிந்து கொண்டிருக்க இலங்கையில் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களோ கண்களை மூடிக் கொண்டு பால் குடிக்கிறார்கள். ரிஷானாவின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறித்து எந்தவிதமான அக்கறையுமின்றி வெறும் அரசியல் லாபங்களுக்காக - பதவி மோகத்துக்காக அரசு கொடுத்த அமைச்சுப் பதவியை கட்டிப் பிடித்துக் கொண்டு மௌனமாக இருக்கிறார்கள் அவர்கள்.


அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை உடனடியாக ஏற்பாடு செய்து அதில் தாமே முன்னின்று நடத்தி தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதுடன் அரசியல் ஆதாயங்களையும் தேடிக் கொள்ளும் இவர்களால் ஏன் ரிஷானாவின் மரணதண்டனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடியாமல் போயிற்று?

இந்த விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் மட்டுமல்ல முஸ்லிம் அமைப்புக்களும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் எதனையும் நடத்தவில்லை என்பது பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐ.நாவும் உலக நாடுகளும் அக்கறைப்படும் அளவுக்குக் கூட இங்குள்ள முஸ்லிம் தலைவர்கள் இதுபற்றி அலட்டிக் கொள்ளாதது ஏன் என்ற கேள்வி இப்போது எழுகிறது.

ரிஷானாவின் மரணதண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சவூதியில் உள்ள இலங்கைத் தூதுவரை மீள அழைத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. ரிஷானாவின் உயிர் பறிக்கப்பட்ட பின்னர் இந்த நடவடிக்கை எல்லாம் வெறும் கண்துடைப்புத்தான் என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

ஒட்டுமொத்தத்தில் ரிஷானாவின் மரண தண்டனையை கண்டிக்கத் தவறியன் மூலம் தமது இனத்துக்கு தாமே துரோகம் இழைத்த வரலாற்றை பதிவு செய்திருக்கிறார்கள் இங்குள்ள முஸ்லிம் அமைச்சர்கள். அரசுடன் சேர்ந்திருக்கிறோம் என்ற ஒரே காரணத்துக்காக தமது இனத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளையே தட்டிக் கேட்க முடியாமல் இருக்கும் இவர்கள் எப்படி அந்த இனத்தை தலைமை தாங்கி வழி நடத்தப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியே.

# மனிதாபிமானமற்ற மரணதண்டனை



■ அதிரன்

> அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை உடனடியாக ஏற்பாடு செய்து அதில் தாமே முன்னின்று நடத்தி தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதுடன் அரசியல் ஆதாயங்களையும் தேடிக் கொள்ளும் இவர்களால் ஏன் ரிஷானாவின் மரணதண்டனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடியாமல் போயிற்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RANBAXY'S

# Garlic® Pearls



சுகாதாரத்திற்கு முற்றிலும் சிறந்தது

இயற்கை நறுமணம் வாய்ந்தது

விழுங்குவதற்கு இலகுவானது

- நாடி வன்மையடைதலுக்கும், உயர்குருதி அழுத்தத்திற்கும் எதிராக செயற்படுகிறது.
- பின்வருவனவற்றிலும் உதவுகிறது.
  - வாயு மற்றும் சமிபாடின்மையை போக்குதல்
  - நெஞ்சு எரிவு தணிதல்
  - கொலஸ்ரோல் மட்டத்தை குறைத்தல்
  - இயக்கத்தை தடுக்கும் மூட்டு வலிகளை குறைத்தல்
  - தொடர்ந்துவரும் இருமல், தடுமலை கட்டுப்படுத்தவும் தடுக்கவும்




(J.Nutr.136 : 716S – 725S> 2006)

RANBAXY LABORATORIES LIMITED

விநியோகஸ்தர்கள் : Hemas Pharmaceuticals (Pvt) Ltd

HEMAS Enriching Lives

# 2013 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method

★ தமிழ் கட்டாய பாடம்.

★ ஆங்கில மொழி மூல கற்பித்தல

★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.

★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

- யாழ்ப்பாணம்
- நீர்வேலி
- கோப்பாய்: கோப்பாய் மத்தி
- சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை
- மானிப்பாய் 1
- அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை
- மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி
- சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை
- கன்னாகம்: Dr. சபாரத்தினம் வீதி கன்னாகம்
- வடமராட்சி

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- Diploma in English — G.C.E (O/L), (A/L)
- ESOL A1, A2 — Sponsor Scheme
- IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

★ Pre Foundation

★ Foundation

★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

## BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718

☎ 0215671111
advt@uthayan.com



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

# சம்பத் ரண்திரியவின் அடகுத்தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது..!

## கரட் 24 இற்கு 50,250/-

## கரட் 22 இற்கு 46,000/-

சம்பத் ரண்திரிய அடகுச் சேவை

இந்த அடகுத்தொகைக்கான அவகாசம் ஒரு வருட காலம் மாத்திரமே!

සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank

உறுதித்தன்மையுடன் கூடிய தயாரிப்பு

# அசோக் முறுக்குக் கம்பிகள்

## கட்டிட நிர்மாணத்தின் மூலவுறுதி

நவீன கட்டிடக்கலை நிர்மாணத் தேவைகளுக்கேற்ப உயர் உறுதித்தன்மை கொண்ட உருக்கிலானவை.
உயர் தரமான மூலப்பொருள்களினால் உயர்ந்த தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டவை.
உயரிழுவை உறுதித்தன்மை வாய்ந்தவை.
சிறந்த காய்ச்சி இணைக்கப்படும் இயல்பும் நீட்டத்தருவியல்பும் வாய்ந்தவை. சர்வதேச தரம் வாய்ந்தவை.
இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள உயர் தொழில்நுட்பம் கொண்ட ஆலைகளினால் தயாரிக்கப்பட்டவை.



ashok STEEL

130,000/=

SLS 375

தொழிற்சாலை: இல. 237/4,
தலைமை காரியாலயம்: தொ. பேசி
மின்னஞ்சல்: ashoksteel_lpl@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை



தோற்றம்
24.05.1945

மறைவு
14.12.2012

### அமரர் வேலுப்பிள்ளை-தியாகராசா

(பொருளாளர்- வரணி வடக்கு விவசாய சம்மேளனம்)
அவர்கள் 14.12.2012 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு
எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**விவசாய சம்மேளனம், வரணி வடக்கு.வரணி.** (25597)(6.11)

## தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புக்கள்

சம்பளம் 38,000/= முதல் எங்கள் பிரதான தொழிற்சாலைகள் மூலம் ஜாம், பிஸ்கட், டொபி, ரயர், கோடியல், தேயிலை, பால்மா, நுளம்புச்சுருள், பீங்கான் உற்பத்தி மற்றும் குளோஸ் உற்பத்தி பகுதியில் 100க்கும் லேபல் ஒட்டுதல் பிரிவுக்கும், தரம் 6 முதல் A/L வரை பயின்ற 17 வயது முதல் 55 வயதுவரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு தங்குமிடம் இலவசம், நண்பர்கள் குழுவாக ஒரே இடத்தில் தொழில் புரியலாம். வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து விசேடமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு: 071 3460 295**
**அநுராதபுரம்.**
(27610) (45.6.7)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்/ நீராவியடி கல்லூரி வீதி [College Road] 84,86ஆம் இலக்கத்தில் காணியும், வீடும் தனித் தனியாகவும், சேர்த்தும் விற்பனைக்கு உண்டு.
Telephone No: 0778-072985 (சி/6324) (19,6,7)

## காணி விற்பனைக்கு

இளவாலை வடக்கில், நாகதோலை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770 596371 (சி/6313) (46,6,7)

## காணி தேவை

வடமாகாணத்தில் 80 ஏக்கர் தொடக்கம் 150 ஏக்கர் வரையிலான விவசாயத்துக்கு ஏற்ற சமதரை நிலம் உடைய நில உரிமையாளர்கள் எமது வெளிநாட்டு ஏற்றுமதி செயற் திட்டத்துடன் இணைந்து செயற்பட விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.
தொடர்பு :0773051091 (27983)(6.7.11)




"மெலிபன் பால்" அருந்தும் அனைவருக்கும் மற்றும் இலங்கை வாழ் மக்களுக்கும் இனித்திடும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மெலிபன் பால் நிறுவனத்தினர் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்

Maliban®



# மெலிபன் பால்
# அபயதானம்

மெலிபன் பால் அருந்தும் உங்களின் பூரண அனுசரணையில் இடம்பெறும் மிகப்பெரிய புண்ணிய நிகழ்வு, பசுக்கள் பலவற்றை மரணத்திலிருந்து காப்பாற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தானமாக வழங்கும் நிகழ்வு, ஜனவரி 14ம் திகதி திங்கட்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று காலை 9.30க்கு

**நுவரெலிய,**
ஹாவா எலிய, கோவில் வீதி,
**ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில்**
இடம்பெறும்.

நாளை காலை ஆனையிரவில் வெகு விமர்சையாக நடைபெறும் தைப்பொங்கல் உற்சவத்தில், யாழ்ப்பாணம் பாதுகாப்பு தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரால் மஹிந்த ஹதுருசிங்க அவர்களினால் அப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் இரண்டு குடும்பங்களுக்கு மெலிபன் பால் "அபயதானம்" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இரண்டு பசுக்களை இலவசமாக வழங்கவுள்ளார்.

நீங்கள் அருந்தும் அனைத்து மெலிபன் பால் கோப்பையிலும்
- முழுக்குடும்பத்திற்கும் 100வீதம் பசும்பாலின் போஷாக்கு
- பசுக்களை மரணத்தறுவாயில் காப்பாற்றப்பட்ட அபயதானம்
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஜீவனோபாயத்திற்கான வழிவகை
- முழு நாடும் போற்றும் மாபெரும் புண்ணியநிகழ்வு

**இந்த நிகழ்வுக்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளுடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்!**
(நுவரெலியவில் நடைபெறும் இந்நிகழ்வு ஒளிப்பதிவு செய்யப்பட்டு 19ம் திகதி சனிக்கிழமை மாலை 6.45க்கு வசந்தம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படும்.)




விலை:320/- ஸ்ரீலங்கா

பசுக்களை பாதுகாக்கும் பால் - மெலிபன் பால் 100% பசும்பாலினால் தயாரிக்கப்பட்டது


## 60 ஆவது அகவை பிறந்த தின நல்வாழ்த்து

13.01.2013



### திருமதி நாகேஸ்வரி கனகசபாபதி

அகவை அறுவது காணும் எங்கள் அன்னையே
ஆண்டுகள் நீண்டிட நீடுநீர் வாழ்கவே
இதயத்தில் தினம் வைத்து இன்புறும் உமக்கிங்கு
ஈடில்லை – இனிமையாய் வாழ்கவே வாழ்கவே

*வாழ்த்துபவர்கள்*

கணவர்: ச. கனகசபாபதி ( ஓய்வு நிலை கணக்காளர் MPCS)
மகன்மார்: க. பாலகெங்கன (சுவிஸ்),
க. பாலஷசாகன் (தெல்லிப்பழை, யூனியன் கல்லூரி),
க. பாலசபேஷ் (வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி),
மருமகள்மார்: ரதி (சுவிஸ்), நிலோயா (பிரதேசசபை),
வைஷ்ணவி (உதவிக் கணக்காளர்),
மற்றும்: அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், பேரப்பிள்ளைகள் (சி/16473) (45.6.7)

## முதலாமாண்டு நினைவுகள்



### திருமதி ஆறுமுகம் தங்கம்மா

மலர்வு (திதி:- பூர்வபக்க துதியை) உதிர்வு
1928.09.18 2011.12.25

எமது உயிரில் கலந்த எம் குல விளக்கிற்கு!
ஈர விழிகளுடன் நெஞ்சம் நெகிழ்ந்த
முதலாமாண்டு நினைவுகளுடன்....

கிழவி தோட்டம், -குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் மிகப்பிரசித்திவாய்ந்த இக்கண்காட்சி, வடபகுதி மக்களுக்கான மிகச்சிறந்த வர்த்தகக் களமாக அமையவுள்ளது.

உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சேவைகள், விசேட உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாண பொருட்கள் மற்றும் உபகரணங்கள், அழகு-சாதன மற்றும் ஒப்பனை சேவைகள் இக்காண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும்.

அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்த முன்னணி இசைக்குழுவினரின் இசைநிகழ்வுகளுடன் கூடிய களியாட்டமும் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தவுள்ளது.

தினசரி இசை நிகழ்ச்சி





JITF 2013
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
4th Edition

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2013

உடன் இணைந்து கல்வி

ஜனவரி 18ம் 19ம் 20ம் திகதிகளில்
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 8.00 வரை
துரையப்பா விளையாட்டரங்கில்

Organized by LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
Co-Organized by FCCISL
In Association with CCIY, Consulate General of India Jaffna
Supported by Jaffna Municipal Council, SRI LANKA CONVENTION BUREAU
Gold Sponsor: dimo TECHNOLOGY
Co-Sponsors: Necto, Elephant House
Education Partners: ICBT CAMPUS, CINEC
Official Logistic Provider: dart
Official Insurance Partner
Official Print Media-Tamil: சுடர் ஒளி
Official Electronic Media: வசந்தம், வசந்தம் TV
Official Leasing Partner: சென்ட்ரல் பினான்ஸ்

## மரண அறிவித்தல்



### தர்மலிங்கம் தயாளன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தயாளன் 2013.01.09 அன்று இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் தனபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், இந்திராதேவி, காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் ஸ்ரீதரன் (இத்தாலி), விமலாதேவி (இத்தாலி), கலாவதி (இந்தியா), திலகவதி (வவுனியா), கிருபாகரன் (இத்தாலி), பிரியதர்சினி (வவுனியா), ஜெயப்பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தர்மராசா (முருகன் - இந்தியா), ரசிதரன் (இத்தாலி), சுதா (இத்தாலி), ஸ்ரீதரன் (வவுனியா), தயாளன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், விஜயகுமாரி, விஜிதா, துஷ்யந்தி, தர்ஷன், றனித்தா, துஷ்யந்தன், மீதுராங்கதன், சிந்துஜா (இத்தாலி) ஆகியோரின் சிறிய தந்தையும், தீபன் (குவைத்), கிரி, தனு, சத்தியன், தமிழ், சோபிகா, தனநந்தன், அபி, விபுனன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதித் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீதரன் - பிரியதர்ஷினி (சகோதரி),
கிறேசர் வீதி, சாந்தசோலை, வவுனியா.
T.P. 024 5673099

தகவல்:
குடும்பத்தினர்.

(27609)(2.8.7)

## மரண அறிவித்தல்



### திருமதி மீனாட்சிசுந்தரம் பரமேஸ்வரி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சிசுந்தரம் பரமேஸ்வரி அவர்கள் (10.01.2013) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சி சுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களாகிய சரவணமுத்து- நித்தியானந்தம் (சின்னம்மா) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்ன்றவர்களாகிய முத்துராஜா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் அன்புச் சகோதரியும், சுபாஷாமினி(சங்கீத ஆசிரியை - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), அனுஷா, ஜெகரூபி, சரவணபவன், சாயிரேகா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (செயலாளர்- கொழும்புத் தமிழ் சங்கம்), பாலசுப்ரமணியம், ரூபேந்திரன், வானதி, சோமஸ் கந்தராஜா ஆகியோரின் மாமியாரும், கேசாயினி, தசிவன், ரூபினா, ரூபசாயி, ரூபபார்த்தீசன், சாயிசன், சூர்யா, சாயிநாத், அபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (13.01.2013) நண்பகல் 12 மணிக்கு நீர்கொழும்பு, 179, கடற்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக பி.ப 2 மணிக்கு நீர்கொழும்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

179, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
T.P:0312237884

தகவல்:
சரவணபவன்
(பவன்) மகன்

(28128)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த எலும்புகளை ஒட்டவைக்கும் அல்ராசவுண்ட் சிகிச்சை அறிமுகம்



உடைந்த எலும்புகளை ஒன்றிணைக்க பயன்படும் சிகிச்சை முறைகள் குறைந்தளவிலே வெற்றி அளிக்கின்றன. ஆனால் மிகவும் எளிமை யான முறையிலும், பெருமளவு வெற்றியளிக்கக் கூடியதுமான அல்ரா சவுண்ட் சத்திரசிகிச்சை தற்போது அறிமுகப்படுத்தப்படவுள் ளது.

இதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள கருவியை பயன்படுத்து வதற்கு National Institute for Clinical Excellence (Nice) வைத்திய நிபுணர் களால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்தக்கருவியை குறித்த நோயாளிகள் அவர்களது வீட்டிலிருந்தே பயன்படுத்த முடியும் எனவும், நாள் தோறும் இதனை தொடர்ச் சியாக 20 நிமிடங்கள் பயன்படுத்தி வருவதன் மூலம் விரைவில் பலன் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு**

சுதுமலை தெற்கு மானிப்பாயில் வீட்டுடன் கூடிய காணி, தெளிவான உறுதியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
ஏகாம்பரம் கடை, 57/4, மாவடி லேன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org